உ
நமச் சிவாய்யாம்

திவ்யாபிஷேக விதி

(தெய்வத் திருமஞ்ஜன முறை)



வெளியீடு

சிவாசார்யர் அறக்கட்டளை (பதிவு)

மற்றும்

சிவஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யார் டிரஸ்ட் (பதிவு)

2019 வசந்த நவராத்திரி விழா - மறுபதிப்பு நூல்

ஸ்ரீ சதாசிவர்

வந்தே சம்பு முமாபதிம் ஸுரகுரும் வந்தே ஜகத்காரணம்
வந்தே பந்நக பூஷணம் ம்ருகதரம் வந்தே பசூநாம் பதிம்
வந்தே ஸுர்ய சசாங்க வஹ்நிநயநம் வந்தே முகுந்தப்ரியம்
வந்தே பக்த ஜநாச்ரயம் ச வரதம் வந்தே சிவம் சங்கரம்

C.S.S

உ

ஸ்ரீ குருப்யோநம

சிவமயம்

திவ்ய அபிஷேகவிதி

(சைவாகமம்)

(தெய்வத் திருமஞ்சன முறை)

ஆசிரியர்
ஆகமப்ரவீணர். வியாகரணசிரோமணி
சைவாகமக்ஞசூடாமணி. சிவாகம அருட்செல்வர்
சிவஸ்ரீ வி. சோமசேகர சிவாசார்யர்
சைவாகமப் பேராசிரியர், முதல்வர்
சைவாகம கலாசார வித்யாகேந்திரம், சென்னை -1

வெளியீடு
சிவாசார்யர் அறக்கட்டளை
ஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யர் பவுண்டேஷன்
சென்னை -1

நூல் விவரக் குறிப்பு

நூலின் பெயர்	:	திவ்யஅபிஷேகவிதி (சைவாகமம்)
நூலின் மொழி	:	தமிழ் மற்றும் சமஸ்கிருதம்
நூலின் எழுத்து	:	தமிழ் மற்றும் தேவநாகரி
நூலின் அளவு	:	8 ½ x 5 ¾
அச்சிட்டுள்ள பரப்பளவு	:	7 ¾ x 5
நூலின் எண்ணிக்கை	:	100
வெளியீடு வரிசை எண்	:	20
நூலின் பதிப்பு எண்	:	முதற்பதிப்பு
தொகுப்பு ஆசிரியர் நூல் வடிவமைப்பு	:	சிவஸ்ரீ வி. சோமசேகர சிவாசார்யார்
நூல் உரிமை	:	சிவஸ்ரீ டி. எஸ். காளிதாஸ் சிவாசார்யார்
நூலின் பக்கங்கள்	:	128 பக்கங்கள்
வெளியீட்டு நாள்	:	25.12.2011
அச்சிட்டோர்	:	சௌமியா ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை – 14
கணிணி பதிவு அச்சகம்	:	ராஜம்ஸ் டிஜிட்டல் , சென்னை – 14
வெளியீடு	:	மேதா சக்ரிணீ கோஷ்டம்
தொகுத்த நிறுவனம்	:	சிவாசார்யர் அறக்கட்டளை
வெளியிடுவோர்	:	சிவஸ்ரீ தி.ஸா. ஸ்வாமி சதாசிவோம் சிவஸ்ரீ தி.ஸா. காளிதாஸ் சிவாசார்யர் சிவஸ்ரீ தி.ஸா. ஷண்முக சிவாசார்யர் சிவஸ்ரீ மு. கார்த்திகேய குருக்கள்
கிடைக்குமிடம்	:	சைவாகம கலாசார வித்யாகேந்திரம் 2வது மாடி, 207, தம்பு செட்டி தெரு, சென்னை – 600 001.
விலை	:	ரூ.150/-

திவ்ய அபிஷேகவிதி

(சைவாகமம்)

(தெய்வத் திருமஞ்சன முறை)

பொருளடக்கம்

ஆசியுரை

சிவஸ்ரீ சாளுவ K. ராஜப்பா சிவாசார்யர், காஞ்சீபுரம்.

அணிந்துரை

சிவஸ்ரீ T.V ஞானசம்பந்த சிவாசார்யர், சித்தூர்.

பதிப்புரை

சிவஸ்ரீ T.S. காளிதாஸ சிவாசார்யர், சென்னை.

சிவஸ்ரீ T.S. ஷண்முக சிவாசார்யர், சென்னை.

மதிப்புரை

சிவஸ்ரீ N. சுவாமிநாதசிவம், செம்பூர், மும்பை.

முகவுரை

சிவஸ்ரீ ஏ. சோமசேகர சிவாசார்யர், சென்னை.

நூலின் பொருளடக்கம்

திவ்யஅபிஷேக விதி

அரும்பத விளக்கம்

சென்னை ஸ்ரீ காளிகாம்பாள்

உ

ஸ்ரீ குருப்யோ நம:

ஆசியுரை

சென்னை காளிகாம்பாள் அருள்பெற்ற அமரர் சிவாசாரியரின் ஆசியினால் அவர்களது குமாரர்கள் திரு. சதாசிவம், திரு. காளிதாசர், திரு. சதீஷ் (எ) ஷண்முக குருக்கள் தங்களது குருநாதர் ஆக்ஞைப்படி ஒருடிரஸ்ட் அமைத்து, அதன்மூலம் மாதாமாதம் ஆகமத்தின் அரியபெரிய விஷயங்களை சைவ உலகிற்கு வெளிக்கொண்டுவர, ஆகமப்ரவீணர், வ்யாகரண சிரோமணி திரு. V.சோமசேகர சிவாசாரியர் அவர்களின் உதவியுடனும், தமைமையிலும் சைவாகம கலாசார வித்யாகேந்திரத்தின் மூலமாக செயல்பட்டு வருவதை அனைவரும் அறிவர். V. சோமசேகர சிவாசாரியர் புஷ்பார்ச்சனவிதி என்ற கட்டுரையில் பல விஷயங்களை வெளிக்கொணர்ந்துள்ளார். மேலும் ஒருஅடி எடுத்து வைத்து திவ்யாபிஷேகவிதி எனும் தலைப்பில் இறைவனுக்கு திருமஞ்சனம் செய்யும்போது எவ்வாறு செய்வது உத்தமம் என்பதனை இந்நூலில் விளக்கியுள்ளார்.

"அபிஷேகப்ரியோ சிவ:" என்ற முதுமொழிக்கேற்ப, அபிஷேகத்தின் வாயிலாக இறைவனை திருப்திபடுத்தும்முறையை, ஆகமங்களில்உள்ளதை, விளக்கமாகக் கூறியுள்ளார். அபிஷேகத்திற்கு ஜலத்தை வடிகட்டி எடுக்கும்முறை, அபிஷேகத்தின்போது தைலாபிஷேகம் முதல் ஸ்நபனம் வரை உள்ள திரவியவகைகள், அபிஷேகக்ரமம், ரஸபல பஞ்சாமிர்த வகைகள், அவற்றில் வித்யாஸம், அபிஷேகதிரவியத்தில் ஸ்நபனம், 108கலசஸ்நபன திரவ்யம், ஸ்நபன கலசங்களின் எண்ணிக்கை 1 முதல் 10000 வரையும், ஸ்நபனம், அதன் தேவதைகள் யாவும் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. எத்தனை அபிஷேகங்கள் செய்தாலும் விசேஷார்க்யஜலம் ஒரு சிறிதாவது இறைவனது உத்தமாங்கத்தில் இடுவது விசேஷம் என்று நம் சான்றோர்கள் கூறியது நினைவுக்கு வருகிறது. இதையே அகோரசிவாசாரியரும் தனது பத்ததியில் "அர்க்யோதக பிந்துநா ஸம்ஸ்நாப்ய" என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வாசனை புஷ்பங்கள் மற்றும் பச்சிலைகள் ஆகியவற்றில் ஊறிய புஷ்போதகம், தாதுபொருட்கள் பொன், வெள்ளி, ரத்தினங்கள் கூடின ஜலங்களின் விசேஷம் அஸ்த்ரோதகம் என்பதன் பொருள், இவற்றின் விளக்கம், அதனால் ஏற்படும் பலன் என இக்கட்டுரையில் பலவற்றை விளக்கி கூறியிருப்பது சிறப்பு.

மஹாபிஷேகத்தின்போது, காரணாகமத்தில்உள்ள, ஏகாதசருத்ரர்களையும் பூஜிக்க வேண்டியது எனக்குறிப்பிட்டது கவனிக்கத்தக்கது. ஏகாதச ருத்ராபிஷேகத்தில் விபூதி இல்லை என்பர் சிலர். ஆனால் இதில் பஸ்மாபிஷேகவிதியும் கூறப்பட்டுள்ளது அதிசிறப்பு. மூலோதகம், காந்தோதகம், மிருதோதகம், காஷ ாயோதகம், ரத்னோதகம், விருக்ஷசர்மோதகம் ஆகியவற்றை பற்றியும், அவற்றை நூதனபிம்பத்திற்கு மட்டுமல்லாது மூலவர்க்கும் உத்ஸவமூர்த்திக்கும் அபிஷேகம் செய்யலாம் எனக்கூறியுள்ளது சிறப்பம்சமாகும்.

மேலும் இந்நூலில் படம் - சித்ரம் - தாருபிம்பங்களுக்கு எப்படி சுத்திசெய்வது, பாத்யாதிகளின் த்ரவ்யம், க்ரமம் ஆகியவற்றைப்பற்றி நன்கு குறிப்பிட்டுள்ளார். இவரது புஷ்பார்ச்சனைவிதி நூ லில் கூறியது போலவே, இந்நூலில் பழம் - தான்யம் - முறம் - ஹரிபேரம் முதலான ஸம்ஸ்கருத பெயருக்கான தமிழ்ப்பெயர்கள், ஸ்நபனதிரவியங்களின் தமிழ்பெயர்கள் ஆகியவற்றை குறிப்பிட்டு, அனைவரும் அறியும்வண்ணம் செய்தது பெருமைக்குரியது. மேலும் இக்கட்டுரையில் ஸௌர, சாந்த்ர மாதங்களின் சிறப்பு அருஞ்சொற்கள் என்ற தலைப்பின்கீழ் எல்லோர்க்கும் புரியும் வண்ணம் தமிழ், வடமொழிகளில் அதனதன் பெயர்களைக் குறிப்பிட்டது அவருக்கே உரிய ச்ரமசாத்ய பாணியை காட்டுகிறது.

ஸ்திரலிங்கத்தில் ஆதாரசக்தி முதல் மானஸாபிஷேகம் வரை பூஜித்தபின் அபிஷேகம் செய்வது விசேஷம், ஆவாஹனத்தின் போது இறைவன் ஸ்வரூபநிலைக்கு வருகிறார். அதனால் அதற்கு பிறகே அபிஷேகமும், ஆவரண பூஜைகளும் செய்யத்தக்கன. ஆத்மார்த்த சலபேர விஷயத்தில் லிங்கசுத்தி என்றகட்டத்தில் அஷ்டபுஷ்பம்மட்டும் சாற்றி, அபிஷேகத்தின் பின்பு ஆதாரசக்தி முதல் ஆவரணாந்தமாக பூஜைசெய்வதே முறை. ஏனெனில் ஆவாஹனம் செய்த பிறகு லிங்கம் அசைந்தாலும், இடம்மாறினாலும் மிக்கதோஷம் என ஆகமம் கூறியுள்ளதை இவர் குறிப்பிட்டது கவனிக்கத்தக்கது. ஸ்திரலிங்கத்தில் இருவிதமாகவும் பூஜிக்கலாம்.

ஆத்மார்த்த சலபேர விஷயத்தில் பூஜைஉபசாரங்கள் யாவும் முடித்தபின் வ்யுத்க்ரமபூஜை முடித்தே சலாசனம் பூஜித்து பிறகே ஸ்வாமியை பேடகத்தில் வைப்பதோ அல்லது இருந்த இடத்திலோ வைக்கவேண்டும் என குறிப்பிட்டு நிறைவாக அபிஷேகத்தின் பலஸ்ருதியையும் குறிப்பிட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

இவ்வாறாக இவ்வாசிரியர் பெருமுயற்சி கொண்டு புதியனவற்றை வெளியிட்டு வருவது இறைவனுடைய அனுக்ரஹமும், ஆகமங்களின் ஆசியும் இவருக்கு பரிபூரணமாக உள்ளது என்பதை காட்டுகிறது. இவருக்கும், இவரை சார்ந்தவர்களுக்கும் இறைவன் காமாக்ஷிநாதன் இஹபர சுகங்களை மென்மேலும் வழங்க ப்ரார்த்திப்போமாக.

இங்ஙனம்,

சைவ சித்தாந்தசரபம், ஆகமஸாகரம்.

சிவாகம செல்வர், சிவாகம ஞானபானு.

சைவாகம திருத்தொண்டர். சிவாகம ஞானபாஸ்கரர்

சிவாகம ரத்னாகரம். ஆசார்ய சிந்தாமணி. சிவாகம வாசஸ்பதி

காஞ்சீபுரம் சாளவ . K. ராஜப்பா குருக்கள்.

பரம்பரை ஸ்தானீகம். ஸ்ரீகைலாசநாதர் திருக்கோயில்

மற்றும் ஸ்ரீ ஏகாம்ரநாதர் திருக்கோயில்

எண்.45/121, ஏகாம்ரநாதர் சன்னதி தெரு,

பெரிய காஞ்சீபுரம் - 631 502.

உ

ஸ்ரீ குருப்யோ நம:

அணிந்துரை

அங்குஇங்கு எனாதபடி எங்கும் நிறைந்துள்ள பரஞ்சுடரானவர் ஜோதிவடிவினன் சிவன் என்ற பெயருடையான் என்று சைவசித்தாந்த நூலில் ஞானபாதத்தின் முதல் சுலோகத்தின் ஈற்றில் "வியோமவியாபிபரம் சிவாக்யமகலம் ஜோதிப் பிரபத்யே தியா" எனக் கூறப்-பட்டுள்ளார். அப்பரஞ்சுடரே அனைத்து ஜீவராசிகளும் உய்யும்பொருட்டு ஆலயங்களில் உருவமாகவும், அருவமாகவும், அருவுருவாயும் இருந்துகொண்டு அருள்பாலிக்கிறான்.நடராஜர், சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், பிக்ஷாடணர் முதலிய உருவச்சிலைகள் வியக்தலிங்க-மாகவும், தீபம், அஸ்திரராஜர் எனப்படுகிற திரிசூலம் போன்றவை அரூபங்களான அவ்யக்த லிங்கமாகும். சிவலிங்கம் அருஉருவானவை இவையே வியக்தாவ்யக்த லிங்கமாகவும், பாவாகாரமாகவும் சிவாகமங்களில் கூறப்பட்டுள்ளன. மேலும், இவையே சிலாமயமானவை, ஸ்திரலிங்கமாகவும், பஞ்சவுலோகவிக்ரஹங்கள் சரலிங்கமாகவும் கூறப்படுகின்றன. மேற்கூறிய சாஸ்திரஉருவங்கள் சிலாமயமானால் மூலவர் என்றும், உலோகமயமானால் உற்சவமூர்த்தி என்றும் ஆன்றோர் கூறுவர். இறைவனை பலஜீவராசிகள் வழிபட்ட தலங்கள் பின்வருமாறு (1) எறும்புபூஜித்தஊர் எறும்பியூர். (2) ஈ பூஜித்த ஆலயம், திருவீங்கோயில், (3) குரங்கு, அணில், காக்கை பூஜித்த ஊர் குரங்கணில் முட்டம். (முட்டம் என்பது காக்கையைக் குறிக்கின்றது). (4) யானை பூஜித்தஊர் திருவாணைக்காவல். சிலந்தி, பாம்பு, யானை இவை பூஜித்த கோயில் ஸ்ரீகாளஹஸ்தி. (5) மயில் பூசித்தஊர் மயிலாடுதுறை, மயிலாப்பூர். (6) தேவி பூசித்தஊர் காஞ்சீபுரம், (7) ராமர் ஜடாயு, வேதங்கள், அங்காரகன் முதலானோர் பூசித்தஊர் வைதீச்வரன் கோயில், (8) அனுமன் பூஜித்த ஊர் அனுமந்தபுரம், (9) புலிக்கால்முனிவர் பூஜித்தஊர்கள் புலியூர், பெரும்பெற்றபுலியூர், புலிவலம், திருப்பாதிரிப் புலியூர் போன்றதலங்கள் போன்றவை இவை. பலரும் சிவனைப்பூஜித்ததை விளக்குவனவாகும். ஆலயலிங்கங்களை ஏழுவகையாகப் பிரிப்பர். அவை, (1) தைவிகம்,

(2) திவ்யம், (3) ஆர்ஷம், (4) பாணம், (5) சுவாயம்புவம், (6) ராக்ஷஸம், (7) மானுஷம் என்பவை. மேற்கூறிய ஒவ்வொரு ஆலயலிங்கத்திற்கு நான்குஆகமங்கள் விகிதம் 4 ஓ 7 ஸ்ரீ 28 ஆகமங்கள், ஏழுவகையான ஆலயலிங்கவழிபாட்டிற்குஉரியன என்று சுப்ரபேதம் என்ற ஆகமத்தில் கூறப்பட்டு உள்ளது. இவ்வாலயங்களிலும் சரி, வீட்டில் செய்யப்படும் ஆன்மார்த்தபூஜையிலும் சரி, அபிஷேகம் என்பது தவறாமல் இடம் பெற்றுஉள்ளதாகும்.

திவ்யாபிஷேகவிதி என்ற தெய்வத்திருமஞ்சனமுறை என்பது பற்றி இந்நூல் எழுதப்-பட்டுள்ளது. இந்நூல் என்பார்வைக்கு வந்தது, நன்கு பரிசோதிக்கப்பட்டுள்ளது. ஆன்மார்த்த பூஜைக்குரிய விக்ரஹங்கள் ஏழுஅங்குலம் முதல் பன்னிரண்டுஅங்குலம் வரை தான் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. பரார்த்தஆலயமூர்த்தியின் அளவு சில்பியின் மனம் போனபோக்கில் அளவுமீறி இக்காலத்தில் காணப்படுகின்றது. ஆலயங்களின் நித்தியபூஜையின் பஞ்சகிருத்தியம் பற்றி கூறிய பாடலில் அபிஷேகம் சிருஷ்டி என்ற முதற்தொழிலை உணர்த்துவதாகும். அபிஷேகத்தில் பஞ்சகவ்யப்பொருளின் அளவு, அபிஷேகத்திரவியங்களின் அளவு, அபிஷேகக்-காலங்களுக்கு ஏற்ற ஜலபிரமாணம், திருமஞ்சனத்திற்கு தீர்த்தம் எடுத்துவருமுறை, எடுத்துவந்த ஜலத்தின் விநியோகம், அபிஷேகப்பொருள்களின் வரிசைமுறை, அபிஷேகத்திரவியங்களின் வகைகளுக்குரிய பயன்கள் முதலான முக்கியஅரியசெய்திகள் இந்நூலில் நன்கு விளக்கப்-பட்டுள்ளது. இதன்மூலம் உரியஅபிஷே கத்திரவியங்களின் பலன்களை அறிந்த ஆன்மீகமக்கள் தனக்கு வேண்டும் பலன்கருதி அந்த அபிஷேகதிரவியங்களை ஆலயபூஜைக்கு அளிக்க வாய்ப்புள்ளது. அபிஷேகதிரவியங்களில் மிகவும் முக்கியமானவை 1பஞ்சகவ்யம், 2பஞ்சாமிருதம், 3பால், 4தயிர், 5நெய், 6தேன், 7சர்க்கரை, 8அன்னாபிஷேகம், 9இளநீர், 10சந்தனம், 11விபூதி, 12பன்னீர், 13புஷ்போதகம், 14பத்ரோதகம், 15சுவர்ணோதகம், 16ஸ்நபனகும்பதீர்த்தம், 17விசேஷ ார்கியதீர்த்தம் ஆகிய இப்பதினாறும் மிகவும் அவசியமானவையாக அறியத்தக்கவைஆகும். அபிஷேககாலங்களில் அவசியம் திரைச்-சீலையால் மறைக்கவேண்டும். முக்கிய அபிஷேகமான பால், தயிர், சந்தனம், விபூதி, கலசாபிஷேகம் போன்றவை நடைபெறும் சமயத்தில் மட்டும் இடையே திரையைநீக்கி தரிசிக்குமாறு அபிஷேகம் செய்யவேண்டும். இக்காலத்தில் அரசாங்கம் அபிஷே கத்தை யாவரும் பார்க்கவேண்டும், திரை போடாதீர்கள் என

ஆணைஇடுகின்றது,. என்ன செய்யமுடியும். மேலும் அபிஷேகம் செய்கின்றவர்கள் உருவபிம்பங்களுக்கு வஸ்திரம் சாற்றித்தான் அபிஷேகம்செய்திடவேண்டும்என்கின்றனர்.பிம்பங்களிலே(ஆடை) வஸ்திரவேலைப்பாடு காணப்படுவதால் ஆண்பிம்பங்களுக்கு அபிஷேகத்தில் வஸ்திரமே தேவையில்லை என்பர் முன்னோர்கள். பெண்உருவங்களுக்கு அவசியம் அபிஷேகசமயத்தில் வஸ்திரம் அணிவித்தே ஆகவேண்டும் என பெரியோர்கள் வழிவழியாக வஸ்திரம் அணிவித்தே அபிஷேகம் செய்கின்றனர். அருவுருவமான சிவலிங்கத்திற்கு மட்டும் வஸ்திரம் அணிவித்து அபிஷேகம் எங்கும் செய்யப்படுவதில்லை.

இலிங்கமூர்த்தியைத்தவிர மற்றயமூர்த்திகளில் பைரவமூர்த்தி தவிர அனைத்து உருவ-மூர்த்திகளுக்கும் துணிக்கட்டியே அபிஷே கம் செய்யவேண்டும். திரைபோட்டே அபிஷேகம் செய்யவேண்டும் என்பதை உணரவாய்ப்பு தருகின்றது. சித்திரபடம், சுதை, மரம் முதலிய மூர்த்தங்களுக்கு எதிரில் கண்ணாடிவைத்து அதில் பாவனாபிஷேகம் தான் செய்யவேண்டும். திருமஞ்சனம் செய்வதற்கு இரண்டுநாழிகை காலமே ஒதுக்கப்பட்டுஉள்ளது. அதாவது இக்காலக்கணக்குப்டி நாற்பத்திஎட்டுமணித்துளிகள் கூறப்பட்டு உள்ளமையால் தினமும் பூஜாகாலத்தில் அதற்குள் அபிஷேகத்தை முடித்துக்கொள்ளவேண்டும். ஒவ்வொருபொருளை அபிஷேகம் செய்தவுடனேயே அதற்கென தனித்தனியே தூபதீப நைவேத்ய நீராஜனம் அவசியம் செய்யப்படவேண்டும். பால், தயிர், பஞ்சாமிருதம் போன்ற உட்கொள்ளும் பொருட்களில் கொஞ்சம் தனிப்பாத்திரத்தில் மிச்சம்வைத்து, அதனை நிவேதனம் செய்யலாம் என்று ஆகமங்கள் கூறுகின்றன. மேலும் அபிஷேககாலங்களில் ஜபிக்கவேண்டிய மந்திரங்களில், ஸ்ரீருத்ரம், சமகம், புருஷசூக்தம், ஸ்ரீசூக்தம், துர்காசூக்தம், சிவசங்கல்பமந்திரம், சாந்தி பஞ்சகம், பஞ்சபிரம்மமந்திரம், ஷடங்கமந்திரம், வியோவியாபி முதலான 81பதமந்திரங்கள், பிரணவத்துடன் கூடிய ஆம் ஈம் ஊம் வ்யோம வ்யாபினே நம: என்ற தசாக்ஷரமந்திரம் முதலியன மிகமுக்கியமான மந்திரங்களாகும்.

சுவர்ணாபிஷேகத்திற்கு இறைவனது ஆயுதங்களைத் தங்கத்தில் ஓரங்குலப்பிரமாணத்தில் செய்து அவற்றை நீரில்ஊறவைத்து அதனை அபிஷேகம் செய்வது சிறப்புடைத்து. மேலும் 5கலசம், 9கலசம், 11கலசம், 25கலசம், 108கலசம், 1008கலசம், 10008கலசம்

போன்றவைகளுள் 108 முதல் 1008 கலசங்களை வைத்து அவற்றில் சம்ஹிதாமந்திரங்களை மட்டும் பூஜை செய்ய வேண்டும் என்று காரணாகமம் கூறுகின்றது. 5கலசத்திற்கு பஞ்சபிரம்மமந்திரம் அல்லது பஞ்சகலைகளை பூஜை செய்யவேண்டும். 9கலசங்களில் "ஓம்ஹஸசக்ஷமலவரயூம்" என்று கூறி நவாக்ஷரமான "நவாத்மனே சிவாயநம:" என்று பூஜை செய்யவேண்டும். அல்லது பிரணவத்துடன் 1பிரம்மணே நம : 2விஷ்ணவே நம : 3ருத்ராய நம : 4ஸ்வராய நம : 5சதாசிவாய நம : 6நாதாய நம : 7பிந்தவே நம : 8சக்தயே நம : 10சிவாய நம : என்று கூறி ஒன்பது மந்திரமூர்த்திகளை பூஜை செய்யவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. 11கலசத்திற்கு பஞ்சபிரம்மஷடங்கம் 11மந்திரத்தால் பூஜையும், 25கலசத்திற்கு 25மாகேச்வரமூர்த்திகளின், 25பெயர்களைக்கூறியும் பூஜை செய்யப்படவேண்டும் என்று பலஆகமங்களில் கூறப்பட்டுள்ளன. ஈஸ்வரோ அபிஷேகப்பிரிய : என்ற முதுமொழிக்குஏற்ப அபிஷே கவிதி எனும் இந்நூல் நமக்கு நன்கு பயன்படும் என்பதில் சிறிதும் ஐயமில்லை என்பதை உணர்வோமாக.

இந்நூல் ஆலயத்தில் பூசிக்கும் ஆதிசைவர்களுக்கும், வீட்டில் பூஜைசெய்து வரும் அனைத்து ஜாதியினருக்கும், தங்கள் வீட்டில்உள்ள இறைவனுக்கு அபிஷேகம் செய்யும் முறையை நன்குஉணர்ந்து, அதன்படி செய்து, நற்பயனைஅடைய ஹேதுவாய் உள்ளது. இது போற்றுதற்குஉரிய விஷயமாகும், என்பதில் சிறிதும்ஐயம்இல்லை எனத் தெரிவித்துக் கொள்கிறேன். அபிஷே கத்திரவியங்கள் அனைத்தும் மூலிகைப்பொருள்களாகும். எனவே இறைவனுக்குப் பயன்படுத்திய அவற்றையே நமது உள்ளம்தூ ய்மை பெறவும், வாழ்வில் உடல்நோயற்று நீடூழிவாழ்வதற்காகவும் உபயோகித்துக்கொள்ள வேண்டும். இதுபற்றியே நம் முன்னோர்கள் "நீ கண்டுக்கொள் நான்கொண்டுக்கொள்கிறேன்" என்பர். இதன் பொருள் யாதெனில் இறைவனால் படைக்கப்பட்ட வஸ்த்துக்களை அவனுக்கு அர்ப்பணித்தபின்னரே நாம் நமக்குப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அப்பொழுதே அப்பொருள்கள் பயன்தருவனவாகும். அவ்வாறுஇன்றி நம்நலத்திற்கே நேரடியாக பயன்படுத்துவோமேயாகில் அது நன்மை பயக்காது என்பதை உணர்தல்வேண்டும். ஆலயத்தில் முப்போதும் திருமேனிதீண்டும் ஆதிசைவச் சிறார்கள் இந்நூலை நன்குகற்று, அதன்வழிநடந்து, ஆண்டவனின் அருளால் நோயற்ற வாழ்வையும், குறைவற்ற செல்வத்தையும் பெறவேண்டும், தொழுவார்க்கு இரங்கி இருந்தருள்

செய்யும் தோன்றாத்துணைவன் துணைமலர் வணங்கி, இந்நூலாசிரியர், சோழபாண்டியபுரம் விஜயகுருக்களின் திருமகனார் சோமசேகரகுருக்கள் பல்லாண்டு வாழ்ந்து, இவ்விதமாய் சிவாகமக்கருவூலங்களை நம்சமயத்தோர்க்கு வெளிப்படுத்துமாறு வாழ்த்துகின்றேன்.

இங்ஙனம்,

ஆகம ப்ரவீணர். சிவாகம வித்யாசரஸ்வதி.

ஆகம வாசஸ்பதி. ஆகமச் செம்மல்.

சைவாகம பரீக்ஷாதிகாரி. பண்டித ரத்னா.

T.V. ஞானசம்பந்த சிவாசாரியர்.

அன்னை சாரதாம்பாள் இல்லம்.

எண்.13-151, சிவன் கோயில் தெரு,

சித்தூர், ஆந்திர மாநிலம்

பதிப்புரை

யாதேவீ ஸர்வபூதேஷு மாத்ரு ரூபேண ஸம்ஸ்திதா
நமஸ் தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோநம :

ஆன்மீக வாசக நேயர்களே! வணக்கம்,

உலகில் உயிர்களை உய்வித்திடுவதற்காக அருளாட்சியை செய்து வருகிற காளிகாம்பாளின் கருணாகடாக்ஷத்தாலும், எங்களின் தந்தையின் அருளாசியாலும் எங்கள் அறக்கட்டளைகள் வாயிலாக ஆறு ஆண்டுகளாக மாதந்தோறும் ஒருமுறை சிவகாம சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சியையும், பலநூல்களை வெளியிட்டு ஆண்டுதோறும் சைவாகம கலாசார தீபிகோத்ஸவத்தையும் (கலாசார அபிவிருத்தி மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு) நடத்தி உங்கள் பெருமதிப்பையும், ஆதரவையும் பெற்றவர்கள் என்பதல் மகிழ்ச்சியடைகிறோம்.

சைவாகம அறிஞர் பலரின் போதனைகளையும், கருத்துகளையும் நூலாக வெளியிட்டு வரும் நாங்கள் எங்கள் அறக்கட்டளையின் ஆலோசகரும், குருநாதருமான **சிவஸ்ரீ. V. சோமசேகர சிவாசார்யர்** அவர்களின் இந்நூலை வெளியிடுவதில் பெருமிதமடைகிறோம். இந்நூலாசிரியரும், அவரது தந்தை சிவஸ்ரீ. விஜயகுருக்களும் பல தருணங்களில் எங்கள் தந்தையுடனும், எங்களோடும் இருந்து பல கும்பாபிஷேகங்கள், யாகங்கள், ஹோமங்கள் இவற்றில் பங்கு பெற்று அருந்தொண்டாற்றி சிறப்பித்தவர்கள். எங்களோடிருந்து சமயப் பணியாற்றிடும் குருநாதர் **சிவஸ்ரீ. V. சோமசேகர சிவாசார்யர்** தொகுத்து எழுதியுள்ள இந்நூல் என்றும் இந்து சமய ஆஸ்தீகப் பெருமக்களுக்கு பயன்தரக்கூடிய அரிய ஞானக் கருவூலமாக, ஆகமநூலாக இருப்பதால் இதனை எங்கள் அறக்கட்டளை வாயிலாக வெளியிட்டு மகிழ்கிறோம். இந்து மக்கள் இந்நூலை வாசித்தும், பின்பற்றி வாழ்ந்தும், உலகெங்கும் பரவச் செய்தும், தம்மையும் சமயத் தொண்டில் இணைத்துக் கொள்வதுடன் படித்துப் பயன்பெற வேண்டுகிறோம்.

அன்புடன்,
சிவாசார்யர் அறக்கட்டளை நிறுவனர்
சிவஸ்ரீ. T.S. காளிதாஸ சிவாசார்யர்
&
ஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாசார்யர் பௌண்டேஷன் நிறுவனர்
சிவஸ்ரீ. Dr. T.S. ஷண்முக சிவாசார்யர் M.A., Ph.D.,
சென்னை - 600 001.

உ

ஸ்ரீ பெரியாண்டவர் துணை

திரவ்யாபிஷேக விதி

ஞானாநந்தமயம் தேவம் நிர்மல ஸ்படிகாகிருதிம் .
ஸர்வபூதாத்ம பூதஸ்தம் பிரணதோஸ்மி ஸதாசிவம் .

அக்ஞான திமிராந்தஸ்ய ஞானாஞ்ஜன சலாகயா I
சக்ஷு : உன்மீலிதம் ஏன தஸ்மை ஸ்ரீகுரவே நம : II

மதிப்புரை

எல்லாம்வல்ல செம்பூர் திருமுருகன் திருவருளினாலே (சிவாகம திலகம், வியாகரண சிரோமணி, சில்பசாஸ்திர விசாரதா, ஜோதிஷ திலகம் **சிவஸ்ரீ. V. சோமசேகர சிவாசார்யர் அவர்கள் இந்த திரவ்யாபிஷேக விதி (தெய்வத் திருமஞ்ஜன விதி)** என்ற அபூர்வமான விசேஷமான இந்த புத்தகத்தை, பலஆகமங்களிலிருந்தும், உபாகமங்கள், தந்திரபுத்தகங்கள், தேவாரப்பதிகங்கள், திருமூலரின்திருமந்திரங்கள், சிவஞானசித்தியா, வேதாந்தம், இப்படி பல புத்தகங்களைப்படித்துஆராய்ந்துஎடுத்து, மிகஅழகாக, தெளிவாக எழுதியுள்ளார்கள். சாதாரணமாக மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட எலட்ரிகல் (கரண்ட்) உற்பத்தி செய்யும் இடத்தில் ஒருவிதமான உடைகள், உறைஅணிந்து அங்கு என்ன செய்யவேண்டுமோ அப்படி செய்கிறார்கள். எடுத்துக்காட்டாக டிரான்ஸ்பாரம் என்ற இடத்தில் இருந்து பிரித்து கொடுக்கும் பொழுது சிலஉடைகளை அணிகிறார்கள், கண்களுக்கு புலப்படாத கரண்டிற்கு இப்படி பலஉடைகள் அணிந்து, அதனை 3பேஸ், 2பேஸ், 1பேஸ் கம்பி கரண்டு என்கிறார்கள். அந்த கம்பியில் உள்ள கரண்டைக்காண்பிக்க எரியும் பல்புக்கு சில தகுதிகள் வேண்டும். 1பீஸ் கரண்டில் எரியும் பல்வை 3பேஸ் கரண்டில் பொருத்தினால் பல்பு பீசாகும். இப்படி மனிதர்களாலே கண்டுபிடிக்கப்பட்ட கண்களுக்குப் புலப்படாத (கரண்டிற்கே) மின்சாரத்திற்கே இவ்வளவு இருக்கிறது என்றால், ஆயிரக்கணக்கான சூர்யபிரகாசமும், மின்னல்களின்கூட்டமும், சேர்ந்தால் என்ன (பவரோ) ஒளிவல்லமையோ அந்த பவுரையுடைய பரம்ஜோதியை ரிஷிகளும், முனிவர்களும், சைவகுறவர்களும், பாலில் படும் நெய்போல் என்றும், விறகினில் தீப்போன்று என்றும் உதாரணம் சொல்லுவார்கள். ஞானியர்களும் கரும்பின்சுவையை உதாரணமாகச் சொல்வார்கள். அப்பேர்பட்டதான அரூபமான பரம்மஸாயுஜ்யமாக அடைய (விட்டுப்பிரியாமல் இருக்கும் தன்மையை) சிவாகமங்களிலே பலவிதமாக கூறப்பட்டுள்ளன. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று ஆன்மபக்குவத்திற்கு தகுந்த மாதிரி சொல்லப்பட்டுள்ளன. இதில் என்ன என்று பார்க்கும்பொழுது வேதத்தில் சொல்லப்பட்டுள்ள யாகாதிகளினாலே கிடைக்கக் கூடிய அபூர்வம் என்ற புண்யம் இருக்கும்வரைதான் சொர்க்கபோகம் இருக்கும். அபூர்வம் முடிந்ததும் மீண்டும் ஜனனம்தான். (உத்தரமீமாம்ஸகர்கள், உலகத்தில் கண்ணால் காண்பது, தொடுவது, செய்வது எல்லாம் மித்யை (பொய்) என்று கூறுவதால் குழப்பம் தான். அதற்காகத் தான் சிவாகமங்களில், வெகுஅழகாக விளக்கமாக சொல்லப்பட்டுள்ளன. இந்த இந்த

பூஜைகளைச்செய்தால் இன்ன இன்ன பலன். இவைகள் அனைத்தையும் யார் யாருக்கு என்ன முடியுமோ அவ்வாறு இறைவனை வழிபடலாம் என்றும் கூறப்பட்டுள்ளன. சிவன் அக்னி சொரூபன், அவனுக்கு வடநாட்டில்கூட பார்த்தோமேயானால் ஒருசொம்பில் தூயதீர்த்தம் நல்ல மூன்று இதழோடு கூடிய வில்வம் பஞ்சாக்ஷரமந்திரத்தைச் சொல்லி அபிஷேகித்து பூஜிப்பார்கள். அந்த ஜலம் எப்படி இருக்கவேண்டும், எப்படி எடுக்கவேண்டும், புண்யநதிகளில் எடுத்த தீர்த்தத்தை எப்படிக்கொண்டுவந்து முறைப்படி பூஜித்து அபிஷேகிக்கவேண்டும். குளிர்ச்சி அடைந்த பரமன் எவ்வாறு பலன்களைக் கொடுக்கிறான் என்று விரிவாக அழகாக எழுதியுள்ளார் **சிவஸ்ரீ. V. சோமசேகர சிவாச்சார்யர்.**

சுமார் 70விதமான திரவ்யாபிஷேகங்களை விரிவாகதொகுத்துஎடுத்து, அவற்றின் பலன்களையும், அபிஷேகதீர்த்தத்தை உட்க்கொண்டால் என்ன மருத்துவகுணம் என்பதையும், மாசதிரவ்யங்களின் அபிஷேக பலன்களையும் விசேஷமாக கூறியிருக்கிறார்கள். மேலும் இந்த ஜலாபிஷேகமானது, எத்தனைவகை, ஆகமபிரகாரம், புண்யதீர்த்தங்களை கலசங்களில் நிரப்பி விதிப்படி பூஜை, ஹோமம் செய்வது, சுகந்ததிரவ்யங்களையும் சேர்த்து ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்வது என்று விரிவாக விளக்கம் கூறியுள்ளார் சிவாச்சார்யர். இதில் மிக முக்கியமாக எல்லோரும் தெரிந்துக்கொள்ள வேண்டிய விஷயமாக சித்திரம், படம், புடைப்பு, சிற்பம், சுவதாபிம்பங்கள், பக்குவாபக்குவசிலாபேரங்கள், பஞ்சலோக விக்கிரஹங்கள் இவைகளுக்கு ஏற்றபடி திருமஞ்சனத்தை எப்படிசெய்வது என்பதை அதிஅற்புதமாக விளக்கி கூறியுள்ளார். இந்த புத்தகம் இந்தக்காலகட்டத்தில் வெளியிடுவது சாலச்சிறந்தது. எடுத்துக்காட்டாக, என்னையே எடுத்துக் கொள்ளுங்களேன், என்னிடம் யாராவது வந்து அவர்களுடைய குறைகளைச் சொல்லி இதற்கு என்னபரிகாரம், சிவனுக்கு என்னஅபிஷேகம் செய்யலாம்? என்று கேட்கிறார்கள். சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு பல புத்தகங்களைப் பார்த்து மறுநாள் அவர்களிடம் கூறுகிறேன். இந்த **தீர்த்தாபிஷேக மஹிமை (தெய்வத் திருமஞ்சனமுறை)** என்ற புத்தகம் கையில் இருந்தால் உடனேயே பதிலை சொல்லலாம். என்ன என்ன வியாதிக்கு எந்த எந்த திரவ்யஅபிஷேகம் செய்தால் குணமாகும் என்று விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இந்த திரவ்யாபிஷேக விதி என்ற அற்புதமான புத்தகத்தை வாங்கி எல்லோரும் படித்து அதன்பிரகாரம் நடந்து, சகலசௌபாக்கியங்களையும் அடையவேண்டும். மேலும் இது மாதிரியான அற்புதமான புத்தகங்களை அடிக்கடி வெளியிடவேண்டும். சிவாசார்யர் நீண்டஆயுள் ஆரோக்கியத்துடன் வாழவேண்டும் என்று முருகனின் திருவடியில் பிரார்த்தித்து கொள்கிறேன்.

யः காமிகாதி விநிவேதித தத்வரூப :
தத்தவபோதத பசுபாச விமோச கோய :
நாராயணி பூஜலதாம்சித கண்டதேச :
பக்திம் ஸமே திசது நைஜபதா ரவிந்தே

இங்ஙனம்,
சிவாகமசிரோமணி. சித்தாந்தபண்டிதர்.
பண்ணப்பட்டு N. சுவாமிநாத சிவம்
செம்பூர் சுப்ரமண்யஸமாஜ அர்ச்சகர், மும்பை.

சுபம்

உ

ஸ்ரீ குருப்யோநம :

ஸ்ரீராம ஸௌமித்ர ஜடாயுவேத ஷடானநாதித்ய குஜார்ச்சிதாய.
ஸ்ரீநீலகண்டாய தயாமயாய ஸ்ரீவைத்யநாதாய நமச்சிவாய.

பூதநாத் தயாஸிந்தோ ஸர்வபூத் தயாப்ர
ரக்ஷ ரக்ஷ, மஹாபாக் சாஸ்த்ரே துப்யம் நமோ நம :.

முகவுரை

உலகில் மனிதப்பிறவியைப் பயனுள்ளதாகச் செய்வது இறைவழிபாடு ஒன்றே. கற்றதனாலாய பயன் கடவுளை வணங்குவதே. இறைவழிபாட்டை ஒருவழிமுறையைப் பின்பற்றி செய்வதாலேயே அதற்குஉரிய பயனை எவரும் பெறஇயலும். இறைவழிபாட்டு நெறியை விளக்கிடும் சாஸ்திர இலக்கண நூல்களே சைவசித்தாந்தம் எனப்படுகிற காமிகம் முதலிய இருபத்திஎட்டு சிவாகம முழுமுதல் சிறப்புநூல்கள் ஆகும். இறைவழிபாட்டுமுறையை இறைவனிடமே கேட்டறிந்து, இறைவியும், திருமாலயனிந்திரன் முதலானோரும் சிவநெறியின்படி பூசித்துப் பேறுபெற்றதை நமக்கு புராணங்கள் நன்கு விளக்குகின்றன. ஆதலால் பக்தி என்கிற நோக்கில் ஒருநூலையும் அடிப்படையாக பின்பற்றாது, அவரவர் தாம்விரும்புகிறமுறைகளில், நமக்குள்ள பசுஞானத்தின்படி செயல்படுவது கூடாததும், ஆபத்தானதுமாக அறியத்தக்கது. உயிர்களின் பரமஆப்தராகிய சிவனார் அருளிய ஆகமங்கள் யாவும் சிவஞானநூல்களான படியால் இவற்றின் வழிமுறைகளைப் பின்பற்றி வழிபடுவதே சிறப்பான பயனைத்தருவதாகும்.

இறைவனிடத்தில் நாம் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்துகிற பக்திரஸ உணர்வை வெளிப்படுவதற்கான முறைகளை வேதாகமபுராணாதிநூல்கள்யாவும் ஒன்பதுவகைகளில் முறைப்படுத்தி விளக்கிஉள்ளன. அவை,

சிரவணம் கீர்த்தனம் சம்போஸ் ஸ்மரணம் பாதஸேவனம்.
அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் ஸக்யம் ஆத்மநிவேதனம்.

அதாவது, இறைவனைப்பற்றி காதாரக [1]கேட்டறிதல், [2]புகழ்ந்துரைத்தல், [3]எண்ணுதல், திருவடியைக்கண்டு 4தரிசித்தல், [5]பூசித்தல், [6]வணங்குதல், தொண்டனாகப்[7]பணியாற்றுதல், அன்புடன் [8]உறவுகொள்ளுதல், தன்னை முழுமையாக [9]ஒப்படைத்தல் ஆகியவை ஒன்பது வழிமுறைகள். இவைகளுக்குள்ஒன்றாக, நடுநாயகமாக, ஐந்தாவதாக விளங்குவதே ஆகமங்கள் சிறப்பித்துக்கூறும் அர்ச்சனம் ஆகும். ஜலம், பூவொடு தூபம் முதலிய பொருட்களை ஸமர்ப்பணம் செய்வதால் இக்கிரியை ஸபர்யா என்றும், நமஸ்காரத்தைத் தெரிவிப்பதால் நமஸ்யா என்றும் பெயர் பெறுகிறது. அர்ச்சனம் என்ற சொல்லுக்கு, திரவியத்தை மந்திர-சம்பந்தமுள்ளதாக இறைவனுக்கு அர்ப்பணிப்பது என்பதையே பொருளாக சைவாகமங்கள் விளக்கம் தருகின்றன. "புண்ணியம் செய்தார்க்குப் பூவுண்டு, நீருண்டு" என்ற ஆன்றோர் வாக்கின்படி நாம் வழிபாடு செய்யவும், முற்பிறவியின் புண்ணியமே காரணம். அவன் தாளை வணங்குவதற்கும், அவனருள் அவசியமாதலால், அந்த இறையருளை நாம் பெற்றிடும்பொருட்டு முதலில் ஸ த்குருவிடம் இறைவனைக்கண்டு, மந்திரஉபதேசத்தைப்பெற்று, உரியவழிமுறைகளை நன்கறிந்து, தினமும் வழிபாடாற்றி இனிப்பிறவாவரம் வேண்டுவதே நெறிமுறையாகும். நாம் பிறந்ததே பூசைசெய்து இனி, பிறவாதவாறு பிறப்பறுக்கத்தான் என்பதையும், இறைவன் பொன்னடிகள் ஒன்றே மெய் என்பதையும் மற்றவை பொய் எனும் மாயை என்பதையும் உணரவேண்டும்.
பிறவிக்குக் காரணமாக விளங்குகிற நமது வினைப்பயன்களை இறையிடம் அர்ப்பணித்து முற்றுபெறச்செய்துவிடுவதே பூசை. இச்செயலால் வினைகள் முற்று பெறுவதாலும், மெய்ஞானம் ஏற்படுத்தப்படுவதாலும் இச்செயல் பூஜை என்று கூறப்படுவதாக காரணாகமம் சொல்லின் பொருளை விளக்கிகூறுகிறது. இதனையே வள்ளுவரும், இறைவனடி சேராதார் பிறவிப்பெருங்கடலை நீந்திக்கடந்தவராக ஆகமாட்டார்கள் என்று திருக்குறளில் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய இறைவழிபாடு என்பது பல கிரியைகளை உள்ளடக்கியது. அக்கிரியைகள் ஆகமங்களின் பூசையில் [1]**ஸாங்கம்**, [2]**உபாங்கம்**, [3]**பிரத்யங்கம்** என்கிற மூன்றுபகுதிகளில்

ஒடுக்கி விளக்கப்பட்டுள்ளன. பூசைக்கிரியைகளை பலவித உபசாரவகைகளாகத் தெரிவித்து உள்ளன. இவற்றைப் பொதுவாக ஆவாஹனம் முதலாக விஸர்ஜனம் வரையிலான பதினாறு உபசாரவகை என்று முறைப்படுத்தி ஆகமங்கள் விளக்குகின்றன. இவற்றுள் பூசையின் தலையாய, முக்கியஉறுப்பாகவும், முதலாவது உபசரிப்புக்கிரியையாகவும் அமையப்பெற்றுள்ள கிரியை தெய்வங்களின் திருமஞ்ஜனக்கிரியை ஆகும். இந்த அபிஷே கத்திற்கே பூஜை என்று பெயர். மற்றய கிரியைகள் இதற்கெனவே முன்னும் பின்னுமாக செய்யத்தக்கவைகளாக அமைந்துள்ளன.

இவ்வாறு தனிப்பெரும் சிறப்புக்கிரியையான, பூசையின்உறுப்பான, அபிஷேகம் என்பது, உரிய விதிமுறைகளைப் பின்பற்றாமல் செய்யப்படுமானால் அது பொலிவற்ற பயனற்ற செயலாகி விடுகிறது. ஆதலால் மெய்யடியார்கள் அபிஷேகவிதிமுறை மற்றும் நோக்கங்களை நன்கு அறிந்திருக்கவேண்டியது அவசியமாகிறது. இதுபற்றி பலநூல்களில் ஆங்காங்கே கூறப்பட்டுள்ள போதிலும், அவை பெரும்பாலும் சமஸ்கிருதமொழியிலும், எழுத்திலுமே காணப்படுகின்றன. மேலும் சிலபகுதிகளே விளக்கப்பட்டுள்ளன. எனவே இது தொடர்பான இலக்கணச்செய்திகளை மட்டும் சேகரித்து, யாவரும் எளிதில் தெரிந்துகொள்ளும் வகையில், எளியதமிழ்மொழியில், இறைவனது நீராட்டுவிதிமுறைகளையும், அதன் நோக்கப்பயன்களையும் அன்பர்களுக்குப் பின்பற்றுவதில் ஊக்கமளித்திடும் நோக்கில், எனது சிற்றறிவுக்கு எட்டியஅளவில் குருவருள் துணைகொண்டு ஒருகட்டுரையாகத் தொகுத்து எழுதப்பட்டது. எனது மாணவர்களின் விருப்பத்திற்குஏற்ப, இறையருளால் இது ஒருநூலாக தற்போதுவெளிவந்துள்ளது. தேவர்களுக்கு தொடர்பு உடையதே திவ்யம் எனப்படும். தேவதைகளுக்கான அபிஷேக வகைகளை அவற்றின் இலக்கணவிதிமுறைகளுடன் இந்நூல் விளக்குவதால், இந்நூலுக்கு திவ்யாபிஷேகவிதி என்று பெயர்சூட்டப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டில் கோயில்களில் சைவாகமங்களைப் பின்பற்றியே பூசைகள் நடைபெற்று வருவதால், சைவஆலய அடியார்களாகிய, அபிஷேகத்தைச் செய்விக்கும் உபயதாரர்களுக்கும், அபிஷேகத்தைசெய்யும் அர்ச்சகர்களுக்கும் தேவைப்படுகிற, பயனளிக்கக்கூடிய, திருமஞ்சனச்செய்திகள்பலவும் சிவாகமங்களின்படியே ஒன்றுதிரட்டப்பட்டு இதில் விளக்கப்பட்டுள்ளன. மேலும், இந்நூலில் சைவாகமநூல்களின்,

முக்கியசான்றுகள் எளிதில்அறியவும், மனப்பாடம்செய்யவும் ஏற்றவகையில் தமிழ்எழுத்திலேயே சேர்க்கப்பட்டுள்ளன. மேலும் நூலின்பொருளானது எளிதில்கண்டறியவும், மனதில்பதியவும், மனதில்எழும் வினாக்-களுக்கான விடைகளைப்போல செய்திகள்யாவும், பலசிறுசிறு உட்தலைப்புகளின் கீழ் பகுத்து எழுதிவிளக்கப்பட்டுஉள்ளன. குறிப்பிட்ட ஒருசிலஅபிஷே கங்களை மட்டுமே அதிகம் பின்பற்றி வரும் இக்காலத்தில் தொன்மைகாலத்தில் பின்பற்றிவந்த ஆகமகலாசாரத்தின் சம்பிரதாயப்படி இருந்தவந்துள்ள அரியபல அபிஷேகவகைகளும், அவற்றின் தயாரிப்புமுறைகளும், அரிய-பயன்களும் இந்நூ லில் தெளிவாகவும், சான்றுடனும் விளக்கப்பட்டுள்ளன. மேலும் இதில் ஆலயநித்யபூசைக்கு ஏற்றவைகளான, 5, 9, 17, 25 ஆகிய கணிப்பிலான கலசஸ்நபனாபிஷேக விதிமுறைகளும் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது யாவருக்கும் மிகவும் பயனள்ளதாகும்.

மேலும் சான்றுகளில் காணப்படும் அரியபல சமஸ்கிருதமொழித்துறை சார்ந்த ஆகமக் கலைச்சொற்களுக்கு உரியபொருள்யாவும் தமிழில் அரும்பதவிளக்கமாக முடிவில் மாணவர்களுக்கும், பலருக்கும் பயன்தரும் நோக்கில் விளக்கப்பட்டுஉள்ளது. இந்நூலில் 64 வகையான திரவியாபிஷேக வகைகளும், நூற்றுக்கும் மேற்பட்ட நீராட்டலுக்கு உரியபொருள்-வகைகளும் குறிப்பிடப்பட்டு உள்ளதால் இந்நூல் அரியபொருள்களால் நீராட்டலைச்செய்ய விரும்பும் மெய்யடியார்களுக்கு சிறிதளவேனும் உதவும் எனநம்புகிறேன். மேலும் நூற்றுக்கணக்கான அபிஷேகபொருள்களின் குணநலமகிமைகளும், அவற்றின் பயன்களும் இருமொழிகளில் பிறபெயர்களுடன் இயன்றவரை இதில் கூறப்பட்டுள்ளன. மறுபிறப்பாகிய தீராதநோயைத்தீர்த்து அருளவல்ல இறைவனின் நீராட்டு முறையை விளக்கிக்கூறும் இந்நூல் வழிபாட்டிற்கு பலருக்கும் ஒருவழிகாட்டியாக உதவும் எனலாம். இந்நூலை கண்ணுறும் வாசகஅன்பர்கள் இதில் காணும் குறைகளைநீக்கியும் குணங்களைஏற்றும் பயன்பெற வேண்டுகிறேன். அடியேனை தனது அருளாசியால் எழுதவைத்த, எனதுகுருநாதர் தருமபுரம், சிவாகமபண்டிதரத்னா. சிவபுரம். சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசார்யார் அவர்களின் பொற்பாதகமலங்களைப் பணிந்தும், பொது மக்களுக்கு பயனுள்ள ஆகமகருத்துக்களை எடுத்துக்கூறுமாறுபணித்து,என்னை ஊக்குவித்த திருப்பதி ஆகம பேராசிரியர் சிவஸ்ரீ.V.சந்திரசேகர

சிவாசார்யார் அவர்களின் திருவடிக்கமலங்களைப் பணிந்தும், அவர்களது நல்லாசிகளின் பயனாக இந்நூல் சிறக்கவேண்டியும் எனது நன்றியை குருமார்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் வெளிவந்திட அச்சிட்டும், பரிசோதித்தும், மதிப்புரை வழங்கியும், பதிப்பகப்பணிகளாற்றியும், வெளியிட்டும் உதவிய அனைத்து அன்பர்களுக்கும் எனது அன்புகலந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். எஃது இஷ்டதெய்வமான ஸ்ரீமஹா சாஸ்தாவின் அருளால் யாவரும் இன்புற்று வாழ வாழ்த்தி மகிழ்கிறேன்.

இங்ஙனம்,

ஆகமப்ரவீணர், & வியாகரண சிரோமணி.

வி. சோமசேகர சிவாசாரியார்.

முதல்வர். சைவாகம கலாசார வித்யாகேந்திரம்,

சென்னை - 600 001.



டாக்டர் சிவஸ்ரீ தி.ஷ. ஸாம்பமூர்த்தி சிவாசார்யர்

உ

ஸ்ரீ குருப்யோ நம:

திவ்யஅபிஷேகவிதி

(சைவாகமம்)

தெய்வத் திருமஞ்சன முறை

நூலின் பொருளடக்கம்

1. வழிபாட்டின் தேவை
2. வழிபாட்டின் சிறப்புகள்
3. வழிபாட்டின் பெயர்விளக்கம்
4. வழிபாட்டின் அவசியம்
5. பூஜையின் பஞ்சகிருத்தியம்
6. ஐந்துவிதஉபசரிப்புகள்
7. பூசையில் நீரின்தேவை
8. பூஜையில் நீராட்டு உபசரிப்பு
9. பூஜையின் உறுப்புச்செயல்கள்
10. நீராட்டுப்பொருள் சுத்திகரிப்பு
11. ஸ்நாநதிரவிய கலசஸ்தாபனமுறை
12. 16பொருளின் திருமஞ்சனமுறை
13. 25பொருள்களின் நீராட்டுமுறை
14. ஏகாதசருத்ராபிஷேக திரவியமுறை
15. 12மாசதிரவிய அபிஷேகமுறை
16. அபிஷேகதீர்த்தத்தில் சேர்க்கத்தக்கபொருள்கள்
17. திருமஞ்சனத்திற்கு தீர்த்தம் எடுத்துவரும்முறை
18. அபிஷேக பாத்திரவிதிமுறை
19. வீட்டுபூஜைக்குரிய அபிஷேகப்பொருள்கள்

20. அபிஷேகதிரவியங்கள் தரும்பயன்கள்
21. அபிஷேகபொருளின் அளவுவகை
22. திரவ்யாபிஷேகத்திற்கான காலங்கள்
23. அபிஷேகத்தின் சிறப்புகள்
24. ஸ்நாநதிரவிய சுத்திமுறை
25. அபிஷேகக்கிரமம் (நீராட்டுமுறை)
26. அபிஷேகபொருட்களின் வரிசைமுறை
27. பூசையில் சிலைக்கேற்ற நீராட்டுமுறை
28. திருமுறையில் திருமஞ்சனக்கூற்றுகள்
29. ஆகமபூசையில் அபிஷேகசெய்முறை
30. எண்ணைக்காப்புமுறை (அப்யங்கவிதி)
31. அரிசிமாவுக்காப்புமுறை (உத்வர்த்தனவிதி)
32. முழுக்காட்டும்முறை (அபிஷேகவிதி)
33. அபிஷேகக்ரமம்
34. திருமஞ்சனத்தில் இடைக்கால உபசரிப்புகள்
35. பூசித்தகலாசாபிஷேகம் செய்முறை (ஸ்நபனகலசாபிஷே கவிதி)
36. அபிஷேகத்தின் முடிவில் செய்யவேண்டியவைகள்
37. பஞ்சகவ்யஅபிஷேகவிதி (பசுவின் ஐங்கலமாட்டும்முறை)
38. பஞ்சகவ்ய ஸ்தாபனமுறை
39. பஞ்சகவ்ய பூஜைமுறை
40. பஞ்சகவ்ய அபிஷேகப்பயன்
41. பஞ்சகவ்ய மந்திரிப்புமுறை
42. பஞ்சாமிருதஸ்தாபனமுறை(ரஸபஞ்சாமிருதம் & பலபஞ்சாமிருதம்)
43. ரஸபஞ்சாமிருதபூஜாவிதி, அளவுமுறை, ஸ்நபனமுறையானது
44. பழபஞ்சாமிருத ஸ்தாபனபூஜை

45. பஞ்சகவ்ய அபிஷேககாலங்கள்
46. அபிஷேகப்பொருள்களால் பெறும்பயன்கள்
47. அபிஷேகபூசையின் பயன்களுக்கான ஆகமசான்று
48. அன்னாபிஷேகமஹிமை
49. சங்காபிஷேகமஹிமை
50. நெய்அபிஷேகமஹிமை
51. ஸஹஸ்ரதாராபிஷேக மஹிமை
52. பாவம் போக்கிட அபிஷேகவகை
53. பஸ்மஸ்நானபயன்
54. அபிஷேகவிபூதிஅணிவதன் பயன்
55. பாலாபிஷேகமஹிமை
56. தயிரபிஷேகமஹிமை
57. உதகாபிஷேகபயன்கள்
58. ஜலபூஜார்ச்சனமுறை
59. அபிஷேகதிரவியங்களின் விவரம்
60. அபிஷேககால ஜபவிதிமுறை
61. திருமஞ்சனகால வேதாதி பாராயணமுறை (துதிஓதும் முறை)
62. பிம்பசுத்தி ஸ்நபனவிதி (புனிதநீராட்டல்)
63. தைலாப்யங்கவிதி (எண்ணைக்காப்பு செய்வித்தல்)
64. கந்தலேபனவிதி (சந்தனப்பூச்சுமுறை)
65. திரையிடும் காலங்கள் (படாவரோஹண காலம்)
66. மிருதம்பஸக்கல்பனம் (மண்வகை சேர்த்தஜலம்)
67. அர்க்கியோதக கல்பனம் (அர்க்கியதீர்த்தம்)
68. பலோதகம் (பழவகை சேர்ந்தஜலம்)
69. காஷாயோதகம் (மரப்பட்டைகளின் ஊரல்ஜலம்)
70. பாத்யோதகம் (பாத்யஜலம்)

71. ஆசமனோதகம் (ஆசமனீயஜலம்)

72. நீராட்டலுக்கான ஊரல்தீர்த்த வகைகள்

73. கஷாயோதகம் (மரப்பட்டைகள் ஊரியநீர்)

74. மார்ஜநோதகம் (அருகு முதலியவற்றுடன் சேர்ந்தநீர்)

75. ரத்னோதகம் (ரத்தினக்கற்களுடன் கலந்தநீர்)

76. உலோஹோதகம் (உலோகவகை கலந்தநீர்)

77. தாதூதகம் (கனிமதாதுவகைகள் கலந்தநீர்)

78. பீஜோதகம் (விழதகள் ஊரியநீர்)

79. கந்தோதகம் (நறுமணப்பொடி கலந்தநீர்)

80. மிருதோதகம் (மண்வகை கலந்தநீர்)
(மிருத் / மிருத்திகை - மண்)

81. மார்ஜனோதகம் (தரைத்தாவரவகை கலந்தநீர்)

82. பரிமாணோதகம் (சிறப்புமிகு வளர்தாவரநீர்)

83. பத்ரோதகம் (பூஜாங்கஇலை வகை கலந்தநீர்)

84. புஷ்போதகம் (மலர்வகை சேர்ந்தநீர்)

85. ஆட்யோதகம் (பெருந்தகைமிக்க நீர்)

86. அஸ்திரோதகம் (பொன்னால்ஆன சிறுஆயுதங்கள் ஊரியநீர்)

87. பலோதகம் (பழவகை ஊறியஜலம்)

88. காஷாயோதகம் (மரவகைகளின் பட்டை, தோல் ஊரியநீர்)

89. காந்தோதகம் (ஈர்ப்புக்கல் ஊரியஜலம் காந்தவகை)

90. மூலோதகம் (வேர்வகைகள் ஊரியஜலம்)

91. வல்கலோதகம் (மரவுரிபட்டை, இறகு சேர்ந்தஜலம்)

92. துவசோதகம் (தோலூறியஜலம்)

93. ஆலயபூஜையில் பஞ்சகவ்ய அளவுமுறை

94. மஹாபிஷேகவிதி (பெருமளவில் நீராட்டும்முறை)

95. வீட்டுபூஜையில் பஞ்சகவ்ய அளவுமுறை

96. அபிஷேககால மந்திரபிரோயகமுறை

97. சிவலிங்கஸ்நபனவிதி

98. லிங்கசுத்தி விதிமுறை

99. சிலை வகைக்கேற்ற நீராட்டும்வகை

100. லிங்கபேரங்களைச் சோதிக்கும்முறை

101. பேரபேதானாம் ஸ்நானவிதி

102. லிங்கவகையின் அபிஷேகமுறை

103. அசைக்கக்கூடிய சிலையின் அபிஷேகமுறை

104. சலபேரவகையும், திருமஞ்சன முறையும்

105. சைவாகமங்களில் பேரவகைகள்

106. உலோகபேரசுத்திவிதி

107. உலோகபேர நித்யபூஜாவிதி

108. அபிஷேககால ஆஸனபூஜை

109. அபிஷேகதீர்த்த இலக்கணம் (ஜலம்எடுப்புமுறை) :

110. ஜலத்தைவிலக்கிடும்விதி. (விலக்கத்தக்க நீர்வகை)

111. அபிஷேகஜலத்தின் தோஷங்களால் ஏற்ப்படும் பயன்கள்

112. சங்கில்விளங்கும் தெய்வங்கள் (சங்கஅதிதேவதைகள்)

113. பூஜாஅபிஷேக காலங்களின் மந்திரவகை

114. ஸ்நபநாங்கமான அரியபொருள் பட்டியல் சான்று

115. 108 கலசஸ்நபன திரவியங்கள்

116. சான்றுகளின் அரும்பதவிளக்கம்.

உ

ஸ்ரீ குருப்யோநம

சிவமயம்

திவ்யஅபிஷேகவிதி

(சைவாகமம்)

தெய்வத் திருமஞ்சன முறை

குரும் கணபதிம் துர்காம் வடுகம் சிவம் அச்யுதம்.
பிரம்மாணம் கிரிஜாம் லக்ஷ்மீம் வாணீம் வந்தே விபூதயே.

ஸர்வகிருத் ஸர்வதாதாரம் ஸர்வக்ஞும் அபராஜிதம்.
ஸர்வபூதாத்ம பூதஸ்தம் பிரணதோஸ்மி ஸதாசிவம்.

சிவமெனும் பரம்பொருள் எங்கும் வியாபகமாய் இருப்பினும், அது சிவலிங்கம் முதலிய திருமேனியையும், குருவையும் இடமாகக்கொண்டு நிற்கும். அகத்தேயும் உயிரை இடமாகக் கொண்டுநின்று, ஆன்மாக்கள்செய்யும் வழிபாட்டை ஏற்றுஅருளும், சிவபெருமான் இவ்விடங்களில் தயிரில் நெய்போல் விளங்கிநிற்பர். மற்றய இடங்களிளெல்லாம் பாலில் நெய்போல வெளிப்படாது நிற்பர். ஆதலினாலே நாமெல்லோரும் நமது பரமபதியாகிய சிவபெருமானை குருவடிவிலும், லிங்கவடிவிலும், ஜங்கமம் எனும் அசையக்கூடிய அர்சகர் வடிவிலும், உத்ஸவமூர்த்தியிலும் உரியஇடங்களிலே விதிப்படி சிரத்தையோடு வழிபடவேண்டும்.

தாபர சங்கமங்க ளென்றிரண் டுருவி னின்று
மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க் கருளை வைப்ப
னீபரன் றன்னை நெஞ்சி னினைவையே னிறைந்த பூசை
யாய்பரம் பொருளைநாளு மர்ச்சிநீ யன்பு செய்தே.

(சிவஞானசித்தியார்)

வழிபாட்டின் தேவை :

இவ்வழிபாடு மேற்கூறியவாறு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கத்தாராலும் செய்யத்தக்கதேயாகும். மலம்நீங்கிய சிவஞானிகளும், பூர்வமலவாசனை தாக்காமைப்பொருட்டும்,சிவானந்தம் மேன்மேலும் வளர்தற்பொருட்டும், சிவலிங்கம், நடேசர் முதலிய திருமேனிகளை வழிபடுவர். சிவபெருமானுடைய திருவடிகளை நினையவொட்டாமல் நம்மை அயர்ப்பிக்கும் மும்மலஅழுக்கை ஞானநீரால்கழுவி, அயராதஅன்பைச்செய்யும், மெய்யடி- யார்களோடு கலந்துகூடி மலமயக்கம் நீக்குமாறு அன்புமிக்க அவருடைய திருவேடத்தையும், சிவாலயத்தையும் சிவனெனவேகண்டு வழிபட்டுவாழும் இயல்பினோரே ஜீவன்முக்தராவார் என்று சிவஞானபோதம் கூறுகின்றது. ஆலயவழிபாடு செய்து பெரும்பேறெய்திய மார்க்கண்டேயமுனிவர் இதற்குச்சான்றாவார்.

ஆலயவழிபாட்டின் பெருமையை ஆன்மாக்களுக்கு உணர்த்தி, அவர்களை நல்வழிப்-படுத்துமாறு திருஉள்ளம்கொண்ட, ஸ்ரீஉமாதேவியார், காஞ்சீபுரம், திருவானைக்காவல், மயிலாடுதுறை (மாயூரம்), மயிலாப்பூர் முதலிய பலதலங்களிலும், ஸ்ரீவிநாயகர் திருச்செங்காட்டாங்குடி, திருநாரையூர், திருவெண்ணெய்நல்லூ ர் முதலிய தலங்களிலும், ஸ்ரீதிருமுருகசுப்பிரமணியக்கடவுள் திருச்சேய்ஞ்சலூர், திருப்பரங்குன்றம், திருத்தணிகை, பழனி முதலியதலங்களிலும், ஆலயம்அமைத்து சிவனைப்பூசித்தார்கள். நந்திதேவர், அகத்திய-முனிவர், வசிஷ்டமுனிவர், பிரம்மா, விஷ்ணு முதலிய, தேவர்கள்முதலானபலரும், ஆலய வழிபாட்டைச் செய்தே போகமோக்ஷங்களைப்பெற்றார்கள். மேலும் அஹறிணைகளாகிய சிலந்தி, நாரை, கரிக்குருவி, சர்ப்பம், யானை முதலியனவும் ஆலயசிவவழிபாட்டாலேயே முக்தியடைந்தன என்பதை தலபுராணங்களால் அறிகிறோம். சிவாலயங்களில்லாதஊர், எவ்விதசெல்வங்களால், நிறைந்துஇருப்பினும் அது திருவமைந்தஊரன்று, அது காடேயாகும். எனவே கோயிலில்லா

ஊரில் குடிஇருத்தல் ஆகா என்பார் ஔவை. அக்கோயில்களில் சிவவழிபாடு, பூசை, உத்ஸவம், பிரதிஷ்டை, பிராயச்சித்தங்கள் ஆகியஎல்லாக்கிரியைகளும், சிவபெருமான் ஆன்மாக்கள் உய்வதன்பொருட்டு அருளிச்செய்த சிவாகமவிதிப்படியே நடைபெறத்தக்கன. வழிபாடானது அகவழிபாடு, புறவழிபாடு எனஇருவகைப்படும். புறப்பூசை-யிலுள்ள நைவேத்தியம் முதலான உபகரணங்களையெல்லாம் அகத்தே மனத்தினால் பொருந்திச்செய்வதே அகவழிபாடுஎனும் அந்தர்யாகபூசை. அந்தர்யாகபூசைசெய்த பிறகே புறப்பூசையை செய்யவேண்டும் என்பதே ஆகமசித்தாந்தநூல்களின் முடிவாகும்.

இங்ஙனம் சிவலிங்கப்பெருமானை அகத்தும், புறத்தும் வழிபடாதவர்கள் ஜெனன மரணத்திற்கு ஆளாகின்றார்கள். இதனை அப்பர்சுவாமிகளும் குறிப்பிடுகிறார். அப்பாடல்,

திருநாம மஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகாற் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
உன்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணாராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ ரணியாராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வெண்ணிற்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாக யிறக்கின்றாறே.

(அப்பர்சுவாமிகள்)

கோயிலும், பூசையும் நமக்கு உண்மையைவிளக்கி, ஞானத்தை உண்டாக்குவதற்கு இன்றியமையாக்கருவியாயுள்ளன. மும்மலநோயை நீக்கும் வைத்தியநாதராகிய, ஸர்வேச்-வரராகிய பரமசிவனார், சைவாகமங்களில் பூசையைச்செய்யுமாறு விதித்திருப்பது, ஏனெனில் உயிர்கள் யாவும் முப்பொருள் உண்மையைஉணரந்து, பூசையைச்செய்து, அதனால் ஏற்படும் சிவஞான மேலீட்டால், சிவாத்துவைத முக்தியில்சேருதல் பொருட்டேஆகும்.

வழிபாட்டின் சிறப்புகள் :

"சிவ ஏகோ த்யேய:" என்பது வேதோபநிஷதவாக்யம். சிவன் ஒருவனே தியானிக்கத்-தக்கவன் என்பதே இதன்பொருள்.

எனவே, இதனால் தியானிக்கவேண்டிய, அவன்ஒருவனே உலகில் பூசிக்கத்தக்கவனும் ஆகிறான். "தொழுவாரவர் துயராயின தீர்த்தல் உனதொழிலே" (சுந்தரர் 7-1-பா9) என்றும் ரு "தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி" (அப்பர் 6-5-8) என்றும் திருமுறைகளும், இதனையே, வேதம் பற்பலவடிவில் பரமனைக்கூறி வணங்குகிற ஸ்ரீருத்ரம் எனும் (நமக)பகுதியில், நமச்சிவாயச என்றும், பசுபதயேச நமோ என்றும் கூறி இருப்பதால், மும்மலபாசச்சேர்க்கையாலேயே பசு எனப்படுகிற உயிர்களின் பதி என்பவர் சிவனே என்பதும், அவரை வணங்குதல்முறை என்பதும், வேதத்தின் உபதேசமாகஉள்ளதை உணரலாம். வழிபாடே வல்வினைகளை நீக்கும். இதனை ஏற்று அனைத்துஉலகிற்கும் முதல்வனாகியகடவுளை, நாளும்நாம் வழிபட்டால், அந்தவழிபாடே நமதுவினையைத்தீர்க்கும் பணியாக உழைப்பாகநின்று, நாம்செய்த பாவத்தை நீக்கிவிடுகிறது. இவ்விதம் வினையினின்று நீங்கியவனின் எண்ணம், பேச்சு, செயல் யாவுமே தூயதாகி திரிகரணசுத்திகள் ஏற்பட்டு அவ்வான்மா உயர்ந்ததாய் விளங்கும். பூஜை என்பதனை சிவாகமம் விளக்குகையில், அச்சொல்லின் நிர்வசனத்தைக் கூறுகிறது.

பூர்யந்தே ஸர்வ கர்மாணி ஜாயதே ஞான மாத்மனி.
பூர்ணாத் ஜாயதே யஸ்மாத் பூஜாசப்த இஹோச்யதே.

(காரணாகமம்)

மேற்கண்ட காரணாகமத்தின் சொல்விளக்கப்படி பூஜை எனும் சொல்லில் உள்ள பூ ஸ்ரீ என்ற எழுத்து வினைகள்முற்றுபெறுவதையும், ஜா ஸ்ரீ என்ற இரண்டாவதுஎழுத்து ஞானம் ஜனிப்பதையும் உணர்த்துவதாகும். மேலும் ந என்பது இல்லை என்பதையும், ம என்பது மமதா எனும் ஆணவமலமாயை இல்லாமை என்பதையும் உணர்த்துவதாகும். எனவே நம:, என்பதனால் செய்யப்படும் இப்பூஜையானது நமஸ்யா எனக்கூறப்படுகிறது. இவ்வாறு நமக்கு அனைத்திற்கும் மூலகாரணமாய்த்திகழும் மூலகன்மவினையை முற்றுபெறச்செய்யும், மஹோன்னதமான கிரியையே பூசை எனப்படுவது ஆகும்.

வழிபாட்டின் பெயர்விளக்கம் :

ஆகமத்தில் பூஜையானது அர்ச்சனம், பூஜனம், யஜனம், ஸபர்யா, நமஸ்யா, அபசிதி:, இஜ்யா, பூஜா, அர்ச்சா என்ற பலசொற்களால் விதிக்கப்படும். "அர்ஹ" பூஜாயாம் என்ற வினைப்பகுதியிலிருந்து

உருவானது அர்ச்சா எனும் சொல். இச்சொல்லுக்கு அர், சா, ம் ஸ்ரீ என்ற மூன்றுஎழுத்துக்கள்சேர்ந்து, அர் என்பது பூஜித்தலையும், சகாரம் பொருளையும், மகாரம் மந்திரத்தொடர்பையும் குறிப்பதாய் இச்சொல்விளங்குவதாக ஆகமம் பொருள்விளக்கம் தருகிறது. ஒருபொருளைமந்திரத்துடன் இறைவனுக்கு அர்ப்பணித்தலே அருச்சனை ஆகும்.

அகாரம் அர்ச்சநம் புரோக்தம், சகாரம் திரவ்யமுச்யதே.

மகாரம் மந்த்ரசம்பந்தம், அர்ச்சநம் சேதி கீர்த்திதம்.

பூஜை எனப்படுகிற இந்த தேவார்ச்சனமானது, இருவகையாகும். அவை ஆத்மார்த்தபூஜை, அல்லது ஸ்வார்த்தபூஜை எனப்படுகிற தன்நலம்பொருட்டு தம்வீட்டில்செய்யத்தக்க-கிருஹார்ச்சனம். மற்றொன்று பரார்த்தபூஜை, விமானார்ச்சனம் எனப்படுகிற பொதுநலன்-பொருட்டு கிராமாதிகளில் செய்யவேண்டிய ஆலயார்ச்சனம் எனப்படும். இந்த ஆத்மார்த்தம் மற்றும் பரார்த்தம் ஆகிய இருவகைபூசையும், நித்தியபூஜை என்றும், நைமித்திகபூஜை என்றும், காமியபூஜை என்றும் மூன்று வகைப்படும். நித்யபூசை தினமும் குறிப்பிட்டகாலத்திலேயே இடைவிடாதுசெய்யப்படுவது. நைமித்திகபூசை என்பது பிரதோஷம், சிவராத்திரி, திருவாதிரை, பௌர்ணமி, புண்யகாலம் இவைகூடிய சிறப்புநாட்களில் குறிப்பிட்ட ஒருகாரணத்திற்காக செய்யப்படுவது. காமியபூசை என்பது விருப்பம்ஈடேருவதற்காக விரும்பும்நாளில் விசேஷ-முறையில் வழிபடுவது. இவை மூன்றிலும் அபிஷேகம் என்பது தவறாமல் இடம்பெறும். அபிஷேகம் இல்லாமல் பூசைஒருபோதும் செய்யப்படுவதில்லை.

வழிபாட்டின் அவசியம்

பிறப்பிற்க்கு காரணம் அவரவர்களின் கர்மவினையேஆகும். கன்மத்தால் பிறவியும், பிறவியால் ஆசையும், ஆசையானது ஆணவாதிபாசத்தாலும் வருவதாகிறது. எனவே ஆசை அறவும், பாசம்அகலவும் பூசைதேவையாகிறது. மும்மலம்ஒழிந்திட நாம் காலையும், மாலையும் ஆலயம் போய், பணிந்துதொழுவது நமதுகடமைஆகும். இதனை சமயாசாரியர்கள் திருமுறை-களில் நன்குவலியுறுத்தியுள்ளனர். வழிபாட்டால் சஞ்சிதகன்மம் எனப்படுகிற பழவினையும், ஆகாமியகன்மம் எனப்படுகிறவருவினையும், பிராரப்தகன்மம் எனப்படுகிற தற்போது

இப்பிறப்பில்நாம் அனுபவிக்கஇருக்கும்வினையும் ஆகிய இம்மூவகை கன்மவினைகளும், முதல்வனான முக்கண்ணரை வழிபடுவதால் மாளும் என்கிறது சிவாகமம். மேலும், கிடைப்பதற்குஅரியது நமது மானுடப்பிறவி. இச்சரீரம் நமக்கு கிடைத்தது கடவுளைவழிபட்டு முக்திஇன்பம் பெறுதல் பொருட்டேஆகும். நாம் பிறந்ததே பிறப்பை இனிபிறவாதவாறு அறுக்கத்தான். எனவே, அப்பிறப்பறுக்கும் பிஞ்சகன்தன் கழலடிகளை நாம் நாளும் அர்ச்சித்தல் வேண்டும் என்பதை சைவசமயஞானத்தால் உணரவேண்டும். ஆணவமாகிய பாசம் நீங்க வேண்டுமானால் கட்டாயம் சிவபூசை செய்யப்படவேண்டும். ஒரு மனிதன் பிறவிநீங்கி, பேரின்பநிலையை அடையவேண்டுமானால் முதலில் சற்குருநாதரை சரணமடைந்து அவரிடம் சிவதீக்ஷையைப்பெற்று, அவர் கற்பித்தவழியில் வாழ்ந்து, நித்தமும் சிவபூசையை செய்திட வேண்டும். இவ்விதம் தொடர்ந்து செய்துவர நமது ஷட்வைரிவர்கமாகிய, சினம் முதலிய அறுவகைக்குற்றங்கள் நம்மைவிட்டு அகன்று,நமக்குஞானம்கிட்டும். அந்த சிவஞானத்தால் மட்டுமே பேரின்பமுக்தியைப் பெறஇயலும். அக்ஞானஇருளை அகற்றும் ஞானஒளியை நமக்கு அளிப்பதே பூஜை. வழிபாடே இனி பிறவாப்பெருவாழ்வைத்தருகிற உத்தமக்கிரியைஆகும். வாழ்க்கையின் அடிப்படை நோக்கமாய், கடமையாய், பயனாய் விளங்குவது சிவபூஜையே ஆகும். இதனையே வள்ளுவப்பெருந்தகை "கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழார் எனின்" என்று இறைவனின் நற்றாள் தொழுதலே கற்றார் கடன் என்கிறார். இறைவன் ஒருவனே உயிர்களின் உற்றநண்பனாய், ஐந்தொழிலாற்றி நன்மைசெய்து உதவிடும் பரமஆப்தன். அவன் சேவடியை பூசிப்போரை இறைவன் தம்மைப்போல் ஆக்கி உயர்த்துவார். அதாவது, இறைவனை சார்கின்றஉயிர்களுக்கு, இப்பிறவிக்குவேண்டிய சுகபோகங்களைக்கொடுப்பதுடன், படிப்படியாக உயர்த்தி, அவ்வுயிர்களைத்தானாகவேசெய்யும் பெருங்கருணையாளன் சிவபெருமான். மும்மலக் கட்டுண்டு துயருற்றுள்ளஉயிர்களை, இறைவன் தன்னைப்போல் மாசறச்செய்திடவே அவைகளுக்காக இவ்வுலகைப்படைத்து, ஐந்தொழிலாற்றி, பேருதவி செய்தருள்கின்றான். இதனையே அப்பர்சுவாமிகள் "இறையானது, ஐந்தொழிலாய் ஐவகையால் நினைவார்பால் அமர்ந்து தோன்றும்" என்று குறிப்பிடுகிறார்.

பூஜையின் பஞ்சகிருத்தியம் :

ஆன்மநலம்தரும் ஐந்தொழில்களின் தத்துவார்த்தங்களை ஆத்மாக்களுக்கு விளக்குவதே ஆகமபூசை. பூசையின் செயல்கள் யாவும், ஐந்துபூதங்களின் அம்சமான ஐவகைப்பொருள்-களின் தியாகத்தால், ஐந்தொழிலின் அம்சமாய்அமைந்துஉள்ளதை சைவாகமங்கள் கிரியைகளில் பூஜை, உத்ஸவம், பிரதிஷ்டை முதலியஅனைத்திலும் விளக்கிஇருப்பதால், இதனை நன்குஉணரலாம். வழிபாடு என்பது நீராட்டலே ஆகும். இறைவனுக்குத் திருமஞ்சனம் செய்விப்பதே ஆகமங்களில் பூசை எனப்படுகிறது. மற்றக்கிரியைகள் யாவும் அபிஷேகத்திற்கு முன்னும் பின்னுமாய் அமைந்துள்ளவையே. எனவேதான் இதனை ஆகமங்கள் ஜலார்ச்சனம் என்கின்றன. வழிபாட்டில் இந்த திருமஞ்சனமாகிற அபிஷேகநீராட்டுதலால் மட்டுமே அனைத்து உயிர்களின் மும்மலங்கள் நீக்கப்படுகின்றன. மாசற்றசோதியை நீராட்டுவதால் நமக்குள் உள்ளமாசு தாமேஅகலும் என்பது ஆகமகருத்தாகும். இதனை ஆகமபத்ததி ஆசாரியர்களும் "ஸ்நாநம் ஸ்வாத்ம மலாபஹம்" என்றுகூறி விளக்கியுள்ளனர். இத்திருமஞ்சனத்தை முறையறிந்துசெய்வதே நமக்குநற்பயனைத்தரும். அப்பர்சுவாமிகள் இறைவனுக்கு பூசைசெய்வதை அறிந்திலனே என்று தன்னடக்கத்துடன் "ஜலம் பூவொடுதூபம் மறந்தறியேன்" என்று திருவதிகை தேவாரத்தில் குறிப்பிடுகிறார். இதில் முதலில் நீரின் உபசரிப்பினையே குறிப்பிட்டுஇருக்கிறார். ஆகமத்தின் 16பூஜோபசாரங்களில் நீராட்டலாகிற ஸ்நானமே முதல்கிரியை ஆகும். நீரின்றி, பூவின்றி ஒருபோதும்பூஜை அமையாது. அபிஷேகமே பூசையாகும். இதனை பூசையின் முறைஅறியாதபோதிலும், கண்ணப்பநாயனார் தனது மெய்யன்பினால் முகவாய்நீராட்டியும், விலங்கான யானையானது தன்துதிக்கையால் நீராட்டியும் பேறுபெற்றதை இங்கு தலவரலாறுகளிலும், லக்ஷ்மியை யானைகள் நீராட்டிமலர் தந்து உபசரிக்கும்முறையை சிற்பத்திலும், உற்றுநோக்கி, பூசையில் அன்பின்தேவையை நாம் உணரலாம். மேலும் சைவாகமபூசைக்கிரியைகளின் ஐந்துதொழில்விளக்கக்கூற்றில் இந்த திருமஞ்ஜனக்கிரியையே படைத்தலாகிய சிருஷ்டி எனும் முதல்தொழில் அம்சமாக விளங்குகிறது. இதனை ஆகமம்

ஸ்ருஷ்டிச் சைவா பிஷேகஸ் து ஸ்திதிர் நைவேத்ய மேவச.
ஸம்ஹாரோ பலி ரித் யுக்த: திரோ பாவஸ் து தீபக: .
அநுக்ரஹச்ச ஹோமஸ் ஸ்யாத் பூஜாயா: பஞ்ச கிருத்யதா.

என்று கூறுகிறது. மேற்கண்ட ஆகமவசனத்தால் சிவபூஜையில் அபிஷேகம், சிருஷ்டிகிருத்யம், நைவேத்யம், ஸ்திதிகிருத்யம், அன்னபலிபோடுதல், சம்ஹாரகிருத்தியம், தீபாராதனை திரோபாவகிருத்யம், ஹோமம், அனுக்ரஹகிருத்யம் என்பதை அறியலாம். இவ்வாறே நித்தியோத்ஸவத்தின் பஞ்சகிருத்ய விளக்கத்தில் அன்னபலிதானமானது சிருஷ்டியாகிறது. இது அபிஷேகத்தில்சிறந்த அன்னாபிஷேகமாக இடம்பெற்றுஉள்ளது. இவ்விதமாய் அபிஷேகமானது, பூஜையில் முதல் கிருத்தியத்தை உணர்த்துவதும், உலகப்படைப்பில் "அப ஏவ ஸஸர்ஜாதௌ" என்றபடியும், "நீரின்றி அமையாது உலகு" என்ற வள்ளுவரின் வாக்குப்படியும், முதலில் படைக்கப்பட்டதும், பஞ்சபூதங்களில் ஒன்றானதும், "ரஸோவைஸ:" என்று வேதம் இறைவனதுவடிவமாய் புகழப்படும் சுவையை (ரஸத்தை சிறப்புக் குணமாக) சிறப்பு இலக்கணமாகக்கொண்டதுமான, நீரினால் செய்யத்தக்கது திருமஞ்சனம் என்பதாகும், லிங்காதிதெய்வத்திருமேனியை சுத்திசெய்வதாய், அனைத்துயிர்களின் மனத்திடைமாசுகளை நீக்குவதாய்உள்ள, இந்த தெய்வத்திருமஞ்ஜனசடங்கானது, ஸ்நபனம், ஸ்நாநம், அபிஷேகம், பவித்ரீகரணம், சுத்திதம் என்ற பலபெயர்களால் சைவாகமங்களில் குறிப்பிடப்-பட்டுள்ளது. பூசைக்கு முன்னர் செய்ய வேண்டியதான, பஞ்சசுத்திக்கிரியைகளிலும், ஸ்தானசுத்தி, திரவியசுத்தி, லிங்கசுத்தி, கலசஸ்நபனம் இவையாவும் ஜலத்தாலேயே செய்யப்படுவனவாய் உள்ளதால் வழிபாட்டில் நீரின் அவசியத்தை நன்குஉணரலாம்.

ஐந்துவிதஉபசரிப்புகள் :

சிவபெருமானுக்கு பூசையில் செய்யப்படும் உபசாரங்கள் எல்லாம் ஐம்பெரும் பூதங்களின் சம்பந்தமுள்ளவைகளாய், ஐந்துவிதமாயிருக்கும். அவை பின்வருமாறு (1) பிருதிவி சம்பந்தமான உபசாரங்கள் - சந்தனம், புஷ்பம், கிழங்கு, வேர், பழம், அன்னம் முதலானவை-களாம். (2) அப்புசம்பந்தமான உபசாரங்கள் - ஜலம், பால், தயிர், வஸ்திரம் முதலியவை-களாம். (3) அக்னிசம்பந்தமான உபசாரங்கள் - பொன், ரத்தினம், தீபம், கற்பூரதீபம், ஆபரணம் முதலியவைகளாம். (4) வாயுசம்பந்தமான உபசாரங்கள் - தூபம், சாமரம், விசிறி, கொடை, பதாகை முதலியவைகளாம். (5) ஆகாசசம்பந்தமான உபசாரங்கள் - மணி, வாத்திய வகைகள், கைமணிஓசை, மந்திரஒலிஉச்சரிப்பு, கீதம்,

(வாய்ப்பாட்டு ரூ தேவாராதிதுதிகளை ஓதுதல்) முதலியவைகளாம். இவற்றுள் நீர்சம்பந்தஉபசரிப்பான நீராட்டலை நல்லெண்ணெய், பால், தயிர், நெய், தேன், இளநீர் முதலியவைகளினால் விதிப்படி சிவமூர்த்திகளுக்கு அபிஷேகம் பண்ணுதல். சிவபுண்ணியகிரியை என்று சைவாகமங்கள் பறைசாற்றுகின்றன. இவற்றின்படி நீராட்டலுக்கான பொருள்வகைகள், அவற்றிற்கு உரியஇலக்கணம், சேர்க்கவேண்டிய விதிமுறைகள், அத்தருணம்கடைபிடிக்கவேண்டிய நியமங்கள், துணைக்-கிரியைகள், பூஜாகாலம் மற்றும் கிரியைவகைகளுக்குஏற்ற பொருள்களின் கையாளும் வரிசைமுறை, அவற்றினால்பெறக்கூடிய பயன்கள், இவற்றைப்பற்றிய சைவாகமகருத்துக்களை இனி காண்போம்.

பூசையில் நீரின்தேவை :

பூசையில் சிலபொருள்விடுபடின் குறைவில்லை, ஆனால் விதிக்கப்பட்ட உரியபொருள் தவறாமல் சேர்க்கப்படவேண்டும். பூசையில் அபிஷேகம் என்பது ஜலோபசாரவகையாகும். தோயஹாநிஸ்து துக்கதா எனக்கூறப்படுவதால் இந்த நீராட்டுதல் பூசையில்விடுபடுமாயின், அவ்வூரில் துயரம்ஏற்படும். எனவே பூசையில் இதனைக்கைவிடாமல் மனோபாவனையினாலாவது செய்து பூசைசெய்யத்தக்கது. பூசையில் திரவியமும், மந்திரமும் ஒருபோதும்விடுபடக்கூடாது. பூசையில் ஒவ்வொருசெயலும், மந்திரசம்பந்தமுள்ளதாக, கூறியமுறை[illegible]யே, சேர்த்துசெய்யப்பட வேண்டும். இதுவே அர்ச்சனம் [illegible]. பூஜையில், சந்தனம், புஷ்பம், ஜலம், தூபம், தீபம், நைவேத்யம், மந்திரஉச்சாரணம், உபசாரம் ஆகியவை மிக முக்கியமானவைஆகும். இவற்றில் எது குறைந்தாலும் பூசை நிறைவுபெற்றதாகாது.

பூஜா ஹாநெள பவேத் ரோக: புஷ்ப ஹாநெள குலக்ஷயம்.
கந்த ஹாநெள பவேத் குஷ்டம் தோய ஹாநிஸ் து துக்கதா.
தூப ஹாநெள சுக த்வம்ஸோ தீப ஹாநெள தன க்ஷயம்
நைவேத்ய ஹநெள துர்பிக்ஷம் மந்த்ர ஹாநெள தரித்ரதா.

எனும் காரணாகமவசனத்தால், உபசரிப்புகளாகிற பூசைஇல்லாமல்போவதால் ரோகமும், பூஇல்லாமல் போவதால் குலம் அழிவதும், சந்தனமில்லாவிடில் நோயும், ஜலம் இல்லாவிடில் துயரமும், தூபமெனும்புகைஇடுதல்விடுபட்டால் சுகமின்மையும், மனத்துயரும், தீபம்காட்டுதல்-விடுபட்டால், செல்வப்பொருள் அழிவும், நைவேத்யமின்மையால் உணவற்றபஞ்சமும், மந்திரக் குறைவு

ஏற்படின் இல்லாமையாகிய தரித்திரம்எனும் அதிகதேவையும் (ஆகிய தீயபயன்கள்) ஏற்படும் என்பதை அறியலாம். ஆதலால் இவற்றின் குறைவின்றியே எப்பொழுதும் பூசையானது செய்யப்பட வேண்டும் என்று நன்குஉணரத்தக்கது.

பூஜையில் நீராட்டு உபசரிப்பு :

ஆகமத்தில் 5, 8, 10, 16, 24, 36, 64 என்ற கணக்கில் பல்வேறுஉபசரிப்புகளால் செய்யத்தக்கதாக பூசையானது விதிக்கப்பட்டுஉள்ளது. இவற்றில் அடிப்படையாகவும், பொதுவாகவும் உள்ள பதினாறுவகை உபசாரங்களை முறைப்படுத்தி காரணாகமம் கூறுகிறது.

ஆவாஹனம் து ப்ரதமம் ஸ்தாபனம் து த்விதீயகம்.
திருதீயம் பாத்யதோயம் ஸ்யாத் ஆசாமந்து சதுர்த்தகம்.
பஞ்சமம் சார்க்கிய விந்யாஸம் ஷஷ்டம் சைவாபிஷேசனம்.
ஸப்தமம் வஸ்த்திர கந்தம் சாப் யஷ்டமம் புஷ்பபூஜநம்.
நவமம் தூபதீபம் ஸ்யாத் தசமம் து நிவேதனம்.
ஏகாதசம் பலிம் குர்யாத் த்வாதசம் ஹோம முச்யதே.
த்ரயோதசம் ஸ்ரீபலிம்ச கேயவாத்யம் சதுர்தசம்.
நிருத்தம் பஞ்சதசம் புரோக்தம் உத்வாஸஸ் ஷோடசம் பவேத்.

(காரணாகமம்)

(1) ஆவாஹானம் ஸ்ரீ இறைவனை அழைத்தல், தன்னைநோக்கி இருக்கச்செய்தல், (2) ஸ்தாபனம் ஸ்ரீ நிலைபெற்று ஒருவடிவத்திலேயே இருக்கச்செய்தல், (3) பாத்யம் ஸ்ரீ திருவடிகளில் நீராட்டல், (4) ஆசமனம் ஸ்ரீ திருவாயில் பருகிட கையில்நீர் அளித்தல், (5) அர்க்கியம் ஸ்ரீ திருமுடியில் நீர்தெளித்து மகிழ்வித்தல், (6) அபிஷேகம் ஸ்ரீ திருமஞ்சனத்தால் முழுக்காட்டுதல், (7) வஸ்திரகந்தம் ஸ்ரீ தேகத்தில் சந்தனம்பூசியபின்பு ஆடையைஅணிவித்தல், (8) புஷ்பபூஜனம் ஸ்ரீ மலர்மாலையை சூட்டியபின் மலர்களால்பூசித்தல், (9) தூபதீபம் ஸ்ரீ நறுமணப்புகையினை முகரச்செய்து, ஒளிதீபத்தை காண்பித்தல், (10) நிவேதனம் ஸ்ரீ அன்னம் மற்றும் பழவர்க்கத்தைப் படைத்து, நிவேதனம்செய்தல், (11) பலி ஸ்ரீ வாயில்தெய்வம் முதலானோர்க்கு அன்னத்தால் பலிஅளித்தல், (12) ஹோமம் ஸ்ரீ வேள்வித்தீயில் (நித்திய தீவழிபாடு) ஆகுதிசெய்தல், (13) ஸ்ரீபலி ஸ்ரீ அன்னலிங்கம் மற்றும் முச்சூலஅஸ்திரதேவர் புறப்பாட்டுடன்கூடிய நித்யோத்ஸவத்தின்போது, கோயிலின் எண்திசையில் முறையே திக்பாலகர்களுக்கு உபசரிப்புடன்

அன்னபலிதருதல், (14) கேயவாத்யம் ஸ்ரீ வேதம் முதலியவற்றுடன் திருமுறைஓதித் துதித்தல் ரூ வாய்ப்பாட்டுடன்கூடிய வாத்தியவகையின் இசையை கேட்கச்செய்தல், (15) சுத்தநிருத்தம் ஸ்ரீ பரதநாட்டியத்தை காணச்செய்யும் உபசாரம், (16) உத்வாஸம் ஸ்ரீ இறைவனை (அனுப்பிவைத்தல்), அவர் விருப்பப்படி வியாபித்து இருந்திடவேண்டுதல்.

பூஜையின் உறுப்புச்செயல்கள் :

ஆலயபூசையில் (1) ஸாங்கம், (2) உபாங்கம், (3) பிரத்யங்கம் என்று மூன்றுவகைப் பகுதிகளாக உபசாரக்கிரியைகள் விளங்குகின்றன. பூசையில்உபசரிப்பு வகைகளை ஸாங்கத்துள் 8ஐயும், உபாங்கத்துள் 10ஐயும், பிரத்யங்கத்தில் 6ஐயும் கொண்டதாக 24உபாசரங்- களை காரணாகமம் கூறிஉள்ளதை இனி காண்போம்.

அங்க ப்ரத்யங்க ஸாங்கம் சேத் ஏதத்வை த்ரிவிதம் பவேத்.
ஸ்நானம் சைவ து பாத்யம் ச ததா சாச மநீயகம்.
வஸ்திர மாபரணம் சைவ சுகந்தா லேபனம் ததா.
அர்க்யம் ச மந்திரபுஷ்பம்ச ஸாங்கம் சேதி ப்ரகீர்த்திதம்.
உபாங்கம் தூப தீபம் ச சாயம் பஸ்ம ப்ரதாயகம்.
சத்ராதி பஞ்சகம் நிருத்தம், கேயம் வாத்யம் ததைவச.
நைவேத்யம் பலிதானம் ச ஹோம கார்யம் ததோ த்ஸவம்
சுளுகாம்பஸ் ஸ்வஸ்திபாட: ப்ரத்யங்கம் சேதி கீர்த்திதம்.
ஸாங்கே சாஷ்டா உபாங்கே ச தச ப்ரத்யங்க்கே ஷட்.
சதுர் விம்சதிதா புரோக்தா சோபசாராப் பிரகீர்த்திதா:.
(காரணாகமம்)

ஸ்ரீமத்காரணாகம பிரதிஷ்டாமஹாதந்த்ரத்தின் 30வதுபடலத்தின்படி (1) ஸ்நானம் ஸ்ரீ அபிஷேகம், (2) பாத்யம் ஸ்ரீ திருவடிதீர்த்தம், (3) ஆசமனீயம் ஸ்ரீ திருவாய்தீர்த்தம், (4) வஸ்த்ரம் ஸ்ரீ ஆடை உடுத்துதல், (5) ஆபரணம் ஸ்ரீ அணிகலன் அணிவித்தல், (6) சுகந்தாலேபனம் ஸ்ரீ நறுமண சந்தனத்தை மேனிமுழுதும்பூசுதல், (7) அர்கியம் ஸ்ரீ திருமுடிமீதில் புனிதநீர்தெளித்து மகிழ்வூட்டல், (8) மந்திரபுஷ்பம் ஸ்ரீ எட்டுவகை மந்திரத்தால் எட்டுவகை பூக்களால் செய்ய வேண்டிய அஷ்டபுஷ்பார்ச்சனம் ஆகிய இவை எட்டும் ஸாங்கத்தில் அடங்கிய உபசரிப்புகளாகும். (1) தூபதீபம் ஸ்ரீ புகைமுகருதல் தீபம்காணல், (2) பஸ்ம ஸ்ரீ விபூதியால்ரக்ஷைதிலகமிடல், (3) சத்ராதிபஞ்சகம் ஸ்ரீ 1குடை, 2கண்ணாடி, 3இரட்டைசாமரம், 4த்வஜம் / பதாகம், 5விசிறி ஆகிய ஐவகை உபசரிப்புகளை

அளித்தல், (4) நிருத்தம், கேயம், வாத்யம் ஸ்ரீ வாய்ப்பாட்டு, வாத்ய இசையுடன், கூடிய நாட்டியாஞ்ஜலி செய்வித்தல், (5) நைவேத்யம் ஸ்ரீ அன்னம்படைத்தல், (6) பலிதானம் ஸ்ரீ அன்னபலி அளித்தல், (7) ஹோமம் ஸ்ரீ நித்யாக்னியஜனம், (8) உத்ஸவம் ஸ்ரீ நித்யோத்வம், (9) சுளுகாம்பம் ஸ்ரீ ஜபார்பனதீர்த்தம் அளித்தல், (10) சுவஸ்திபாட : ஸ்ரீ வேதாகம வாழ்த்தொலி ஆசீர்வாதம். இவை பத்தும் பூஜையில் உபாங்கம் எனும் துணைஉறுப்புகளாகும். மற்றவை பிரத்யங்கங்கள் ஆகும். இவ்விதமாக இருபத்திநான்கு உபசாரங்களைஉடையது ஆலயபூசை ஆகும். மேற்கண்ட பூஜையின் உறுப்புகள் 24ல் முதலாவதான செயல்உறுப்பாக, முக்கியமான தலையெனும் அங்கமாக விளங்குவதே திருமஞ்சனக்கிரியைஆகும். ஆதலால் அபிஷேகமேபூசை எனப்படுவதாகும். இதற்கு முன்னும் பின்னும் இடம்பெறுபவையே மற்றவை என்று உணரலாம். இதனை நித்தியம், நைமித்திகம், காமியம் ஆகிய மூவகை வழிபாட்டிலும் தத்தமது பொருளாதாரவசதியை அனுசரித்து, சிரத்தையுடன் சிரமமின்றி மிகைப்படுத்தியும், வசதியிருந்து குறையுடன் செய்யாதவாறும், இயன்றவரை தமது சக்திக்கும், பக்திக்கும்ஏற்ப விரிவாகவும், சுருக்கமாகவும் அபிஷேகத்தையும், உபசாரவகைகளையும் அவசியமாக கைவிடாமல் செய்திடவேண்டும் என்கிறது ஆகமம்.

பூஜோபசாரைர் விபவாநு ஸாரை:
ஸ்நாநாதிபிர் ஸ்வல்பதரைர் மஹத்பி:
விதீயதே நித்யவிதௌ ஸமஸ்தை:
ஸ்ரகாதிபி: காம்யவிதௌ அவச்யம்.

(காமிகாகமம்)

இதன்பொருள்: மஹோன்னதமான பாகமோக்ஷப்பயன்களைத் தருகிற பூசையில், ஸர்வ-மங்களத்தைத் தருபவரான சம்புவிற்கு, தம்செல்வவசதிக்குஏற்ப நித்தியவிதியில் ஸ்நாநம் முதலான அனைத்துவகை உபசரிப்புகளாலும் காமியவிதியில் விருப்பப்படி பூமாலை, சிறப்பு நிவேதனம் முதலான உபசரிப்புகளாலும் பூசைவிதிக்கப்படுகிறது.

நீராட்டுப்பொருள் சுத்திகரிப்பு :

காமிகமம் கூறுவதாவது, ஸ்நாநகிரியையானது எப்பொழுதும் ஸ்நபனவிதிமுறையிலேயே செய்யப்படவேண்டும். அதாவது உரியஅபிஷேகபொருட்களை முதலில் சேகரித்து வைத்து, அதனை சம்ஸ்கரித்து, பூசித்தபின்னர் அவற்றைமட்டுமே

பின்புளடுத்து, நீராட்டிட வேண்டும். பாவங்களைப்போக்கி, ஸகலசித்திகளை நிலைக்கச்செய்வதால் இச்செயல் ஸ்நபனம் எனப்படுவதாக காரணாகமத்தில் ஸ்நபனம் எனும் சொல்லிற்குவிளக்கம்காணப்படுகிறது. அது,

ஸ்நகாரம் ஸர்வஸித்தி ஸ்யாத் பகாரம் ஸ்திதி ருச்யதே.
நகாரம் பாபநாசம் ஸ்யாத் தஸ்மாத் ஸ்நபன முச்யதே.

(காரணாகமம்)

இந்த ஸ்நபனம் என்பது அபிஷேகப்பொருட்களை கலசத்தில் அல்லது உரியபாத்திரத்தில் மூடிவைத்து, முறைப்படி பூசித்து, லிங்கசுத்தியின் முடிவில் வைத்திட்ட முறையிலேயே அவற்றை எடுத்து அபிஷேகித்தல்வேண்டும். இந்த ஸநபனம் பலவகை எண்ணிக்யையில் கலசாபிஷேகங்-களாக செய்யத்தக்கது. ஆகமங்களில் ஸ்நபனவிதிபடலங்களில் இதுபற்றி மிக விரிவாக விளக்கப்பட்டுஉள்ளது. இதனை உத்தமம், மத்யமம், அதமம் என்றும், இவை மூன்றிலும் உத்தாமாதி மூன்றுமாக ஒன்பது வகைகளில், ஒன்பது வகையான எண்ணிக்கையில் திரவியவகை, ஸ்தாபனவிதிமுறை தேவதைகளுடன் கூறப்பட்டுஉள்ளன. சுப்ரபேதாகமத்தில் 15ம்படலத்தில் சிறப்பாக 9வகைக்கும் 9 கலசம் முதல் 1009 கலசம் வரையிலும் கூறப்பட்டு, நீராட்டல் கலசங்-களில் சேர்க்கத்தக்க 109 வகையான சிறப்புப்பொருள்கள் தொகுத்து கூறப்பட்டுஉள்ளன. அவற்றை பிறகு காண்போம். இங்குஸ்நபனமுறையைக் கூறுவது மிகவும் விரிவடையும்.

ஜலேந ஸ்நாபயேத் பச்சாத் ததி க்ஷீர கிருதை ரபி.
நாளி கேரோத கேநைவ மதுநா பிரம்ம பஞ்சகை:

(காரணாகமம்)

மேற்கண்ட பூர்வகாரணாகம வசனத்தால் அபிஷேகத்திற்கான ஐந்துபொருள்களாக 1தயிர், 2பால், 3நெய், 4இளநீர், 5தேன் ஆகியவைகள் பஞ்சகலசங்களின் ஸ்நபனபொருள்களாக அறியலாம். ஸ்நபனகலச எண்ணிக்கையானது நித்யபூசைக்கு 1 கலசம் முதலாக, 5, 9, 16, 25 வரையில் செய்யத்தக்கது. நைமித்திக மற்றும் காமியபூசை வகைகளுக்கு 108 முதல் 1008 மற்றும் 10008 வரை செய்யத்தக்கது என்று காமிகாதிஆகமங்களில் கூறப்பட்டு உள்ளது.

ஸ்நாநத்திரவிய கலசஸ்தாபன முறை :

சுவாமிக்கு எதிரில் மரமேசையிலோ பத்ரபீடத்திலோ, பூமியிலோ, வாழை இலைகளைப ˙பரப்பி, அதன்மீது முளைக்கக்கூடியதான நெல் முதலிய தானியத்தைப்பரப்பி, அதன்மீது உமிநீக்கி முளைக்காததன்மைபெற்றுள்ளதும், தூயவெண்தாமரைஇருக்கையாகவும் கருதப்பட வேண்டியதுமான வெண்ணிறஅரிசியைப்பரப்பி அதன்மீது, சுத்தசாத்விகநிறமான வெண்மை நிறத்திலேயே எள்ளு, நெல்பொரி, தர்ப்பை இவைகளையும் பரப்பி, அதன்மீது பெரியகுடம் போன்ற கலசத்தில் பால், தயிர், நெய், கரும்புசாறு, சந்தனக்குழம்பு ஆகிய, நீராட்டலுக்குரிய, அனைத்துபொருட்களையும் தனித்தனியே பாத்திரங்களில் முன்னதாக தயார்நிலையில் ஸ்தாபித்துவைத்து, அவற்றை பத்திரதர்ப்பைகளால்மூடி, நிரீக்ஷணம் முதலிய சம்ஸ்காரங்களைச் செய்து, அந்தந்த திரவியமந்திரத்தால் அப்பொருள்களை மந்திரித்து, அவற்றிற்குஉரிய அதிதேவதைகளைப்பூசித்து, சம்ஹிதாமந்திரங்களால் அபிமந்திரித்து, பசுமடி போன்ற தேனு முத்திரையைக் காட்டி, அதனை அமிர்தமாக்கி, பின்பு உபசரித்திட வேண்டும். அபிஷேகப்- பொருட்களோடு கலசம்வைக்கும்பொழுது, வரிசையாகவைத்து, பூசைமுடிவில், அதே வரிசையாகவே எடுத்து, அபிஷேகதிரவியக்ரமத்தின்படியே ஒவ்வொன்றாக அபிஷேகித்தல் வேண்டும் இதுவே முறை.

யதா ஸம் ஸ்தாபிதான் கும்பான் ததா சோத்தரணம் குரு.
ஸம் ஸ்நாப்ய தேவ தேவேசம் அர்ச்சநோக்தம் ஸமாசரேத்.

எனும் உத்தர காரணாகமத்தின் ஸ்நபனாபிஷேகத்தின் விதிக்ரமத்தாலறிக.

ஸ்நபனாபிஷேகத்தின் பயன் யாதெனில், எவனொருவன் பக்தியுடன் தன்னால் முடியும்வரை இறைவனுக்கு பொருள்களினால் செய்யத்தக்க ஸ்நபனாபிஷேகத்தைச் செய்கிறானோ அவன் அனைத்து பாபங்களிலிருந்தும் விடுபட்டு அனைத்து யாகங்களின் பலனையும் அடைகிறான் என்கிறது சிவாகமம்.

பக்தியுக்தோ யதாசக்தி யக்குர்யாத் ஸ்நபநாதிது.
ஸர்வபாப விநிர்முக்த: ஸர்வயக்ஞ பலம் லபேத்.

(ஆகமஸாரம்)

16பொருளின் திருமஞ்சனமுறை :

ஆலயபூஜையில் அபிஷேகத்திரவியங்களின் முறையானது பதினாறு வகையாக பொதுவாக வரிசையாக கூறப்படுகிறது. இதனைக்கூறும் சைவாகமசான்று,

அப்யங்க பிஷ்டா மலகாதி கவ்யம்.
பஞ்சா மிருதம் க்ஷீர ததீநி ஸர்பி:
மத்விக்ஷு ஸாரம் பல நாளி கேரம்
சுகந்த தாரா ஸ்நபனம் ச சங்கம்.

(சித்தாந்தரத்னாகரம்)

சித்தாந்த ரத்னாகரம் எனும் நூலின்படி, சுகந்ததைலத்தால் தெய்வச்சிலையின் அங்கம்-முழுவதும் எண்ணைதேய்த்து, இதமாய்அமுக்கி, இதமளித்து, பின்பு அரிசிமாவு, நெல்லிக்காய்-பொடி, மஞ்சள்பொடி இவற்றால் நன்குதேய்த்து, முதலில் லிங்கசுத்தியை, அதாவது சிலையின் தேஹசுத்தியைச்செய்தபின்னர், பஞ்சகவ்யக்கலவையால் முதலில்அபிஷேகித்து, புனிதமாக்கிய பிறகு, பஞ்சாமிருதம் முதலியவைகளால் அபிஷேகத்தைத்தொடர்ந்து முறையே, நிவேதனத்துடன் செய்துமுடித்திடவேண்டும்.

பாத்யமாசமனம் சார்க்யம் பஞ்சகவ்யம் குசோதகம்.
க்ஷீரம்ததி கிருதம்சைவ பிரதமாவரணம் விது : (சுப்ரபேதாகமம்)

இவ்வாறு நவகலசவிதியை சுப்ரபேதாகமம் பாத்யம், ஆசமனம், அர்கியம், பஞ்சகவ்யம், குசோதகம், பால், தயிர், நெய் என்று ஒன்பது கலசஸ்நபனாபிஷேகப் பொருட்களைக் கூறி-யுள்ளது. இது நித்தியஅபிஷேகத்திற்கு ஏற்றது. பால், தயிர், நெய், தேன், கரும்புசாறு, ஐவகை பழச்சாறுகள், இளநீர், சந்தனக்குழம்பு, ஸஹஸ்ரதாராஜலம், ஸ்நபனகலசதீர்த்தம், விசேஷார்கிய சங்குதீர்த்தம் ஆகியவை 16ம் முறையே செய்யத்தக்க அபிஷேகத்திரவிய வரிசைமுறையாகும்.

சுப்ரபேதாகம பஞ்சகவ்யவிதி		
நெல்லி பொடி	சாணம் மேற்கு	மஞ்சள் பொடி
தெற்கு நெய்	பால்	வடக்கு கோஜலம்
அரிசி மாவு	கிழக்கு தயிர்	தர்பை ஜலம்

காரணாகம பஞ்சகலசம		
	தயிர் (மே)	
பால் (தெ)	ரத்னோ தகம்	தேன் (வ)
	நெய் (கி)	

சுப்ரபேதாகம நவகலசவிதி		
பஞ்ச கவ்யம் (மே)	தருப்பை குசோதகம்	பால்
(தெ) அர்கிய ஜலம்	பஞ்சரத்னம் கும்பம	(வ) தயிர்
ஆசமன ஜலம்	பாத்ய ஜலம் (கி)	நெய்

இத்தகைய அபிஷேகப் பொருட்களை வரிசைப் படுத்திக் கூறும் முறையினை நமது செல்வ-வசதிக்கேற்ப நாமே தேர்வுசெய்யும்வகையில், பலவாறாக ஆகமங்கள் கூறியுள்ளன. அவற்றுள் ஏதேனும் ஒன்றைமட்டுமே நாம் பின்பற்றி தெய்வத்திற்குத் திருமஞ்சனத்தைச்செய்வதுமுறை. மேலும் சித்தாந்த ரத்னாகரம் எனும் நூலில் மற்றொரு விரிவானமுறை கூறப்பட்டுள்ளது. அதாவது,

தைலைப் பிஷ்ட ரஸாதிபிர் குண ரஸைர் கவ்யேந பஞ்சாமிருதை:
ஆஜ்யே நாத பயோ ததி மது ரஸைர் திவ்யைஸ் ஸதிக்ஷூத்பவை:
குர்யாத் பஞ்ச பலை: புனப் பலரஸைஸ் ஸந்நாளி கேரோத்பவை:
அன்னைர் பஸ்ம சுகந்த கும்பஸலிலைர் அர்கியைச்ச ஸம்ஸேசனம்.

இதில் மேலும், அன்னாபிஷேகமும், விபூதிஅபிஷேகமும் சேர்க்கப்பட்டு சந்தனதீர்த்தம், கும்ப-தீர்த்தத்துடன்(அஷ்டாதச வித)18வகைஸ்நாநமுறை கூறப்பட்டது. சகலாகமஸங்கிரஹம் என்னும் நூலில், முறையில்சிறிது மாறுபாட்டுடன் 16வகைநீராட்டல் வரிசைமுறை காணப்படுகிறது.

பிரதமம் கந்ததைலம்ச த்விதீயம் பஞ்சகவ்யகம்.
பிஷ்டம் திருதீய மித்யுக்தம் சதுராமலகம் பவேத்.
பஞ்சமம் ரஜனீஸ்நாநம் ஷஷ்டம் பஞ்சாமிருதம் பவேத்.
ஸப்தமம் பயஸா ஸ்நாநம் அஷ்டமம் ததி ருச்யதே.
நவமம் கோகிருதம் சைவ தசமம் மது விந்யஸேத்.
ஏகாதசம் சேக்ஷூ ஸாரம் பலம் துவாதச முச்யதே.
கதலீ பநஸாம் ரம்ச கந்தோதக மதப் பரம்.
திரயோ தசம் ததா நாரி கேளம் அன்னம் சதுர்தசம்.
பஞ்சா தசம் சுகந் தாம்பு ஷோடசம் ஸ்நபனம் பவேத்.

மேற்கண்ட வசனத்தால், சந்தன தைலக்காப்பு முதலாக, சந்தனக் குழம்பு நீரின் கலசாபிஷேகம் வரையிலாக, பதினாறு வகைகள் ஆகும். சந்தனத்திற்கு எப்பொழுதும் அதிதேவதை சிவனே ஆவதாலும், அதுவே ஸ்ரீவிருக்ஷமான லக்ஷ்மியின் மரமாவதாலும், லக்ஷ்மீகரமாக சந்தன-தைலத்தில் துவங்கப்பட்டு சந்தனநீருடனே மங்களகரமாய்முடிக்கப்படுவது இங்கு எண்ணி உணரத்தக்கது. இதன்படி (1) சந்தனதைலம், (2) பஞ்சகவ்யம், (3) அரிசிமாவு, (4) நெல்லிப்பொடி, (5) மஞ்சள்பொடி, (6) பஞ்சாமிருதம், (7) பால், (8) தயிர், (9) பசுநெய், (10) தேன், (11) கரும்பு சாரு, (12) மா, பலா, வாழை எனும் முக்கனிகள் ரூ பழரசங்கள் (13) இளநீர், (14) அன்னம், (15) சுகந்தபரிமளத்திரவியபொடிதீர்த்தம், (16) சந்தனஜலத்தில் பூசித்தஸ்நபன கலசதீர்த்தம் ஆகியவை அபிஷே கிக்கத் தக்கவை ஆகும். உலோகபேரத்தில் செய்யத்தக்கதாக மற்றொரு 16வகை கூறப்படுகிறது. நெல்மீது இலையில் அரிசியைப் பரப்பி அதில்வைத்துபூசித்து நீராட்டுவர்.

ஆதௌ தைலாபிஷேகம் து த்விதீயம் லிகுசம் ததா.
பிஷ்டாதீநி திருதீயம் து சதுர்த்தம் பஞ்ச கவ்யகம்.
பஞ்ச பஞ்சா மிருதாதீநி பலம் ஷஷ்டா பிஷேசனம்.
கோக்ஷீரம் ஸப்தமம் புரோக்தம் அஷ்டமம் ததி ருச்யதே.
நவமம் மது பூஜாம் ச சர்க்கரா தசமம் பவேத்.
ஏகாதசம் சேக்ஷு ஸாரம் துவாதசம் நாளிகேரகம்.
த்ரயோதசம் சுவர்ணதோயம் ரத்னதோயம் சதுர்தசம்.
பஞ்சாதசம் கந்ததோயம் ஷோடசம் ஸ்நபனம் பவேத்.

இதற்கு கிழக்குவடக்குமுனைகளாக 5 5கோடுபோட்டு, கீழே காணுமாறு 16கட்ட பகுதிகளாக்கி, அவற்றில் உரிய 16பொருள்களை முறையே வைத்து பூசித்தபின்னர் அபிஷேகம் செய்ய வேண்டும். இதில் நடுவில் சிறப்பாக சுவர்ணோதகமும், ரத்னோதகமும் விதிக்கப்பட்டுஉள்ளது. இங்குஉற்றுநோக்கத்தக்கது.

வஜ்ரம் மரகதம் சைவ வைடூர்யம்ச பிரவாளகம்.
மௌக்திகம் பஞ்சரத்னாநி சிவகும்பேது விந்யஸேத்.

(சுப்ரபேதாகமம்)

ரத்னாபாவே ததா ஹேமம் நவாநாம் ஹேம மேவவா. இவ்வாறு கலசாபிஷேகத்திற்கு சிவகலசத்தில் பஞ்ச ரத்தனங்களை சேர்க்க வேண்டும். ரத்தினமில்லையேல் வைரம் ஒன்றையோ, ௰ந்த ரத்னமும்

இல்லாவிடில் தங்கத்தையோ எல்லாகசலத்திலுமோ சேர்த்திட விதிக்கிறது. இதில் பஞ்சரத்தினங்கள் என்பவை வைரம், மரகதம், வைடூர்யம், பவழம், முத்து என்பவைகளே என அறியலாம்.

ஷோடச திரவ்யாபிஷேக பொருட்கள்			
10 சர்க்கரை	11 கரும்பு சாரு	12 இளநீர்	13 சுவர்ணோ தகம்
9 தேன்	2 எலுமிச்சை பழம்	3 அரிசி மாவு	14 ரத்தின உதகம்
8 தயிர்	1 தைலம் எண்ணை	4 பஞ்ச கவ்யம்	15 சந்தனம்
7 பசும்பால	6 பழவகை	5 பஞ்சா அமிருதம்	16 கலசம் தீர்த்தம

ஏகாதச ருத்திராபிஷேக பொருட்கள்			
5 பசும் பால்	6 தயிர்	7 தேன்	8 கரும்புசாரு
4 நெய்	சிவன்	சக்தி	9 பழசாறுகள் ஐவகை
4 பஞ்சா- மிர்தம்	வித்யேச	8 கலசங்கள்	10 இளநீர்
2 பஞ்ச கவ்யம்	1சந்தன தைலம்	12 கலசம் சுவர்ணம்	11 சந்தனம்

(1) தைலம், (2) எலுமிச்சை, (3) அரிசிமா முதலிய 16 வகை தானியப்பொடிவகைகள், (4) பஞ்ச-கவ்யம், (5) பஞ்சாமிர்தம் இருவகை, (6) பழவகை (துண்டுகள்), (7) பசும்பால், (8) தயிர், (9) தேன், (10) வெல்லசர்க்கரை, (11) கரும்புச்சாரு, (12) தேங்காய்ஜலம், (13) சுவர்ணம்ஊரிய- ஜலம், (14) ரத்தினம் ஊரியஜலம், (15) சந்தனக்குழம்பு சாந்து, (16) கலசதீர்த்தம் என்பவை ஷோடச அபிஷேகதிரவிய விதிமுறையாகும்

ஷட்கவ்யம் (பசுவின் 6 பொருள்)		
	5 சாணம் மேற்கு	
தெற்கு 3 நெய்	1 பால்	வடக்கு 4 கோஜலம்
	கிழக்கு 2 தயிர்	பசுவின் 6 கோரோசனை

காரணாகம நவகலசவிதி		
தயிர்	அர்கியம்	நெய்
ஆசமனம்	பஞ்சரத்னம் பொன்	பஞ்ச கவ்யம் வடக்கு
பால்	பாத்யம் கிழக்கு	தர்பை ஜலம்

பஞ்சகவ்யம் (5 பொருள்)		
அரிசி மாவு	கோஜலம் மேற்கு	நெல்லி பொடி
பசுநெய் தெற்கு	பால் கிழக்கு	பசுஞ் சாணம் வடக்கு
தைலம் எள்ளின் எண்ணை	தயிர் கிழக்கு	மஞ்சள் பொடி

ரஸபஞ்சாமிருதம் 5ன் கலவை		
	மேற்கு 5	
தெற்கு 3 நெய்	1 பால்	வடக்கு 4 தேன்
	கிழக்கு 2 தயிர்	

காரணாகம நவகலசவிதி		
நெய்	சர்க்கரை	தேன்
தயிர்	சுவர்ண உதகம்	இளநீர்
பால்	பஞ்ச கவ்யம்	சந்தனம

பழபஞ்சாமிருதம் 9		
பலா பழம்	மேற்கு 5 சர்க்கரை	வாழைப் பழம்
பசு நெய் 3 தெற்கு	நடுவில் 1 பால்	தேன் 4 வடக்கு
மாம் பழம்	கிழக்கு 2 பசுந்தயிர்	ஏலாதி பொடி

12) 25 பொருள்களின் நீராட்டுமுறை (பஞ்சவிம்சதி திரவ்யாபிஷேக க்ரமம்) :

ஸாமான்யார்க்ய ஜலைப் பச்சாத் அபிஷேசன மாசரேத்.
பிரதமம் கந்ததைலம் ச த்விதீயம் பிஷ்ட சூர்ணகம்.
திருதீயம் ஆமலகம் சைவ ரஜநீ ச சதுர்த்தகம்.
பஞ்சமம் து ஜலத்ரவ்யம் ஷஷ்டம் வை பஞ்சகவ்யகம்.
பஞ்சா மிருதம் ஸப்தமம் ச கிருத மஷ்டம முச்யதே.
நவமம் க்ஷீர மித்யுக்தம் தசமம் ததி ருச்யதே.
மது சைகாதசம் புரோக்தம் துவாதசம் சேக்ஷு ஸாரகம்.
சர்க்கரா ச த்ரயோதச்யாம் பலாநி ச சதுர்தச.
பலோதகம் பஞ்சதச ஷோடசம் நாளிகேரகம்.
அன்னம் ஸப்ததசம் சைவ கந்த மஷ்டாதசம் பவேத்.
ஏகோனவிம்சதி: கும்பான் பத்ராம்புர் விம்சதிர் பவேத்.
தாராம்பு ரேகவிம்சத்யாம் துவாவிம்சத் சிருங்கதோயகம்.
ரத்னோதகம் த்ரயோவிம்சத் சதுர்விம்சத் குசோதகம்.
அர்க்யோதகம் பஞ்சவிம்சத் அபிஷேக விதிக்கிரமாத்.

மேற்கண்ட சிவாகமவசனத்தின்படி 25 வகையில் அபிஷேகமுறை. (1) சந்தனதைலம், (2) அரிசி-மாவு, (3) நெல்லிப்பொடி, (4) மஞ்சள்பொடி, (5) ஜலதிரவிய(பரிமளப்)பொடி, (6) பஞ்சகவ்யம், (7) பஞ்சாமிருதம், (8) நெய், (9) பால், (10) தயிர், (11) தேன், (12) கரும்புசாரு, (13) சர்க்கரை, (14) பழவகைகள், (15) பழச்சாருவகை, (16) தேங்காய் இளநீர், (17) அன்னம், (18) சந்தன சாந்து, (19) கும்பதீர்த்தம், (20) பத்ரோதகம், (21) சஹஸ்ரதாராபிஷேகம், (22) காளைக்கொம்பு-தீர்த்தம், (23) ரத்னோதகம், (24) தர்பைஜலம், (25) அர்கியோதகம் (சங்கோதகம்) ஆகியவை. இவற்றுடன் மேலும் சிலவற்றின் சேர்க்கையாக, 1ஜலதிரவ்யபொடி,2பத்ரோதகம், 3தாரோதகம், 4சிருங்கோதகம், 5ரத்னோதகம், 6குசோதகம், 7அர்கியோதகம் ஆகியவை அதிகப்படியாக அறியப்படுகிறது. மேலும் 8உஷ்ணோதகம், 9சீதோதகம், 10பரிமளதிரவ்யோதகம், 11புஷ்போதகம், 12சங்கோதகம், 13சிவோதகம் ஆகியவற்றுடன் கூடியதாக மற்றொரு 25 பொருள்களின் வரிசை முறையை சைவாகமத்து ஸகலாகம ஸாரஸங்கிரஹம் எனும் நூலில் காணலாம். அதாவது

பிரதமம் கந்ததைலம் ச த்விதீயம் பிஷ்ட மேவச.
திருதீய மாமலகம் சைவ சதுர்த்தம் ரஜநி சூர்ணகம்.
பஞ்ச கவ்யோதகம் பஞ்ச பஞ்சா மிருதம் து ஷஷ்டகம்.
ஸப்தமம் பல வர்கம் ச கிருத மஷ்டம முச்யதே.
உஷ்ணோ தகம் து நவமம் தசமம் க்ஷீர மேவச.

ஏகாதசம் ததி ப்ரோக்தம் துவாதசம் மது ஸம்யுதம்.
இக்ஷுஸாரம் த்ரயோதச்யாம் சதுர்தச்யாம் பலோதகம்.
நாளிகேரோதக ஸ்நாநம் பஞ்சாதசம்து ஸங்க்ரமாத்.
பரிமளஸ் ஸர்வ த்ரவ்யாணி ஷோடசம் து யதாக்ரமம்.
பஸ்ம ஸ்நாந மிதி ப்ரோக்தம் ஸப்ததசம் து சம்பவே.
சந்தனேநா ஷ்டாதச ஸ்நாநம் நவ தசம் து ஹிரண்யகம்.
விம்சதிச் சான்னா பிஷேகம் துவேக விம்சதி கும்பகம்.
அர்க்கியோதகம் துவாவிம்சத் புஷ்போதகம் த்ரயோவிம்சதி:
சதுர்விம்சதி சங்கம் ஸ்யாத் பஞ்ச விம்சத் சிவாம்புகம்.

இவ்விதமாக மூலாகமவசனத்தினால், 5வகை, 9வகை, 12வகை, 16வகை, 18வகை, 25வகை என்று பலவாறு காணப்படுகிற பலவகை அபிஷேகதிரவியங்களின்விதிமுறையுடன் திருமஞ்சனம் விளக்கப்பட்டுஉள்ளதை இதுவரைஅறிந்தோம். இனி இவற்றின் அளவு, பயன், செய்முறை இவற்றைக்காண்போம்.

ஏகாதசருத்ராபிஷேக திரவியமுறை :

சிவனுக்கு மஹன்நியாஸத்துடன் ஏகாதசருத்ரபாராயணத்துடன் பதினோருமுறை செய்யத்-தக்க, ஜபகாலத்தில் செய்யவேண்டிய ஏகாதசருத்ராபிஷேகத்திற்கான ஏகாதச 11வகை திரவியங்கள், கலசாபிஷேகத்துடன் 12 வகையாக கூறப்படுவதைக் காண்போம். ஏகாதச திரவியங்களுக்கான சான்று,

ப்ரதமம் கந்ததைலம் ச த்விதீயம் பஞ்ச கவ்யகம்.
பஞ்சாமிருதம் த்ருதீயம் து க்ருத ஸ்நாநம் சதுர்த்தகம்.
பஞ்சமம் பயஸா ஸ்நாநம் ஷஷ்டம் ச ததி ருச்யதே.
ஸப்தமம் மதுநா ப்ரோக்தம் அஷ்டமம் சேக்ஷுஸாரகம்.
பலோதகம் ச நவமம் தசமம் நாளிகேரகம்.
ஏகாதசம் கந்த தோயம் த்வாதசம் கும்ப தோயகம்.
(காரணாகமம்)

மேற்காணும் காரணாகமவசனத்தின்படி ஏகாதசருத்ராபிஷேகத்தின் பதினோரு பொருட்கள் முறையே (1) சந்தனதைலம், (2) பஞ்சகவ்யம், (3) பஞ்சாமிருதம், (4) நெய், (5) பால், (6) தயிர், (7) தேன், (8) கரும்புசாரு, (9) பழரசங்கள், (10) தேங்காய் இளநீர், (11) சந்தனக்குழம்புநீர் ஆகியன. பின்புமுடிவில் ஸ்நபனபூஜாகலசாபிஷேகம் செய்யத்தக்கதாகும். சிலர் விபூதி, அன்னம் முதலியவற்றை இடையிலேயே செய்திடுவர்.

பன்னிருமாதங்களின் மாசத்திரவிய அபிஷேகமுறை :

வருடத்தின் பன்னிருமாதத்திலும் பவுர்ணமிதினத்தில் செய்யத்தக்க விசேஷ அபிஷேகத்திற்கான மாசத்திரவியங்கள் என்று சிலபொருட்கள் கூறப்படுகின்றன. அவை, மார்கழிமாதம் முதல் தைமாதம் வரையிலாக 12க்கும் முறையே கூறப்படுபவை.

மார்கசீர்ஷே கிருதம் புரோக்தம் புஷ்யே க்ஷௌத்ரம் ப்ரசஸ்யதே.
ஸகிருதம் கம்பளம் கும்பே தபஸ்யே ததி கீர்த்திதம்.
மது மாஸே தமனகம் மாதவே கந்த பூஜனம்.
பல பூஜா சுக்ர மாஸே க்ஷீரே ணாஷாட பூஜனம்.
நபோ மாஸே சர்க்கரா ச நபஸ்யேஅபூப பூஜனம்.
அன்ன பூஜா துலா மாஸே கார்த்திகே தீப பூஜனம்.
திரவ்யக்ரம மிதி ப்ரோக்தம் தத்ஸங்க்யாம்து ததச்ருணு.

(அம்சுமதாகமம்)

மேற்கண்ட அம்சுமானாகமவசனத்தால் சிறப்பான மாஸத்தின் பெயர்களையும், அபிஷேக-திரவியமாகிற பூஜைப்பொருட்களையும் அறியலாம். இதன்படி மார்கழிமாதம் முதலாக கார்த்திகைமாதம் வரையிலாக அபிஷேகமாசதிரவியங்கள் முறையே, (1) மார்கழியில் நெய்-அபிஷேகமும், (2) தைமாதத்தில் தேன்அபிஷேகமும், (3) மாசிமாதத்தில் நெய்கம்பளம்ஊறிய மார்ஜனோதகஅபிஷேகமும், (4) பங்குனியில் தயிரபிஷேகமும், (5) சித்திரையில் (தமனம்) மருக்கொழுந்துஊரிய புஷ்போதகஅபிஷேகமும், (6) வைகாசியில் சந்தனஅபிஷேகமும், (7) ஆனிமாதத்தில் முக்கனிகள்ஊரிய பலோதகஅபிஷேகமும், (பழரசவகைகளாலும்), (8) ஆடி மாதத்தில் பசும்பாலால் அபிஷேகமும், (9) ஆவனியில் சர்க்கரையால் அபிஷேகமும், 10) புரட்டாசியில் வெண் கரும்புச் சாறினாலும், வெல்லஅப்பம், அதிரசம் முதலிய பக்ஷணாதி-களால்அபிஷேகமும், (11) ஐப்பசிமாதபௌர்ணமியில் சுத்தஅன்னத்தாலபிஷேகமும், (12) கார்த்திகைமாதத்தில் நெல்பொரிகளாலும், அவற்றின் பொடிகள்ஊறியநீரினாலும், உஷ்ணோதகாபிஷேகம் எனும் மிதவெப்பசூடானநீரினாலபிஷேகமும் செய்யத்தக்கது ஆகும். இவ்விதம் பன்னிருமாதத்திலும், பவுர்ணமிதினம் அல்லது அம்மாதத்தின் சிறப்புநக்ஷத்திரதினம் இவற்றிற்கான அபிஷேகப்பொருள்களை அறிந்தோம். இனி அபிஷேகத்திற்குரிய சிறப்பு மூலப்பொருளான ஸ்நாநதீர்த்தத்தின் இலக்கணத்தைக் காண்போம்.

அபிஷேகதீர்த்தத்தில் சேர்க்கத்தக்க பொருள்கள். (ஸ்நாநாம்பு திரவ்யம்)

ஏலோசீர பலத்ரயேன ஸஹிதா: கர்பூர ஸத் குங்குமை:
ஸ்ரீகண்டா (அ) கரு பத்ரகைச்ச குசுமை ராமோதபிஸ் ஸம்யுதா:
ஆபோ மஜ்ஜந கர்மணி ப்ரணிஹிதாஸ் சம்போர் யதா லாபத:
புரோக்த திரவ்யகணேஷு லப்தமிஹயத் தத் க்ராஹ்ய மாட்யேதரை: .

மேற்கண்ட பூர்வகாமிகாமத்தின்படி, ஏலக்காய், விளாமிச்சம்வேர், பலத்ரயம் ஸ்ரீ நெல்லிக்காய், தான்றிக்காய், கடுக்காய் எனும் திரிபலா, (முப்பலம்), கற்பூரம் ஸ்ரீ பச்சகற்பூரம், ஸத்குங்குமம் ஸ்ரீ குங்குமப்பூ, சந்தனம், அகில், ஜாதிபத்திரி, மணமிக்க சம்பகம் முதலியமலர்வகைகள் முதலானவை சிவனின் திருமஞ்சனதீர்த்தத்தில் சேர்க்கவும். இவற்றுள் கிடைத்த சிலவற்றையாவது சேர்த்திடவேண்டும்.

ஏலா லவங்கம் கர்பூரம் அகரும் சந்தனம் லகு.
அம்புஜம் சைவ தத்கோலம் கச்சோலம் ஹரிபேரகம்.
உசீரம் சம்பகம் கோஷ்டம் ஸ்நாநத்ரவ்ய மிதிஸ்மி ருதம்.
ஜலபாண்டே விநிக்ஷிப்ய ததம்பு வாசிதம் க்ரியாத். (காரணாகமம்)

இதன்படி ஏலக்காய், லவங்கம், பச்சகற்பூரம், அகில், சந்தனம், சிறுநாகப்பூ, தாமரைப்பூ, தக்கோலம், கச்சோலம், வெட்டிவேர், விளாமிச்சம்வேர், சம்பகமொக்கு, கோட்டம் இவை ஸ்நாநத்திரவியங்களாக ஜலபாண்டத்தில் சேர்க்கத்தக்கவைகள். இதில் இடத்தக்க மலர்வகை- களை சுப்ரபேதாகமம் கூறுகிறது.

பாட லோத்பல பத்மாநி கரவீராணி ஸர்வதா.
ஸ்நாந தோயேந யோஜ்யாநி ஸ்நிக்தாநி சுரபீணிச. (சுப்ரபேதம்).

இதனால் பாதிரிப்பூ, கருநெய்தல்பூ, தாமரைப்பூ, செவ்வலரிப்பூ ஆகிய பூக்கள் அபிஷேக-தீர்த்தத்தில் சேர்க்கத்தக்கவைகள்.

திருமஞ்சனத்திற்கு தீர்த்தம் எடுத்துவரும்முறை. (தீர்த்த ஸ ங்கிரஹணவிதி)

அபிஷேகத்திற்கான புனிதகங்காதி தீர்த்தத்தை, அந்த ஆலயத்துள்ளே இதற்க்கெனத் தனியாக ஆலயஇரண்டாம் சுற்றிலமைந்த கிணற்றிலிருந்தோ, வெளியேஉள்ள புனிதநதி-யிலிருந்தோ, துணியில் வடித்தநீரை பொன், வெள்ளி, தாமிரகுடங்களில் மந்திரத்தால் நிறைத்து, மாவிலை, தேங்காய், தர்பைபூமாலை, சந்தனாதிகளால் அலங்கரித்து உபசரித்து, மங்கள-வாத்தியத்துடன் யானைமீதிலோ, பரிசாரகர்தலைமீதோ

நித்தமும்கொண்டுவரவேண்டும். அபிஷேகதீர்த்தத்தை நிரப்பும் பெரியஅண்டாவில், பூஜையின்காலத்திற்கு ஏற்றஉரியஅளவிற்கு நீரைசேமிக்கவேண்டும். பின்பு உரியதீர்த்ததிரவியங்களை அதில்சேர்த்திடவேண்டும். இதனைப்- பற்றி ஆகமஅறிஞர்கள் கூறுவதாவது,

தஸ்மாத் பிரபாதே ப்ரயதோ த்விஜச்ச
நாநா விதைர் வாத்ய நிநாத ஜாலைர்.
ஹ்ரியேத ஸர்வை ரூபசார வர்கை:
நத்யாஸ்து கங்காஜல பூர்ணகும்பம்.

இவ்விதம் ஸ்நாநஜலம் அதிகாலையிலேயே பலவகை இசைமுழக்கத்துடன், உபசாரத்துடன், பிராம்மணர்களால் கொண்டுவரப்படவேண்டும். இதன் ஆகமவிதிமுறையாவது,

சுவர்ண கும்பேந வா தாம்ர ராஜதேந கடேந வா.
ஆபோவா இதி மந்த்ரேண கடே கங்காம் ப்ரவேசயேத்.
சூத பத்ரைர் நாளிகேர தர்ப கூர்ச்சாதிபிர் வ்ருதம்.
வஸ்த்ர கந்தாக்ஷதைப் புஷ்பை: அலங்கிருத்ய விசேஷத:
கஜ மஸ்தக மாரோப்ய பரிசாரக மூர்த்நி வா.
சத்ர சாமர ஸம்யுக்தம் வாத்ய கோஷ ஸமன்விதம்.
தாம ப்ரதக்ஷிணம் கிருத்வா லிங்க மூர்த்நி விஸர்ஜயேத்.

மேற்கண்டவாறு ஊர்வலமாக நீர் கொணர்ந்து எடுத்துவரப்பட்டு எந்தஒருகிராமத்தில் காலையில் கங்காதேவியை அழைத்து ஆலயத்தில் சேர்த்திடும்அபிஷேகமானது, ஆலயஇறைவனுக்கோ, மூலமூர்த்திக்கோ அல்லது பலிபீடம், கொடிமரம், துவாரபாலகர்கள், கோபுரஸ்தூபிகலசம், ஹரனின் திருமுடி இவைகளின்மீதோ விதிமுறைப்படி நித்யமும் செய்யப்படுமானால் அக்கிரியை அந்த கிராமத்திற்கும், அரசனுக்கும் மேன்மையை ஏற்படுத்தும் என்றும். இவ்வாறு தினமும் ஆலயநந்திக்கு நீராட்டினால் ஸர்வகாரியசித்தி ஏற்படும் என்றும் ஆகமங்களில் கூறப்படுகிறது. இதற்கான சான்று,

பீடேச தண்டே விருஷ தண்டி முண்டி
ஸ்தூப் யக்ர தேசே ஹரமூர்த்நி வாபி
ஏவம் து நித்யம் விதிவத் ப்ரயுக்தே
கிராமஸ்ய ராக்ஞஸ்ய பவேத் சுவிருத்தி: .

(ஆகமஸாரம்)

அபிஷேகபாத்திர விதிமுறை .

அபிஷேகம்செய்வதற்கான அபிஷேககலசபாத்திரமானது, பொன், வெள்ளி, தாமிரம் ஆகிய மூவகைகளுள் ஒருவகை உலோகத்தினாலானதாகவோ அல்லது மண்ணாலானதாகவோ பாத்திரம் ஏற்கத்தக்கது. இரும்பு, எவர்சில்வர், அலுமினியம் முதலிய விதிக்கப்படாதவைகளை ஒருபோதும் பூசைக்கு ஏற்கக்கூடாது. இவ்விதம் நீர்அள்ளும்பாத்திரங்கள் இல்லாத போது சங்கு அல்லது சுக்தி என்பவைகளை பாத்திரமாகஏற்று அவற்றைக்கொண்டு நீராட்டலாம். பாத்திர வகைக்கான சான்று,

பாத்ராணா மப் யலாபேது சங்கம் வா சுத்திகம் துவா
தக்ஷிணாவர்த்தகம் சங்கம் ஜாதிச் சிரேஷ்ட மிதி ஸ்மிருதம்.
ஸௌவர்ணம் ராஜதம் தாம்ரம் கேளிஹாரஞ்ச சங்கஜம்.
பலாச பத்ம பத்ரோக்தம் தாரவம் மிருத்திகா மயம்.
அன்யத்வா யந்திரிகாதிஸ்தம் பாத்ரமுக்தம் சிவார்ச்சனே.

இதனால் பொன், வெள்ளி, தாமிரமாகிய மூவகை உலோகத்தினாலானதோ, தேங்காய்ஓடு அகப்பை, சங்கு மேலும் பொரசு, தாமரை, வாழை ஆகிய இலைகளின் தொன்னைக் கிண்ணிகள் மரவகையாலானவை, மண்ணாலானது இவைகளே சிவபூசைக்கு ஏற்ற பாத்திரங்களாகும். கூறப்படாதவகை கூடாதவை. அபிஷேகம் மற்றும் ஸ்நபனத்திற்காக கலசத்தை ஏற்கவேண்டும். அல்லது சங்கு அல்லது சுக்திகள் (சங்கு போன்று காவிநிறம் உடையவை) பசுக்களின் பெரியஅளவு கொம்புகளிலோ, நீர்நிறைத்து நீராட்டிடுமாறு சுப்ரபேதாகமம் கூறுகிறது. 108, 500, 1000 ஆகிய ஸ்நபனவகைகளுக்கு ஏற்றமண்கலசம் சுட்டதாக சிவப்புநிறமும், நல்லஓசையும், அழகும் உள்ளதாய் இருத்தல்முறை. இதற்கான சான்று,

ஸௌவர்ணம் ராஜதம்வாபி ததா தாமிர மயைரபி.
சங்கைர்வா சுக்திகைர்வாபி கவாம் சிருங்கைரதா பிவா.
அதாவமிருன் மயைர்வாபி ஸர்வலக்ஷண ஸம்யுதை.
சுபக்வைவஸ் சுஸ்வரைஸ் ஸ்நிக்தைர் பிம்பபிரப சமந்விதை:
ஏதைர் லக்ஷண ஸம்யுக்தைஸ் ஸ்நபாயேத் பரமேச்வர:
(சுப்ரபேதாகமம்)

வீட்டுபூஜைக்குரிய அபிஷேகப்பொருள்கள் :

1பால், 2தயிர், 3நெய், 4தேன், 5இளநீர், 6கரும்புசாறு, 7சந்தனம், 8(கங்கை) சுத்தோகம் (தூயநீர்) ஆகியவை ஒருபடி அளவில் எட்டு அபிஷேகப்பொருட்கள் இருத்தல் முறை. இதற்கான ஆகமசான்று,

க்ஷீரம் ததி க்ருதம் க்ஷெளத்ரம் நாளிகேர ஜலம் ததா.
கந்த தோயேந ஸம்ஸ்நாப்ய கோசிருங்காக்ர ப்ரமானத:
இக்ஷுஸாரம்ச சுத்தோதம் கந்ததோயா பிஷேசநம்.
ஆத்மார்த்தே து விசேஷேண ப்ரஸ்தாதீநிச காரயேத்.

"அபிஷேகக்கிரமம்" ஆகமக்ஞர்களால் சிவார்சனையில் கூறப்படும் அபிஷேகமுறையாவது:

தைலம் பிஷ்டா மலக ரஜநீ கவ்ய பஞ்சா மிருதாநி.
க்ஷீரம் பச்சாத் ததிச க்ருத மது இக்ஷு ரம்பா பலாநி.
ஜம்பீராதி ப்ரஸவ ஸலிலம் நாளிகே ரோத்த கந்த
ஸ்ரீகும்பாக்யே க்ரம இதி சிவே சேச்யமாநம் வதந்தி.

மேற்கண்ட தீர்த்தாதி அபிஷேகதிரவியங்களுக்கு அளவுகளும் கூறப்பட்டுஉள்ளன. அவை

தைலம் ப்ரஸ்த ப்ரமாணம் ஸ்யாத் கதலீ பஞ்சவிம்சதி: .
பநஸம் பல மேகம் ஸ்யாத் லிகுசம் பஞ்ச விம்சதி: .
சூதம் பஞ்சதச ப்ரோக்தம் டாடிமீ தசகம் ததா.
குளுஞ்சீ தசகம் ப்ரோக்தம் நாரங்கம் த்வாத சோச்யதே.
நாளிகேரம் து தசகம் சர்க்கரா த்ரிபலம் பவேத்.
கிருதம் ப்ரஸ்தார்தகம் புரோக்தம் குடுபம் மது சோச்யதே.
பஞ்சகவ்யாடகம் புரோக்தம் ஷட்பிரஸ்தம் க்ஷீர முச்யதே.
ததி தத் துவிகுணம் புரோக்தம் ரஜநீ பலமேவச.
மாஷ முக்தாதி சூர்ணாநி ப்ரஸ்த மேக முதாஹ்ருதம்.
த்ரி ப்ரஸ்த மிக்ஷுஸாரம்ச ஹிமாம்பு குடுபார்தகம்.
ஜலதிரவிய ப்ரமாணம்து பல த்வய மிதீரிதம்.
ஆடகோன்னா பிஷேகச்ச சுத்தான்னம் சாடகம் ஸ்மிருதம்.
கந்தவாரி ஆடகம் புரோக்தம் ததா பஞ்சாமிருதம் பவேத்.
பத்ரதோயம் புஷ்பதோயம் ஸ்வர்ணதோயம் ததா ஆடகம்.
குங்குமா (அ) கரு கஸ்தூரீ கர்பூரைர் மிருகநாபிநா.
ஹிமாம்புநா ச ஸம்மிச்ரம் கந்தம் சைவ சதுஷ்பலம்.

(ஸஹஸ்ராகமம்)

மேற்கண்ட ஸஹஸ்ராகமவசனத்தின்படி, அபிஷேகபொருள்களின் அளவுகளைஅறிக. இதன்படி அபிஷேகதிரவியங்களுக்கான

உரியஅளவு இனி கூறப்படுகிறது. அதாவது முறையே எள்ளின் நல்லெண்ணெய் ஒருபடி, வாழைப்பழம் 25 பழம், பலாப்பழம் ஒன்று (முழுபழமும்), எலுமிச்சம்பழம் 25, மாம்பலம் 15, மாதுளை 10, நாரத்தம்பழம் 12,இளநீர் 10, சர்க்கரை 3 பலம் அளவு, பசுநெய்அரைபடி, தேன்கால்படி, பஞ்சகவ்யம் ஒரு மரக்கால், பசும்பால் ஆறுபடி, தயிர் 12படி, மஞ்சள்பொடி ஒரு பலம், மாப்பொடி ஒருபடி, நெல்லிமுள்ளி மூன்றுபலம்அளவு, கடலை, உளுந்து பயறு இவைகளின் பொடிவகை ஒருபடி, கரும்பின்சாறு மூன்றுபடி, பன்னீர் (அரைகுடுபம்) 1/8படி, ஜலதிரவியம் இரண்டுபலம், அன்னாபிஷேகம் (ஒரு ஆடகம்), ஒரு மரக்கால், சுத்தான்னநிவேதனம் ஒரு மரக்கால், வாசனைதீர்த்தம் ஒருமரக்கால், பஞ்சாமிருதம் ஒருமரக்கால், பத்ரோதகம் (இலைவகைஜலம்), புஷ்போதகம் சுவர்ணோதகம் முதலான தீர்த்த வகைகள், ஒருமரக்கால் என்றுஅறிந்து இவ்வளவில் அபிஷேகித்தல் முறை. (அந்தந்த பொருளால், அந்தந்த பொருளின் அபிஷேகத்தில் நைவேத்யம் செய்வதுசிறந்தமுறை). அபிஷேகத்திற்கு கூறிய பொருள்அளவுகள் அபிஷேகத்தின் காலஅளவிற்குஏற்றவை ஆகும். "கடிகே த்வே பவேத் ஸ்நாநே கடிகைகார்ச்சநே பவேத்" என்பதனால் இரண்டுகடிகை காலம் உள்ளது ஒருநாழிகை என்பது 24 நிமிடகாலம். அதாவது 2 நாழிகை என்பது 48 நிமிடமாகும். எனவே ஒருகாலபூஜையில் அபிஷே கத்திற்கு, காலஅளவாக காரணாகமம் இரண்டு நாழிகை என்று கூறுவதை அறியலாம்..

பூர்வாஹ்நே பஞ்ச பாரம் து மத்யாஹ்நே தச பாரகம்.
பாரத் த்ரயம்ச ஸாயான்ஹே சாபிஷேகம் விபாவயேத்.

மேற்கண்டவசனப்படி 64படிஅளவு, அதாவது 2காரிஅளவு கொண்டது ஒருபாரம் என்கிறஅளவு ஆகும். அதன்படி காலையில் 5பாரம்ஜலமும், மதியத்தில் 10பாரம்ஜலமும், சாயங்காலத்தில் 3பாரம்ஜலமும் கொண்டு சிவலிங்கத்திற்கு பூசையில் நீராட்டிடவேண்டும் என்பது ஆகமஅளவு விதிமுறையாகும்.

அபிஷேகத்திரவியங்கள் தரும்பயன்கள்.

காரணாகமத்தின்படி, ஜலம் இஷ்டத்தைத் தரும், கந்ததைலம் சுகம்தரும், பஞ்சகவ்யம் பாபத்தைப்போக்கும், பஞ்சாமிருதம் புஷ்டியளிக்கும், நெய் மோக்ஷங்கொடுக்கும், பால் ஆயுளைக்கொடுக்கும், தயிர் மகனை, பிரஜாவிருத்தியைத்தரும், அரிசிமாப்பொடி கடனை (காயத்தை/சண்டையை)

நீக்கும். நெல்லிமுள்ளிரோகத்தைப்போக்கும், கரும்புசாறு ஆரோக்கியம் தரும், தேன் சுகம்தரும், முப்பழபஞ்சாமிருதம் செல்வசம்பத்துதரும், வாழைப்பழம் விளைபயிர்- களைவளர்க்கும், மரஇலைத்தளிர்களாலான பல்லவோதகம் உலகவசியம் ஏற்படுத்தும். மாம்பழம், புத்திரனைத்தரும், மாதுளை கோபத்தைப்போக்கும், கொளஞ்சிபழம் சோகம் போக்கும், நாரத்தையின் இருவகை (சாத்துக்குடிரூஆரஞ்சு) தேஹஆரோக்யத்தையும், மனதை ஒழுங்குபடுத்தி, நேர்மையையும்அளிக்கும். எலுமிச்சம்பழம், மிருத்யுவைவிபத்தைபோக்கும், சர்க்கரை சத்ருவைபோக்கும், இளநீர் சுகபோகமளிக்கும், அன்னாபிஷேகம் சாம்ராஜ்யம்தரும், சந்தனஜலம் லக்ஷ்மியை, (தனத்தை) செல்வத்தைக்கொடுக்கும், நைவேத்யம் (ஆளுமையைக்) ராஜ்ஜியத்தைக் கொடுக்கும், தாம்பூலம் சுகம்தரும், சங்குஜலம் நல்லபுண்ணியத்தைத்தரும், மார்ஜனோதகம் பயத்தை நீக்கும் என்பதாம். இவற்றைக்கூறும் சிவாகமச்சான்று,

ஜலம் இஷ்டப்ரதம் ப்ரோக்தம், கந்த தைலம் சுகப்ரதம்.
பஞ்சகவ்யம் ஹரேத் பாபம் புஷ்டிம் பஞ்சாமிருதம் திசேத்.
கிருதம் மோக்ஷ ப்ரதம் சைவ க்ஷீர மாயுஷ்ய வர்தனம்.
துதி ப்ரஜா விருத்திகரம் பிஷ்டம் வை(ரண)ருண மோசனம்.
ரோக நாசகரீ தாத்ரீ, ரஜநீ ராஜ்ய வச்யதா.
இக்ஷுஸாராத் ததா(ஆ)ரோக்யம் க்ஷௌத்ரஸார: சுகப்பிரத:
பலபஞ்சா மிருதாத் ஸம்பத் கதலீ ஸஸ்ய விருத்திதா.
பல்லவாத் லோக வச்யம் ச சூதம் வை புத்ரவர்தனம்.
டாடிம்யா க்ரோத நாசஸ் ஸ்யாத் குளுஞ்சீ சோக நாசநீ.
நாரங்க யுக்ம மிருஜுதம் லிகுசம் மிருத்யு நாசனம்.
சர்க்கரா சத்ரு ஹந்த்ரீ ஸ்யாத் நாளிகேரம் ச போகதம்.
அன்னா பிஷேகாத் ஸாம்ராஜ்யம் கந்ததோயம் ச ஸ்ரீப்ரதம்.
நைவேத்யம் ராஜ்ய பலதம் தாம்பூலம் ச சுகப்ரதம்.
சுபுண்யா சங்க பூஜா து மார்ஜந்யா பவ நாசநம்.

அபிஷேகப்பொருளின் அளவுவகை .

அபிஷேகபொருள்களுக்கு உரியதான சிலஅளவுமுறைகளை ஸ கஸ்ராகமத்தில் இடம் பெற்றுள்ளவற்றால் முதலில் அறிந்திடுவது அவசியமாகும். அதாவது ஆள்காட்டிவிரலின் இரண்டுரேகைவரை நனைத்துச்சொட்டவிட்ட ஒருசொட்டுஅளவு பிந்து என்பதாகும். அதன் ஆறுகொண்டஅளவு கர்ஷத்தின்பாதி ஆகும். அதன்

இரண்டுஅளவு ஒருகர்ஷம், இரண்டு கர்ஷம் கொண்டது 1முஷ்டி, இரண்டுமுஷ்டி ஒரு ப்ரச்ருதி அதாவது இதுவே வீசம்படி எனப்படும். அப்பிரசிருதியின் இரண்டு, 1தாரணை. (முக்கால்படி) தாரணை2 கொண்டது ஒரு குடுபம் (1/4 படி) குடுபம்4கொண்டது, ஒரு ப்ரஸ்தம் (1படி இதுவே 6பலம்). 4படிகொண்டது, ஒருமரக்கால் (1/2துரோணம்). இரண்டுமரக்கால்அளவு கொண்டது ஒருசிவம் என்ற அளவு ஆகும். அதில்2கொண்டது ஒரு த்ரோணம் என்பதாகும். அதில்2 கொண்டது ஒருகாரி, அதில்2பங்கு அளவு, ஒருபாரம். இதற்குமேலும் இவ்வாறே அறிக. இதனைக்கூறும் ஆகமச்சான்று.

துவிபர்வ ஸ்தாயி தர்ஜன்யாம் பிந்து ரித் யபிதீயதே.
பிந்து ஷட்கம்து கர்ஷார்தம் தத் துவயம் கர்ஷ முச்யதே.
கர்ஷ த்வயம்து முஷ்டி ஸ்யாத் தத் துவயம் பிரசிருதிர் பவேத்.
தத் துவயம் தாரணம் புரோக்தம் தத் துவயம் குடுபம் பவேத்.
தச் சதுஷ்கம் பவேத் பிரஸ்தம் ததேவ பல ஷட்ககம்.
ஆடகம் தச் சதுஷ்கம் ஸ்யாத் தத் துவயம் சிவ முச்யதே.
தத் துவயம் துரோண மித்யுக்தம் தத் துவயம் காரி ஸம்ஞகம்.
தத் துவயம் பார மித்யுக்தம் தஸ்மாத் ஊர்த்துவம் விசிந்தயேத்.
(ஸஹஸ்ராகமம்)

திரவ்யாபிஷேகத்திற்கான காலங்கள் :

ஆலயங்களில் அனைத்து காலபூசையிலும் அபிஷேகத்தை ஒன்பதுவகைபொருட்களால் அபிஷேகம்செய்வதுமுறையாகும். ஒவ்வொரு ஸந்தி எனும், ஆலயபூஜையின் எட்டுயாமத்தில் செய்திடும் பூசைகளிலும் ஸ்நாநம் செய்விக்கலாம். விசேஷமாக காலை, மதியம், சாயம் ஆகிய முப்பெரும் காலங்களில் மஹாஸ ந்திபூசையில் 16வகையிலோ, 25வகையிலோ திரவியங்களால் அபிஷேகம் செய்யத்தக்கது. பூஜைக்குரிய பழங்களாக, நாவற்கனி, மாதுளை, எலுமிச்சை, புளியம்பழம், கொய்யாப்பழம், வாழைப்பழம், நெல்லிக்கனி, இலந்தைப்பழம், மாம்பழம், பலாப்பழம் இவைகள் சைவாகமங்களில் கூறப்பட்டுஉள்ளன. நாரத்தை, திராக்ஷை முதலிய சாருமிக்க பழங்களையும் அபிஷேகத்திற்கு ஏற்கலாம். அர்தயாமம் முதலிய உபஸந்திபூஜையில் விதிக்கப்-பட்ட பொருள்களைமட்டுமே ஏற்கவேண்டும். எடுத்துக்காட்டாக அர்தயாமபூசையின் சிறப்பு-விதியைப் பார்ப்போம்.

சர்க்கரா மது கோக்ஷீர நாளிகேரம் ச சந்தனம்.
அர்தயாமா பிஷேகார்ஹம் அந்யத் திரவ்யம் நகாரயேத்.
(காரணாகமம்)

மேலும் ஆலயபூசைகளைவிதித்திடுகையில் ஒவ்வொரு காலத்தின் பூசையிலும், அபிஷேகம் விதிக்கப்பட்டுஉள்ளது. அதுமுறையே, அதிகாலையில் உஷாக்காலவிதியில் "உஷக்காலே ப்ரகுர்வீத மூலலிங்கே(அ)பிஷேசநம்" என்றும், காலசந்திவிதியில் ஸ்ரீ "மூலலிங்கவிசேஷேண பூஜாகர்ம ஸமாசரேத்" என்றும், மதியத்தில் ஸ்ரீ "மத்யான்ஹ ஸமயே ப்ராப்தே ஸ்நபனம் பஞ்சகவ்யகம்" என்றும், பிரதோஷகாலபூசையில் ஸ்ரீ நடேசம் பூஜயேத்பூர்வம் மூலபேரம்தத: பரம்" என்றும், ஸாயங்காலவிதியில் ஸ்ரீ "ஸ்நபனம் காரயேத் பச்சாத் துவாரபூஜா விதீயதே" என்றும், அர்தயாமவிதியில்

அர்தயாமம் ப்ரகுர்வீத ஸ்நபநம் பஞ்ச கவ்யகம்.
பங்சாமிருதம் ப்ரகல்ப்யாத துவாரபூஜாம் ந காரயேத்.

என்றும் இவ்வாறு, ஆலயஆறுகாலைபூசையிலும், பூசைஎனும் சொல்லால் அபிஷேகம் விதிக்கப்-பட்டுஉள்ளதை அறியலாம்.

அபிஷேகத்தின் சிறப்புகள் .

அபிஷேகபொருட்கள் பலவாகும். அவை பிம்பத்தின் அழுக்குகளைப் போக்குவதற்காக கூறப்படவில்லை. இவை அபிஷேகமுடிவில் திருஒத்தாடையால் நன்குதுடைக்காவிடில் பிம்பத்தில் அழுக்கை (கசடுகளை) உண்டுபண்ணவேசெய்யும். ஆயினும் அபிஷேகத்தினால் அருட்சக்திகள் பிம்பத்தில் வேகமாகத்தோயும். அவைகளின்மூலம் பிம்பத்திற்கும், அதனடியந்திரத்திற்கும், அப்பொருளின் சக்தியானதுபதியும், அதனாலேயே பலவகைதிரவ்யங்கள் அபிஷேகத்திற்கு இறைவனால் ஆகமங்களில் விதிக்கப்பட்டன. ஆனால் அபிஷேகப்பொருளுக்குரிய அஷ்டசம்ஸ்காரங்களைச் செய்யாமலும், அவற்றில் மந்திரஉருவைஏற்றாமலும், அபிஷேகத்தின் போது, ஓதவேண்டிய மந்திரங்களைஓதாமலும், வெறும்கடன் என்று செய்துமுடிப்பது பலன் இல்லாமல்போகும். அதனால் ஆலயங்களில் அபிஷேகங்களை செய்விக்கும் அன்பர்களும், அதிகாரிகளும் நல்லபலன்உண்டாகவேண்டி, முறைப்படி திருமஞ்சனம் செய்யுமாறு அர்ச்சகரை வற்புறுத்தவேண்டும். அத்துடன் அவருக்கு உதவியாக தக்கவர்களை நியமிக்கவும்வேண்டும். அவர்களுக்கு தக்கவெகுமதியும் அளிக்க முன்வரவேண்டும். இவ்விதம் ஆகமவிதியின்படி நடைபெறுமாயின் பிம்பத்திலும், அதன் யந்திரத்திலும் சேமித்து வைக்கப்பட்ட தெய்வீகசக்தி (சாந்நித்யம்) வசீகரஅருள்பிரகாசத்தைக் கொடுக்கும். அடியார்களுக்கு

அனுக்கிரஹம்செய்வது பிம்பசக்தியும், அதன் அடியிலுள்ள யந்திரசக்தியுமாகும். ஆதலால் அபிஷேகதிரவ்யங்களை குறைக்காமல் விதிப்படியேசெய்தால் மிகுந்தநன்மைதரும்.

ஸ்நாநதிரவிய சுத்திமுறை .

அதாவது தெய்வத்திற்கு முன்புறத்தில் வாழைஇலை பரப்பி, அதன்மீது நெல்தானியம், அரசி, எள்ளு இவைகளை ஒன்றன்மேலொன்றாக பரப்பி, ஸ்தண்டிலத்தைச்செய்து, அதன்மீது தனித்தனியேஉரியஅளவிலானபாத்திரத்தில் உரிய அபிஷேகபொருள்களை முறைப்படி வைத்து, அதற்கு எட்டுசம்ஸ ாகரங்களைச் செய்து திரவ்ய-அதிதேவதைகளையும் பூசித்து, உரிய திரவ்ய-மந்திரத்தால் அத்திரவியங்களை மந்திரித்து, பின்கு பூசித்து, அவற்றை அபிஷேககாலத்தில் ஒவ்வொன்றாக கையாளவேண்டும். இவ்வாறு இன்றி, வெறும் ஆடம்பரத்தால் செய்வது நன்மை பயக்காது.

அபிஷேகக்கிரமம். (நீராட்டும்முறை)

பிம்பத்தின் சிரசிற்குமேல் நான்குஅங்குலஉயரத்திலிருந்து, பசுவின்கொம்பு நுனிப்பிரமாண அளவு பருமனுள்ளதாக இடைவிடாதநீர் தாரையாய் ஜலத்தை அபிஷேகித்தல்வேண்டும். அபிஷேகதீர்த்தத்தில் ஏலக்காய், கிராம்பு, பச்சைக்கற்பூரம், சந்தனம், கேரோஜனை, தக்கோலம், கச்சோலம், வெட்டிவேர், விளாமிச்சம்வேர், சண்பகபூமொட்டு, சுவர்ணம் இவையாவும் அபிஷேகஜலத்தில் இடும் திரவ்வியங்களாகும். திரைபோட்டே நீராட்டவேண்டும். இதற்கு சான்று

பூஜா(அ)பிஷேக காலேது பிரச்சன்ன படமுத்தமம்.

தஸ்மாத் அதி பிரயத்நேந படம் குர்யார் யதாவிதி: (காரணாகமம்)

அபிஷேகபொருட்களின் வரிசைமுறை .

சுகந்ததைலம், பச்சரிசிமாப்பொடி, நெல்லிவற்றல்பொடி, மஞ்சள்பொடி, திரவிய (மரப்பட்டையின்)பொடி, பஞ்சகவ்வியம், பஞ்சாமிருதம் (பால், தயிர், நெய், தேன், சர்க்கரை இவை ஐந்தும் சேர்ந்தது ரசபஞ்சாமிருதம் ஆகும். இவற்றோடு மாம்பழம், வாழைப்பழம்,பலாப்பழம் ஆகிய முப்பழமும் சேர்ந்ததுபழபஞ்சாமிருதம் என்பதாகும்). பசும்பால், தயிர், பசுநெய், சர்க்கரை, தேன்,

கரும்புச்சாறு, பலசாரம் (பழரசம்), (எலுமிச்சம்பழம்), நாரத்தம்பழம், தம்பரத்தம்பழம், கொழிஞ்சிப்பழம், மாதுளம்பழம் இவைகளின் சாறு) இளநீர், அன்னம், விபூதி, சந்தனம், வில்வோதகம், 108 / 1008 துளையுள்ள தாராபாத்திரத்தால் தாராபிஷேகம், காளைக்-கொம்புஜலம், வலம்புரிசங்குஜலம், இதன்பின்பு ஸ்நபனம், பின்னர் விசேஷார்க்கியம் இவ்விதம் மூலமூர்த்திகள் (கல்சிலையாய்) சிலாபேரமாய் இருந்தால் தினமும் அந்தந்த காலபூஜைகளில் அபிஷேகம் செய்யவேண்டும். அபிஷேகத்தை சிவனது ஈசானமுகத்தில் செய்வதாக பாவித்தல் வேண்டும்.

பூசைசிலைக்கேற்ற நீராட்டுமுறை -

மரத்தாலான தாருபிம்பமாகவோ, சித்தரமாகவோ, சுதை(சிற்ப)மாகவோ, இருக்குமாயின் ஆசாரியர் பூசையில் தமது மனோபாவனையாலேயே அபிஷேகிக்கவேண்டும். உலோகபேரமாய், உத்ஸவபேரமாய் உள்ள மூர்த்திக்கு தினமும் அபிஷேகம்செய்யக்கூடாது. நைமித்திகமாகிய விசேஷநாட்களிலேயே அபிஷேகம் செய்யத்தக்கதாகும். இந்தமுறையில் செய்யும்போது இளநீர் அபிஷேகத்திற்கும், அன்னாபிஷேகத்திற்கும் இடையில் உலோகபேரமாகில் புளியம்பழக்காப்பு செய்து, சாந்துசாத்தி, தேய்த்து, சுத்திசெய்து பிறகு அபிஷேகிக்கவேண்டும். அபிஷேககாலங்-களில் திரையிட்டிருக்கவேண்டும். விபூதி, சந்தனம், கலசாபிஷேகஸ்நபனம் ஆகிய அபிஷேக காலங்களில் மட்டுமே திரையைநீக்கிட, பக்தர்கள் தரிசிக்கலாம். மற்றயதிரவிய அபிஷேக காலங்களில் தரிசனம்செய்தல்கூடாது. இதனால் அபிஷேகத்திற்குஏற்ற, கட்டமைப்பு வசதிகளும், திரையும், ஸ்நாநவேதிகை இவைகளை உடையஸ்நாநமண்டபத்தில் திருமஞ்சனம் செய்வது நல்லது. லிங்கத்தில்மேலேஉள்ள ஈசானமுகத்தில் அபிஷேகத்தை பாவனையுடன் செய்தல்முறை.

திருமுறையில் திருமஞ்சனக்கூற்றுகள்.

வேதசிவாகமங்கள் கூறிய அருள்நெறிகளை அடியவர்கள் தம்திருமுறைதுதிகளில் சிறப்பித்து திருநெறிச்செயல்களாக விளக்கிஉள்ளனர். இதனால் சைவசமயஆசாரிய பெருமக்கள் ஆகமவிதிமுறையைப் பின்பற்றிவாழ்ந்து சிவபதம் பெறுவது நமதுகடமை என உணர்த்துவர். திருஞானசம்பந்த மூர்த்திகள் சிதம்பரத்து பதிகத்தில் நடேசரை துதிக்கையில் மூன்றாம் திருமுறையின் முதல்பதிகத்தில் நடராஜர் அபிஷேகத்தைப்பற்றி,

சிறப்பாக, உத்தமோத்தமமான 12மாதங்களின் ஆதிரைநாள் மற்றும் கிருஷ்ணாஷ்டமிதினத்தின் அபிஷேகப் பொருளான, பசுநெய்யை முதலாகவைத்தே குறிப்பிடுகிறார். அப்பாடலானது,

ஆடினாய் நறு நெய்யொடு பால் தயிர்
அந்த னர்பிரி யாதசிற் றம்பலம்
நாடினாய் இட மாநறுங் கொன்றை நயந்தவனே.
பாடினாய் மறை யோடுபல் கீதமும்
பல் சடைப் பனிகால்கதிர் வெண்டிங்கள்
ஆடினாய் அருளாய் சுருங்கவெம் தொல்வினையே (3-1-1)

இப்பாடலில் ஆடினாய் என்றசொல் நெய், பால், தயிர் முதலியஅபிஷேகப்பொருள்கள் கொண்டு நீராடினாய் என்றும், மகிழ்ந்து பொன்னம்பலத்தே நடனம்ஆடினாய் என்றும் பொருள் கொண்டு தருவதாம். மேலும் அப்பர்சுவாமிகள் திருநாள்ளாரு திருத்தாண்டகத்தில் "மலங்கெடுத்து மாதீர்த்தம் ஆட்டிக்கொண்ட மறையவனை" என்று கூறி மாதீர்த்தம் ஆட்டுதல் என்பதால் 1008 கலசாபிஷேகத்தை மஹாஸ்நபனாபிஷேகத்தைக் குறிப்பிடுகிறார். ஆன்மாவின் மலத்தைச் சுத்திசெய்வதற்கு அறிகுறியாகவே அபிஷேகம் செய்யப்படுகிறது என்பது சதாசிவரூபத்தில் "நிகழ்மலசுத்தி நிமித்தமாக மகிழ்வுடனே திருமஞ்சனம்பண்ணி" என்று கூறப்பட்டு உள்ளதால் உணரப்படும்.

தடங்கொண் டதோர்தா மரைப்பொன் முடிதன்மேற்
குடங்கொண் டடியார் குளிர் நீர் சுமந் தாட்டப்
படங்கொண் டதோர்பாம் பரையார்த் தபரம
னிடங்கொண் டிருந்தான் றனிடை மருதீதோ.

இதில் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள், கோடை வசந்தகாலத்தில் செய்யத்தக்க சீதகும்ப ஸ்நபனத்தை குளிர்நீர் என்றும், குடம்கொண்ட நீர்சுமந்து ஆட்டப்பெற்றதையும் கூறுவதால், ஜலார்சனமாகிற பெருங்குடநீராட்டலான கடாபிஷேகம் செய்வதையும் ஆகமங்களின்படி குறிப்பிட்டுள்ளார். மேலும் அப்பர்சுவாமிகள் பஞ்சகவ்ய அபிஷேகத்தை குறிப்பிடுகிறார். தமது தேவாரத்தில் அது,

பாவ மும் பழிப் பற்றற வேண்டுவீர்.
ஆவி லைஞ்சுகந் தாடுமவன் கழல்
மேல ராய்மிக வும்மகிழ் துள்குமின்.
குாவ லாளன் கலந்தருள் செய்யுமே.

இப்பாடலில் அப்பர்சுவாமிகள் நமதுபாவமும், பழிகளும் பஞ்சமாபாதககுற்றங்களும் நம்மை விட்டுநீங்கிட, (ஆகமத்தின்படி பிராயச்சித்தமாக) செய்யப்படவேண்டிய அபிஷேகத்தை பசுவின் 1பால், 2தயிர், 3நெய், 4எரு, 5நீர் எனும் ஐந்தினையே ஆவிலஞ்சு என்று குறிப்பிட்டும், இதனால் இறைவன் மிகவும் மகிழ்ந்து ஏற்கும், இது அவருக்குவிருப்பமானது என்பதை உகந்தாடும் அவன் இறைவனே என்றும் (பஞ்சகவ்யஅபிஷேகத்தை குறிப்பிட்டுஉள்ளார். சுந்தரமூர்த்தி-சுவாமிகள் திருவாவடுதுறைபதிகத்தில் தேன், நெய், பால், தயிர் ஆகிய நால்வகை அபிஷேகத்தைப்பெற்று உகந்தார் என்று குறிப்பிட்டுஉள்ளார். இது சிறப்புபெற்ற திருமஞ்சனப் பாடலாகும்.

வான நாடனே வழித்துணை மருந்தே
மாசி லா மணி யேமறைப் பொருளே
ஏன மா வெயி றா மையு மென்பு
மீடு தாங் கிய மார்புடை யானே
தேனெய் பால் தயி ராட்டுகந் தானே
தேவ னே திரு வா வடு துறையு
ளானை யே யெனை யஞ்சலென் றருளா
யாரெ னக்குற வமரர்க ளேறே.

(சுந்தரமூர்த்திசுவாமிகள்)

இப்பாடலில் முதலில் தேன் குறிப்பிடப்பட்டது, தைமாதத்திய தைபூச சிறப்புப்பொருளாகும். இதனை மேலும் தைப்பூசவிழாவினை மயிலையில் திருஞானசம்பந்தர் குறிப்பிடுகையில் 12 மாதத்திற்கும் சிறந்ததாக நெய்யையே குறிப்பிட்டு கூறியுள்ளதும் நோக்கத்தக்கது. அது,

"நெய்ப்பூசுமொண்புழுக்க னேரிழையார் கொண்டாடும் ,
தைப்பூசங்காணாதே போதியோ பூம்பாவாய்" என்கிறார்.

விபூதிஅபிஷேகப்பயனானது சிவபுண்ணியத்தெளிவு ஆகும் என்பதனை விளக்கும்பாடல்,

வேத நீற்றை விமலனுக் காட்டினோர்
ஓது மச்சிவன் போன்றங் கொழிவின்றி
மூதெ யிற்சிவ லோக முதற்பதி
போத முற்றவர் போற்றப் பொலியரே.

சிவபெருமானுக்கு விபூதிஅபிஷேகம் செய்வதால் செய்பவர் சிவஞானமும், சிவத்தன்மையும் கிடைக்கப்பெற்று சிவலோகத்தில் சிவனைபிரியாதிருந்து சிவபோகபேரின்பத்தை அனுபவிப்பர் என்கிறது மேற்கண்ட அருட்பாடல்.

ஆகமபூசையில் அபிஷேகசெய்முறை

எண்ணைக்காப்புமுறை (அப்யங்கவிதி) .

ஒருபாத்திரத்தில் பசுவின் புதியநெய்யை நறுமணமுள்ளதாக சூடாக்கி, உருக்கி, பூபோட்டு சம்ஹிதாமந்திரத்தால் அபிமந்திரணம்செய்து, அந்த நெய்யினாலோ, கைகளால் பிழிந்து எடுக்கப்பட்ட தூயஎள்ளினுடைய நல்லெண்ணெயினாலோ, சந்தனம், மூலிகை முதலான-வற்றினால் தயாரான மணமிக்க, சுகந்ததைலத்தினாலோ, லிங்கம் அல்லது பிம்பம் இவற்றில், தலைமுதல்பீடம்வரை நன்குபூசிவிட்டு, நறுமணப்பொருட்களாலான தூபத்தை முகர்ந்திடுமாறு அளிக்கவேண்டும். இதில் பசுநெய்பூச்சு உத்தமமும், சுகந்ததைலம் மத்யமம், நல்லெண்ணெய் கந்யஸம் ஆகும். தலைஉச்சியில் எண்ணெய்தேய்த்து, சிறிதுநேரம் ஊறியபின்பு, அவரது கைகால்மேனியை இதமாகபிடித்துவிட்டும், அமுக்கிவிட்டும், பாவனையால் உடல்வலிகளைப் போக்கிடும்வகையில் இறைவனுக்கு உபசரிப்பதே அப்யங்கவிதிஆகும். எண்ணை முதலாக செய்யப்படுவதாலேயே அபிஷேகமான இது மங்களஸ்நாநம் எனப்படுகிறது. "திலாப் பாபஹரா நித்யம்" என்கிறது வேதம்.

தைலேந ஹஸ்த யந்த்ராத்யைஸ் ஸாதிதேந நவேந ச.
பக்வேந வாசிதேநா(அ)த சுத்த கவ்யேந ஸர்பிஷா.
ஸபீடம் லிங்க மப்யஜ்ய தூபயேத் தத நந்தரம். (காமிகாமம்)

அரிசிமாவுக்காப்புமுறை (உத்வர்த்தனவிதி) .

மங்களகரமான மஞ்சள்பொடியோடு கூடின நெல் மாவினாலும், உளுத்தமாவினாலும் (பயித்தமாவு, கடலைமாவு முதலியவற்றாலும்) லிங்கத்தை நன்றுதேய்த்து, சுத்தம் செய்து, பிறகு ஸ்நாநத்தைசெய்விக்கவேண்டும். இவ்விதம் அபிஷேகத்திற்கு முன்னதாக அரிசிமாவு, நெல்லிவற்றல்பொடி, மஞ்சள்பொடி, உளுந்துமுதலிய தானியமாவினாலும் எண்ணை போகுமளவிற்கு தடவித்தேய்த்து, லிங்கம் அல்லது பிம்பத்தை முதலில் சுத்திசெய்வது உத்வர்த்-தனமாகும். (உத்வர்தனம் ஸ்ரீ தேய்த்துவிடல்). இதற்கு சைவாகம சான்றுஆவது,

சுபேந சாலி பிஷ்டேந ஹரித்ரா ஸம்யுதேநச.
உத்வர்த்திய மாஷ சூர்ணேந நிமஜ்ஜன மதாசரேத்.

முழுக்காட்டும்முறை. (அபிஷேகவிதி)

ஆமலகம் எனப்படும் நெல்லிக்கனி முதலிய பரிமளதிரவியங்களால்தேய்த்து, ஸ்நாநம் செய்விக்கவும். உலர்ந்தசாணத்தாலான பலவண்ணம்பூசிய மண்சட்டியில் பூசைக்கு வைக்கப்-பட்டுள்ள அரிசிமாவு, சீரகம், வெண்கடுகு, கடல்உப்பு இவைசேர்ந்த கோஷ்ணோதகம் எனப்படும். சிறிதுசிவந்த, மிதவெப்பமுள்ள வெந்நீராலும், நறுமணப்பொருள்களின்பொடிகள் ஊறியபரிமளதிரவியபொடிசேர்த்த கந்தோகம் எனும் தீர்த்தத்தாலும், பிறகு உரியமரப்பட்டைகள் ஊறியகஷாயோதகவகை தீர்த்தத்தாலும், அபிஷேகம் செய்யப்படவேண்டும் என்கிறது காமிகாகமம். மேலும் பிறகு பசுவின்பால் முதலிய உரியதிரவியங்களால் விதிமுறையே அபிஷேகம் செய்யவேண்டும். பால், தயிர், நெய், தேன், சர்க்கரை ஆகிய ஐந்துபொருள்களை அபிஷேகிக்கவேண்டும். இங்கு விதிக்கப்பட்டஅபிஷேக திரவியங்களை, அவரவர் தன்சக்தியை அநுசரித்து, தன்சக்திக்கு ஏற்றபடியாக குறைந்த அளவான குடுபம் எனப்படுகிற அளவான உழக்கிலிருந்து விருத்தியாக கூடுதலாக்கிக்கொள்ளப்பட்ட, உழக்குமுதல் 1எனப்படுகிற அளவான மரக்கால் முடிவான அளவுப்பிரமாணங்களால்ஏற்று, அபிஷேகம் செய்யவேண்டும். மேல்கூறிய ஐந்துபொருள்களில் சர்க்கரை இல்லாவிடில் கருப்பஞ்சாறு, தேன் இல்லாவிடில் நெய்அபிஷேகத்திற்கு ஏற்புடையதாம். மேலும் செல்வம் உள்ளபொழுதில் சிறப்பாக தேங்காய் இளநீர்களாலும், ருசியுள்ள பழவகைகளின் ரசங்களினாலும், விசேஷமாகத் தயாரிக்கப்பட்டுள்ள புஷ்போதகம், சுவர்ணோதகம், ரத்னோதகம், நறுமணப்பொருள்கள் கலந்த கந்தோதகம் முதலானவற்றாலும், முறைப்படி விசேஷ அபிஷே கத்தை செய்யவேண்டும்.

அபிஷேகக்ரமம் .

சுகந்தா(ஆ)மலகாத் யைஸ்து ஸ்நாநம் தத்ர விதீயதே.
வர்ணபூத சராவைஸ்து வஜ்ராத்யைர் கோமயோத்பவை:
கோஷ்ணாம்புபிர் கந்ததோயைர் கஷாயை ரபிஷேசயேத்.
பயோ ததி க்ருத க்ஷௌத்ர சர்க்கராத்யை: ஸ்வசக்தித:

குடுபாத் யாடகாந் தைச்ச குடுபாத் வர்திதை ரபி.
கண்டாபாவா திக்ஷுஸாரோ மத்வபாவே க்ருதம் பவேத்.
ஜல தூபாந்தரை: கார்யோ அபிஷேகோ விபவே ஸதி.
நாளிகேர பலாம்போபி: அன்யைர் வா ரஸவத் ரஸை:
புஷ்பாத்யைர் ஹேமதோயைச்ச ரத்னோதைர் கந்ததோயகை:
அபிஷேகம் தத: குர்யாத் ந குர்யாத் சூன்ய மஸ்தகம்.
தர்ஜன் யங்குஷ்ட யோகேந புஷ்பாணி யாதாய ஹேதிநா.
தேந மூர்த்நிகதம் புஷ்பம் த்யக்த்வா(அ)ந்யத் தத்ர யோஜயேத்.

மேற்காணும் பூர்வாகமிகத்தின் அர்ச்சனாவிதிபடலத்து அபிஷேகவிதிமுறையில், இடையிடையே ஜலத்தோடும், தூ பத்தோடும் அபிஷேகித்தைசெய்யவேண்டும் என்றும், லிங்கஉச்சித்தலை சூனியமில்லாதவகையில் பெருவிரல், சுட்டுவிரலால் முன்பூசித்தமலரை அஸ்திரமந்திரத்தால் எடுத்து வேறிடத்தில் விலக்கி வைக்கவேண்டும். அப்பொழுது சிறுவிரல். அணிவிரலிடையால் பூவைக்கவும் வேண்டும். மேலும் காமிகாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ரஸபஞ்சாமிருதம் மற்றும் மலர், பொன், ரத்னம், கந்ததிரவியவகைகள் சேர்ந்த தீர்த்தவகைகள், காஷாயோதகம், மாப்பொடி தானியமாவுவகைகள் இவற்றை இனி அறிந்திடலாம்.

திருமஞ்சனத்தில் இடைக்கால உபசரிப்புகள் .

மேலும் ஒவ்வொருதிரவிய அபிஷேகத்திற்கும், தவறாமல் திருமுடியில்பூவைத்தும், சந்தனம் சாத்தித்திலகமிட்டும், தூபம், தீபம், நைவேத்யம் ஆகியவற்றுடன் பஞ்சஉபசாரவகைகளையும் இடைஇடையே செய்யவேண்டும் எனவும் காமிகாகமம் விதிக்கிறது.
யத்திரவ்யம் அபிஷேகம் து தத் திரவ்யம் து நிவேதயேத்.
நைவேத்ய ஹீனாபிஷேகம் து தத் பலம் நிஷ்பலம் பவேத்.

இங்கு ஒவ்வொரு அபிஷேகத்திற்கும் பழத்தையோ, அல்லது அந்தந்த அபிஷேகத்திற்கும் கொஞ்சம் அந்தந்த பொருளையோவைத்து நைவேத்தியம் செய்வதுமுறையாகும். நைவேத்ய-மில்லாது அபிஷேகம் செய்வது பயனற்றதாகும். அல்லது சந்தனம், புஷ்பம், தூபம், நைவேத்யம், தீபம் என்ற முறையில், தீபத்தை முடிவில் கொண்டதாயும் அபிஷேகத்தின் இடைக்கால ஐவகைஉபசரிப்பைச் செய்யலாம் என்கிறது காமிகாகமம். இதற்கு சான்றாக:

கந்தம் புஷ்பம் ச தூபம்ச தீபம் நைவேத்ய மேவச.
பஞ்சோபசாரா ஏதே ஸ்யு: தீபாந்தம் வாபி ஸம்மதம்.

(காமிகம்4-378)

பூசையில் எட்டுகிரியாகாலங்களில் புஷ்பத்தையும், ஏழுகாலங்களில் ஜலத்தையும், தூபதீபம் இரண்டும் எங்கும் எல்லாகாரியங்களிலும் செய்யத்தக்கதாகவும் விதித்துஉள்ளதால், இதனை ஸ்நானத்தில் கூறிஉள்ளதை உற்றுநோக்கி அறியலாம். மேலும் ஜலம் சேர்ப்பதையும், முடிவில் திரையிடுவதையும் ஆகமங்களில் விதித்துள்ளன. இவ்விதிமுகைளைக்கூறும் ஆகமசான்றுகள்.

அஷ்ட புஷ்பம் த்ரிகந்தம் ச ஸப்த வாரி ஸுயோஜயேத்.
ஆவாஹநார்க்ய பாத்யேஷு ஸ்நாநே தூபே விலேபநே.
நைவேத்யே ச விஸர்கே ச புஷ்ப மஷ்டசு யோஜயேத்.
ஆர்கியே விலேபநே ஸ்நாநே த்ரிஷு கந்தம் ப்ரகல்பயேத்.
புஷ்பதானார்க்ய பாத்யேஷு ஸ்நாநே சா(ஆ)சமநம் ததா.
க்ஷாளநே ப்ரோக்ஷணேசைவ வாரிஸப்த சு யோஜயேத்.
தூபம் ஸர்வத்ர தாதவ்யம் சேஷம் ஞாத்வா ப்ரயோஜயேத்.
துவாரபூஜா வஸாநாந்தே ஸ்நாநாந்தே ச நிவேத்யகே.
ஸந்தியா(அ)வஸாநே நிக்ஷிப்யம் பிரச்சன்னபட முத்தமம்.
மத்யேமத்யே ச தூபம் ச தீபம் சைவ ப்ரதாபயேத்.
ஜலப்ரதானம் புஷ்பம் ச அர்க்யம் சைவ நிவேதயேத்.

(சிந்தியவிச்வாகமம்).

பூசித்தகலாசாபிஷேக செய்முறை. (ஸ்நபனகலசாபிஷேகவிதி)

இவ்வாறாக கந்ததைலம்முதலான 24வகை திரவியங்களையும், முறையே, ஒன்றன்பின் ஒன்றாக அபிஷேகத்தைச்செய்து, முடிவில் முன்புஸ்தாபித்து பூசித்தகலசங்களை ஆலயத்தின் வலமாக எடுத்துவந்து, நீராட்டுதலே ஸ்நபனாபிஷேகம் எனப்படும். இதனை காமிகாகமம் கூறுவதால் இங்கு அறிவோம்.

சிவமந்த்ரம் ஸ்மரன் கும்பதோயேந ஸ்நாபயேத் சிவம்.
பிண்டிகாரூபிணீம் தேவீம் ஸ்நாபயேத் ததநந்தரம்.
சுகந்தா மலகாத்யைஸ் து ஸ்நாநம் தத்ர விதீயதே.
ஸ்தாபிதைக் கலசைப் பச்சாத் அபிஷேகம் ஸமாசரேத்.

வாமஹஸ்த தலே க்ருத்வா கட்டுகம் லிங்க மஸ்தகாத்.
குசுமம் பூர்வவின்யஸ்தம் தத் அஸ்த்திரேணா(அ)பநீயச.
தேளதபாணிஸ் ஸமந்த்ரேண சங்கமுத்ரா பரிப்லுதை:
ஜலை ரநுச்சலத் பிச்ச ஸ்நாபயேத் ஈச மஸ்தகே.
நோபரி ப்ராமயேத் ஹஸ்தம் நமுத்ராம் பந்தயேத் அத:
அத்பிர்(ரு) உச்சலிதாபிஸ்து தத்தத் திரவ்யாணி நஸேசயேத்.

மேற்கண்ட அபிஷேகவிதியினால் ஸ்தாபிக்கப்பட்ட கலசங்களால் அபிஷேகிக்கவும். இடது உள்ளங்கையில் தாராதட்டைவைத்துக்கொண்டு, சிவலிங்கமஸ்தகத்தில் இருக்கும் முன் அர்ச்சித்த புஷ்பத்தை அஸ்திரமந்திரத்தால் நீக்கிவிலக்கிவைத்து, சிவகரமுடையஅர்ச்சகர் மந்திரத்துடன் சங்குமுத்திரையால் நனைக்கப்பட்டு, அசையாமலிருக்கிற தாரையாய்விடுகிற ஜலங்களாற், சிவனின்சிரஸில் ஸ்நாநம்செய்வித்திடவேண்டும். லிங்கத்தின் உச்சிமீது அர்ச்சகர் கைகளைமேலேசுற்றக்கூடாது. முத்திரைகளைக் கீழேகாண்பிக்கக்கூடாது. மந்திரத்துடனேயே நீராட்டப்படவேண்டும். முடிவில் ஜயசப்தத்துடன் கூடியவாறு சிவன்சக்தி கலசங்கள் முதலாகவே கலசங்களை முறையே அபிஷேகிக்கவேண்டும். சந்தனம், புஷ்பம், தூபம், தீபம், அர்க்யம் என்பவைகளை கும்பத்திற்குசமர்ப்பித்து, கலசத்தில் மேல்மூடியிருப்பவற்றை மாவிலைகளை, (விதானத்தை) வலதுகையால் ஆசாரியர் கலசத்தின் தர்பைகூர்ச்சம், புஷ்பம், அவற்றை அர்க்ய-தீர்த்தத்துடன் கையில்வைத்தவாறே, சிவமந்திரத்தை முறையே நினைத்தவராய், அதனை சிவலிங்கசிரஸில் வைத்துமந்திரத்தை நியாசம்செய்தல்வேண்டும். இவ்வாறே லிங்கபிண்டிகையில் இடதுபக்கத்தில் பார்வதியைசேர்த்து பிறகு, எட்டுதிசையிலும், எட்டு வித்யேச்வரர்களையும், அந்தந்த கலசகூர்ச்சபுஷ்பத்தினால் லிங்கத்தில் சேர்த்துவிட்டு, பிறகு அந்தந்த கலசத்தால், அந்தந்தஇடத்தில் அபிஷேகம் செய்யவேண்டும். இதனால், ஆங்காங்கு தெய்வஸாந்நித்யம் பெருகி விளங்குவதாய் ஆகும். சிவலிங்கத்தின்ஐந்துதிருவாயிலும், ஆசமனதீர்த்தமளித்த பின்பு, மிகமென்மையான பருத்திஆடையால் ஒற்றித் திருஒற்றாடையினால் ஸம்மார்ஜனத்தை (துடைத்தலைச்)செய்தபின்பு, சுகந்தகுங்குமகற்பூரசந்தனசாந்தினை லிங்கம் முழுவதும் பூசிய பின்பு, துயபலவகைஆடையால் லிங்கபீடத்தைசுற்றிமூடி, உடுத்தியபின்பு அஷ்டபுஷ்பத்தை மந்திரத்தால்கொடுத்து

எட்டுமுறை எட்டுபூசாத்தி, மந்திரான்னமாக, பயற்றுப்பொங்கலை நிவேதனம்செய்வது அபிஷேகமுறையாகும். பூசையின்போது இதுவரை செய்யப்படுவதே அபிஷேககிரியை எனப்படுவதாகும்.

அபிஷேகத்தின் முடிவில் செய்யவேண்டியவைகள்.

கந்தாம்புநா(அ)பிஷேகம் து கிருத்வா லிங்கம் ஸபீடகம்.
வக்த்ரேஷ் வாசமனம் தத்வா மார்ஜயேத் சுத்த வாஸஸா.
கந்ததிரவ்யைஸ் ஸமாலிப்ய சிவலிங்கம் ஸவேதிகம்.
வஸ்த்ரைர் நாநாவிதைர் த்ரவ்யைர் தேவமாச்சாத்ய நிர்மலை:
தத்வாஷ்ட புஷ்பம் தேவாய தத்யாத் மந்த்ர ஹவிஸ் தத:
முத்கான்னம் வா(அ)த சுத்தான்னம் உபதம்சாதி ஸம்யுதம்.

இவ்விதம் பூஜையின் முக்கிய, ஆறாவது உபசாரமாயும், முதல்அங்கமாகவும் உள்ள, அபிஷேகம் என்பது, மந்த்ரான்னநிவேதனம்வரை செய்யப்படுவதாகும். இந்த நிவேதனம் அபிஷேகத்- திற்கான உபசாரநைவேத்யமேஆகும். பூஜையின் மஹாநைவேத்யம் வேறு. இதன்பின் விசேஷ அலங்காரம், பூசை இவற்றிற்குப்பிறகு இடம்பெறுவதாகும். இவ்வாறு "நைவேத்யாந்தம் து பூஜநம்" என்ற ஆகமஇலக்கணத்திற்குஏற்ப ஆஸனாதி நிவேதனாந்தமாக செய்யப்படுதலால் அபிஷேககிரியையே பூஜை என்றும், இதுவே பயனையும், நமக்கு பலத்தையும் தருவதால் அபிஷேகமே பலி எனப்படுவதாகவும், "தலையாலே பலிதேரும் தலைவனை" என்ற அப்பர்-வாக்கின்படியும்ஆகும். இதுவரை அபிஷேககிரியையின் செயல்முறையைக்கண்டோம். இனி அபிஷே கவகைகளையும், பயன்களையும் தனித்தனியே காண்போம்.

பஞ்சகவ்யஅபிஷேகவிதி (பசுவின் ஐங்கலமாட்டும்முறை).

இறைவனுக்கு மிகவும் பிரியமானதும், பெரும்புனிதமளிப்பதும், இஷ்டபயனைஅளிப்பதும் பஞ்சகவ்யஅபிஷேகம்ஆகும். கன்றுடன்கூடிய பசுவினிடமிருந்து, கன்றுகுடித்தபின்பு பசுமடியை (ஊட்டியபின்பு) நீரால் கழுவாமல் மீதிபாலை கன்றின்எச்சத்துடனேயே கரந்து, புதிதாகஉள்ளவைகளான, பால், தயிர், நெய், சாணம், ஜலம் எனப்படுகிற ஐந்தும் பஞ்சகவ்யம் எனப்படுபவைஆகும். கவ்யம் என்ற சொல்லுக்கு (கோ ஸ்ரீ பசு என்பதால்) பசுவினுடைய பொருள்கள் என்பதே உரியபொருளாகும். சிவத்திற்கு மிகபவித்ரமானவற்றுள் கன்றின் எச்சில் உச்சிஷ்டம், அதாவது கன்றின்எச்சத்துடனேகறந்த பசுவின்பால்மட்டுமே,

விருப்பமுடையதாகும். பசுவின்பொருளைத்தவிர, மற்றவை எருமைமாட்டினுடைய பால், ஆட்டினுடையபால் முதலிய-வற்றை பூசித்தலும், அபிஷேகித்தலும், பெருந்தீங்கு தருவனவாய் முடியும் என்கிறது ஆகமம்.

க்ஷீரம் ததி கிருதம் சைவ கோமூத்ரம் கோமயம் ததா.
பஞ்சகவ்ய மிதி புரோக்தம் பூஜயேத் பிரம்ம பஞ்சகை:
(காரணாகமம்)

மேலும் இவ்வைந்தினுடன் பசுவின் கோரோசனையையும் சேர்த்து, ஆறுபொருளையும் ஒன்று சேர்த்து சைவாகமஷடங்கமந்திரத்தால் அபிஷேகிக்கவும். இதுவே ஷட்கவ்யம் எனப்படும்.

கோமூத்ரம் கோமயம்க்ஷீரம் ததிஸர்பிச்ச ரோசநா.
ஷட்கவ்யமிதி விக்ஞேயம் ஷடங்கோந பிஷேசயேத்.
பஞ்சகவ்யத்தின் ஸ்தாபனமுறை. (பூஜித்திட நிறுவும்முறை)

வாழைஇலைமீதில், நெல் மற்றும் பச்சஅரிசியை மூன்றுசாண்அளவில், சமசதுரமாக, சமமாகப்பரப்பி, அதில் கிழக்கு மற்றும் வடக்கில் முடியுமாறு 4 கோடிட்டு, அதனால் மூன்று ஓ மூன்று கட்டமாக்கி, ஒன்பது கட்டமாக நவபதத்தை கற்பித்துக்கொண்டு, அவற்றில், நடுவில் பால், கிழக்கே தயிர், தெற்கே நெய், வடக்கே கோஜலம் (கோமூத்ரம்), மேற்கே கோமயம் (பசுஞ்சாணம்) என்ற முறையில் பஞ்சகவ்யத்தைத்தனித்தனியே ஸ்தாபித்தல்வேண்டும். இவற்றுடன் ஐசான்யமாகிய வடகிழக்குமூலைப்பதத்தில் தர்பைநுணிகள்போடப்பட்ட, சந்தனம் கலந்த, குசோதகத்தை ஸ்தாபித்தும், இவற்றுடன் தென்கிழக்குமூலையில் அபிஷேகத்திற்குரிய அரிசிமாவும், தென்மேற்கில் நெல்லிவற்றல்பொடியும், வடமேற்கில் மஞ்சள்பொடியும், ஆக ஒன்பதுகட்டத்திலும் இவ்வாறு பொருள்கள் ஒன்பதை ஸ்தாபித்திடவும். இதனைக்கூறும் சைவாகம பத்ததியின் சான்று,

நவபத கிருத மத்யே துக்தம் ஐந்திரே ததி ஸ்யாத்.
யம திசி கிருதம் இந்தௌ வாருணே கோமயே த்வே.
அனல நிருதி வாய் வீச கோணேஷு பிஷ்டா.
மலக ரஜனி தோயைஸ் ஸ்தாபயேத் பஞ்சகவ்யம்.

பஞ்சகவ்ய பூஜைமுறை.

இவற்றில் நடுமுதலாக, முறையே, 1ஈசானம், 2தத்புருஷம், 3அகோரம், 4வாமதேவம், 5சத்யோஜாதம் எனப்படுகிற

சிவபஞ்சபிரம்மமந்திரத்தால் பூசித்தும், மற்றவைகளை சிவமந்திரம், ஹிருதயாதிஷடங்கமந்திரங்களாலும் பூசித்துபின், மந்திரித்து முடியில் ஒன்றாக மூலத்தால் சேர்த்திடவேண்டும்.

பிஷ்டம் து ஹ்ருதயே நைவ(ஆ) மலகம் சிரசைவ து.
ரஜனீம் வர்ம மந்த்ராப்யாம் அபிமந்திரிய ஸகிருத் ஸகிருத்.
குசோதகம் து காயத்ரியா ஷட்வாரம் பிரம்ம பஞ்சகை:

என்ற மந்திரிப்பு முறையில் மந்திரித்தில்வேண்டும். இந்தபஞ்சகவ்யத்தை நித்தியமாயாவது, விசேஷகாலத்திலாவது இஷ்டசித்தியைவிரும்பிக் குறிக்கும்காலத்திலாவது, எப்போதுமே சிவனுக்கு அபிஷேகம் செய்யவேண்டும். பஞ்சகவ்யம் எனும்சொல்லில், பம் என்பது பாப-நாசத்தையும், ச என்பது ஆத்மசுத்தியையும், க என்பது ஜன்மநாசத்தையும், வ்ய என்பது இதுவே மோக்ஷகாரணமாவதையும் உணர்த்துகின்றன என்று ஆகமங்களில் சொல்விளக்கம் கூறப்பட்டு உள்ளது. இவற்றின் பூசை, அளவு மற்றும் விதிமுறைகள் மிகவிரிவாக கூறப்பட்டுஉள்ளது. அபிஷேகம் மற்றும் அலங்காரம் செய்யும் காலங்களில் குழந்தைக்கு தாய்போல் இறைவனிடத்தில் "அபிஷேகாத் யலங்காரே ஆசார்யோ மாத்ரு ரூபவான்" என்பதாக தாய்வடிவில் அர்ச்சகர்விளங்குவார் என்கிறது சூக்ஷ்மாகமம்.

பஞ்சகவ்யஅபிஷேகபயன் .

இது மிகச்சிறப்பாக பலவாறாக கூறப்பட்டுஉள்ளது. எடுத்துக்காட்டாக சிலவற்றைக் காண்போம்.
மாத்ருஹா பித்ருஹா சைவ கோக்னச் சைவ கிருதக்னக:
புரூணஹா ச குருத்துரோஹீ பாதகோ குருதல்பக:
முச்யதே தத் க்ஷணேநைவ பஞ்ச கவ்யாபி ஷேசநாத்.
இஹைவ தனவான் ஸ்ரீமான் ஸோ(அ)ந்தே ருத்ரபதம் லபேத்.
கவ்யம் பாப விநாசார்த்தம் ஸர்வாரிஷ்ட விநாசனம்.
ஸர்வ பாப விநாசார்த்தம் ஸர்வ சாந்தியர்த்த முச்யதே.

இவ்வாகமவசனத்தால் தாயிக்கு இழைத்த குற்றமும், தந்தைக்கு இழைத்த குற்றமும், பசுவைக்-கொன்ற மகாபாவமும் பிறர்செய்தநன்றிமறந்த, பெரும்பாவமும், பிராம்மணரை வதைத்தபாவமும், குருவுக்குதுரோகம் செய்தபெருங்குற்றமும், முதலிய பஞ்சமாபாதகச்செயல்புரிந்தகுற்றமும், முறையான பஞ்சகவ்ய அபிஷேகம் செய்தவுடன் அக்கணமே விலகிடும் என்றும்

மேலும் இதனைச்செய்பவன், இவ்வுலகில் செவல்வந்தனாயும், ஸ்ரீமானாயும்வாழ்ந்து ஆயுள் முடிவில் ருத்திரரின் திருவடிநிலையையும் பெறுவார் என்கிறது. மேலும் பஞ்சகவ்விய அபிஷேகமானது பாவத்தை அழிப்பதற்காகவும், ஸகலவிதமான கெடுதல்களான அரிஷ்டங்களைப்போக்கிக் கொள்வதற்காகவும், ஸகலவிதபாவம், தோஷம், சாபம் இவற்றிலிருந்து விடுதலை பெறுவதற்காகவும், ஸகலவிதமான சாந்தியைப் பெறுவதற்காகவும் ஆகமங்களில் கூறப்பட்டு உள்ளதாகவும் மேற்கண்ட ஆகமத்தால் அறியமுடிகிறது.

கோமயம் ரோகநாசம் ச கோஜலம் ஸர்வ ஸித்திதம்
கிருதம்வை குஷ்டநாசம் ஸ்யாத் ததி வியாதி விநாசனம்.
க்ஷீரம் மோக்ஷ ப்ரதம் வித்யாத் பஞ்சகவ்ய பலம் பவேத்.

மேலும் கோமயம், ரோக நாசத்தையும், கோஜலம் ஸர்வ இஷ்டஸித்தியையும், செல்வத்தையும், நெய்குஷ்டாதிநோய்களைத் தீர்த்துநீண்டஆயுளையும், தயிர் வியாதியையும்போக்கும். பால் மோக்ஷத்தையும், குசோதகம் சிவபுண்ணியத்தையும் தரும் என்கிறது.

கோமூத்ரம் ஸ்ரீப்ரதம் வித்யாத் கோமயம் ரோக நாசனம்.
பயஸ் சத்ரு விநாசம் ஸ்யாத் ததி புத்ர விவர்தனம்.
கிருதம் மோக்ஷ ப்ரதம் சைவ பஞ்ச கவ்ய பலம் பவேத்.
எனப்படுகிறது.

பஞ்சகவ்யமந்திரிப்புமுறை.

சிறப்புமுறையாக இதற்கு மந்திரவகைகள் கூறப்படுவதாவது,

பஞ்சவாரம் சதுர்வாரம் த்ரிவாரம் ச த்விவாரகம்.
ஏகவாரம் து ஈசாதீன் மூலமந்த்ரம் ஜபேத் தத:
அஷ்டோத்தர சதம் ஜப்த்வா அகோரேண ஜபேத் தத:
மூலம் குசோதகம் லிப்ய வ்யோமவியாபி ஜபம் ததா.
சத மஷ்டோத் தரம் சைவ மூல மந்த்ர மநுஸ்மரன்.
ஷடுத்தாஸந மப்யர்ச்ய ஸம்ஹிதா மந்த்ர பூர்வகம்.

மேற்காணும் கூற்றினால் பால் முதலானவற்றில் பஞ்சபிரம்மமந்திரமானது பூசித்தவாறே 5, 4, 3, 2, 1 என்ற எண்ணிக்கை முறையிலும், குசோதகத்தில் 6முறையும் மந்திரித்து, பஞ்சகவ்யத்தில் மூலமந்திரத்தால் 108முறையும், அகோரமந்திரத்தால் 108முறையும், ஜபித்தல்முறையாகும்.

குசோதகம் மூலத்தால் சேர்க்கப்பட்டபின்பு ஷடுத்தாஸனத்துடன் ஸதாசிவபிரம்மத்தை அதில் பூசித்து, சம்ஹிதாமந்திரபூர்வமாக வியோமவியாபிபதமந்திரத்தால் (81மந்திரயோத்தொகுப்பால்), மந்திரித்தும், பிராயச்சித்தவிஷயத்தில் அஸ்திமந்திரத்தால் 108முறை மந்திரித்தும் அபிஷேகிக்கலாம். பஞ்சகவ்யத்தில் முறையே பாலில் பார்வதியும், தயிரில் பிருஹஸ்பதியும், நெய்யில் அக்னியும், கோஜலத்தில் சந்திரனும், கோமயத்தில் சூரியனும் அதிதேவதைகளாவர். அவ்வாறே கௌசிகர், காச்யபர், பாரத்வாஜர், கௌதமர், பராசரர் என்போர் முறையே பஞ்ச-கவ்யங்களின் ஐந்துமகரிஷிகள் ஆவர். இதனைக்கூறும் சான்றுகள் :

பார்வதீம் ச பிருஹஸ்பத்யம் அக்னீ ஷோமௌ ரவிஸ் ததா.
கேளசிகம் க்ஷீர மேவம் து காச்யபம் ததி சிருச்யதே.
பாரத்வாஜம் கிருதம் சைவ கௌதமம் கோமயம் ததா.
பராசரர்ஷி கோமூத்ரம் பஞ்ச கவ்யா(அ) திதேவதா: .

பஞ்சாமிருத ஸ்தாபனமுறை (ரஸபஞ்சாமிருதம்)

க்ஷீரம் ததி கிருதம் சைவ மது சர்க்கர ஸம்யுதம்.
பஞ்சாமிருத மிதம் பிரம்ம பூஜயேத் சூக்த மந்த்ரத:

தானியஸ் தண்டிலத்தின்மீது, ஐந்துபாத்திரங்களில் முன்புபோலவே ஒன்பதுகட்டமாக நவபதத்தை செய்து, அதன்நடுவிலும், நான்குதிசையிலுமாகமுறையே பசுவின் 1பால், 2தயிர், 3நெய், 4தேன், ள5சர்க்கரை ஆகியவை ஐந்தும், சுவைமிக்க திரவரஸக்கலவையானது ரஸ பஞ்சாமிருதம் என்பதாகும். இவை பஞ்சகவ்யத்தைப்போலவே பஞ்சபிரம்மசூக்தமந்திரங்களால் பூஜிக்கப்பட்டு, முடிவில் ஒன்றுசேர்த்து அதில்அமிருதேச்வரரைப்பூசித்து பின்புஇதனால் அபிஷேகம் செய்யவேண்டும்.

ரஸபஞ்சாமிருத பூஜாவிதி, அளவுமுறை, ஸ்நபனமுறையானது :

மது பய . ததி ஸர்பிர் சர்க்கரா மத்யமாதீன்
சரபத சிவ கோஷ்டே விந்யஸேத் பிரம்ம மந்த்ரை:
குடவயுகள யுக்ம பிரஸ்த பாதம் து பஞ்சா
மிருத மிஹ சிவமந்த்ரைர் ஸ்நாபயேத் த்ரீணி காலே.

மேற்கூறப்பட்டவிதிப்படி, காலை, உச்சி, ஸாயம் ஆகியமூன்றுவேளையும் அபிஷேகிக்கவும். இவற்றுடன்

பழங்களையும் சேர்த்துச்செய்வதே பலபஞ்சாமிருதமென்றும், நவபதத்தில் நடுவில் பால், கிழக்கே தயிர், தெற்கே நெய், வடக்கே தேன், மேற்கே சர்க்கரை ஆகிய ஐந்துஅமிர்த சுவையான திரவப்பொருள்களையும், நான்மூலைகளில் உரியபழவகை, நறுமணப்பொடிகளையும், முக்கனிகளையும், பூசித்து, பிறகுசேர்த்து, நீராட்டுவது பலபஞ்சாமிருதகலவை திருமஞ்சனம் ஆகும்.

பழபஞ்சாமிருத ஸ்தாபனமுறை. (பழ பஞ்சாமிருதம்)

பசுவின் மூன்றுகவ்யத்துடன் முக்கனி, தேனும், சர்க்கரையையும் சேர்த்து ஐந்துடன் மற்றும் சந்தனதீர்த்தம் இவை நான்கையும் முறையே அக்னி, நிருதி, வாயு, ஈசானமூலைகளில் வைத்து, பூசித்து நவகலசவிதிப்படி தனித்தனியாகவும், சிந்தியவிச்வசாதாக்கியநூலின்படி அபிஷேகம் செய்வது முறையாகும். இதற்கான ஆகமச்சான்று,

மத்யே துக்தம் ததிப்ராசீ தக்ஷிணே கிருத மேவச.
உத்தரே மது ஸம்யோஜ்யம் சர்க்கரா பச்சிமே பவேத்.
கதலீ பந ஸாம்ரம் ச கந்தோதக மதப் பரம்.
அக்னியா தீசாந பர்யந்தம் ஸ்தாபயேத் து விசேஷத:

இந்த பழபஞ்சாமிருதத்தில் தவறாமல் முக்கனிகளும், தேங்காய்திருவல், கருப்பஞ்சாறு, கற்கண்டு, திராக்ஷை, முந்திரிபருப்பு, குங்குமப்பூ, பச்சகற்பூரம், ஏலாதிகந்தசூர்ணம் இவைகளுடன் பிறஉலர்பழங்களையும்சேர்த்து, சிறுசிறுதுண்டுகளாக கலந்துஅபிஷேகிக்கவும். தற்போது வழக்கத்தில், வாழைப்பழம், சர்க்கரை, கற்கண்டு, தேன், நெய் ஆகியவை ஐந்தும் ஒன்று சேர்த்தகலவையே பஞ்சாமிருதம் எனப்படுகிறது. இந்தஅபிஷேகத்தை சித்திரை முதலாக பங்குனிமாதம்வரை 12மாதங்களில் முறையே, சித்திரை, விசாகம், மூலம், உத்தராடம், அவிட்டம், பூரட்டாதி, அச்விநீ, கிருத்திகை, ஆதிரை, புனர்பூசம், பூசம், மகம், உத்தரம் ஆகிய அந்தந்த மாதத்தின் திருநக்ஷத்திரத்திலும், பன்னிருமாதங்களிலும், திருவாதிரை, அஷ்டமி, பிரதோஷம் இவற்றில் பஞ்சகவ்யபஞ்சாமிருதாதி நவகலச ஸ்நபனாபிஷேகம் செய்யத்-தக்கவையாகும்.

பன்னிருமாதங்களிலும் பஞ்சகவ்யாதிவிசேஷஅபிஷேகத்திற்கானநக்ஷத்திரங்களின் விதிமுறை

சித்ரா விசாகா மூலம் ச சோத்ரா ஷாட மேவச.
சிரவிஷ்டா ப்ரோஷ்டபா(அ)ச்விந்ய:கிருத்திகா(ஆ)ர்த்ராபுனர்வசு:
மகா சோத்தர நக்ஷத்ரம் மேஷாதி துவாதச ஸ்வபி.
(காரணாகமம்)

பஞ்சகவ்யஅபிஷேகம் செய்யவேண்டியகாலங்கள்.

சிறப்புமிக்க பஞ்சகவ்ய அபிஷேகத்திற்கு உரிய காலங்கள் பூர்வகாரணாகம 135ம்படலத்தில் கூறப்படுகின்றன. இதன்படி நித்தியத்திலும், நைமித்திகத்திலும், காமியத்திலும், தோஷம் காணும்போதும், பெரும்பயமேற்படும் போதும், ஜ்வரம்கொடியநோய்போன்றவை துன்புறுத்தும் பீடைகாலத்திலும், பிறதேசத்தால் அச்ச மேற்படும் போதிலும், கெட்டசகுன அறிகுறிகள் தென்படும் போதும், திசைகள் பற்றிஎரியும் போதும், மஹாமாரியின் கோபத்தால் வசூரிஅம்மை, வறட்சி-ஏற்பட்ட போதும், அமங்களம்,தொல்லை, கலக்கம் ஏற்படும்போதும், பெரும்புயல்சேதகாலத்திலும், நிலநடுக்ககாலத்திலும்,மழையின்றி, பஞ்சமானவறட்சிகாலத்திலும், மாதப்பிறப்பு, கிரஹணம் முதலான மற்றசிறப்புபுண்யகாலங்களிலும், சைவாகமசாஸ்திரமுறைப்படி பஞ்சகவ்யத்தை ஸ்தாபித்து ஜபபாராயணத்துடன் பூசித்து அபிஷேகம் செய்திடவேண்டும். இதற்கான காலச்சான்று.

நித்யே நைமித்திகே காம்யே திருஷ்டதோஷே மஹாபயே.
ஜ்வர ரோகாதி பீடாயாம் பரராஷ்ட்ர பயே (அ)பிவா.
துர்நிமித்தே திசாம்தாஹே மஹாமாரீ ப்ரகோபநே.
க்ஷாம க்ஷேபா ஸமுத்பன்னே மஹாவாத ப்ரபேதனே.
பூமி கம்பேது அநாவிருஷ்டௌ ஸங்க்ராந்தி க்ரஹணாதிகே.
அன்யத் புண்யதினே வாபி ஸம்ஸ்தாப்ய பஞ்சகவ்யகம்.

அபிஷேகப்பொருள்களால் நாம்பெறும்பயன்கள்.

அபிஷேககாலத்தில் இறைவனுக்கு அளிக்கப்படும் பொருட்களால் சிறப்புப்பயன்களை நாம் அடையலாம். திருவடிக்கு அளிக்கும் பாத்யதிரவ்யோதகம் பாவத்தைஅழிக்கும், திருவாய்க்கு அளிக்கப்படும் ஆசமனதிரவ்யங்கள் சேர்ந்த, கையில்தரத்தக்க ஆசமனோதகம் செல்வத்தைத் தரும். அர்க்கியோதகம்

நமது செயலைப்பயனுடையதாக்கும், கார்யசித்தியைத்தரும். அபிஷேகத்திற்கு உதவும் சுத்தஜலஸ்நானோதகம் மனச்சாந்தியைத்தரும், வாசனைமிக்க ஸ்நானதைலாபிஷேகம் இன்பத்தைத்தரும், பஞ்சாமிருதம் ஐச்வர்யத்தையும், வாழைப்பழ அபிஷேகம் விவசாயபயிர்வளத்தையும், பலாப்பழஅபிஷேகம் உலகவசீகரத்தையும், மாம்பழ அபிஷேகமானது, ஸகலவிதவெற்றிகளைத்தருவதும், மாதுளம்பழஅபிஷேகமானது கோப-சாந்தியையும், கரும்புசாறுஅபிஷேகமானது வருத்தத்தைப்போக்குவதும், குளுஞ்சிநாரத்தம்பழம்சாத்துக்குடிபழம் சிறந்தமந்திரிபதவியையும், எலுமிச்சம்பழஅபிஷேகம் யமபயத்தைப் போக்குவதும், சர்க்கரையானது, சத்ருக்களைஅழிப்பதும், தேங்காய்இளநீர் அபிஷேகமானது ராஜ்யத்தைத்தருவதாகும். பசும்பாலபிஷேகமானது விரும்பியபயனையும், தயிர்அபிஷேகமானது அழகு, செல்வம், மகப்பேறுக இவைளைத்தருவதும், தேன்அபிஷேகம் சிறந்த சங்கீத-ஞானத்தையும், பசுநெய்அபிஷேகம் நல்லபுத்தியையும், ஆயுளையும்வளர்ப்பதாகும். அன்ன-அபிஷேகமானது நல்லமனைவியையும் சௌபாக்யத்தையும்தரும், பன்னீர் அபிஷேகமானது திசைகளில் வெற்றியையும், சங்குஜலாபிஷேகமானது நல்லபுண்ணியப் பயனான சுகத்தைத் தரும், மார்ஜனோதகஅபிஷேகமானது எதிரிகளைஅழிக்கும், சந்தனாபிஷேகம் இறைவனோடு சேரும் ஸாயுஜ்யமுக்தியையும், ஸ்நபனகலசாபிஷேகமானது மூர்த்திஸாந்நித்தியத்தையும், அதாவது தொடர்ந்து அருள்தருதலையும் உண்டாக்கும், வஸ்திரம்சாத்துதல், நமது (இல்லாமையை) தரித்திரத்தைப்போக்கும். சிறப்புஅலங்காரம்செய்விப்பது, நமக்கு நல்ல-பொலிவழகைத்தரும். பொன்ஆபரணங்களை அணிவிப்பது அஷ்டைச்வர்யங்களைக் கொடுப்பதாகும். புஷ்பமாலைகளைஅணிவிப்பது துக்கத்தைவிலக்குவதாகும். புனுகு, கஸ்தூரி முதலியவாசனை பொருள்களை சமர்ப்பிப்பது நமக்குஎத்திசையிலும் வெற்றியைத்தரும். அரைத்த சந்தனம்சாத்துவது, சௌபாக்யத்தையும், அக்ஷதைசாத்துவது ஆத்மாவின் மலநாசத்தைச் செய்விக்கும், வெற்றிலைப்பாக்கு தாம்பூலத்தின்நிவேதனம் நமதுகுறைவைப் போக்கிடும் க்ஷயநாசத்தையும், பில்வத்தின் திரிதளபத்திரத்தைச்சாத்துதல் விரும்பியபயனைக் கொடுப்பதுஆகும். ஆஸனபூஜையானது பிள்ளைபேரன்களைத்தருவதாகும். சிவனுக்கு துளசிசாத்துதல்

புத்திரனைக்கொடுக்கும், அகரு, (காரகில்) வெண்குங்குலியம் முதலான-வற்றால் தூபம்இடுதல், அதாவது புகையைமுகரச்செய்தல், நமதுபாவத்தையும் அறியாமையையும்போக்கும், தீபம்காட்டுவது நமக்கு மெய்ஞானத்தைத்தருவதாகும். நிவேதனம்செய்தல் அரசபதவியையும், செல்வத்தையும்தருவதாகும், பலஹாரபக்ஷணம் முதலியவிசேஷஉணவுப்பண்டங்களை நிவேதனம்செய்விப்பது குறைவில்லாத வலிமையைத் தருவதாகும், கற்பூரத்தினால் மங்களநீராஞ்ஜனம்செய்வது, உலகவாழ்க்கைப் பயத்தைப் போக்கும், விபூதியானது என்றும் செல்வத்தைத்தருவதாகும்.

அபிஷேகபூசையின் பயன்களுக்கான ஆகமசான்று :

பாத்யம் பாபவிநாசம் ஸ்யாத் ச்ரியம் துவாச மநீயகம்.
அர்கியம் து கர்ம ஸாபல்யம் ஆஸனம் புத்ர வர்தனம்.
ஜலம் து சாந்திதம் ப்ரோக்தம் கந்த தைலம் சுகப்ரதம்.
பஞ்சாமிருதம் ஸம்பதம் ச கதலீ ஸஸ்ய வர்தனம்.
பநஸம் லோக வச்யம் ச ஆம்ரம் ஸர்வ ஜயப்ரதம்.
டாடிமீ க்ரோத நாசம் ச இக்ஷு சோக ஹரம் ததா.
நாரங்கம் து சுமந்திரித்வம் லிகுசம் மிருத்யு நாசனம்.
சர்க்கரா சத்ரு நாசம் ஸ்யாத் நாளிகேரம் து ராஜ்யதம்.
சிந்திதம் து பலம் க்ஷீரம் ததிஸ்து ரூப ஸம்பதம்.
மது ஸங்கீத ஞானாய ஆஜ்யம் புத்தி விவர்தனம்.
அன்னாபிஷேகம் ஸௌபாக்யம் ஹிமதோயம் து திக் ஜயம்.
சங்கம் ஸத்புண்ய பலதம் மார்ஜனம் ரிபு நாசனம்.
கந்தாபிஷேகம் ஸாயுஜ்யம் ஸாந்நித்யம் ஸ்நபனாத் பவேத்.
தாரித்ரிய மோசனம் வஸ்த்ரம் அலங்காரம் து சுந்தரம்.
அஷ்டைச்வர்ய ப்ரதம் பூஷ்யா மாலா துக்க நிவர்தநீ.
விஜயம் திக் மிருகமதம் ஸௌபாக்யம் சந்தனம் ததா.
அக்ஷதம் மல நாசம் ச தாம்பூலம் க்ஷய நாசனம்.
பிரார்த்தி தார்த்த ப்ரதம் பில்வம் துளசீ புத்ர தாயிநீ.
தூபம் தமோபஹம் ப்ரோக்தம் தீபம் ஞானப்ரதம் பவேத்.
நைவேத்யம் ராஜ்ய தாதாரம் பக்ஷணம் பல மக்ஷயம்.
கற்பூரம் பய நாசம் ச பூதிர் பூதிகரீ பவேத்.

இவ்விதமாக பூஜோபசாரவகைகளின் பயனை அறிந்தோம்.

16 பூஜோபசாரம் :

உலகில் பொதுவாக செல்வம் பெற்றுள்ளபொழுதில், நாம் வருவாயில் பெரும்பகுதியை இவ்வாறு சிவபுண்ணியச்செயல்களில் சிவனதுஅபிஷேகம், புஷ்பார்ச்சனை, உத்ஸவம் முதலான சிறப்புபூசையைச்செய்து, பிறவிப் பயனைப்பெற முயற்ச்சிக்க வேண்டும் என்கிறது ஆகமம். அபிஷேகத்திற்குமுன்பாக இறைவனை அனந்தாஸனத்திலோ, சிம்மாஸனத்திலோ இருப்பவராக முதலில் ஆஸனபூசையைச்செய்து, ஆவாஹித்து, பின்பு அபிஷேகிக்கவும்.

ஸ்நானம் வஸ்த்ர விலேபனம் ச குசுமம் தூபோ(அ)த தீபோ ஹவி:
தாம்பூலம் முகவாஸ கந்த ஸஹிதம் கீதம் ச நிருத்தம் மஹத்.
ஹோமோ பூதபலி ப்ரதான ஸஹிதோ நித்யோத்ஸவோ வா பலி:
ஸங்கீதம் ச ஸமஸ்த மேதத் உதிதம் சம்போர் விபூதௌ ஸதி.

எனும் பூர்வகாமிகாகமத்தின் அர்ச்னாவிதிபடலசுலோகம்384-ல் மேற்கண்டவாறு ஷோடச உபசாரத்துடன், சிவபூசை கூறப்பட்டது. அபிஷேகம்முதலானவற்றின் பயன்களை, சிவாகமங்கள் சிறப்பித்துக்கூறிச் செய்திடவலியுறுத்துகின்றன. மாஸநக்ஷத்திரகாலபூசையின்பயனை காரணாகமம் நன்கு விளக்கிக்கூறுகிறது. அதனைக் கூறும் சான்று,

ஸர்வ பாபஹரம் சைவ ஸர்வ சாந்திகரம் சுபம்.
ஸர்வ சத்ரு க்ஷய கரம் ஸர்வயக்ஞ பல ப்ரதம்.
ஸர்வ வ்யாதி ப்ரசமநம் ஸர்வ தீ கீர்த்தி வர்தனம்.
ஆயுஸ் ஸ்ரீ கீர்த்த விஜயம் மாஸபூஜா பலம் துவிதம்.
(காரணாகமம்)

இதன் பொருள் ஸ்ரீ ஸகலபாவத்தைப் போக்குவதும், ஸகல குற்றங்களிலிருந்து சாந்திதருவதும், சுபமளிப்பதும், ஸகல விதசத்ருக்களை அழித்து உதவுவதும், ஸகல யாகத்தின் பயனைத்தருவதும், ஸகலவிதமான நோய்களைநீக்குவதும், ஸ கலவிதமான அறிவு, புகழ் இவற்றைவளர்ப்பதும், ஆயுள், புகழ், செல்வம், வெற்றி இவைகளைக்கொடுப்பதும், மாதாமாதம்வரும் பவுர்ணமியிலோ, மாதநக்ஷத்திரத்திலோ, சிறப்புஅபிஷேகத்துடன் செய்யத்தக்க மாஸபூஜையின் பயன் ஆகும் என காரணாகமம்கூறி வலியுறுத்தியுள்ளது. ஒரு பயனை விரும்புவோர் அப்பயனைத்தரும் பொருளால் பூசித்து அப்பயனைப்பெறலாம்.

அபிஷேகதிரவிய பலதாரதம்யம்.

பாவம் நீக்குவதில், எந்த அபிஷேகத்தைச் செய்வது, எந்த அளவில் பயன் தரக்கூடியது என்பதனை சிந்த்தியாகமம், சிறப்பித்து தாரதம்யத்துடன் கூறி உள்ளதாவது, பாவத்தைப்போக்கச் செய்யப்படுகிறஅபிஷேகத்தின் பயனானது, சுத்தஜலத்தைக் காட்டிலும் 100மடங்கு கூடுதலாக பாலினாலும், ஆயிரம்மடங்கு கூடுதலாக தயிரினாலும், பத்தாயிரமளவு கூடுதலாக பசுநெய்யினாலும், லக்ஷம்மடங்கு கூடுதலாக பழச்சாறுகளாலும், 10 லக்ஷம்மடங்கு அதிகமானதாக தேனாலும், ஸ்நபனகலசம், இளநீர் இவற்றால் கோடிமடங்கு கூடுதலாகவும், அன்னம், குங்குமப்பூ, சந்தனம் இவற்றால் எல்லையற்றதுமாக பயன்கிடைக்கும் என்கிறது சிந்தியாகமசான்று. அச்சுலோகம்.

சம்போ ரம்பு வபிஷேகதோஅக சமனம் நச்யேத் சதம் க்ஷீரத:
ஸாஹஸ்ரம் ததி தாயுதம் து க்ருததோ லக்ஷம் பலா தேகதோ.
தல்லக்ஷாத் தசகம் மது ஸ்நபனதோ நாள்யம்புநா கோட்யகம்.
சான்னாத் சந்தனகுங்கும ஸ்நபனதோ அநந்தம்ஹி சிந்தியோதிதம்.

அன்னாபிஷேகத்தின் மஹிமை .

சைவாகமங்கள் ஐப்பசிமாதபவுர்ணமியில் மிகச்சிறப்பாகவும், மற்றயவிசேஷநைமித்திக அபிஷேககாலங்களில் முக்கியமான ஒருவகையாயும், உத்தமமான சுத்தமான அன்னாபிஷேகம் செய்யப்படவேண்டும் என்கின்றன. "அன்னம் என்பது உயிர்சக்தியை உள்ளடக்கியுள்ள சிறந்த உணவாகும். இதனாலேயே ஸர்வபிராணிகளிடத்திலும் ஜீவன்நிலைத்து விளங்குகிறது. ஆதலால் இந்த அன்னத்தால் எனக்கு செய்யப்படும் அபிஷேகமானது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருவதாகஆகும். எனது மற்றொரு உருவமே அன்னம், அதுவே எனது சிறப்புவடிவமாகும். அன்னாபிஷேகத்திற்கு மேலாக எதுவும்இருக்கவில்லை, இருக்கப்போவதுமில்லை. ஆதலால் அன்னபூஜையே மிகச்சிறந்ததாகும். ஆகையினால் தவறாமல் அனைத்துவகை பெருமுயற்சி-களாலும் அன்னாபிஷேகத்தைச்செய்திடவேண்டும்" என்று பூர்வகாரணாகமத்தில் இறைவனே இதன்மஹிமையைக்கூறி இதனைச்செய்யுமாறுவிதித்துள்ளார். இதற்கான சான்று :

ஓதனான் னாபிஷேகம் து ஆயு ராரோக்ய வர்தனம்.
அன்னம் ப்ராணாத்மகம் சிரேஷ்டம் ஸர்வ ஜந்து ப்ரதிஷ்டிதம்.
தஸ்மாத் அன்னா பிஷேகம் து மம ப்ரீதி ப்ரதாயகம்.

அன்னரூபம் விசேஷேண மமரூபம் த்விதா ஸ்மிருதம்.
அன்னபூஜா பரம் சிரேஷ்டம் நபூதம் ந பவிஷ்யதி.
தஸ்மாத் ஸர்வ ப்ரயத்னேநாப் யன்னை ரன்னாபிஷேசனம்.
(காரணாகமம்)

என்கிறது. இக்கருத்தையே யஜுர்வேதமும் உபநிஷதாதிகளில்உள்ள அன்னசூக்தமும் வலியுறுத்துகிறது. "அன்னம் பிரம்மே திவ்யஜாநாத்" என்றும், "அஹமன்னம் அன்னம் அதந்தமத்மி" என்பதால் "அன்னமும், அன்னத்தை உண்பவனுமான, பிரம்மமும் நானே" என்று வேதம் அன்னமகிமையை விளக்கிச்சிறப்பிக்கிறதாலும் அறிக. மந்திரத்துடனே பொங்கலை சமைத்து, நிவேதனம்செய்வதும், அபிஷேகம், அலங்காரம், ஸ்நபனம், பூசை இவற்றின் முடிவில் அன்னப்பெரும்படையல் அளித்தல் ஆகியனவும் அன்னபூஜையே ஆகும்.

சங்காபிஷேகத்தின் மஹிமை.

சங்கு என்பது, புனிதமான நீரிலிருந்து தோன்றிக்கிடைப்பதால் ஜலஜம் என்றும், சம் என்றால் மங்களம். இதனைத்தருவதால் சங்கம் என்றும், பெயர் பெற்றுள்ளது. குவலயத்தில் பூசையில் பாத்திரமில்லாதபோது இதனை கைக்கொண்டு செய்வது சிறப்புதரும். சங்கு என்பது நாதத்தை உடையதாகையால், ஒலியுடைய, ஜீவனுள்ளபாத்திரமாய் விளங்குவதால் இதுசிறப்பு உடையதாகிறது. சமுத்திரத்திலும், நதியிலும், தீர்த்தகுளத்திலும் கிடைப்பவையான சங்குகள் முறையே, உத்தமாதித்ரயமாம். தாம்ரபர்ணிநதியில் தோன்றியது உத்தமசங்கு. கங்கையில் தோன்றியது மத்யமசங்கு, நர்மதையில் தோன்றியது கன்யஸசங்கம்ஆகும். இடம்புரிசங்கைவிட வலம்புரிசங்கு ஜாதிசிரேஷ்டமானதாகும். மேலும் இவற்றில்ஒருபடிநீர்பிடிப்பது உத்தமசங்கு, இருஆழாக்குஅளவு நீர்பிடிப்பதுமத்யமசங்கு, (1குடுபம்) ஒருஆழாக்குஅளவு நீர்கொள்ளுவது கநிஷ்டிகசங்கு என்கின்றன சிவாகமங்கள். மேலும் இந்தசங்குஅமைப்பு இலக்கணத்தால் ஆண், பெண், அலி என்று மூவகைப்படும். அதவாது அடிப்பகுதி பருத்திருப்பது பெண்சங்கு, முனைப்பகுதி பருத்திருப்பது அலிசங்கு என்றும், நடுவில் பருத்திருப்பதே ஆண்சங்கு எனவும் அறியத்தக்கது. சங்கின் இலக்கணவகைகளைக் கூறும் சூக்ஷ்மாகம சான்று,

பாத்ராணா மப்யலாபே து சங்கம் வா சுக்திகா து வா.
சங்கம் த்ரிவித மித் யுக்தம் புமான் நாரீ நபும்ஸகம்.

மூலஸ்தூலம் பவேன் நாரீ அக்ரஸ்தூலம் நபும்ஸகம்.
தாம்ரபர்ணி யுத்பவம் சங்கம் உத்தமம் சேதி கீர்த்திதம்.
கங்காயாம் மத்யமம் சைவ நர்மதாயாம் ச கன்யஸம்.
தக்ஷிணாவர்த்தகம் சங்கம் ஜாதி சிரேஷ்ட மிதிஸ்மிருதம்.
உத்தமம் பிரஸ்த பூர்ணம் து மத்யமம் குடுப த்வயம்.
கநிஷ்டிகம் து சுலபம் குடுபம் சங்க முச்யதே. (ஆகமம்)

சூரியமண்டலம், சந்திரமண்டலம், அக்னிமண்டலம் ஆகியகலாமண்டலம் மூன்றும், பிரம்மா, விஷ்ணு, ருத்திரர் ஆகிய மும்மூர்த்திகளும், ஏழுகடல்களும், ஸகலநதிகளும், ஸகலபுண்ய தீர்த்தங்களும் நித்தியமாய், இவற்றின்அம்சமாய் எப்பொழுதும் சங்கினில் விளங்குவனவாகும். ஆதலால் சங்கிலிருக்கும் ஜலத்திற்குமட்டுமே தீர்த்தம் என்ற சிறப்புத் தகுதிப்பெயர் உண்டு. மற்றவைகளில் உள்ளது சாதாரணஜலமே ஆகும். ஆதலால், பூசையில் உயர்தரத்தில் புனித நீரைத்தயாரித்திட, விசேஷஅர்கியத்திற்கு சிறப்புப்பாத்திரமாக சங்கே ஏற்கப்பட்டு பூஜாபத்திரமாக விளங்குகிறது. மூன்றுதத்வதுரூபமான முக்காலியின்மீது, ஆதிகூர்மமான ஆமையின்முதுகில், அனந்தபத்மாஸனத்தின்மீது, உரியசங்கத்தைவைத்து, அதில்நீர்நிறைத்துப், பூசித்துப்பின்பு பூசைக்கும், அபிஷேகத்திற்கும் அந்த சங்கதீர்த்தம் ஏற்கத்தக்கது. சங்கு இல்லாதபொழுதில் தவறாமல் சங்குவடிவமுத்திரையாவது காட்டப்படும். அபிஷேகமானது, சங்கினாலோ, சங்குமுத்திரையுடனோ செய்யப்படுவதே சிறந்தமுறையாகும்.

நெய்அபிஷேகமஹிமை.

பன்னிருமாதத்திலும்வருகிற, திருவாதிரைநக்ஷத்திரதின விழாப்பூசையிலும், தேய்பிறையில் வருகிற சிவதிதியாகிய சதுர்தசியிலும், அஷ்டமிதிதியிலும், விசேஷ நைமித்திகபூஜா-காலத்திலும், சைவாகமங்கள் புதியதும், உருக்கியதுமான பசுநெய்யின் அபிஷேகத்தை விதித்துள்ளன. இத்துடனேயே கோஷ்ணோதகம் எனப்படுகிற மிதஇளஞ்சுடுநீரால் நீராட்டலும் விதிக்கப்படுகிறது. அக்னியின்வடிவாய் விளங்கி நமக்கு நீண்டஆயுளைத்தருவதுபசுநெய் ஆகும். கல்பகோடிகாலமாகசெய்து, சேர்த்துவைத்துள்ள நமது பாவம்முழுவதும் முறையான ஒருமுறை செய்யப்படும் நெய்அபிஷேகத்தால் அழிந்திடும். இதனால் நாம் புனிதத்தன்மையைப் பெறலாம் என்கிறது சிவாகமம்.

இதற்கான சான்று,

கல்பகோடி ஸஹஸ்ரைஸ் து யத் பாபம் ஸமு பார்ஜிதம்.
கிருத ஸ்நாநேந தத் ஸர்வம் தஹத் யக்னி ரிவேந்தனம்.

ஸஹஸ்ரதாராபிஷேக மஹிமை.

ஆகமங்களில் விசேஷ திருமஞ்சனத்தில் தாராபாத்திரத்தினால் 108 துளைமுதலாக 1008 துளை வரையிலாக, உரியவகையில் பலவகைகணிப்பில், துளைகளையுடையதும், பொன், வெள்ளி, தாமிரம் ஆகிய மூவகைஉலோகங்களுள் ஒருவகையான உலோகத்தாலானதும், வட்டவடிவம் அல்லது சமசதுரவடிவத்தில் விதிமுறைப்படி அமைந்த துளைகளுடன் அமைந்துள்ளதுமான தாராபாத்திரத்தின்மீது, பூஜித்துமந்திரித்த புனிதநீரை சங்கினாலோ, கலசத்தினாலோ, அதிகஅளவில்ஊற்றி, அந்நீரைப்பலதாரைகளாக, இடைவிடாதவாறு மழைபொழிவுபோன்று விழுமாறுச்செய்து, தாராதீர்த்தங்களால்இறைவனை அபிஷேகம்செய்வதுஉத்தமமாகும். இது செல்வத்தையும், ஸகலசௌபாக்யத்தையும்தருவதாகும். தாராபாத்திரவகைகளின் உரிய இலக்கணம் அறிந்துத அவற்றை தயாரித்திடவேண்டும். சான்று,

சுவர்ண ராஜத தாம்ரைர் வா கர்த்தவ்யம் து சுவிருத்தகம்.
நித்யே நைமித்திகே காம்யே ஸ்நாநாந்தே து மஹேச்வரம்.
ஸஹஸ்ர தாரயா ஸ்நாநம் ஸ்ரீஸௌபாக்ய ப்ரதம் சுபம்.
தத்பாத்ரம் சங்கதோயேந பூரயேத் மூல மந்த்ரத:
ஏவ மேவ க்ரமேணைவ ஸஹஸ்ர தாராபிஷேசனம்.

(சூக்ஷ்மாகமம்)

பாவம் போக்கிட அபிஷேகவகை.

அபிஷேக சிறப்புகளைச் சிவதருமோத்தராகமம் கூறுவதாவது, பத்துபாவங்கள்வரை, சுத்தஜலாபிஷேகத்தாலும், நூறுபாவங்கள்வரை பாலாபிஷேகத்தாலும், ஆயிரம் குற்றங்கள்வரை தயிரினபிஷேகத்தாலும், பத்தாயிரம்அபராதங்கள்வரை தேனபிஷேகத்தினாலும், லக்ஷம்-பாவங்கள்வரை பசுநெய்யபிஷேகத்தினாலும், மூன்றுலக்ஷம்தோஷங்கள்வரை வெண்கரும்புச்-சாற்றின் அபிஷேகத்தாலும், கோடிஅபராதங்கள்வரை இளநீர்அபிஷேகத்தாலும், எண்ணிறந்த அபாரதங்கள் யாவும், அரைத்த சந்தனக்குழம்பின் அபிஷேகத்தாலும் பாவங்கள் அழிந்து-விடுகின்றன என்று சிவாகமம் கூறுகிறது. இதற்கான சான்று,

தசாபராதம் தோயேந க்ஷீரேண சதநாசனம்.
ஸஹஸ்ரம் க்ஷமதே தத்நா மதுநாப் யயுதம் பவேத்.
கிருதேந சத ஸாஹஸ்ரம் இக்ஷுஸாரம் த்ரிலக்ஷகம்.
நாளிகேரோதகம் கோடி கந்ததோயாத் அனந்தகம்.
கர்ஷயேத் பில்வ பத்ரைச்ச தத்வத் பீடம் ச சோதயேத்.
(சிவதருமோத்தரம்)

இவ்வாறு சிவனைநீராட்டியபின்பு, பில்வஇலைகளால், லிங்கபீடங்களை நன்குதேய்த்து, சுத்தம் செய்து, திருமஞ்சனம் செய்வதுமுறையாகும்.

விபூதிஅபிஷேகத்தின் பயன். (பஸ்மஸ்நானபயன்)

விபூதிஅபிஷேகம் செல்வத்தைத்தரும். விபூதியில் கருமைநிறமானது வியாதியைத்தரும். சிவந்தநிறவிபூதி புகழைஅழிக்கும். மஞ்சள்நிறவிபூதி செல்வத்தை அழிக்கும். ஆதலால் வெண்மைநிற விபூதியே எல்லாவிருப்பங்களையும்தரும் என்கிறது ஆகமம்.

கிருஷ்ணம் ரோககரம் ப்ரோக்தம் ரக்தம் கீர்த்தி விநாசனம்.
பீதம் சம்பத் விநாசாய ஸிதம் ஸர்வார்த்த ஸாதகம்.

விபூதி அபிஷேகம் இஷ்டஸித்தித்தரும். இந்த விபூதிஅபிஷேகமானது பாவங்களைப்போக்கி, ஸர்வஉபத்ரவங்களையும்நீக்கி, பூதபிசாசாதிகளிலிருந்து காத்தும், போகம்மோக்ஷங்களையும், ஸகலசெல்வங்களையும் தரவல்லதாகும். எனவே திருநீறு யாவராலும் அணியத்தக்கது. இதனைக் கூறும் சான்று,

அபிஷேகவிபூதியை அணிவதன் பயன்.

பூதிர் பூதிகரீ பவித்ர பரமா பாபௌக வித்வம்ஸிநீ.
ஸர்வோ பத்ரவ நாசிநீ வரதரா ஸௌபாக்ய ஸம்பத்கரீ.
பூதப்ரேத பிசாச ராக்ஷஸகணா(அ)பஸ்மார ஸம்ரக்ஷணீ.
ஸாக்ஷாத் மோக்ஷகரீ பலப்ரகடிதா பூதிஸ் ஸதா தார்யதாம்.

பஸ்ம ஸ்நாநம் பவித்ரம் சுசிகரம் அநிசம் வியாதிநாசம் சுசாந்தம்.
கங்காதீர்த்தேந துல்யம் ஸகல விஷஹரம் குரோதநாசம் சுபூதிம்.
ரக்ஷப்பைசாச யக்ஷோகண ஹரண மிதம் துஷ்டி புஷ்டீ சமத்வம்.
வச்யம் லேகே நரானாம் ஸகலஜனசுகம் பார்வதீச ப்ரஸாதம்.

இவ்விதம் திருநீற்றை அபிஷேகம் செய்வதன், அணிவதன் பயன் எண்ணற்றவையாகும்.

பாலாபிஷேகத்தின் மஹிமை.

வேதம்பயின்ற பலஅந்தணர்களுக்கு பத்தாயிரம் பசுக்களை கோதானம் செய்ததன்பயன், சிவனுக்கு முறையே செய்யப்படும் பாலாபிஷேகத்தினால் நமக்குக்கிடைத்துவிடும். கன்றுஊட்டிய எச்சத்துடன் பாலைக்கறந்து அபிஷேகிக்கவேண்டும். அவ்வளவு மகிமை பொருந்தியது பாலாபிஷேகம் என்கிறது ஆகமம். இதனைக்கூறும் சான்று,

அயுதம் யோ கவாம் தத்யாத் தோக்த்ரீணாம் வேதபாரகே.
வஸ்திர ஹேமாதி யுக்தாநாம் க்ஷீரஸ்நாநஸ்ய தத் பலம். (சிவதருமம்)

தயிரபிஷேகத்தின் மஹிமை.

பசுவின்தயிரால் சிவனைஅபிஷேகித்தவன் பாபமற்றவனாகி சிவலோகத்தில் வாழ்வான் என்கிறது சிசதருமோத்தரம் எனும் அறநூல். இதற்கான சான்று,

தத்நாது ஸ்நாபயேத் லிங்கம் ஸகிருத் பக்தியாது யோநர:
ஸர்வபாப விநிர்முக்த: சிவலோகே மஹீயதே. (சிவதருமம்)

திரவியஉதகாபிஷேகப்பயன்கள் :

மலர்வகைஊறிய புஷ்போதகஅபிஷேகத்தால் (ஸாவித்ரம்) சூர்யலோகத்தையும், தங்கம் ஊறிய சுவர்ணோதகஅபிஷேகத்தின் பயனாக குபேரபுரியையும், வற்றாதசெல்வத்தையும், ரத்தினோதக அபிஷேகத்தின்பயனாக மாஹேந்திரபோகமும், சிவமந்திரத்தால் 108முறை மந்திரித்ததான, மந்த்ரோதகத்தின் அபிஷேகத்தால் சிவலோகத்தில் சுகபோகவாழ்வும் பயனாக ஏற்படும். பச்சகற்பூரமும், குங்குமப்பூவும்கலந்த அசல்சந்தனம் மற்றும் காரகில்அரைத்துக்கரைத்த தீர்த்தத்தால் செய்யப்படும் சிவலிங்கஅபிஷேகத்தால் ஒருமுறையிலேயே ஸர்வபாபத்திலிருந்தும் விலகியவராக சிவலோகத்தில் மகிழ்ந்துவாழ்வான் என்கிறது ஆகமம். திரவியோதக பயன்கூறும் சான்று,

புஷ்போதகேந ஸாவித்ரம் கௌபேரம் ஹேமவாரிணா.
ரத்னோதகேந மாஹேந்த்ரம் லோகம் ஸம்பிராப்ய மோததே.
மந்த்ராஷ்ட சதஜப்தேந விமலே நாம்பஸா சிவம்.
ஸ்நாபயித்வா ஸகிருத் பக்தியா சிவலோகே மஹீயதே.
கற்பூராகரு தோயேந யோ லிங்கம் ஸ்நாபயேத் ஸகிருத்.
ஸர்வ பாப விநிர்முக்தோ சிவலோகே மஹீயதே.
(சிவதருமோத்ரம்)

ஜலபூஜார்ச்சனமுறை.

ஸ்ரீமத்பூர்வகாரணாகம், அதன் அர்ச்சனாங்கவிதியில் தூயநீரால்அபிஷேகிப்பதையே, ஜலபூஜார்ச்சனம் என்கிறது. இதில் அபிஷேகத்தை பூஜை என்றும், இவ்விதம் செய்வதே அர்ச்சனை என்றும் பொருள்பட ஜலபூஜார்ச்சனம் என்று குறிப்பிட்டு உள்ளதால் அறியலாம். இதற்கான ஆகமசான்று,

ஜலபூஜார்ச்சனம் நித்யம் ராஜராஷ்ட்ராபி விருத்திதம்.
ஜலார்ச்சனம் ஜபாத் குஹ்யம் ஸ்திதிகாரம் சுசோபனம்.
ஸர்வ ஸித்திகரம் சுத்தம் ஸர்வ ரோக விநாசனம்.
த்ரயம்பக முமா ருத்ரம் ஆபோ ஹிஷ்டேதி மந்த்ரகம்.
உமாருத்ராய கத்ருத்ராய மீளேசம் ஜுஹுயோதகம்.
ஸ்ரீருத்ரம் சமகம் சைவ த்ரயக்ஷரம் பஞ்ச சாந்திகம்.
ஹிரண்யம் புருஷசூக்தம் ச ஜாதவேதம் த்ரியக்ஷரம்.
பிருதக் பிருதக் ஸகிருத் ஜப்த்வா அபிஷேகம் சனைச் சனை:
ஜலார்ச்சன மிதம் புரோக்தம் ஸர்வ சாந்திகரம் பவேத்.
(காரணாகமம்)

மேற்கண்டவாறு, பல்வேறுமந்திரங்களை, ஒவ்வொன்றாக, ஸ்நானதீர்த்தத்தில் ஒருமுறை-மந்திரித்து, பின்பு ஒவ்வொருமந்திரத்தால், ஒவ்வொருகலசநீரால் நீராட்டுவதானது, அந்த நாட்டுக்கும், நாட்டுமக்களுக்கும் ஸ்திதியாகிற காத்தலைச்செய்திடும் உத்தமமாகிய ஜலார்ச்சனம் என்பதாகும். புஷ்பார்ச்சனையில் மந்திரம்கூறியவாறு, பூவை ஒவ்வொன்றாக 16, 108, 1008 என்ற எண்ணிக்கையில் சேர்த்து மலர்கொண்டு அருச்சித்தலைப்போன்றே, ஒவ்வொரு அபிஷேகசொம்புஜலத்திலும், வேதியர்களுடன் சேர்ந்து, ஒவ்வொரு மந்திரத்தை மந்திரித்து அதனால் நீராட்டி, மீண்டும் மீண்டும் இவ்வாறாகவே மந்திரித்து, பலமுறையில் மந்திர-ஜலங்களால் நீராட்டுதல் ஜலார்ச்சனம் என்பதாகும். இது சிவனுக்கு மிகவும் விருப்பமானது ஆகும். இவ்வாறு பலவகை தீர்த்தவிசேஷங்களால், அபிஷேகித்தல் யாவருக்கும் இஷ்ட-ஸித்தியை அளிப்பதாகும். எனவே, பொதுமக்கள்யாவரும் இதுபோன்றஅரியஅபிஷேகமுறைகளை ஆலயத்தில், அபிஷேககாலத்தில் சிறப்பாகச்செய்து உரியபயனைப்பெறலாம். யாகத்திற்குரியதும், பாலுள்ளதுமான, மரங்களின்பட்டைகளையும், இலைகளையும், தளிர்களையும், பூக்களையும், பக்திசிரத்தையோடு சேகரித்துக்கொடுத்து, அர்ச்சகர்வாயிலாக

இறைவனுக்குச்சிறப்புதீர்த்த-வகைகளைத்தயாரித்து, அவைகளால் நீராட்டி, யாவரும் நற்பயன்பெறாலம். இனி இவற்றின் வகைகளைக் காணலாம்.

மிருதம்பக்கல்பனம். (மண்வகை சேர்த்தஜலம் / மிருத்திகாஜலம்)

பர்வதேச நதீதீரே வல்மீகே கர்கடாவடே.
விருஷசிருங்கே தர்பமூலே ஸமுத்ரே கஜதந்தயோ:
அஷ்டமிருத்பிஸ் ஸமாயுக்தம் மிருதம்பப் பரிகீர்த்திதம்.

1மலைமண், 2நதீமண், 3புற்றுமண், 4நண்டுவளைமண், 5காளைக்கொம்புமண், 6தருப்பைஅடி- மண், 7சமுத்திரமண், 8யானைத்தந்தமண், ஆகிய எட்டுமண்வகைகள் கலந்தநீர் மிருதம்பஸ் எனப்படுவாகும்.

அர்க்கியோதக கல்பனம் (அர்க்கியதீர்த்தவகையின் தயாரிப்புமுறை)

தில வ்ரீஹி குசாக்ராணி ஆபஸ் க்ஷீர யவாஸ் ததா.
தண்டுலம் ஸர்ஷபம் சைவம் அர்க்யம் அஷ்டாங்க முச்யதே.

1) வெள்ளைஎள்ளு, 2) சம்பாரகநெல், 3) தர்பைநுணிகள், 4) தூயநீர், 5) பசும்பால், 6)யவை தான்யம், 7) பச்சரிசி, 8) வெண்கடுகு ஆகிய எட்டுபொருள்களையும் ஒன்றுசேர்த்து, உரிய மந்திரத்தால் மந்திரித்து தயார்செய்வது அர்க்கியோதகம் எனப்படுகிற ஒப்பற்ற மிகப்புனிதநீர் ஆகும்.

பலோதகம். (பழவகை சேர்ந்தஜலம்)

பநஸம் நாளிகேரம் ச மாதுளுங்க த்வயம் ததா.
நாரங்கம் லிகுசம் சைவ சூத மேதத் பலோதகம்.

இவ்வசனத்தின்படி, 1பலாப்பழம், 2தேங்காய், இருவகையில்உள்ள 4மாதுளைகள், இருவகையான 6சாத்துக்குடிகள் (ஆரஞ்சு), 7எலுமிச்சைப்பழம், 8மாம்பழம் இவை எட்டும்சேர்ந்தது பலோதகம் எனப்படுவதாகும்.

காஷாயோதகம். (மரப்பட்டைகளின் ஊரல்ஜலம்)

பலாசோ தும்பரா ச்வத்த மதூக ப்லக்ஷ பாடலம்.
ஜம்பூ த்வக்பிஸ் ஸமாக்யாதம் காஷாயோதக முச்யதே.

இவ்வசனத்தின்படி, 1பொரசு, 2அத்தி, 3அரசு, 4இலுப்பை, 5இச்சில், 6பாதிரி, 7நாவல், 8ஆல் ரூ மா இம்மரவகைகளின் தோலான மரப்பட்டைகள் ஊரியஜலம் காஷாயோதகம் ஆகும்.

பாத்யோதகம். (பாத்யஜலம்)

உசீரம் சந்தனோபேதம் தூர்வா ஸித்தார்த்த ஸம்யுதம்.
சதுர் திரவ்ய ஸமாயுக்தம் பாத்ய மேத துதாஹ்ருதம்.

இதன்படி 1விளாமிச்சம்வேர், 2சந்தன அரவைசாந்து, 3அருகம்புல்முனைகள், 4வெண்கடுகு ஆகிய நான்கு பொருட்களுடன்கூடிய ஜலம் பாத்யோதகம் எனப்படுவதாகும்.

ஆசமனோதகம். (ஆசமனீயஜலம்)

ஏலால வங்க கர்பூர ஜம்பூ ஜாதீ பலம் முரம்.
ஷட்திரவிய ரஸ ஸம்யுக்தம் சிவஸ் யாச மனீயகம்.

1ஏலக்காய், 2கிராம்பு, 3பச்சகற்பூரம், 4நாவற்கனி(வற்றல்), 5ஜாதிக்காய், 6முரம் (பூலாங்கிழங்கு) ஆகிய நறுமணமுள்ள ஆறுபொருட்களுடன் (ஹேமபுஷ்பம், செண்பகமொட்டு) கூடிய ஜலம் ஆசமனீயதீர்த்தம் எனப்படுவதாகும்.

பலவகை நீராட்டலுக்கான ஊரல்தீர்த்த வகைகள் :

சிறப்புஅபிஷேகமாக செய்யத்தக்க 20விசேஷதீர்த்தவகைகளின் அபிஷேகதீர்த்த வகைமுறைகளை இனி உத்தரகாமிகாமத்தில் கூறப்பட்டுள்ளவாறு, கற்பிக்கும் தயாரிப்பு முறையுடன் காண்போம். அபிஷேகதீர்த்தகலசத்தில், இவற்றை உடனே அப்பொழுதேபோட்டு மந்திரித்தும் நீராட்டலாம். அல்லது இவற்றை முன்னறே தண்ணீரில் போட்டு, கலகத்தில் ஊறவைத்து இருவேளைகளில் பூசித்து, பிறகு எடுத்தும் அபிஷேகம் செய்யலாம். திரவிய ஜலவகைகளாவன,

காஷாயோதகம். (மரப்பட்டைகள் ஊரியநீர்) (ஊரல்நீர் வகைகள்)

சதுக் க்ஷீர குஜோத்பூத துவக்ஸாரஸ் ஸ்யாத் கஷாயக:
ஆம்ர ஜம்பூ தருத்த துவக் ஸாரோ வா பரி கீர்த்தித:.

பொருள் ஸ்ரீ பொதுவாக பாலுள்ள அத்தி முதலிய நால்வகை மரங்களின் பட்டைகள்ஊரியதும் (ஸாரமானது) மற்றும் மாமரப்பட்டை, நாவல்மரப்பட்டைகள் ஊரியதும் கஷாயோதகம் எனப்படுவதாகும்.

மார்ஜநோதகம். (அருகு முதலியவற்றுடன் சேர்ந்தநீர்)

தூர்வா தில குசாக்ரைஸ் து மார்ஜநம் துவபிதீயதே.

பொருள் ஸ்ரீ அருகம்புல்நுணி, எள்ளு, தருப்பைநுணி இவை 3ம்சேர்ந்தது மார்ஜநோதகம் ஆகும்.

ரத்னோதகம். (ரத்தினக்கற்களுடன் கலந்தநீர்)

மாணிக்கம் சேந்திரநீலம்ச முக்தா வைடூர்ய ரத்னகம்.
புஷ்பராகம் பிரவாளம் ச வஜ்ரம் ஸ்படிக கண்டகம்.
மரகதம் ச ரத்னாநி நவ ரத்நாதி பஞ்சகம்.
பஞ்சரத்ன மிதிஞேயம் ஆத்யாபாவே த்விதீயகம்.

பொருள் ஸ்ரீ 1மாணிக்கம், 2இந்திரநீலம், 3முத்து, 4வைடூர்யம், 5புஷ்பராகம், 6பவழம், 7வைரம், 8ஸ்படிகத்துண்டு, 9மரகதம் ஆகிய ரத்தனங்கள் ஒன்பதையுமோ அல்லது ஒன்பதும் கிடைக்காத பொழுதில் ஐவகையையோ, வைரத்தை ஒன்றையோ நீரில்கலந்து அபிஷேகித்தல் ரத்னோதகம் ஆகும்.

உலோஹோதகம். (உலோஹவகைகள் கலந்தநீர்)

சுவர்ணம் ரஜதம் தாம்ரம் ஆயஸம் திரபு ஸீஸகம்.
ஆரகூடம் தத: காம்ஸ்யம் யுக்தம் லோஹோதகம் தத:

பொருள் ஸ்ரீ 1தங்கம், 2வெள்ளி, 3தாமிரம், 4இரும்பு, 5(தரா)தகரம், 6ஈயம், 7பித்தளை, 8வெண்கலம் ஆகிய இவைகள் எட்டும் நீருடன் கலந்தது உலோஹோதகம் ஆகும்.

சுவர்ணோதகம்.

சுவர்ணத்தை மட்டும் சேர்ப்பது சுவர்ணோதகம் எனப்படுவதாகும். இது அபிஷேகத்தில் இடம் பெறுவதாகும்.

தாதூதகம். (கனிமதாதுவகைகள் கலந்தநீர்)

ஸௌராஷ்ட்ரம் அஞ்ஜநம் சியாமா ஹரிதாலம் மனச்சிலா.
கௌரிகம் ரோசநா சாந்தே தாதூதக மிதம் மதம் .

பொருள் ஸ்ரீ 1சௌராஷ்டிரம், 2அஞ்சனம், (கருமைநிறகல்), 3சியாமம், 4அரிதாரம், 5மநோசிலை, 6கைரிகம், (மலைக்கல்) 7ரோசநா எனும் ஏழுவகை கனிமதாதுக்களுடன் கலந்தநீர் தாதூதகம் எனப்படும்.

பீஜோதகம். (விதைகள் ஊரியநீர்)

சாலீ கோத்ரவ நீவார பிரியங்கு தில ஸர்ஷபா :.

யவ சியாம யுதாம்பஸ்து பீஜோதக மிதி ஸ்மிருதம்.

பொருள் ஸ்ரீ 1சம்பாநெல், 2வரகு, 3செந்நெல் (நீவாரம்), 4தினை, 5எள்ளு, 6கடுகு, 7சாமை, 8யவை இவை எட்டுவிதைவகைகளும் ஊரிநீர் பீஜோதகம் ஆகும்.

கந்தோதகம் .(நறுமணப்பொருள்களின் பொடிகலந்தநீர்)

நவநீதம் ச கற்பூரம் த்வக் ஏலா பத்ர ஸம்யுதம்.
சந்தனம், லகு குஷ்டம் ச வராலோ சீர முஸ்தகா: .
குங்குமம் ஹரிபேரம் ச கச்சோலம் ஜாதிரேவச.
ஏபிஸ்து சூர்ணிதைர் யுக்தம் கந்தோதக மிதிஸ்மிருதம்.

பொருள் ஸ்ரீ 1வெண்ணை, 2பச்சைகற்பூரம், 3லவங்கபட்டை (அகில்), 4ஏலக்காய், 5ஜாதிபத்திரி, 6சந்தனம், 7நாகப்பூ, 8கீழாநெல்லிசெடி, 9வராளம் (சிற்றேலம்), 10விளாமிச்சம்வேர், 11துங்கமுஸ்தம், 12குங்குமப்பூ, 13வெட்டிவேர், 14கோரோசணை, 15கச்சோலம், 17ஜாதிக்காய், 18சமுத்ரப்பச்சை இவைகளைப்பொடி செய்து கலந்தநீர் கந்தோதகம் என்பதாகும்.

மிருத்திகோதகம்.

(மண்வகை கலந்தநீர்) (மிருத்தோயம். / மிருத்திகை ஸ்ரீ மண்)

பர்வதே ச நதீதீரே வல்மீகே கர்கடாவடே.
விருஷசிருங்கேச சுக்ஷேத்ரே ஸமுத்ரே கஜதந்தகே.
அஷ்டபிஸ்ச ஸமாயுக்தம் மிருதம்ப: பரி கீர்த்திநம்

பொருள் ஸ்ரீ 1மலை, 2நதி, 3புற்று, 4நண்டுவளை, 5கடல் இவைகளின் மண்வகையுடன் 6காளை தாமே முட்டிஎடுத்த கொம்புமண், 7யானைதானே தந்தத்தால்எடுத்த கோட்டுமண், 8புண்ணிய-க்ஷேத்திரத்தின் மண் ஆகிய எட்டுமண்வகைகள் சிறிதளவு சேர்க்கப்பட்டநீர், மிருத்திகோதகம் ஆகும். (மேலும் தர்பையடிமண் முதலியனவுமாம்).

மார்ஜனோதகம்.
(தரைத்தாவரவகை கலந்தநீர்)

கோக்ஷுரா ஸஹதேவீ ச விஷ்ணுக்ராந்தா கிருதாஞ்ஜலீ.
சிரீஷேந்தீ வரம் ராத்திரிர் ஏபிர் மார்ஜ்ஜன முச்யதே.

பொருள் ஸ்ரீ 1நெருஞ்சில்இலை, 3ஸஹதேவி தேவியின்இலை, 3விஷ்ணு கிராந்தி இலை, 4ஆனை வணங்கிஇலை, 5காட்டுவாகை

இலை, 6கருநெய்தல், 7மஞ்சள், இவை ஏழும் கலந்தநீர் மார்ஜனோதகம் எனப்படுவதாகும்.

பரிமாணோதகம்.

(பரிமார்ஜநோதகம்) (சிறப்புமிகு வளர்தாவரவகை ஊரல்நீர்)

> தூர்வாங்குரம்ச பத்மம்ச குசாக்ரம் கௌரஸர்ஷபம்.
> பத்ரா கிருதாஞ்ஜலீ யுக்தம்பரிமாணம் ததுச்யதே.

பொருள் ஸ்ரீ 1அருகுமுனை, 2தானியமுளைத்தளிர், 3தாமரை, 4தர்பைநுணிகள், 5வெண்கடுகு, 6பத்ரா (பீஸா/பீளை) பூனைப்பூண்டு), 7யானைவணங்கிஇலை இவைசேர்ந்தநீர் பரிமாணோதகம்.

பத்ரோதகம். (பூஜாங்க இலைவகைகள் கலந்தநீர்)

> துளசீ பில்வ பத்ரம் ச தமாலம் ச தபஸ்விநீ.
> அபாமார்க ஸமாயுக்தம் பத்ரதோய மிஹேரிதம்.

பொருள் ஸ்ரீ 1துளசி, 3பில்வம், 3சாலமரஇலை, 5வன்னிஇலை (ஜடாமஞ்சீ), 5நாயுருவி இவை சேர்ந்தது பத்ரோதகம் எனப்படுவதாகும்.

புஷ்போதகம். (புஷ்பதோயம்) (மலர்வகை சேர்ந்தநீர்)

> பத்மம் ரக்தோத்பலம் பச்சாத் பாடலீ சம்பகாகிருத:
> புந்நாக குரவ நாரங்க நந்தியா வர்த்தம் ச மல்லிகா.
> சுவேதார்க்க வகுலைர் யுக்தம் பஷ்பதோய மிஹேரிதம்.

பொருள் ஸ்ரீ 1தாமரைப்பூ, 2செங்கழுநீர்பூ, 3பாதிரிப்பூ, 4சண்பகப்பூ, 5புன்னைப்பூ, 6குருக்கத்திப்பூ, 7மருதாணிப்பூ,8நாரத்தம்பூ, 9நந்தியாவட்டம்பூ, 10மல்லிகைப்பூ, 11வெள்ளெருக்கம்பூ, 12மகிழம்பூ 13நாகப்பூ இவைகளுடன்கலந்தநீர் (புஷ்போதகம்) புஷ்பதோயம் என்று இங்கு கூறப்பட்டது.

ஆட்யோதகம் / மான்யோதகம். (பெருந்தகைமிக்க புனிதநீர்)

> குஷ்டம் குடந்நடம் லோஹம் சந்தனம் குங்குமம் ததா.
> கற்பூரோ உசீர ஸம்யுக்தம் ஆட்யோதக மிஹேரிதம்.

பொருள் ஸ்ரீ 1கீழாநெல்லி (கோஷ்டம்), 2பெருங்கோரைக்கிழங்கு, 3அகில் (லோஹம்), 4சந்தனம், 5குங்குமப்பூ, 6பச்சகற்பூரம், 7விளாமிச்சம்வேர் இவற்றோடு சேர்ந்தநீர்த்தம் ஆட்யோதகம் என்பதாம். இதுவே மான்யோதகம் என்றும் கூறப்படுவதாகும்.

அஸ்திரோதகம். (பொன்னால்ஆன சிறுஆயுதங்கள் ஊரியநீர்)

சூலம் கபாலம் ஹரிணீ பிநாகப் பரசுஸ் ததா.
பாசாக்ஷமாலா ஹைமாம்ச தைரஸ்த்திரோ தகம்பவேத்.

பொருள் ஸ்ரீ பொன்னால் (விரல்அளவில்) செய்யப்பட்ட 1சூலம், 2கபாலம், 3மான், 4வில், 5கோடாரி, 6பாசம், 7அக்ஷமாலை ஆகிய பிரதிமைகளுடன் கலந்தநீர் அஸ்திரோதகம் எனப்படுவதாகும். (மேலும், வஜ்ராயுதம், கத்தி, மணி, கேடயம், அங்குசம் முதலியனவற்றுள் கலந்த எட்டும் ஆகும்).

பலோதகம். (பழவகை ஊரியஜலம்)

பநஸோ நாரிகேளம் ச மாதுலிங்க த்வயம் தத:
நாரங்க த்வய ரம்பாத்யைர் உத்தமஸ்மின் பலோதகம்.

பொருள் ஸ்ரீ பலாப்பழம், தேங்காய்கீற்று, இருவகை மாதுளம்பழம் (வெண்மாதுளைமுத்து ரூ செம்மாதுளை), இருவகை நாரங்கபழம் (சாத்துக்குடி & கமலாஆரஞ்சு), வாழைப்பழம், மாம்பழம் முதலியவை பிறபழவகைகளோடும் ஊரினஜலம் இங்கு பலோதகம் என்று கூறியதாகும். (எலுமிச்சம்பழம், பொம்பளிமாசுப்பழம் முதலியனவுமாகும்).

காஷாயோதகம். (மரவகைகளின் பட்டை, தோல் ஊரியநீர்)

பலாசோ தும்பராச் வத்த மாயூரப் பிலக்ஷ பாடலீ.
ஜம்பூ த்வக்பிஸ் ஸமாயுக்தம் கஷாயோதக மீரிதம்.

பொருள் ஸ்ரீ பொரசம்பட்டை, அத்திப்பட்டை, அரசம்பட்டை, நாயுருவிசெடி, இச்சிமரப்பட்டை, (ஆலம்பட்டை), பாதிரிமரப்பட்டை, நாவல்மரப்பட்டை ஆகிய மரப்பட்டைகளோடு கலந்த ஜலம் காஷ ாயோதகம் ஆகும்.

காந்தோதகம்.
(காந்ததோயம், அச்மதோயம்) (ஈர்ப்புக்கல் ஊரியஜலம்)

சூர்யகாந்தஸ் துவயக்காந்தோ ப்ராமரச் சந்த்ரகாந்தகம்.
நிகுந்தப் பஞ்சபிர் யுக்தம் காந்தோதக மிதிஸ்மிருதம்.

பொருள் ஸ்ரீ 1சூரியகாந்தக்கல், 2இரும்புஈர்க்கும் அயக்காந்தம், 3சந்திரகாந்தக்கல், 4பிராமகம் (பொற்காந்தம்), (சுற்றுவது) 5நிகுந்தம், (ஊசிகாந்தம்), ஆனைக்காந்தம் ஆகிய ஐந்தோடும் சேர்ந்தநீர் காந்தோதகம் எனப்படும். (தானே சென்று அடியில்

சேரும் தூய தாதுக்கல்வகை).

மூலோதகம். (மூலதோயம்) (வேர்வகைகள் ஊரியஜலம்)

உசீரோ ஹரிபேரச்ச பீவரி: புஷ்கரம் ததா.
ஸ்ரீகண்டச் சேதி பஞ்சேபிர் யுக்தம் மூலோதகம் ஸ்மிருதம்.

பொருள் ஸ்ரீ 1விளாமிச்சம்வேர், 2வெட்டிவேர் (நொச்சிவேர்), 3தாமரைகிழங்கு 5சந்தனவேர் (வில்வவேர்), 5நாயுருவிவேர் இவை ஐந்தோடும் கூடிய ஜலம் மூலோதகம் ஆகும்.

வல்கலோதகம்.
(சாந்திதோயம்) (மரவுரிப்பட்டை, இறகு சேர்ந்தஜலம்)

மயூரச் சிகி பூர்ஜ த்வக் ரோசநா பிருங்கராஜகம்.
கிருதாஞ்லிச்ச பஞ்சேபிர் யுக்தஸ்யாத் வல்கலோதகம்.

பொருள் ஸ்ரீ 1மயில்கொன்றைமரப்பட்டை அல்லது நாயுருவிப்பட்டை, 2பூவரசம்பட்டை (பூர்ஜமரப்பட்டை), 3கோரோசனை, 4கையாந்தகரை, 5ஆனைவணங்கி இவை ஐந்தோடும் கூடியஜலம் வல்கலோதகம் எனப்படுவதாகும்.

துவசோதகம் . (தோலூரியஜலம்)

லக்ஷ்மீ பத்ரா குசா தாந்தோ நீவாரம் சம்பகம் புந:
விஹிதா கோக்ஷூராத் யஷ்டௌ லோஹ துவக்வாரி நிர்மிதம்.

பொருள் ஸ்ரீ 1வில்வம், 2பத்ரா (பீளைப்பூண்டு), 3தருப்பை, 4மருக்கொழுந்து, 5செந்நெல்தழை, 6சம்பகம், 7நெருஞ்சில், 8வெள்ளைஅத்தி இவைகள் எட்டும்சேர்ந்தநீர் த்வக்வாரி என்பதாய் தயாரித்ததாகும்.

புஷ்கரோதகம்.

வெள்ளைலொத்தி மற்றும் செவ்வலொத்திகளுடன் தாமரைக்கிழங்கு, அல்லிக்கிழங்கு, கிராம்பு முதலியன சேர்ந்தஜலம் புஷ்கரோதகம் எனப்படுவதாகும்.

அர்க்கியோதகம்.

தேன்மெழுகு, பெருந்தேன்மெழுகு, குறிஞ்சித்தேன்மெழுகு இம்மூன்றும், கிருஷ்ணாப்ரம், வஜ்ஜிராப்ரம், லோஹாப்ரம் எனும் மூவகைஅப்ரமும், வானக்கெந்தகம், நெல்லிக்காய்கந்தகம், சுரைக்காய்கந்தகம் ஆகிய மூவகைகந்தகங்களுடனும் கூடியஜலம்

புஜ்யார்க்யோதகம் எனப்படுவதாகக் கூறப்படுகிறது

சிருங்கோதகம். (சிருங்கதோயம்) (கொம்புவகை ஊரல்நீர்)

மான்கொம்புமுனை, காளைமாட்டுக்கொம்புமுனை, பசுமாட்டுக் கொம்புமுனை, யானைதந்த முனை, காண்டாமிருகக்கொம்புமுனை ஆகிய இந்த ஐவகைக்கொம்புகளோடு ஊரியதீர்த்தம் சிருங்கோதகம் எனப்படும்.

மேற்கூறியவற்றுள் வகைமுழுவதும் கிடைக்காதகாலங்களில் ரத்தினவகைகளுக்கு வைரம் ஒன்றையும், உலோகவகைகளுக்கு தங்கத்தையும், விதைவகைகளுக்கு யவை ஒன்றையும், தாதுவகைகளுக்கு அரிதாரத்தையும், மூலிகைவகைகளுக்கு சீதேவியார் எனும் சகதேவீ மூலிகையும், பழவகைகளுக்கு வாழைப்பழமும், இலைவகைகளுக்கு வில்வமும், பூவகைகளுக்கு கருநெய்தல் பூவையும், நறுமணவகைக்கு சந்தனத்தையும், மண்வகைக்கு தர்பையடிமண்ணையும், மரபட்டைவகைகளுக்கு அரசம்பட்டையையும், வேர்வகைகளுக்கு கோரைக்கிழங்கு எனும் குடந்நடத்தையும், சர்கராதிகளுக்கு கற்கண்டையும், பூ, பழம் இவை இல்லாவிடில் அவ்வகையின் இலையையும் ஏற்று சேகரித்து அந்த தீர்த்தவகையைத் தயாரிக்கவும் என்று ஆகமங்கள் மற்றும் வழிமுறையினைக் கூறியுள்ளது.

அபிஷேகத்திரவிய வகைகளின் வரிசைவிவரம் :

01.	கந்ததைலம்	சந்தனதைலம் அல்லது கரிசலாங்கன்னி இலை முதலான- வற்றால் தயாரித்த மணமுள்ள சுகந்தகூந்தல்தைலம்.
02.	திலதைலம்	எள்ளின் நல்லஎண்ணை (கையால் பிழிந்துஎடுத்தது).
03.	பிஷ்டம் அல்லது யவசூர்ணம்	நெல்பொடி, பச்சஅரிசிமாவு (சூரணம் என்றால் பொடி),
04.	ஆமலக சூர்ணம்	நெல்லிக்காய்வற்றல்பொடி (பொடிசெய்தது).
05.	ரஜனி சூர்ணம், ஹரித்ராசூர்ணம்	மஞ்சள்பொடி, குளிமஞ்சள்தூள்.
06.	மாஷ சூர்ணம்	உளுந்துமாவு. (தானியத்தை பொடித்தது).

07.	முத்கபிஷ்டம்	பயித்தமாவு. (பிஷ்டம் என்றால் மாவு).
08.	தானியசூர்ணாதிகம	கடலைமாவு முதலிய பலவகை தானியபொடிகள்.
09.	ஜலதிரவிய சூர்ணம்	அபிஷேகப் பொடி, திரவியப் பட்டை முதலியவற்றின் மூலிகைத்திரவியப்பொடி.
10.	பஞ்சகவ்யம்	பசுவின்பால் முதலிய ஐங்கலக்கலவை. (பால், தயிர், நெய், கோஜலம் (நீர்) கோமயம் (சாணம்) ஆகியவை ஐந்துமட்டும்.
11.	ரஸபஞ்சாமிருதம்	1பால், 2தயிர், 3நெய், 4தேன், 5கரும்புசாறு, இவைஐந்தின்கலவை.
12.	பலபஞ்சாமிருதம்	மா, பலா, வாழை முக்கனியுடன் பழவகைகள், தேன், சர்க்கரை, நெய்கலவை. மாதுளை, தேங்காய் துருவல்.
13.	சர்க்கரோதகம்	ஸ்ரீ கரும்புசர்க்கரைக் கரைசல் ஜலம். (நாட்டுச்சர்க்கரைத்தூள்)
14.	கவ்யாஜ்யம்	பசுவின் உருக்கிய புதுநெய்.
15.	கோஷ்ணோதகம்	இளஞ்சூடுஉள்ள புதியவெந்நீர் (உஷ்ணோதகம் ஸ்ரீ சுடுநீர்).
16.	ஸிதகோ ததி	வெண்நிறப்பபசுவின்தயிர். (புதிய தயிர்)
17.	கோக்ஷீரம்,துக்தம், பய :,	பசும்பால். (கறந்த புதுப்பால் மட்டும்)
18.	மது / க்ஷௌத்ரம்	தேன்.(கலப்படமற்றதும்,சுவைக்கப்படாததுமான தேன்)
19.	இக்ஷுஸாரம் / இக்ஷுரஸம்	வெள்ளை நிறக்கரும்பின் சாரு, கரும்பு பிழிந்தரஸம்.
20.	கதலீபலம் / ரம்பாபலாம்	வாழைப்பழம். முழுப்பழம். (வாழைவகைகள் மட்டும் சர்க்கரை கலந்தது)
21.	சூதபலம் / ஆம்ரபலம்	மாம்பழம். இனிப்பான உயர்தர மாங்கனிகள் (மாம்பழவகை)
22.	பனஸபலம்	பலாபழம். (ஒருமுழுபழத்தைஉரித்த புதியபழச்சுளைகள்)
23.	மாதுலுங்கம் / டாடிமீபலம் / பலபூரம்	மாதுளம்பழம். (வெண்முத்து ரூ செம்முத்துகனி).

24.	லிகுசபலம் / ஜம்பீரபலம், ஹு:	எலுமிச்சம்பழம். சாருமிக்க சிறுஎலுமிச்சை.
25.	நாரங்கபலத்வயம் (இருவகை)	குளுஞ்சிநாரத்தை ரூ கடாரம். (சாத்துகுடி ரூ ஆரஞ்சு, கமலா)
26.	பலோதகம் / பலரஸம்	பழவகைகளின் திராக்ஷாதிகளின் பழச்சாறு.
27.	நாளிகேரோதகம்	தேங்காய்ஜலம் / இளநீர் வகைகள். புதியவை மட்டில்.
28.	பரிமளதிரவ்ய சூர்ணோதகம்	ஏலாதிசுகந்ததிரவியங்களின் பொடிகள் ஊறியநீர்.
29.	ஹிமதோயம் / ஹிமாம்பு	பன்னீர், ரோஜாப்பூ வாசனைநீர். (ரோஸ்வாட்டர்).
30.	சந்தனம் (அசல்சந்தனம்)	அரைத்ததானசாந்து,, அசல்சந்தனக்குழம்பு.
31.	ஹிரண்யம் / சுவர்ணோதகம்	தங்கம் ஊறியஜலம். (பசும்பொன் கலந்தநீர்)
32.	அன்னம் / ஓதனம் / சால்யன்னம்	சுத்தஅன்னம் (பச்ச அரிசிச்சோறு, புதிய சூடானசாதம்).
33.	கும்போதகம் / கலசம்	பூசித்த ஸ்நபனகலசாபிஷேகம்.
34.	சீதோதகம் / சீதவாரி	குளிர்ந்த ஜலஅபிஷேகம். (ஐஸ்வாட்டர்).
35.	பில்வோதகம் / பில்வரஸம்	வில்வஇலையின் ஊரல் நீர்.
36.	விபூதி / பஸ்மஸ்நாநம்	பசுஞ்சாணத்துதிருநீற்றால் நீராட்டல். (புனுகு, ஜவ்வாது, அரகஜா முதலிய நறுமணம்கலந்தவிபூதி).
37.	பத்ரோதகம்	பஞ்சபில்வம் அல்லது அலரி, மருது, துளசி, வன்னி ஊறியநீர்.
38.	புஷ்போதகம்	தாமரை முதலிய புஷ்பங்கள் ஊறியநீர்.
39.	சங்கோதகம்	சங்கில் நிறைத்துப்பூசித்த தீர்த்தம். (சங்குநிரைத்தீர்த்தம்)
40.	கோசிருங்காக்ர தோயம்	சுக்கொம்பின்தீர்த்தம் (கொம்பில் நிறைத்தநீர்)
41.	தாராதம்பு / தாராஜலம்	ஸஹஸ்ரதாரா அபிஷேகம் (1000துளை). (சததாரா ஸ்ரீ 100துளை)

42.	அர்க்கியோதகம்	தர்பைநுணி, வெண்கடுகு, யவை, வெள்ளைஎள்ளு, அரிசி பூ, நீர், பால் ஆகிய 8ம் கலந்தது. (பரமப்புனிதநீர்)
43.	சிவோதகம் / சிவாம்பு	ஆலம்பழம், லவங்கம், விளாமிச்சம்வேர், பச்சகற்பூரம் கலந்த சந்தனநீரில், சிவமந்திர பிராஸாதபஞ்சாக்ஷரம் ஜபித்தது.
44.	பாத்யோதகம்	சந்தனம், வெட்டிவேர், அருகு, அக்ஷதை, விளாமிச்சம்வேர் கலந்தது.
45.	ஆசமனோதகம்	பச்சகற்பூரம், கோஷ்டம், கிள்ளுபத்ரம், திரிபலா முதலியவை சேர்ந்தது.
46.	மந்த்ரோதகம்	விசேஷமந்திரங்களால் மந்திரிக்கப்பட்ட ஜலம்.
47.	மார்ஜனோதகம்	ஸ்ரீ மஞ்சள், பால், விஷ்ணுகிரந்தி, ஸஹதேவீ, குசாக்ரம், மல்லிகை, வெண்கடுகு, நீலோத்பலம், சிரீஷம், சதபத்ரீ, சூர்யவர்தினீ கலந்த ஜலம்.
48.	சுகந்தோதகம்	சந்தனம், கோஷ்டம், கோரைக்கிழங்கு, வெட்டிவேர், ஜாதிபலம், ஏலம் கலந்த நீர்.
49.	கலசோதகம்	சந்தனம், புஷ்பம், அக்ஷதை, தர்பைநுணி, அருகுநுணி கலந்தநீர்
50.	கடோதகம்	துணியில் வடிகட்டிய, பெருங்குடத்தில் நிறைத்த தூயநீர்.
51.	கரகோதகம்	கமண்டல தீர்த்தம், கிண்டி தீர்த்தம், கலா மந்த்ரங்கள் பூசித்தஜலம்.
52.	யவோதகம்	ஐவகை யவைகளான, 1யவை, 2நீவாரம், 3தினை, 4மூங்கிலரசி, 5சம்பாநெல் ஆகியவை ஐந்தும் கலந்த ஊரல்நீர்.
53.	பீஜோதகம்	நவதானியவிதைகள், பலவகை அரியதானிய விதைகள் ஊரியது.
54.	ரத்னோதகம்	ஒன்பதுவகை அல்லது ஐவகையான அசல்ரத்தினங்கள் ஊரியநீர்.
55.	லோஹோதகம்	ஒன்பதுவகை. ஐந்துவகை அசல்உலோகக்காசுகள் ஊரியநீர்.
56.	குசோதகம்	மூவகைதர்பைகளில், துண்டித்த நுனிகள் மட்டும் ஊரியது.
57.	புண்யோதகம்	சந்தனம், குஷ்டம், குங்குமப்பூ, விளாமிச்சம்வேர், புனுகு சேர்ந்தநீர்.

58.	க்ஷேத்ரோதகம்	காசி, சேது முதலிய சிவக்ஷேத்ரமாஹாத்மியதீர்த்தம்.
59.	மிருத்திகோதகம்	மலை, கடல், நதீ, புற்று, நண்டுவளை, துளசியின்அடி, வயல்மண், பூந்தோட்டமண், காளைக்கொம்புமண், யானையின் தந்தமண்
60.	காஷாயோதகம்	நாவல், மா, அரசு, ஆல், அத்தி ஆகிய ஐவகை மரப்பட்டை ஊரியது.
61.	மூலோதகம்	விளாமிச்சம்வேர், வெட்டிவேர், வில்வவேர், தாமரைகிழங்கு, தண்ணீர்விட்டான்கிழங்கு, ஆகிய ஐந்தும் சேர்ந்தநீர்.
62.	மான்யோதகம்	குஷ்டம், குடந்நடம், லோஹம், பச்சகற்பூரம், குங்குமப்பூ, சந்தனம் சேர்ந்தநீர்.
63.	சிருங்கோதகம்	மான்கொம்பு, யானைதந்தம், காண்டாமிருககொம்புமுனைகள ஊரியநீர்.
64.	கந்தோதகம்	சூரியகாந்தம், சந்திரகாந்தம், அயக்காந்தம் இவை கூடியநீர்.
65.	பல்லவோதகம்	மாந்தளிர், அரசந்தளிர், ஆல், நாவல், அத்தி, மாதுளம், கிளுவை இலைத்தளிர்கள் ஊரியஜலம்.
66.	தாத்வோதகம்	அரிதாரம், சௌராஷ்டிரம் நற்காவி லிங்கம், அஞ்சனம் முதலியமண்ணின்கனிமவகையான தாதுவகைக்கட்டிகள் ஊரியநீர்)
67.	பலோதகம்	மா, பலா, வாழை, கொய்யா, மாதுளை, நெல்லி, பில்வம், தேங்காய். முதலிய பழவகைகளின் துண்டுகள் ஊரியகலந்தஜலம்.
68.	அஸ்திரோதகம்	பொன்னால் விரல்அளவில் செய்யப்பட்ட தெய்வஆயுதங்கள். மழு, சூலம்கட்கம், கபாலம், பாசம் போன்ற ஆயுதசின்னங்கள் ஊரியஜலம்.
69.	ஒஷதீதோயம்	ஸஹதேவீ, துளசி, ரிக்தி, அருகு, பில்வம், முதலிய அரியவகை மூலிகைப்பச்சிலைகள் சேர்ந்த நீர்.
70.	சௌக்யோதகம்	திரிகடுகம், சீரகம், பச்சிலைகள் சேர்த்துக்காய்ச்சிய புதியசுடுநீர்.

இவ்விதம் இங்கு பலவகையில் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளவைகளையும் சிறப்பாகக்கொள்க.

அபிஷேககால ஜபவிதிமுறை :

வியோமவியாபி ஸமுச்சார்ய ஏகசித்த: பிரயத்நத:
தசாக்ஷரம் ஜபித்வாது பஞ்சவிம்சதி ஸங்கியயா.
ஏவம் கிருத்வா விசேஷேண பிம்பசுத்திம் ச காரயேத்.

மேற்கண்ட வசனத்தால் வியோமவியாபினே எனத்துவங்கும் 81பதமந்திரங்களை ஒருமனதுடன் கூறிக் கொண்டும், இருபத்திஐந்துமுறை தசாக்ஷரத்தை (பத்துஎழுத்து மந்திரத்தை) ஜபித்தும் பிம்பசுத்திக்கான நீராட்டுதலைச்செய்யவேண்டும் என்கிறது சுப்ரபேதாகமம்.

திருமஞ்சனகால வேதாதி பாராயணம். (துதிஓதும் முறை)

ஸ்நாநகாலத்தில் ரிக்வேதம் முதலிய நால்வகை வேதங்களைஓதிபாராயணம் செய்விக்க வேண்டும். பக்தர்கள், சேவார்த்திகள், வித்வான்கள் யாவரும் அவ்வமயம் பக்தாதியர், அருளாளர்கள் செய்வித்த தோத்திரங்களையும், வேதாகம புராணபாகவத, மாஹாத்மிய, பாஷியங்கள், (சமயப்பேருரை) சொற்பொழிவு மற்றும் உபநியாஸத்தையும் இறையின் மகிமை-வர்ணனையையும் செய்விக்கவேண்டுமென்று சூக்ஷ்மாகமம் கூறுகிறது.

இதற்கான சான்று,

ஸ்நாநகாலே, நிவேத்யச தூபதீபே தத்நதகே.
ருகாத்யத்யயநம் குர்யாத் த்ரிகாலே சைவ புத்திமான்.

(சூக்ஷ்மாகமம்)

இவ்வசனத்தால் அபிஷேக காலத்திலும், நைவேத்யம் நடைபெறும் காலத்திலும், தூபதீபாதிகள் கொடுத்து முடித்திடும் காலத்திலும், ரிக்வேதம் முதலிய வேதங்களை ஓதுதல்முறை. இவ்வாறே பூசையின்போது பக்தாதிஸ்தோத்திரங்களையும் குறிப்பிட்டகாலங்களான, 1) அபிஷேககாலம், 2) நைவேத்யகாலம், 3) தூபதீபகாலம், 4) பூஜையின் முடிவிலும் ஆக நான்குகாலங்களிலும் தமிழ்த்திருமுறை, தேவாரம் முதலிய பக்ததோத்திரங்கங்களைப் பண்ணிசையுடன் ஓதுதல் முறையாகும். பக்தர்கள் தோத்திரம் ஓதுதற்கான காலச்சான்று,

ஸ்நாநே நிவேத்யே தூபே ச பூஜாந்தே ச விசேஷத:
பக்தாதி ஸ்தோத்ர பாஷ்யாத்யைச் சதுஷ்காலே ஸமாசரேத்.
பிம்பசுத்தி ஸ்நபனவிதி .

(புனிதநீராட்டல்)

லிங்கபீடங்களை சுத்திசெய்து, பஞ்சகவ்யத்தால் முழுக்காட்டிய பின்பு, எட்டுமண்வகை கலந்த நீரினாலும், ஊரிய மரப்பட்டைகளின் காஷாய ஜலத்தினாலும், ஐவகைமரஇலைத்தளிர்கள் கலந்த பல்லவ நீரினாலும், பஞ்சபில்வத்துடன் ஊரியநீராலும், சாந்திகும்பங்களாலும் தனித்தனியே பூசித்த கலசத்தால் பலவாறாக நீராட்டுதல்முறை என்பதைக்கூறும் சூக்ஷ்மாகமச்சான்று,

பஞ்சகவ்யேந ஸம்ஸ்நாப்ய பீடலிங்காந்தரம் க்ரமாத்.
அஷ்டமிருத் ஜலிலம்சைவ காஷாயைஸ் சாந்திகும்பகை:
பஞ்ச பல்லவ பில்வைஸ்ச ப்ரத்யேக மபிஷேசயேத்.

தைலாப்யங்கவிதி. (எண்ணைக்காப்பு செய்வித்தல்)

ஸ்நாநத்திற்கான அரியபச்சிலைமூலிகைகள், சந்தனம் முதலிய நறுமணப்பொருள்களால் ஆயுர்வேதமுறையில் தயாரிக்கப்பட்ட சுகந்ததைலம், சந்தனாதிதைலம் முதலியன உத்தமமாகும், எள்ளினுடைய தைலம் மத்யமம் என்கிறது ஆகமம். இவற்றைக்கூறும் சான்று,

தைலாப்யங்கம் து தேவஸ்ய குர்யாத் தீமான்விசேஷத:

உத்தமம் கந்ததைலம் ஸ்யாத் திலதைலந்து மத்யமம்.

கந்தலேபனவிதி. (சந்தனப்பூச்சுமுறை)

அபிஷேகமுடிவில் மெல்லியபருத்தித்துணியால் துடைத்தலாகிற திருஒத்தாடையினால் ஸம்மார்ஜனத்தைச்செய்து, பிறகு ஷட்கந்தஸ மாலேபனம் என்கிறதை ஆறுசுகந்தபரிமளத்-திரவியங்களை ஒன்றுசேர்த்துக்குழைத்து, அச்சந்தனத்தால் லிங்கம், பீடம், சிலை இவற்றை முழுவதும் பூசிவிடவேண்டும். அதாவது நறுமணஅத்தர், புணுகு, மலர்சென்ட் முதலானவற்றால் பூசியபின்பு புதியதான அல்லது நீரில் துவைத்து, உலர்ந்த முந்தயதானதூயஆடையை பிறகு உடுத்திடவேண்டும்.
சந்தனாகரு கற்பூர குங்குமோசீர ரோசநா.

கந்ததிரவ்ய யுதம் கந்தம் லேபயேத் லிங்கபீடயோ :

(ஸஹஸ்ராகமம்)

இதன்படி இந்த சந்தனக்குழம்பானது 1சந்தனம், 2அகில், 3பச்சகற்பூரம், 4குங்குமப்பூ, 5விளாமிச்சம்வேர், 6கோரோசனை ஆகிய ஆறுபொருள்களையும் நன்கு அரைத்துப்பூசிவிடுதல் கந்தலேபனம் எனப்படும். ஆறுபொருட்களின் கலவையானதால் இது ஷட்கந்தம் எனப்படுகிறது.

திரையிடும் காலங்கள் & திரையிடுதலின் தேவை. (படாவரோஹண காலம்)

ஆலயபூசையின்பொழுது, அபிஷேககாலம், நைவேத்யகாலம், உத்ஸவகாலம், தூபமிடும் காலம் ஆகிய நான்குவேளைகளில் சன்னதியில் மறைக்கும் திரையை இறக்கிவிட்டு மறைத்திட வேண்டும் என்று சூக்ஷ்மாகமம் கூறியுள்ளது. இதற்கான சைவஆகமச்சான்று,

ஸ்நாநகாலே நிவேத்யே ச சோத்ஸவே தூபகாலகே.
படாவரோஹம் கர்த்தவ்யம் சதுஷ்காலே ஸமாசரேத்.

(சூக்ஷ்மாகமம்)

அபிஷேககாலம், நைவேத்தியகாலம், வஸ்திரம், சந்தனம், புஷ்பம் சாத்தி அலங்காரம் செய்யும் காலம் முதலியன பூஜாகாலம் எனப்படும். இந்தகாலங்களில் இறைவனை பாபிகள், ரோகிகள் வித்யாவிக்ரயம் செய்பவர், கிரந்தவிக்ரயம் செய்பவர்கள், குஷ்டம் முதலிய ரோகமுடையவர்கள் தரிசித்தால் பூஜைபயனற்றதாக ஆகிவிடும். ஆதலால் மேற்கூறிய முக்கியமான காலங்களில் உத்தமாக அவசியமாக திரையிடப்படவேண்டும் என்கிறது ஆகமம்.

பிரச்சந்நபடகாலே நகர்த்தவ்யம் லிங்கதர்சனம்.
பிரமாதாத் தரிசனம் கிருத்வா சாக்ஷயம் நரகம் விரஜேத்.

(வீராகமம்)

இவ்விதமாக வீராகமமானது திரைபோட்டிருக்கும் காலத்தில் தரிசனம் செய்யக்கூடாது, அவ்வாறு தரிசித்தால் குறைவற்ற நரகம் கிடைக்கும் என்கிறது.

ஆலயபரார்த்த பூஜையில் பஞ்சகவ்ய அளவு முறை :

பசுவின் பஞ்சகவ்யங்களையும் முறையே, 1படி நெய், 1 படி தயிர், 1படி பால், கோயம், கோஜலம், தர்பைஜலம் இவை மூன்றும் ஒருபலம் என்ற அளவில் வைத்து பூசித்துசேர்த்து, ஆலயபூஜையில் அபிஷே கித்திடுமாறு வாதுளாகமம் கூறுகிறது.

ப்ரஸ்தபாதம் கிருதம் புரோக்தம் த்விபாதம் புரோச்யதே ததி:
த்ரிபாதம் க்ஷீர மித்யுக்தம் சதுர்த்தம் கோமயோதகம்.
குசாம்பு பலமாத்ரம் ஸ்யாத் பூர்வோக்தவிதி ஸம்மதம்.

(வாதுளாகமம்)

மேலும் சூக்ஷ்மாகமத்தில் பஞ்சகவ்யத்திற்கு உத்தமாதிஅளவுகள் முறையே கூறப்படுகிறது, அவை 4படி பால், 3படி தயிர், 1படி நெய், 1படி கோமூத்ரம், 8பலம் கோமயம், மஞ்சள்பொடி, அரிசிமாவு, நெல்லிப்பொடி, தர்பைஜலம் இவைகள் 8பலம் அளவு என்று கூறப்படுகிறது.

பஞ்சகவ்யவிதிம் கிருத்வா புரோக்ஷயேத் சர்வசுத்திகிருத்.
பிரஸ்தம் சதுஷ்டயம் க்ஷீரம் த்ரிபிரஸ்தம் ததி ருச்யதே.
பிரஸ்தம் து கோகிருதம் சைவ பிரஸ்தார்தம் சைவ கோஜலம்.
கோமயம் ரஜநீ பிஷ்டம் பலம் சாஷ்ட ஸமம் க்ரமாத்.
குசாமலக மேவம் ஸ்யாத் உத்தமாதி ப்ரகீர்த்திதா.

(சூக்ஷ்மாகமம்)

இதனை மந்திரசாஸ்திரமானது, தன்விருப்பஅளவுப்படி முதலில் கோமூத்ரத்தைஏற்று, இதில் பாதி கோமயத்தையும், இதில் ஏழுமடங்குஅளவில் பாலையும், மூன்றுமடங்கு அளவில் தயிரையும், கோமூத்ரஅளவிலேயே நெய்யையும் சேர்த்திடுமாறு விதித்துள்ளது. இந்தஅளவுமுறை வழக்கத்தில் அதிகமாகஉள்ளது. இதற்கான சான்று,

கோமூத்ரம் நிஜவாஞ்சயா பரிமிதம் மூத்ரார்தகம் கோமயம்.
க்ஷீரம் ஸப்தகுணம் ததி த்ரிகுணிதம் கோமூத்ரமாத்ரம் க்ருதம்.

(மந்திரசாஸ்திரம்)

பஞ்சகவ்யங்களை கிரஹித்திடும் பசுக்களின் நிறமும் கூறப்படுகிறது. கருப்பு, வெள்ளை, சிகப்பு, புகைநிறம், கபிலை ஆகியவற்றிலிருந்து நெய் முதலானவற்றை எடுத்து பூசித்தல் மகாபாதக தோஷத்தை நீக்கும் எனப்படுகிறது. இதனைத்தெரிவிக்கும் சான்று,

கிருஷ்ணம் சுவேதம் ததா ரக்தம் தூம்ரம்ச கபிலாகிருதா :
கிருதாதீன் கிராஹயேத் சைவ மஹாபாதக நாசனம்.

மஹாஅபிஷேகவிதி.
(பெருமளவுப் பொருட்களால் நீராட்டும்முறை)

சிவலிங்கத்திற்குசிறப்புப்பொருட்களைபெரியஅளவில்கொண்டு செய்யத்தக்கதாக உத்தர-காரணாகமத்தில் மஹாபிஷேகம் என்ற பெயரில் சிறப்புதிருமஞ்சனமுறை கூறப்பட்டுஉள்ளது.

இதன்படி சிறப்புவிதியாக அபிஷேகம்முதலாக, பூஜைவரையில் மூலமந்திரத்தை உச்சரித்துக் கொண்டு சிந்தித்தபடியே இதனைச்செய்திடவேண்டும். அதன்படி பொருள்களையும், அளவையும் இனிஇங்கு காண்போம். அளவுமுறை முன்னர் விளக்கப்பட்டுஉள்ளது. அதன்படி சந்தனதைலம், ஆடகஅளவிலும், எலுமிச்சைபழரஸம் அதில்பாதி அரைஆடகஅளவும், உளுந்துமாவு முதலிய தானியபொடிவகைகள் அதில்பாதியான கால்ஆடகஅளவும், அதில்பாதி புளியம்பழரசமும், ஒரு பிரஸ்தம்அளவு மஞ்சள்பொடியை லிங்கம், பீடம் இவற்றில் பூசியும், சுத்திசெய்து, சிவலிங்கத்திற்கு சுத்தமான ஆடையைச்சுற்றி உடுத்திவைத்து, பூணூலைஅணிவித்து, மூன்றுகாரிஅளவு பஞ்சகவ்யம், இதன் இருமடங்கிலோ இதற்கு சமமாகவோ குளசாரம், (சர்க்கரை), மூன்று-பிராஸ்தம்அளவுதேன், மூன்றுகாரிஅளவு பழபஞ்சாமிருதத்தின் அபிஷேகம், அரைபாரம்அளவு வெண்கரும்புச்சாரு, 100பலம்(கிலோ) அளவு சர்க்கரைபொடி, ஒருகாரிஅளவில் ஐவகைப்பழரசம் ஒவ்வொன்றினாலும் அபிஷேகம், மேலும் 10பலாப்பழங்கள், 500மாம்பழங்கள், 1000வாழைப்-பழங்கள், 1000எண்ணிக்கையில் தேங்காய்இளநீர், ஒருபாரம்அளவில் அன்னாபிஷேகம், இருதுலா அளவு சந்தனம், ஒருகாரிஅளவில் பில்வரஸம் (இலைச்சாறு), 6பிரஸ்தம்அளவில் பச்சகற்பூரம், குங்குமப்பூ, ஏலாலவங்காதி சுகந்தசூர்ணஜலம், 5பாரம்அளவு சுத்தஜலம் கொண்டும், இவற்றின் இடையிடையே திரவியஅபிஷேகத்தையும் செய்யவேண்டும். இத்தருணத்தில் 10000முறை ஸ்ரீருத்ரத்தைப்பாராயணம் செய்வது முதலிய பலவகைப்பெருந்திட்டத்துடன் செயல்படுத்தப்-படுவதாய் மகாபிஷேகவிதி கூறப்படுகிறது.

அபிஷேகாதி பூஜாந்தம் மூலமந்த்ர மநுஸ்மரன்.
பஞ்சபாரம் ஜலம்கிருஹ்ய மத்யே மத்யே அபிஷேசநம்.
ஸஹஸ்ரதாரா தோயம்து கங்காஜல ஸமம் பவேத்.
கோசிருங்காக்ரஸ்ய தோயஞ்ச ஸப்தநத்யாஸமம் பவேத்.
ஷட்ஷஷ்டி கோடிதீர்த்தேந ஸமம் ரத்னஸ்ய தோயகம்.
தக்ஷிணாவர்த்த சங்கஸ்ய தோயம் மூலாபிஷேசநம்.

(காரணாகமம்)

இங்கு மேலும் சிறப்பாக ஸஹஸ்ரதாராஜலம் கங்காஜலத்துக்கு ஸமம், கோசிருங்காக்ரஜலம் (பசுக்கொம்புநீர்) ஏழுநதிநீர்களுக்குஸமம் என்றும், ரத்தினங்களின்ஊரியஜலம் 66கோடி தீர்த்தத்துக்குசமமானது என்றும், வலம்புரிசங்கினுடையதீர்த்தம் ஸகலவிருப்பத்தையும் தருவது இவற்றினால் அபிஷேகம் மூலமந்திரத்தால் செய்யத்தக்கது என்றும் கூறப்படுகிறது.
இதற்கான ஆகமசான்று,

வீட்டுபூஜையில் பஞ்சகவ்ய அளவுமுறை.

கோமூத்ரம் பலமாநம் ஸயாத் கோமயம்ச ததர்தகம்.
க்ஷீரம் ஸப்தபலம் சைவ ததி த்ரிபல முச்யதே.
கிருத மர்தபலம் ஞேயம் ஆத்மார்தஸ்யைவ லக்ஷணம்.

(புரோத்கீதாகமம்)

கோஜலம் 1பலம், கோமயம் 1 பலம், பால் 7பலம், தயிர் 3பலம், நெய் 1பலம் என்ற அளவுகளில் ஆத்மார்த்தவீட்டுபூசையில் பஞ்சகவ்யத்தின் அளவுமுறை என்று புரோத்கீத ஆகமம் கூறுகிறது.

அபிஷேககாலத்தில் மந்திரத்தின் பிரோயகமுறை.

தெய்வங்களின் பூஜையில், அபிஷேகம், அருச்சனை, தூபதீபம்முதலான உபசாரங்கள் ஹோமம் முதலிய கிரியைகளுக்குஏற்றவாறு, மந்திரங்களை, அவற்றின் முடிவில் அமையுமாறு ஏழுமந்திர பல்லவத்திற்குள் கிரியைக்கு உரியதை அறிந்து உச்சரித்திடவேண்டும். இவை ஸ்பதகோடிமஹாமந்திர பல்லவங்கள் எனப்படுபவைஏழு. அவை 1நம:, 2ஸ்வாஹா, 3ஸ்வதா, 4ஹூம், 5பட், 6வஷட், 7வௌஷட் அல்லது சுவௌஷட் எனப்பனவாகும். இவற்றுள் பூசையின் போது முறையே, தூபதீபத்தைச்செய்யும்பொழுதும், நைவேத்தியம் செய்யும்பொழுதும், அக்னியில் திரவியங்களை ஆகுதிசெய்கிற ஹோமத்திலும், மந்திரங்களை சுவாஹா என்பதை முடிவில் உடையவையாகவும், ஹோமத்தின் முடிவில் செய்யப்படும் பூர்ணாகுதியை வௌஷடந்தமாக உச்சரித்தவாறும், அபிஷேகத்தைச் செய்யுங்காலத்தில் மந்திரங்களை நம: என்பதை முடிவில் உடையவையாக நமோந்தமாகவும் மந்திரத்தை உச்சரித்திடவேண்டும் என்கின்றன ஆகமங்கள். இதன்படி இங்கு அபிஷேககாலத்தில் மந்திரங்கள் யாவும் நமோந்தமாகவே பயன்படுத்தப்பட வேண்டுமென்பதை அறியவும். இதனைக்கூறும் சான்று,

தூபதீபே து நைவேத்யே ஹோமகாலே ப்ரஜாபதே.
ஸ்வாஹாந்தம் ஸம்ப்ரயோக்தவ்யம் அபிஷேகே நமோந்தகம். என்றும்,

மேலும், ஸ்வாஹாகாரம்ச ஹோமம் ஸ்யாத் பூர்ணா ஸ்யாத் வௌஷடந்திகா.

சுவௌஷட் சாந்திகே குர்யாத் ஹும்பட் பாபாபஹே பவேத்.
ஸ்வதா பித்ரு க்ரியாயாம் ஸ்யாத் பட்காரோ ஜயகர்மணி.

(கிரணாகமம்)

என்றும் கூறும் கிரணாகமவாக்கியத்தால் தெளிவாக அறியமுடிகிறது.

சிவலிங்கத்தில் ஸ்நபனவிதி :

சிவலிங்கபூசையில் அப்யங்க பிஷ்டாமலகாதி கவ்யைர் என்ற வசனப்படி, ஸ்நானம் என்பது அப்யங்கம் முதலாக ஜலத்தால் அபிஷேகித்து திருஒத்தாடை கொண்டு துடைத்துவிடும் பரிமார்ஜனம் வரை செய்யப்படும் முக்கிய முதல்கிரியை ஆகும். அதாவது, 1ஆஸனகல்பனம், 2மூர்த்திகல்பனம், 3மூலமந்திரநியாஸம் ஆகியமூன்றையும் முறையேசெய்து, ஆவாஹநம் முதலான பத்துஸம்ஸ்காரங்களை செய்துமுடித்தபின்னரே திரவியங்களால் அபிஷேகத்தை செய்ய வேண்டும். இதுவே பதினோராவதான, சுத்தியின்பொருட்டான முதல்சம்ஸ்கார உபசாரமாகும். இதற்கான ஆகமசான்று, கிருத்வைவதசஸம்ஸ்காரான் உபசாரைச்சிவம்யஜேத். என்கிறது காமிகாகமம். இவ்வாறே சோமசம்புபத்ததியிலும் "ஏவம் ஸம்ஸ்கிருத்ய ஸம்ஸ்காரைர் தசபிப்-பரமேச்வரம்" என்று கூறப்பட்டு, தசசம்ஸ்காரங்களும் செய்யப்பட்டபின்னரே ஸ்நானம் விதிக்கப்-பட்டுஉள்ளதாலும், ஸ்நாநம் என்பது பூசையின் பதினாறுவகை உபசரிப்பு வரிசையில் ஒன்றானதாக எடுத்துக்கொள்ளப்பட்டதாலும், லிங்கசுத்திக்குப்பின்பு ஆஸநம், மூர்த்தி, மூலத்துடன், தசசம்ஸ்காரத்தை தெய்வத்திற்கு செய்தபின்பு, திரவியஅபிஷேகத்தைத்துவக்கி, கலசாபிஷேகம் அல்லது விசேஷார்கியத்தின் சங்குதீர்த்தஅபிஷேகம்வரை செய்துமுடித்திடுவதே சைவாகம அபிஷேகவிதிமுறை ஆகும். பூஜித்தபின்பு செய்யப்படுவதாலேயே உரியஅபிஷேகப் பொருள்களால் நாம்சிறப்புப்பயன்களைப் பெற்றிடமுடியும்என்பதை உணர்ந்திடவேண்டும்.

லிங்கசுத்தி விதிமுறை :

பூஜையில் முதலாவதாக ஐவகை சுத்திகள் செய்யப்பட வேண்டியவை ஆகும். பஞ்சசுத்தியை அறியாமலும், பஞ்சசுத்தியைச் செய்யாமலும் ஒருபோதும் ஆகமநெறியில் பூசையைச்செய்யக்-கூடாது. அவை முறையே, ஆசாரியர் அல்லது அர்ச்சகர் தன்னை சுத்தப்படுத்திக்கொள்வது, அதாவது, தனது உடலையும், உயிரையும் புனிதமாக்கி இவைக்கு சிவத்தன்மையைப் பெற்றதாகச் செய்வது முதலாவதான ஆத்மசுத்தி எனப்படும். அடுத்ததாக பூசைசெய்யப்போகிற இடத்தை சுத்திகரித்தல் இரண்டாவதான ஸ்நானசுத்தி ஆகும். பூசைக்குஉரியபொருள்களை புனிதமாக்குவது மூன்றாவதான திரவியசுத்தி ஆகும். பூசையில் உபயோகிக்கஉள்ள, ஆகமத்தின் மூலமந்திரத்தை ஒருமுறை நினைவுபடுத்தி அதனை குருஉபதேசித்த விதிமுறைப்-படியே ஒருமுறைஉச்சரித்துப் பயிற்ச்சிசெய்வது நான்காவதான மந்திரசோதனம் எனப்படும். பின்பு பூசைசெய்வதற்காக இலக்குவடிவாய்உள்ள சிவலிங்கத்தை அல்லது தெய்வஉருவச் சிலையை தூய்மைப்படுத்துதல் ஐந்தாவதான லிங்கசுத்தி எனப்படுவதாகும். இவ்விதமாக ஐந்துவகை சுத்திகளை அறிக. இவற்றை முறைப்படுத்தி விதித்து தெரிவிக்கும் ஆகமசான்று,

ஆத்மசுத்திஸ்து பூர்வா ஸ்யாத் ஸ்தானசுத்திர் த்விதீயகா.
திருதீயா திரவ்யசுத்தி ஸ்யாத் சதுர்த்தம் மந்த்ரசோதனம்.
பஞ்சமா லிங்கசுத்தி ஸ்யாத் இத்யேதாப் பஞ்சசுத்தய :.
(சிவாகமங்கள்)

லிங்கசுத்தி என்பது நாம் பூசிக்கப்படஉள்ள லிங்கவடிவத்தில் காதலாகி, அதனை தாய் போன்ற ஆதரவுடன், பேரன்புடன் பச்சரிசிமாவைக்கொண்டு ஹிருதயமந்திரத்தை உச்சரித்தவாறு நன்கு தேய்த்து, சிவமந்திரங்களால் மந்திரிக்கப்பட்ட "சிவாம்பு" எனப்படும் சிவதீர்த்தமான புனிதநீரினால் நீராட்டிக்கழுவி, மேலும் இவ்வாறே நெல்லிக்காய் வற்றலின் பொடியாலும், வில்வ- இலைப்பொடியாலும், நன்கு தேய்த்துச் சுத்தம செய்து, பிறகு மஞ்சள் பொடியை சிவலிங்கம் முழுவதும் நன்றாகப்பூசிவைத்தபின்பு, அரைத்தசந்தனம்கலந்த நீரினால் அபிஷேகம்செய்து, ஆகமஅறிஞரானவர், சிவனது ஐந்துமுகத்திலும் ஆசமனதீர்த்தத்தை ஒருதிருமுகத்திற்கு மூன்று-முறையாக முதலில் கொடுத்திடவேண்டும். பின்பு பஞ்சகவ்யம் முதலான பொருட்களை கலசதீர்த்தாபிஷேகம் வரையிலாக செய்யப்படவேண்டும்.

இச்செய்முறைக்கான ஆகமசான்று

ஹிருதாவை சாலிபிஷ்டேந கர்ஷயேத் லிங்கமாதராத்.
சிவாம்பஸாது ஸம்ஸ்நாப்ய கர்ஷயே தாமலகேநது.
லேபயேத் ரஜநீம் பச்சாத் ஸ்நாபயேத் கந்தவாரிணா.
ஆசமனம் ததேத் பச்சாத் பஞ்ச வத்ரேஷு புத்திமான்.

(காரணாகமம்)

விசேஷஅபிஷேகப்பொருட்கள் இல்லாதபொழுதில் தூயசந்தனதீர்த்தாபிஷேகத்தைமட்டும் செய்து பிறகு பூக்களால் பூசிக்கவேண்டும்.

சிலையின் வகைக்கேற்ற நீராட்டுவகை. (ஸ்நானபேதவிதி)

ஆகமபூஜையில் பூஜ்ய பேரங்களுக்கும், லக்ஷ்ய மூர்த்தங்களுக்கும் ஏற்றவாறு அபிஷேகமானது 1மானஸம், 2காயிகம், 3பவித்ரகம், 4பாவிகம், 5சோதகம் என்று ஐந்து-வகையாக செய்யப்படவேண்டும். அவை மூலமந்திரத்தின் உச்சரிப்பால், மனதால் பாவனையுடன் செய்யபடுவது மானஸம் என்பதாம். "தூபம், தீபம், அர்கியம், நைவேத்யம், நீரானஜம்" எனும் பஞ்சோபசாரத்துடன் அப்யங்கம், உத்வர்த்தனம், ஸ்நபனம், ஸம்மாரஜனம் இவற்றுடன் அர்ச்சகர் தமதுஉடலால் உபசரித்துச்செய்வது காயிகம் என்பதாம். அஸ்திரமந்திரத்தால் மந்திரித்தநீரைத்தெளித்து, சிலையைப்வித்ரமானதாகச்செய்வது பவித்ரகம் என்பதாகும். சுண்ணாம்புச்சுதை முதலியவற்றாலான சிலைகளின் பூஜ்யவடிவத்தை தூசுதட்டிசுத்தம்செய்து மனோபாவனையால் நீராட்டியதாகக்கருதுவது பாவிகம் என்பதாகும். சுவரின்ஓவியம், துணியின்- சித்திரம் (படம்), மண்டலம் இவற்றில் விசிறி அல்லது சாமரம் முதலானவற்றினால் எழுப்பப்படும் காற்றினால் அதன்மேலேபடாமலும் நீரின்றியும், மாற்றுமுறையில் சுத்தம் செய்யப்படுவது சோதகம் எனப்படும். இவ்விதம் ஆகமங்களில் பிம்பசுத்தி ஐந்துவகைகளில் கூறப்படுகிறது. மேலும் உலோகம், கல் முதலானவற்றான சிலைகளில், நீரால்கழுவிச்செய்யப்படுவது க்ஷாளனம் என்றும், கூறப்படுவதாகும். இவ்விதமாக பலவாறு செய்யத்தக்க ஸ்நாநத்தை பூஜையின் இலக்காகத்திகழும் உருவத்திற்குஏற்ப செய்வதுமுறையாகும். மேலும் இவற்றுள் மஞ்சள், சாணம், புற்றுமண், சந்தனம், வெல்லம் முதலியவற்றாலான, குவியலான, கூம்புவடிவத்திலும், மண்புற்று முதலானவற்றிலும்,

மற்றும் கரையக்கூடியபொருள்வடிவங்களிலும், மேலும் கண்ணாடி, சூலம், கட்கம், தயாரித்தகும்பம் முதலானவற்றிலும், பூசிக்கப்படும்போது தவறாமல் மாற்றுவழிகளில் ஒருமுறையைக் கைக்கொண்டு அபிஷேகம் செய்யப்படவேண்டும். ஸ்நானம் என்ற ஓர்உறுப்புக்-கிரியைஇன்றி ஒருபோதும் பூசைசெய்யப்படுவதில்லை. சிலவற்றில் நீராட்டலின்றி கத்தி, கண்ணாடி முதலிய மற்றொன்றில் தெய்வாம்சத்தை தொடர்புபடுத்தி பாவனையால் செய்யத்-தக்கதாகும். இதற்கான ஆகமச்சான்று,

ஸ்நாந யோக்யாஸ் ஸ்நாபநீயா: சித்ராத்யாஸ் தத்விவிர்ஜிதா:
கிருபாண தர்பணாதௌவா மணௌவா ப்ரதிபிம்பிதே.
ரத்தினாதி லிங்கபேரவகைகளைச் சோதிக்கும்முறை .

(ரத்தினாதிபேரசோதனம்)

ஸ்படிகம், மரகதம், உலோகம், சுட்டமண் முதலானவற்றால் செய்யப்பட்ட லிங்கம் அல்லது தெய்வத்திருவுருவச்சிலைகள் இவற்றை பேரசுத்திக்கிரியையின் பொருட்டு, அதன் மேலே படிந்துள்ள தூசுகளை மென்மையானஆடைகளால் அது தூ ய்மையைப்பெறும்வரை துடைத்துச்-சுத்திசெய்தும், நமக்கு விருப்பமானநாளிலோ, அத்தெய்வத்திற்கு உகந்தநாளிலோ மட்டுமே, அதற்கு திரவியங்களால் அபிஷேகம்செய்தும், சுத்திசெய்வது ஆகமசாஸ்திரசம்மதமாகும். இதனை காமிகாகமத்தின் தக்ஷிணதுவாரார்ச்சனவிதிபடலத்தில் கூறப்படுவதால் நன்கு அறியலாம். அச்சான்று,

ரத்னஜே லோஹஜே பக்வ மிருண்மயே பேரசோதனம்.
அபீஷ்ட திவஸே குர்யாத் யாவத் பேரம் ஸதூஸரம்.
வஸ்திர ஸம்மார்ஜனம் புண்யதிவஸே ஸ்நபனம் மதம்.
கர்மார்ச்சாயா மதான்யேஷாம் மணிலிங்கே அத பீடகே.
அதவா பாண லிங்கே வா தர்பணாதௌ ஸமர்ச்சயேத்.

(காமிகாகமம்)

படிமவகைளின் நீராட்டல்வகை. (பேரபேதானாம் ஸ்நானவிதி)

பேரம்சேத் லோஹஜம் குர்யாத் ஸ்நாநம் பர்வணி பர்வணி.
சுதா சித்ராதிகம் சேத்து கர்மார்ச்சா சுத்தி ரிஷ்யதே.
அதவா (அ)ஸ்திராணுநா லப்த தாலவிருந்தஜ வாயுநா.

அதவோபல மூர்த்திச் சேத் க்ஷாளநம் தத்ர கீர்த்யதே.

(காமிகாகமம்)

மேற்கண்ட காமிகாகமதேவீ அர்சன படலத்து வசனத்தின்படி பூஜைக்குஉரியபேரமானது உலோகச்-சிலையாக இருக்குமானால், பவுர்ணமிக்கு, பவுர்ணமிக்குமட்டில் ஸ்நாநம் செய்விக்கப்பட வேண்டும். சாந்தாலானசுதையாகவோ, சித்திரம், சுவரோவியம், வண்ணமிகுமண்டலம் முதலியவைகளில் சுத்திகரிப்புசெயல்களால், விசிறியாலான காற்றால் தூசிநீக்கி அஸ்திர-மந்திரத்தால் சுத்திசெய்யவேண்டும். கல்லாலான பேரமானால் தினமும் நீரால்கழுவுதலாகிற க்ஷாளனம் என்பதால் சுத்திசெய்து அபிஷேகத்தைச்செய்யவேண்டும். இதனை "நித்தியஸ்நாநம் சிலாபேரே லோஹபிம்பே து பர்வணி" என்கிறது சிவாகமம். மேலும் பிரயோகபாரிஜாதம் எனும்நூல் பிரதிமை எனப்படுகிற படிமங்கள் அல்லது பதுமைகள், பட்டயமாகிற தேவதை-களின் யந்திரங்கள் முதலானவற்றில் தினமும் அபிஷேகம் செய்யப்படக்கூடாது என்றும், அவற்றின் விசேஷகாலபூஜையின்போது மட்டுமே, முன்தினத்திலேயோ, அன்றோ, மாசு ஏற்பட்டிருந்தாலோ மட்டும் க்ஷாளனம் செய்யப்படவேண்டும் என்றும் தெரிவிக்கிறது. இதற்கான ஆகமசான்று,

பிரதிமா பட்டயந்த்ராணாம் நித்யஸ்நாநம் நகாரயேத்.
காரயேத் பூர்வதிவஸே யதா வா மலதாரணம்.

(பிரயோக பாரிஜாதம்)

ஆகமத்திலும், தேவீபுராணத்திலும் வீட்டில் பூசிப்பதற்கு அதிகப்படியாக விதிமுறையானது ஏழுஅங்குலஅளவு உயரம்முதற்கொண்டு, பன்னிரண்டுஅங்குலஅளவு உயரம்வரையில், அதாவது விதஸ்தி, தாலம் எனப்படுகிற ஒருசாண்அளவு மட்டுமே இருக்கவேண்டும் என்றும், இவற்றிற்கு மேல்அதிகஅளவு கோயில்களில் மட்டுமே சுபமளிக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. இதற்கான சான்று,

ஸப்தாங்குலம் ஸமாரப்ய யாவத்ச துவாதசாங்குலம்.
கிருஹேஷ்வர்ச்சா ஸமாக்யாதா ப்ராஸாதேது அதிகாசுபா.

(ஆகமஸாரம்)

பூஜாபிம்ப வகைகளின் சுத்திகரிப்பு முறையை காரணாகமம் கூறுவதாவது, மண்ணாலான (சுட்ட) பக்குவபிம்பமானால் துணியால் வடிகட்டியநீரினாலோ, தர்பையினாலோ சோதித்து சுத்திசெய்ய வேண்டும். சித்ராபாஸம் புடைப்புச்சுவர்சித்திரம்,

பாதிஉடலுருவச்சிலைகள், வண்ணம் தீட்டிய கல்சிலைகள் முதலியவைகளும் துணியால் துடைத்தும், நீரினாலும் ஏற்றவாறு சுத்திசெய்யத்-தக்கது. கருங்கல் சிலையானால் தவறாது அதனை ஜலத்தினால் நீராட்டியே சுத்திசெய்ய வேண்டும். பொன்மயமான சிலையானால் மஞ்சள்பொடியால் துடைத்துவிடுவதாலும், வெள்ளி-சிலையானால் விபூதியினால் (சாம்பல், உப்பு முதலானவற்றால்) துடைத்துவிடுவதாலும், தாமிர-சிலையானால் புளியம்பழக்காப்புசெய்து தேய்த்துவிடுவதாலும், அஸ்திரமந்திரத்தால் இவ்வாறாக பிம்பசுத்தியைச் செய்யவேண்டும். மேலும் உலோகபிம்பங்களுக்கு 15நாள் அல்லது 30நாளுக்கு ஒருமுறை பருவநாளில் மட்டும் ஸ்நாநம் செய்வது முறை என்று காரணகாமம் கூறுகிறது. இதற்கான சான்று,

ஸம்சோத்ய மிருண்மயம் பிம்பம் வஸ்த்ரபூதேந வாரிணா.
குசைர் வா சோதயேத் தீமான் சித்ராபாஸாதி மேவச.
ததா சூர்ணேந ஸௌவர்ணம் ராஜதம் லவணாதிபி:
தாம்ர மாம்லேந சுத்தம் ஸ்யாத் அஸ்திர மந்த்ரேண சுவ்ரத.
அத லோஹஜ பிம்பாநாம் ஸ்நாநம் பர்வணி பர்வணி.

(காரணாகமம்)

லிங்கவகையின் அபிஷேகமுறை .

லிங்கசுத்தி என்பது வியக்தலிங்கமான பிரதிமைக்கும் பொருந்துவதே ஆகும். பூஜைக்கு உரிய லிங்கம் மூவகைஆகும். அவை வியக்தலிங்கம், அவ்யக்தலிங்கம் இரண்டும் கலந்த வியக்தாவியக்தலிங்கம் என்பதாகும். உருவச்சிலைகள் வியக்தலிங்கம் எனப்படுபவை. தீபம், சூலம் போன்றவை அவ்யக்தலிங்கம் எனப்படுபவை. சிவலிங்கம் வியக்தாவியாக்தலிங்கம் எனும் பாவாகாரம் எனப்படுவதாகும். சுவயம்பு, பாணம், தைவிகம், ஆர்ஷம், மானவலிங்கம் முதலான லிங்கவகைகள், மற்றும் அசையாதவாறு, நிலைத்ததாய் பூசிக்கப்படுபவை ஸ்திரலிங்கம், அசைக்கக்கூடியவாறும் பூசிக்கப்படுபவை சலலிங்கம் மேலும் இவற்றுடன் அனந்தவிஜயம், லதாலிங்கம் முதலான பலவகையில் பலபெயர்களில் கூறப்பட்டுள்ள, வண்ணஓவிய மண்டலங்கள், பசுஞ்சாணத்தால் மெழுகிய மேடையாகிற ஸ்தண்டிலம், துணியில்தீட்டிய உருவவரைபடம், சுவரில்வரைந்தஓவியமானசித்திரம், பத்ரபீடம், பலிபீடம், குருபீடம், வித்யாபீடம், மேலும் இயற்கையானதும், சிறப்பானதுமான சூரியமண்டலம் மற்றும், பலவகையில் லிங்ககல்பத்தில் கூறப்பட்டுள்ள

லிங்கவகைகளான, மணலால்அமைத்தது, இவ்வாறே மண்ணால், சந்தனத்தால், அன்னத்தால் அமைந்த லிங்கஉருவானவைகளும், சிவனைப் பூசிப்பதற்காக அமைக்கத்தகுந்தவைகள் என்று சைவஆகமங்களால் அறியலாம். இவ்வாறு லிங்கவழிபாட்டிற்கு கூறப்பட்டுள்ள பலவகையில் எளியமுறைகளில் ஏதேனும் ஒன்றைப் பின்பற்றி தமக்கு ஏற்றவாறு ஒருமூர்த்தத்தை அமைத்துக்கொண்டு அதில் உரியஅபிஷேக முறையுடன் சிவபூசையை மேற்கொள்வது நமது கடமையாகும். இதற்கான சான்று,

லிங்கசுத்திக் கிரமாத் பிராப்தா யதாவத் அபிதீயதே.
லிங்கம் த்ரிவித மாக்யாதம் வியக்தா வ்யக்தோ உபயாத்மகம்.
சுவயம்புர் பாண தேவார்ஷ மாநவாத்ய மனேகதா.
ஸ்திரலிங்கம் சலம்வாஅத மண்டலம் ஸ்தண்டிலம் ததா.
படம் வா பித்திசித்ரம் வா பீடம் வா மந்த்ரஸம்ஸ்கிருதம்.
ஆவாஹ்ய குருபீடாத்யம் வித்யாபீட மதாபி வா.
விசேஷதஸ் ஸ்வயம் ஸித்தம் சூர்யமண்டல மேவவா.
அன்யத்வா லிங்க கல்போக்தம் ஸைகதாத்யம் விசேஷத:
ஏதத் ஸர்வம் சிவேஜ்யார்த்தம் யதாயோக்யம் ப்ரகல்பயேத்.

(காமிகாகமம்)

அசைக்கக்கூடியசிலையின் அபிஷேகமுறை.
(சலபேரஅபிஷேகவிதி)

நடராஜர், சோமாஸ்கந்தர் முதலான உத்ஸவமூர்த்திகளின் அதாவவது அசைத்தும், அசைக்காமலும் பூசிக்கத்தக்கதான, பஞ்சலோகத்தாலான, சலபேரத்திற்கு அபிஷேகம் செய்ய வேண்டுமானால், அதற்குரிய நீராட்டலின்விதிமுறைவசதிகளைப் பெற்றுள்ள ஒருமண்டபத்தில், ஸ்நாநவேதிகை எனப்படுகிற திருமஞ்சனமேடைமீது, அந்தஉரியஉலோகபேரத்தை வைத்து, நன்குபூசித்து, பின்புஅபிஷேகத்தை செய்திடவேண்டும். இவற்றின் பிரதிஷ்டாவிதிகளிலும், சலபேரங்களை தனியாக ஒரு ஸ்நாநவேதிகையில்வைத்தே அதற்கு கும்பாபிஷேகத்தையும், நீராட்டலையும் செய்திடவேண்டுமென்று ஆகமங்கள் கூறுகின்றன. இதற்கான சான்று,

சலம் சேத் ஸ்நாநவேத்யாம்து மந்த்ரநியாஸம் ஸமாசரேத்.
ஸ்நபனம் காரயே தந்தே நைவேத்யம் சோத்ஸவம் குரு ·

(காரணாகமம்)

என்பதால் அறியலாம். (எடுத்துக்காட்டு) மேலும் சைவாகமங்களில் விக்னேசஸ்தாபனவிதி படலத்தில் இவ்வாறாகவே மற்றொருசான்று, "சலம்சேத் ஸ்நாநவேத்யாம் து மந்த்ர நியாஸோ பவேத்துவிஜா:" என்றும், கல்யாணசுந்தரேசபிரதிஷ்டாவிதிமுறையிலும் இவ்வாறே கூறப்படுகிறது.

ஸம்பூஜ்ய ஸ்நபனம் குர்யாத் அர்ச்நோக்த வதர்ச்சயேத்.
தத்வா நைவேத்ய மந்தேது பிரதிஷ்டோத்ஸவ மாசரேத்.

(காமிகாகமம்)

மேற்கண்ட வசனத்தின்படி கும்பாபிஷேகம் எனப்படுகிற மூலமந்திர நியாஸம் அல்லது ஜீவநியாஸம் அல்லது பிராணப்பிரதிஷ்டை எனுப்படுகிற தேவதாபிரதிஷ்டையையும், அவைகளுக்குரிய திவ்யாபிஷேகத்தையும் தனித்தனியாக அவற்றிற்குரிய தனிஇடத்தில் அம்மூர்த்திகளின் சிலைகளை ஸ்நாநவேதிகையில் இருக்கச்செய்தே செய்விக்கவேண்டும் என்பதை நன்குஅறியலாம். ஆலயத்தின்கர்பகிருஹம் எனப்படும் கருவறையினுள்ளே மூலபேரத்தின் அருகில், அதனடியில் முன்புறத்தில்உற்சவத்திற்கான மூர்த்தியையோ, சலபேரங்-களையோ வைத்து சமமாக ஒரேசெயலாக ஒருபோதும்சைவாகமமுறையில் உத்ஸவமூர்த்தியின் திருமஞ்சனத்தை செய்யக்கூடாது என்பதை அறியவும். இம்முறை வைணவாயலத்தில் மூலவர் தைவிகபதத்திலிருப்பதாலும், அர்ச்சாபேரம்கருவறையின்மையமான பிரம்மபதத்தில் அமைக்கப்படுவதாலும், வைணவஆலயவழக்கில் செய்யப்படுவது குற்றமாகாது. அங்கும் பூசையைத்தவிர அபிஷேகம் செய்யும் வழக்கம்இல்லை. சைவாலயத்தில் சிவம் பரம்பொருளாகி கருவறை மையத்தில், அருவுருவநிலையில், லிங்கவடிவில் விளங்குவதால், அச்சிவத்திற்கான 64வகையான, உமேசர், நடேசர், சந்திரசேகரர் முதலான மாஹேச்வரமூர்த்தங்களை ஆலயத்தின் அந்தர்-ஹாரமாகிய, கோயிலின் இரண்டாம்சுற்றுப்பகுதியில் ஏற்ற உரியஅங்கணத்தில் தனித்தனியே ஸ்நாநவேதிகையுடன்கூடிய சபாகாரமாய் அல்லது சாலாகாரமாய்உள்ள சிறுவிமானத்தில் இருத்தி, நித்தமும் நிலையாகவும், விசேஷ நாட்களில் அங்கேயோ அல்லது மண்டாபதிகளில் எழுந்தருளச்செய்தோ பிரதிஷ்டை மற்றும் ஸ்நபனம் இவற்றைச்செய்திடவேண்டும் என்பதே சைவாகமங்களில் சலபேரங்களின் அபிஷேகவிதிமுறையாகும்

சலபேரவகையும், திருமஞ்சன முறையும் .

சலம் என்பதும் ஆகமத்தில் இருவகைப்படும். அவை அங்கம் எனபதும் பிராதானிகம் என்பதுமாகும். அதாவது, சுவரில், துணியில் உள்ளது முதலான சித்திரம், (எல்லா உறுப்புகளும் தெரிவது சித்திரம் எனப்படும்) முதலானவற்றில் பூசையைச்செய்யும் பொருட்டும், யதாஸ்-தானமாகிற நிலையானதொரு தமதுஇடத்தில் அதாவது, ஒருசபையில்இருக்கிற, நடராஜர் அல்லது தியாகராஜர் முதலான மூர்த்திகளின் பிரதிஷ்டை அல்லது பூஜையின் பொருட்டும், அதனதனுக்கு எதிரில் அதற்கெனவே வேறுஒரு ரத்தினத்தினாலான சிறிய சலலிங்கம் அல்லது அஸ்திரதேவர் முதலானவற்றில் அதாவது, வேறுஒன்றில் அம்மூர்த்தியே பூஜிக்கப்படுவது அங்கம் என்று கூறப்பட்டது. அப்பொழுது ஆதிமூலமாய்உள்ள மற்றது பிராதானிகம் என்றும் அறியத்தக்கது ஆகும். இதனைக்கூறும் காமிகாகமபாணலிங்கபிரதிஷ்டாபடலத்தின் சான்று,

சலம்ச த்விவிதம் புரோக்தம் அங்கம் பிராதானிகம் த்விதி.
சித்ராதி ப்ரதிமாதீநாம் பூஜார்த்தம் தத்த தக்ரகே.
பூஜிதம் சாங்க மித்யுக்தம் அன்யத் ப்ராதானிகம் மதம்.
(காமிகாகமம்)

பூசையில் ஆவாஹனம் முதலிய தசசம்ஸ்காரத்திற்குப்பிறகு சலபேரத்தைமட்டும் அசைத்தும் பூசிக்கலாம். அதாவது அசைப்பது தவறில்லை என்பதை ஆகமத்தால் அறியலாம். இவ்வாறாக உலோகத்தாலான சலபேரங்களில் மூர்த்தியை ஸ்நானமண்டபத்தில், ஸ்நாநவேதிகையில்வைத்து, ஆகமவிதிப்படி ஆஸ நமூர்த்திமூலத்துடன் முறைப்படி ஆவாஹித்து, தசஉபாசரத்துடன் முதலில் பூசித்தபின்னரே, அச்சிலைக்கு பஞ்சகவ்யம் முதலானவற்றைக்கொண்டுவிசேஷஅபிஷேகத்தைச்செய்துமுடித்து, பிறகு பூஜை, உத்ஸவம் முதலானவற்றை செய்துமுடித்தபின்பு அந்தபேரங்களுக்கு உரிய நிரந்தரமானஇடத்திலேயே, அதனை அதன்சபையிலேயே சேர்த்து வைத்து அங்கு புனிதம் குன்றாதவாறு நித்தமும் பாதுகாப்பாகவைத்து பூசித்தல் ஆகமமுறையாகும். இவற்றின் பூஜையில் சபையிலே வேறுபாடு, பாகுபாடு என்பதுஇல்லை. மூலலிங்கத்திற்கு செய்யப்படுவது போலவே உலோகம், கல், மண், தாது, ரத்தினம் உருவமற்றசிலை, கற்சிலை அனைத்திலும் ஒரேவிதிமுறையிலேயே பூஜை செய்யப்படவேண்டும் என்று உத்தரகாமிகாகமம் விதித்துள்ளதால் அறியலாம்.

லோஹஜே சைலஜே வாபி மிருத்திஜே தாதுஜ ரத்னஜே.
சித்ரஹீநே சிலாபிம்பே மூலலிங்க வதாசரேத்.

(உத்தரகாமிகபடலம்2)

மேலும் உற்சவபேரங்களின் திருமஞ்சனத்தின்போது இடையிடையே தூபம், தீபம், ஜலப்ரதானம், புஷ்பம்சாத்துதல், அர்க்கியம், நிவேதனம் இவற்றைச் செய்யவேண்டும்என்று சிந்தியவிச்வாகமம் கூறுகிறது. இதற்கான சான்று,

மத்யே மத்யேச தூபம்ச தீபம் சைவ ப்ரதாபயேத்.
ஜலப்ரதானம் புஷ்பம்ச அர்க்யம் சைவ நிவேதயேத்.
யத் திரவ்யமபிஷேகம்து தத் த்ரவ்யம் து நிவேதயேத்.
பாநீய பல தாம்பூலைர் திரவ்யாந்தே தோஷயேத் சிவம் .

(சிந்தியவிச்வம்)

சைவாகமங்களில் பேரவகைகள்-

ஆலயம் மற்றும் வீடுகளில் பூசிக்கத்தக்க தேவதாபேரங்களை அதாவது தெய்வத்-திருவுருவப்பதுமைகளைப்பற்றிக் கூறுகையில் சைவாகமங்கள் பலவகையில், நமக்கு ஏற்றவைகளைக்கூறிஉள்ளன. பூர்வகாமிகாகமபடலம்65-ல் பேரங்கள் ஏழுவகையாக கூறப்பட்டு உள்ளன. இதற்கான சான்று.

சைலம் வார்க்ஷம்ச லோஹம்ச மிருண்மயம் ரத்னஜம் பவேத்.
தாதுஜம் தந்தஜம் பேரம் ஏவம் ஸப்தவிதம் பவேத்.

(பூர்வகாமிகாகமம்)

இதன்படி, கருங்கல்லாலானவை, 1. சைலஜம். சந்தனம், இலுப்பை, அகில் முதலான மரத்தாலானவை, 2. வார்க்ஷம் அல்லது தாருஜம். உலோகவகைகளாலானவை, 3. லோஹஜம். பக்குவம் அபக்குவம் என்பவையாக இருவகையாக, சுடப்பட்டதும், சுடப்படாததுமாகஉள்ள உரியவகையின் உயர்தரமண்ணால் செய்யப்பட்டவை, 4. மிருண்மயம். ஸ்படிகம், பவழம், மரகதபச்சை முதலான பலவகைரத்தினங்களால் ஆனவை 5. ரத்தினஜம். அரிதாரம், லிங்கபாஷாணம், பாதரசம் முதலான பலவகையான கணிமதாதுவகைகளாலானவை 6. தாதுஜம். என்றும், யானையின் தந்தத்தில் செய்யப்பட்டவை, 7. தந்தஜம். உருவப்பிரதிமையான பேரம் ஏழுவகை என்கிறது காமிகாகமம்.

உலோகபேரசுத்திவிதி.

ஆலயாதிகளில் பூஜைக்குஉள்ள உலோகத்தாலான பிம்பத்தை சுத்திசெய்து, நீராட்டி, பூசித்திடுவதேமுறை. 15நாளைக்கு ஒருமுறையாக பக்ஷாந்தத்திலோ, 30நாளைக்கு ஒருமுறையாக மாஸத்திற்கு ஒருமுறையாகவோ, அல்லது உத்ஸவாதிகளில் ஆண்டுக்கு ஒருமுறையாகவோ, தவறாமல் உலோகவிக்ரஹங்களை புளியம்பழத்தினாலும், பசுஞ்சாணம், நெல் மற்றும் தர்பையின் பொடிச்சாம்பலினாலும், நெல்பொடி, சுட்டசெம்மண்கற்பொடி முலானவற்றாலும் சுத்திசெய்து பூசிக்கவேண்டும் என்கிறது. சுட்டக்கல்லில் தெய்வத்தை ஆவாஹித்துப்பூசிக்கையில் விபூதி, சந்தனம்முதலியவற்றை அதில்பூசி, பொடியினால், அதைசுத்திசெய்து பிறகுபூசிக்கவேண்டும். ஆகமமுறையில் மண்விக்ரஹம், உலோகப்பட்டயந்திரம், மண்டலம், சுவரோவியம், சிற்பச்சுதை, துணிப்படம் இவைகளுக்கு பூசையில் தர்பணம் எனப்படுகிற பஞ்சோபசாரசாதனமான உலோகத்தாலான, கண்ணாடியிலோ, சூலாதிகளிலோ அத்தெய்வாம்சத்தைத் தொடர்புபடுத்தி அதில் நீரால்ஸ்நாநத்தைச்செய்து பின்புஒன்றுசேர்த்து பூசிக்கவேண்டும். எதிலும் அபிஷேகமின்றி பூசையைச் செய்தலாகாது. இதற்கான பாவனாபிஷேக விதிக்கான ஆகமசான்று,

மாஸே பக்ஷேச வர்ஷாந்தே ஸர்வான் லோஹஜ விக்ரஹாந்.
திந்த்ரிணீ தர்பசூர்ணைச்ச இஷ்டிகாயாஸ்ச பஸ்மநா.
சுத்திம் குர்யாத்து சூர்ணேந ஆகமோக்த ப்ரகாரத:
நித்யஸ்நாநம் சிலாபேரே லோஹபிம்பேஷு பர்வணி
மிருண்மயே பட்டசித்ரேஷு தர்பணே ஸ்நாந மாசரேத்.

(காமிகாகமம்)

உலோகபேர நித்யபூஜாவிதி.

உலோகவிக்ரஹமானால் விசேஷார்கிய தீர்த்தத்தால் தெளித்து, அபிஷேகத்தைச்செய்து, நீரில்நனைத்துத் தோய்த்து, உலர்த்தியதுணிகளை மாற்றி, கவசமந்திரத்தால் தூயஆடையை உடுத்தி, உரியநிரந்தரபீடத்தில் எழுந்தருளச்செய்து அங்கு ஆஸநபூஜை, ஆவரணபூஜை, துவாரபாலார்சனம், சண்டேசபூஜை, பரிவாரதேவதாபூஜை, இவைகளைத்தவிர்த்து, உலோகபேரமூர்த்திகளை பூசிக்கவேண்டும் என்றும், தினந்தோறும் நீராலான ஸ்நாநத்தைத்தவிர்த்து, உலோகவிக்ரஹத்தில் பவுர்ணமிக்கு பவுர்ணமியில் தவறாமல் நீராட்டியும் பூசித்திடவேண்டும் என்றும்

சகஸ்ராகமம் கூறுகிறது. நித்தியபூசையில் மந்திரத்தால் சுத்திசெய்திடச்சான்று,

அபிஷிச்ய விசேஷார்க்யம் தௌத வஸ்த்ராணி வேஷ்டயேத்.
வர்மணா வாஸஸா மிருஜ்ய பீடே ஸம்ஸ்தாபயேத் சிவம்.
ஆஸநாவரணம் த்யக்த்வா த்வாரபாலார்ச்சனம் விநா.
சண்டேச பரிவாராணாம் விநா பிம்பாநி பூஜயேத்.
நித்யம் ஸ்நாநம் விநா லேஹே ஸ்நாநம் பர்வணிபர்வணி.

(ஸஹஸ்ராகமம்)

உத்ஸவமூர்த்திகளை ஸ்நாநவேதிகையில் சிம்மாஸனத்தில் வைத்துபூசித்து, திருமஞ்ஜனம் செய்துமுடித்து, பிறகு வேறு அலங்காரஆஸணத்திலோ, பத்ரபீடத்திலோ அதனை மாற்றி ஸ்தாபித்து பிறகு சிறப்பாக பூசித்திடவேண்டும்.

அபிஷேககால ஆஸனபூஜை .

தெய்வங்களுக்கு அபிஷேகம் செய்வதற்குமுன்பு, லிங்க சுத்தியைச்செய்து, ஆஸனம் மூர்த்திமூலம்முதலாக தசசம்ஸ்காரத்துடன் பூசித்து, பின்னர் திருமஞ்சனத்தைத் துவங்க வேண்டும் என்று முன்னரே கூறப்பட்டது. அப்பொழுது பஞ்சாஸனபூஜையின் முறையில், இறைவன் அபிஷேகத்திற்காக அனந்தாஸனத்தில் அமர்ந்தவராகவும், சிம்மாஸனத்தில்அமர்ந்து நீராட்டுதலைப் பெறுபவராகவும் கருதும்பொருட்டு முதலில் ஆஸ நபூசையைச் செய்யவேண்டும். இவ்விதம் பூசைகிரியைகளில் ஆஸநத்தை அமைக்கவேண்டியமுறையை காமிகாகமமும், சுப்ரபேதாகமமும் யோகாஸனத்தில் ஆவாஹனத்தையும், சிம்மாஸ னத்தில் ஸ்நாநத்தையும், மகாபத்மாஸனத்தில் அருச்சனையையும், விமலாசனத்தில் போஜனத்தையும், அனந்தாஸனத்தில் இருத்தி நிருத்தாதிவிநோததரிசனத்தையும், பிறஉபசாரவகைகளையும் செய்யவேண்டும் என்கின்றன. இதற்கான சான்று,

ஆவாஹநாஸநம் யோகம் ஸ்நாநே ஸிம்ஹாஸநம் ததா.
அர்ச்சநாயாம் மஹாபத்மம் விமலம் போஜநாஸநம்.
அனந்தாக்யம் விநோதே ஸ்யாத் ஏதாவத் பரிகல்பயேத்.

(சுப்ரபேதாகமம்)

காரணம் முதலான சில ஆகமங்களில் அபிஷேகத்திற்கு அனந்தா ஸனம் கூறப்பட்டு உள்ளது. ஸ்தோத்ர ஸங்கீத

நிருத்தேஷ அனந்தாஸன முச்யதே (காமிகமம்) என்பதை அறியவும். ஆகமபூசையில் ஷடத்வாக்களின்ரூபமாக கற்பிக்கப்படும் ஆஸனகல்பனம் மிகவும் முக்கியமானதாகும். ஆவாஹனத்திற்கு பத்மாஸனம், ஸ்நாநத்திற்கு அனந்தாஸனம், அர்ச்சனைக்கு விமலாசனம், நைவேத்யத்திற்கு யோகாஸனம், வஸ்திரராபரணம் அணிவித்தல் முதலான உபசரிப்புக்கிரியைகளுக்கு சிம்மாசனம் என்று காரணாகமத்தில் விதிக்கப்பட்டு உள்ளது. இதனைக்கூறும் சான்று,

ஆவாஹநாஸனம் பத்மம் அநந்தம் ஸ்நாநகர்மணி .
விமலம் சார்ச்சனே வித்யாத் நைவேத்யே யோகமாஸநம்.
வஸ்த்ராணி சாந்ய கர்மாணி சிம்மபீடே து தாபயேத்.

(காரணாகமம்)

அபிஷேகதீர்த்த இலக்கணம். (ஜலம்எடுப்புமுறை)

அபிஷேகத்திற்குஉரிய ஜலத்தை உதயகாலத்திலேயே (எடுக்க) கைக்கொள்ளவேண்டும். அல்லது உதயத்திற்குமுன்பாகவோஎடுக்கலாம். நீர்சேகரிக்க பிற்பகல் மற்றும் இரவுநேரங்கள் கூடாது. அபிஷேகத்திற்கு தீர்த்தத்தை, துணியால்வடிகட்டியே எடுத்துவரவேண்டும். இவ்விதம் பலகுடங்களில் கொணர்ந்து, ஜலபாண்டம் எனப்படுகிற பெரியஅளவிலான அபிஷேகதீர்த்த அண்டாவில் அல்லது சாலில் நிரப்பிவைத்து கூறப்பட்ட உரியபொருட்களை அதில்போட்டு ஊறவைத்து நறுமணமூட்டிப்பூசித்து பின்பு அதனைப்பயன்படுத்தவேண்டும் என்கிறது ஆகமம். இதற்கான சான்று,

வஸ்த்ரபூதம்ஹி ஸலிலம் ஜலபாண்டே பரிக்ரஹேத்.
உதயாதேவ கர்த்தவ்யம் ராத்ராந்தேவா ஜலம் க்ரஹேத்.

(காமிகாகமம)

ஜலத்தைவிலக்கிடும்விதி. (விலக்கத்தக்க நீர்வகை)

ஆலயபூசையின்போது, சேமித்து பலநாளானதும், வர்ணமில்லாததும், மணமில்லாததும், சுவைஇல்லாததும், கிருமிஉள்ளதும், பாசிஉள்ளதும், தலைமுடி(மயிர்) உள்ளதும், நுரையுள்ளதும், நீர்க்குமிழிகள் (மேல்கொப்பளமுட்டைகள்) உள்ளதும், கால்பட்டதும், நிந்தித்ததும், அகாலத்தில்

எடுத்ததும், கூடாதஇடத்திலிருந்து எடுத்துவரப்பட்டதும், தெய்வ திருமஞ்சனத்தில் விலக்கப்பட வேண்டியவைகள் என்கிறது ஆகமம்.

வர்ணகந்த ரஸைர் ஹீநம் கிருமி சைவல கேசகம்.
பேந புத்புத ஜுஷ்டம் ச தத் ஜலம் பரிவர்ஜயேத்.

(காமிகாகமம்)

அபிஷேகஜலத்தின் தோஷங்களால் ஏற்படும் பயன்கள் .

திருமஞ்சன தீர்த்தத்தில் நிறமற்றது மக்களுக்கு ரோகம் அளிப்பதும், மணமின்மையால் எதிரிகளால் பயம் ஏற்படுவதும், சுவையின்மையால் தரித்திரமாகிய நமக்கு தேவையானது இல்லாத நிலைஏற்படுவதும், ஜலமானது கிருமியுடனிருப்பது பயமளிப்பதும், பாசியுடனிருப்பது சோகத்தை, மனத்துயரத்தைஅளிப்பதும், தலைமுடியுடனிருப்பது அவ்வூரில் பாலர்களுக்கு அழிவைத் தருவதும், நுரையுடனிருத்தல் பெண் குழந்தைகளின் அழிவைத் தருவதும், காற்றுக் குமிழ்க் கொப்பளங்களுடன் இருப்பது ஊரில்விளை நிலங்களின் பயிர்களுக்கு அழிவைத்-தருவதும், துணி கொண்டுவடிகட்டப்படாதநீராக இருப்பது நிச்சயமாக அரசர்களுக்கு மரணத்தையும் கொடுக்கும். எனவே குற்றமற்றவகையில் நீரெடுத்தல் அவசியமென்றுஅறிக. ஆகையினால் உதயகாலத்தில், துணியால் வடிகட்டி உரியஇலக்கணத்துடன் நீரைஎடுத்துவைத்து பாதுகாத்து, அதில் உரியவாசனைத்திரவியங்களைச்சேர்த்து, புதுஜலமாகவும், முறையாகவும், குற்றமற்றதாகவும் உள்ள ஸ்நாநஜலத்தினால் இறைவனுக்கு நீராட்டுதலைச் செய்யவேண்டும். நீரின்குறைபாடுகளின் பயன்கூறும் ஆகமச்சான்று,

விவர்ணம் ரோகதம் பும்ஸாம் கந்தஹீநே ரிபோர் பயம்.
ரஸஹீநே து தாரித்ரியம் கிருமியுக்தம் பயாவஹம்.
சைவலம் சோக ஸந்தாபம் கேசயுக் பால நாசநம்.
ஸர்ஷபம் ஸ்திரீப்ரஜா நாசம் புத்புதம் ஸஸ்ய நாசநம்.
வஸ்த்ரபூத விஹீநே ச மரணம் பூபுஜாம் த்ருவம்.
தஸ்மாத் ஸநிர்மலம் தோயம் நிர்தோஷம்ச பரிக்ரஹேத் .
சங்கில்விளங்கும் தெய்வங்கள்.

(சங்கஅதிதேவதைகள்)

அபிஷேகத்திற்கு பாத்திரமில்லாதபோது சங்கினாலேயே நீரைஎடுத்து அபிஷேகம் செய்யலாம். அல்லது சிறப்பாக அதில் நீரை நிறைத்து விசேஷமாகப்பூசித்து, சங்கோதகமாகவோ, அல்லது அதில் மந்திரித்து விசேஷஅர்க்கியதீர்த்தமாகவோ, சங்கினால்

நீராட்டுதல் முறையாகும். இந்த சங்குஜலம் புனிதம்தருவது. இது வருணபகவானுக்கும், அவரின் அதிதேவரான விஷ்ணுவுக்கும் சிறப்புமிக்க கைப்பாத்திரமாகவும், இசைக்கருவியாகவும் விளங்குவதுடன், ஸகல தெய்வாம்சங்களும் பொருந்தியதும், ஸகலதெய்வங்களுக்கும் மிகவும்விருப்பமானதும் சங்கு ஆகும். இந்த சங்கத்தின் அடியில் பூமிதேவியும், அதன் வயிற்றில் விஷ்ணுவும், அதன் ஜலதாரையில் அகோரதேவரும், வலயத்தில் சூரியதேவரும், (வாயில்) முகத்தில் கங்கை முதலான ஏழுபுண்ணியதீர்த்தங்களும், நுழைவுப்பகுதியில் சந்திரதேவரும் இருப்பதுடன், இச்சங்கினைத்தாங்கும் முக்காலியின் மூன்றுகால்களில் பிரம்மா, விஷ்ணு, ருத்திரர் எனும் மும்மூர்த்திகளும், அப்பாத்திரத்தின் அடிவட்டத்தில் ஆதாரசக்தியும், இவ்விதமாக அதனிடமுள்ள அனைத்துப்பகுதிகளிலும், எப்போதும் அதிதேவதைகள் அதிஷ்டித்து இருக்கின்றனர் என்கிறது சைவாகமம். மேலும் இவற்றுள் வலம்புரிசங்கானது அனைத்திலும் மேம்பட்டு, பவித்ரமானது என்பதன்சான்று,

சங்கமூலே தராதேவீ குக்ஷௌது விஷ்ணுதைவதம்.
தாராயாம் கோரதைவம் து வலயம் சூர்யதைவதம்.
முகேச ஸப்ததீர்த்தாநி பிரவேசே சந்திரதேவதா.
திரிபாத்யாம் அதிதைவத்யம் பிரம்மவிஷ்ணுமஹேச்வரா:
விருத்த மாதார சக்திச்ச இத்யேதா அதிதேவதா:
தக்ஷிணாவர்த்த சங்கம்து ஸர்வோத்கிருஷ்டம் பவித்ரதம்.

(சூக்ஷ்மாகமம்)

பூஜாகாலங்களின் அபிஷேகமந்திரவகை.

சுவாமிக்கு செய்யப்படுகிறத ஜலார்ச்சனம் எனப்படுகிற அபிஷேககாலத்தில்பூஜா-காலத்திற்குஏற்ற சிறப்புமந்திரவகை ஆகமங்களில் கூறப்படுகிறது. அதன்படி, உச்சிகாலத்தில், மத்யான்ஹகாலத்திலும் சிவனாரின் அபிஷேகத்தை சிவபஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக் கொண்டும், பிரதோஷகாலபூஜையான சாயங்காலத்தில் அபிஷேகதத்தை வியோவியாபி எனத் தொடங்கும் 81பதமந்திரத்தை உச்சரித்துக்கொண்டும், அர்த்தயாமத்தில் அங்கமந்திரங்களை உச்சரித்துக்கொண்டும், மற்றயஸந்திகளில் செய்யப்படும் பூஜைகளில் அபிஷேகத்தை பஞ்சபிரம்மஷடங்க மந்திரங்களை உச்சரித்தவாறும் செய்திடவேண்டும். இதற்கான சான்றுகள்,

மத்யான்ஹே பூஜனம் குரு.
பஞ்சாக்ஷரம் ஸமுச்சார்ய ப்ரதோஷே சாபிஷேசயேத்.
வியோம வியாபிம் ஸமுச்சார்ய
அங்ககைஸ்ச தத: குர்யாத் பூஜாம் அத்ரார்த்த யாமகே.
அந்யஸந்தியாசு ஸர்வாசு பஞ்சபிரம்ம ஷடங்ககை: . என்று கூறப்படுகிறது.

ஸ்நபனாங்கமான அரிபபொருள்பட்டியல்சான்று.

விநாயகருக்கு சிவனாருபதேசித்த சுப்ரபேதாகமத்தின் 15-ம் ஸ்நபனவிதிபடலச்சான்று,

நவதா ஸ்நபனம் புரோக்தம் தேஷாம் திரவ்யம் ததஸ் சுருணு.
வஜ்ரம் மரகதம் சைவ வைடூர்யம் ச பிரவாளகம்.
மௌக்திகம் பஞ்சரத்னாதி சிவகும்பேது விந்யஸேத்.
ரத்னாபாவே ததோ ஹேம நவாநாம் ஹேம மேவவா.
பாத்யமாசமனம் சார்க்யம் பஞ்சகவ்யம் குசோதகம்.
க்ஷீரம் ததிகிருதம் சைவ பிரதமாவரணம் விது:
மது இக்ஷுரஸம் சைவ பநஸாம்ர பலௌள ததா.
கதளீ நாளிகேரௌள ச ஸர்ஷபம் ச திலம் ததா.
பில்வம் ச மாதுளுங்கம் ச நாரங்க த்வய மேவச.
யவ நீவார லாஜம் ச தஸ்யசூர்ணம் குளம் ததா.
சந்தனம் லகு குஷ்டௌள ச கச்சோலம் பத்ரபுஷ்பகம்.
கற்பூரம் ஹரிபேரம் ச தாந்தம் மாம்ஸீ முரம் த்ருணம்.
சமீ தூர்வா ச சுவேதார்க்கம் பில்வபத்ரம் ச சம்பகம்.
சங்கபுஷ்பம் து அபாமார்க்கம் விஷ்ணுகிராந்தா ச துர்துரம்.
நந்தியாவர்த்தம் சுவேதபத்மம் புன்னாகம் சாதி பாடலீ.
ஸஹதேவீ சதபத்ரீ லக்ஷ்மீ ஸ்தலார விந்தகம்.
தாதகீ துளசீ சைவ கரவீரா கிருஷ்ண மல்லிகா.
மல்லிகா ச சதாவேரீ கோக்ஷுரா ச கிருதாஞ்ஜலீ.
மஹாதுரோணம் ச துரோணம் ச பத்ரீ ச மதுமத்ரிகா.
இந்திரவல்லீ ருத்ரபர்ணீ தாத்ரீ சைவ ஹரீதகீ.
வியாக்ரநகீ ச மாஞ்ஜிஷ்டீ ஸரளம் பத்ர காஷ்டகம்.
நவநீதம் திராவிளம் ச ஸஜ்ஜம் தத்கோல மேவச.
பலாச அதிபலா சைவ ஸிம்ஹி பிரியங்கு லோத்ரகா.
நாககேஸர ஜம்பூகா கபித்த அச்வத்த குக்குளு.
ஏலாச ஜீரகம் சைவ கிருஷ்ண ஜீரக மேவச.
சுதைலம் குங்குமம் மேகம் அகரும் கிருஷ்ண லோசநா.
ஸ்ரீவேஷ்டகம் கந்த ரஸௌள பிப்பலீ ஹஸ்தி பிப்பலீ.
பலாசம் சைவ தகரம் சிலா வை ரக்த சந்தனம்.

திராக்ஷா ச சுவேதலோத்ரம் ச பஸ்ம சைவ த்விகர்ணிகா.
லவங்கம் ரஜநீ சூர்ணம் கஷாயம் மார்ஜநாந்தகம்.
நவாதி ஷட்விதாநாம்து நவோத்தர சதாவதி.
நவோத்தர சதம் திரவியம் ஸம்புரோக்தம் கண நாயக.

(சுப்ரபேதாகமம்)

சிவகும்பத்தோடுகூடிய 108கலசங்களுக்கான 109பொருட்களை ஆகமம் கூறிஉள்ளதில் பொருட்கள் இருவகைப்படும். அவை, திரவமாய் உள்ளவை முழுக்காட்டுவதற்கான ஸ்நாந திரவியங்கள் என்றும், பழவகை, பொடிவகை, மூலிகை முதலிய பொருள்வகைகள் மார்ஜனம் எனும் தேய்த்துவிடுவதற்கான மார்ஜனதிரவியங்கள் என்றும் அறியத்தக்கவையாகும். "பாத்யாதி மார்ஜநாந்தஸ்து அஷ்டோத்தர சதம் பவேத்" என்பதாக 108 பொருள்களை வரிசையாகக்கூறி, அவற்றுள் முதலிலிருந்து முறையே 5, 9, 17, 25, 49, 81, 108 என்ற பலவகை ஸ்நபனகலசாபிஷேக விதிமுறைகளுக்கு பொருட்களை பகுத்துக் கூறுகிறது. இவற்றில் சுவர்ணபத்மம் மற்றும் நவரத்தினம் அல்லது பஞ்சரத்னம் சிவனது பிரதானகும்பத்தின் சிறப்புப் பொருள் என்றும், இவ்வாறே சுவர்ணஉத்பலம் மற்றும் பஞ்சரத்னம் (உமையின்) (பீடசக்தி) கலசத்தின் சிறப்புப்பொருள் என்றும் அறியத்தக்கது. மேற்கண்ட சான்றில் கூறப்பட்டவற்றை இனி வரிசையாக அறிவோம்.

108கலச ஸ்நபனதிரவியங்கள். (அரியபொருட்கள்)

01.	தங்கம் மற்றும் ரத்தினம்	நவரத்தினம் அல்லது பஞ்சரத்தினம் அல்லது ஒருரத்தினம், நவஉலோகம் அல்லது சுவர்ணம் அல்லது ஒருஉலோகம்.
02.	பாத்தியதோயம்	உரிய நான்குபொருட்கள் சேர்ந்த ஜலம்.
03.	ஆசமனதேயாம்	உரிய ஆறுபொருட்கள் சேர்ந்த ஜலம்.
04.	அர்கியதோயம்	உரிய எட்டுபொருட்கள் சேர்ந்த ஜலம்.
05.	பஞ்சகவ்வியம்	பசுவின் பால், தயிர், நெய், நீர், சாணம் 5-ம் கலந்தது.
06.	குசோதகம்	குசதர்ப்பைகளின் விரல்நீள முனைகள் ஊரியநீர்.
07.	க்ஷீரம், பய:, துக்தம்	பசுவின் புதிய கறந்தபால்.
08.	ததி	பசுவின் புதிய தயிர்.
09.	ஆஜ்யம், கிருதம், ஸர்பி:	பசுவின் புதிய உருக்கிய நெய்.

10.	மது, செஷளத்ரம், மதுரம்	தேன்
11.	இக்ஷுரஸம், சிதேக்ஷுஸாரம்	கரும்பின்சாறு, வெள்ளைக்கரும்பு ரசம்.
12.	பனஸபலம்	பலாப்பழச்சுளைகள்.
13.	ஆம்ரபலம், சூதபலம்,	மாம்பழச்சாறு, மாங்கனி.
14.	கதளீபலம், மோசா, ரம்பாபலம்	வாழைப்பழம். (மோசா ஸ்ரீ பச்சைவாழை)
15.	நாளிகேரம், திரியக்ஷகம், கேளிஹாரம்	தேங்காய். துருவல் (நாளிகேரோதகம் ஸ்ரீ இளநீர்)
16.	ஸிதஸர்ஷபம், ஸித்தார்த்தம்	வெண்கடுகு.
17.	திலம், திலதான்யம்	எள்ளு, வெள்ளை எள்ளு அல்லது கருப்புஎள்ளு.
18.	பில்வம், ஸ்ரீபர்ணம்	வில்வஇலை, வில்வப்பூ, வில்வப்பழம், கூவிளம்பூ.
19.	மாதுலுங்கம், டாடிமம்	மாதுளம்பழச்சாறு அல்லது மாதுளம்பழம்.
20.	நாரங்கம், குளுஞ்சீபலம	நாரத்தம்பழம், குளுஞ்சி நாரத்தை.
21.	மகாநாரங்கம்	பெருநாரத்தை, கெடாநாரத்தைப்பழம்.
22.	யவம்	யவைநெல், காட்டுநெல், பன்றிநெல், யாகதானியம்.
23.	நீவாரம்	குளச்செந்நெல், ஒருவகைநெல்.
24.	லாஜம்	நெல்பொரி, பொரித்தநெல்மலர்.
25.	லாஜசூர்ணம், ஸக்துகம்	பொரிஅரிசமாவு அல்லது நெல்பொரித்தூள்.
26.	குளம், குடம்	வெல்லக்கட்டி, வெல்லஉருண்டை.
27.	சந்தனம்,பாடீரம், மலயஜம்	சந்தனம், அரைத்தசாந்து, செஞ்சந்தனம்.
28.	லகு	சமுத்ராப்பச்சை, ஒருவகை மூலிகை இலை.
29.	குஷ்டம்	கோஷ்டம், ஒருவகை நறுமணப்பொருள் அல்லது கீழ்காய்நெல்லிஇலை.
30.	கச்சோலம்	கச்சோலம் ஒருவகை நறுமணப்பொருள்.
31.	புஷ்பம், லவங்ககுசுமம்	கிராம்பு, லவங்கப்பூ, தேவசுகுமம்.
32.	பத்ரம், லவங்கபத்ரிகா	லவங்கபத்திரி அல்லது ஜாதிபத்திரி. இலைவகை.
33.	கற்பூரம், கனஸாரம்	பச்சைகற்பூரம்.

34.	ஹரிபேரம், அமிருநாளம்	வெட்டுவேர், நறுமணகருப்புவேர்.
35.	தாந்தம், தமனகம்	மருக்கொழுந்து.
36.	ஜடாமாம்ஸீ	சடாமஞ்சி, ஜடாமாஞ்சில்.
37.	முரம்	பூலாங்கிழங்கு / சிற்றேலம், நறுமணப்பொருள்.
38.	திருணம்,குசம், தர்பாக்ரம்	குசதர்பைகளின் முனைகள்.
39.	சமீ, தபஸ்வி, பத்ரம்	வன்னிமரஇலை அல்லது புஷ்பக்கதிர்.
40.	தூர்வாக்ரம்	அருகம்புல்லின் முனைத்தளிர்கள்.
41.	சுவேதார்க்கம்	வெள்ளெருக்கம்பூ.
42.	ரக்தோத்பலம்	செங்கழுநீர்ப்பூ.
43.	நீலோத்பலம்	கருநெய்தல்பூ, கருங்குவளைப்பூ.
44.	சம்பகம்	செண்பகப்பூ, செம்பகப்பூமொட்டு.
45.	சங்கபுஷ்பம்	வெண்ணிறசங்குப்பூ, கிலுகிலுப்பைப்பூ.
46.	அபாமார்க்கம்	நாயுருவிப்பூங்கதிர் அல்லது இலைகள்.
47.	விஷ்ணுகிராந்தி	விஷ்ணுகிராந்தி. மலைப் பகுதியின் மணம்மிக்க இலை.
48.	துர்த்துரம், துத்தூரம்	பொன்ஊமத்தம்பூ அல்லது அதன் இலை.
49.	ஆரக்வதம்	சரக்கொன்றைப்பூ
50.	நந்தியாவர்த்மம்	நந்தியாவட்டம்பூ.
51.	சுவேதபத்தம்	வெள்ளைத்தாமரைப்பூ
52.	புன்னாகம்	புன்னைப்பூ.
53.	ஜாதி	சிறுசெண்பகப்பூ, ஜாதிப்பூ.
54.	பாடலீ	பாதிரிப்பூ.
55.	ஸஹதேவீ	சீதேவியார் செங்கழுநீர், சீதாதேவிஇலை.
56.	சதபத்ரீ	ஸ்ரீ நூறு இதழ்தாமரை அல்லது மஞ்சள்ஜெவிந்திப்பூ, செவ்வந்திப்பூ.
57.	லக்ஷ்மீ	தாளிப்பூ, வில்வப்பூ, தானிமரப்பூ.
58.	ஸ்தலாவிந்தம், ஸ்தலாப்ஜம்	நிலத்தாமரை, ரோஜாப்பூ, தரைத்தாமரை.
59.	தாதகீ	காயித்திப்பூ, ஆத்திப்பூ.
60.	துளசீ, பிருந்தா, சுரஸா	துளசிஇலை அல்லது பூங்கதிர்.
61.	கரவீரம்	அலரிப்பூ அல்லது அலரி இலை, (வெள்ளை அல்லது சிகப்புநிறம்)

62.	மல்லிகா	மல்லிகைப்பூ
63.	கிருஷ்ணமல்லிகா	ராமபாண மல்லிகைப்பூவகை.
64.	குரவம், குரபகம்	பட்டிப்பூ, மருதானிப்பூ, அழவனப்பூ.
65.	சதாவாரீ	தண்ணீர்விட்டான் கிழங்கு.
66.	கோசக்ஷுரா	நெருஞ்சில் இலை.
67.	கிருதாஞ்சலீ, ஸல்லகீ	யாணைவணங்கி இலை, ஆனைவணங்கி.
68.	மகாதுரோணம்	பெருந்தும்பைப்பூ (காசித்தும்பைப்பூ).
69.	துரோணம்	தும்பைப்பூ, சிறுதும்பை, (வெண்ணிறபூவும், இலையும்).
70.	மாலதீ	பிச்சிப்பூ, ஒருவகை மல்லிகை.
71.	பத்ரீ	பீளைப்பூண்டு (புனைப்பூண்டுச் செடிஇலை).
72.	மதுமந்திகா, மதூகம்	இலுப்பைப்பூ, ஒருவகை புஷ்பம்.
73.	ஸர்ஜரஸம்	ஸரளமரப்பிசினி, வெண்குங்குலியம், வேங்கைமரப்பிசினி.
74.	இந்திரவல்லீ	முடக்கத்தான் கொடி.
75.	ருத்ரபர்ணீ	ருத்ரஜடை, பெருங்குமிழ்.
76.	தாத்ரீ, ஆமலகம்	நெல்லிக்காய், நெல்லிமுள்ளிப்பொடி, நெல்லிஇலை.
77.	ஹரீதகீ	கடுக்காய், மருந்துகளில் தாய்காய்.
78.	வியாக்ரநகீ	புலிநகக்கொன்றைப்பூ.
79.	மாஞ்சிஷ்டீ	மஞ்சிஷ்டை, மஞ்சிஷ்டா.
80.	துருஷ்கம்	குந்துருக்கம்.
81.	ரேணு	சீனமிளகு
82.	கர்ணிகாரம்,	விருக்ஷோத்பலம் ஸ்ரீ கோங்கம்பூ.
83.	ஸரளம்	ஸரளமரப்பிசினி, (நிர்யாஸம் ஸ்ரீ கோந்துவகை).
84.	பத்ரகாஷ்டம்	தேவதாரு மரச்சிராய்தூள்.
85.	நவநீதம்	வெண்ணெய்.
86.	திராவிளம், விளங்கம்	வாயுவிளங்கம்.
87.	ஸஜ்ஜம்	நறுமணமட்டிப்பால், நெறியரிசிப்பால், ஸர்ஜரஸபிசினி.
88.	தக்கோலம்	தக்கோலம்.
89.	ராஸ்நா	அரத்தை, சித்தரத்தை.

90.	நாககேஸரம்	சிறுநாகப்பூ.
91.	ஜம்பூகா	நாவல்மரத்தின் பழம், பட்டை, இலைத்தளிர்.
92.	கபித்தம்	விளாமரத்தின் பழம் அல்லது இலை.
93.	அச்வத்தம், பிப்பலம்	அரசமரத்தின் பட்டை, தளிர்.
94.	குக்குளு	குங்குலியம்.
95.	ஏலா, ஏலம்	ஏலக்காய்.
96.	ஜீரகம்	நற்ஜீரகம்.
97.	கிருஷ்ணஜீரகம்	கருஞ்சீரகம்.
98.	ஸிதா	வெள்ளை சர்க்கரை, கற்கண்டு.
99.	குங்குமம்	குங்குமப்பூ.
100.	மேகம்	முத்தக்காசு.
101.	கிருஷ்ணாகரு	காரகில், (அகில்வகை) ஹரிசந்தனம்.
102.	ரோசநம்	கோரோசனை.
103.	ஶ்ரீவேஷ்டகம்	திருவட்டப்பிசினி, (தூபதசாங்கத்தின் ஒருபொருள்).
104.	கந்தகம்	கந்தகவகை, ஆணைக்கெந்தகம், நெல்லிகந்தகம், சுரைக்காய் கந்தகம்.
105.	ரஸம்	பாதரஸமணி, ரஸக்கட்டி.
106.	பிப்பிலீ	திப்பிலீ, அரிசித்திப்பிலீ.
107.	ஹஸ்திபிப்பலீ	யானைத்திப்பிலீ.
108.	பலாசம்	பொரசம்பூ அல்லது இலைமரப்பட்டை.
109.	தகரம்	தகரைஇலை, கையாந்தகரை.
110.	மநச்சிலா	மனோசிலை (ஒருவகை தாதுகட்டி).
111.	ரக்தசந்தனம்	செஞ்சந்தனம் (சந்தனமரவகை).
112.	லவங்கம், வராங்ககம்	லவங்கப்பூ, லவங்கப்பட்டை, இலைகள், தேவகுசுமம்.
113.	திராக்ஷை	திராக்ஷைவற்றல்.
114.	சுவேதலோத்ரம்	வெள்ளைலொத்திப்பூ.
115.	பஸ்மம், பஸிதம், விபூதி, பூதி	விபூதி, திருநீறு, வெண்ணீறு.
116.	ஸப்தலா	இருவாக்ஷி
117.	த்விகர்ணிகா	இருஇதழ்தாமரை.

118.	ரஜநீசூர்ணம், ஹரித்ராசூர்ணம்	மஞ்சள்பொடி, மஞ்சள்தூள்.
119.	கஷாயம்	மரப்பட்டைவகையின் ஊரல்நீர்.
120.	மார்ஜனம்	ஸ்ரீ எள்ளு, தர்பை நுணி, பொடிகள், மூலிகைகள் முதலிய தேய்க்கும் பொருள்வகை.

மேற்கண்ட சுப்ரபேதாகம 108 ஸ்நபனதிரவியங்களில் மற்றநூல்களில் சிலவேறுபாடுகளும் உள்ளன. இவற்றை முறையே சேகரித்துக்கலசநீரில்சேர்த்து இவற்றால் இறைவனை நீராட்டுவது சிறப்பு ஸ்நபனமாகும்.

இவ்விதமாக ஆகமங்களில்கூறப்படுகிறபலவகைபொருட்களால் செய்யத்தக்க சிறப்பு திருமஞ்சனத்தை யாவரும் சிறப்பாகச்செய்து, சிவனருளால் இஷ்டஸித்தியைப்பெற்று நாம் இனிதுவாழ்வோமாக. இறைவனுக்கு விதிமுறைப்படி வழிபாட்டைச் செய்வதனாலேயே யாவரும் ஸகலபாபங்களினின்றும் விடுபட்டு, ரஜோகுணம், தமோகுணம், சோகம், துக்கம், ஆசை முதலியனவற்றவர்களகாப் பிறவிப்பெருங்கடலைத் தாண்டுகின்றனர். ஆதலால் எளியபொருள்-களையும் கூட நாம்பக்தியோடும், சிரத்தையோடும், அதன்புனிதம்கெடாதவாறு முறைப்படி சேகரித்து, அவற்றை சிவனுக்கு அர்ப்பணம் செய்வதால் நாம் யாவரும் பிறவிப்பயனை எளிதில் பெற்றுஉய்ய, ஞானநூலான ஆகமங்களின் அபிஷேகவிதி நமக்கு பெரிதும் உதவுகின்றன.

கிந்துஆதேஹாவஸாநம்து யப் பூஜயதி பக்தித:
ஸ சிவஸ் ஸர்வகிருத் யஜ்வா ஜீவன்முக்தஸ் ஸ உச்யதே.

எனும் ஆகமகூற்றின்படி ஆயுள்உள்ளவரை ஆண்டவனைப் பக்தியோடு பூசிப்பவர், இவ்வுலகில் சிவனாகவும், எல்லாவற்றையும் செய்தவராகவும், உயிர்வாழும் முக்தராகவும் கூறப்படுவதால் வழிபாட்டின் பெருமையை உணர்ந்து, வழிபாட்டை விதிமுறைப்படி செய்வது அவசியமாகும்.

அருள்நெறியாம் ஆகமநெறியில் நாமும்வாழ்ந்து, சிவனைவழிபட்டு சிவனருள் பெற்று உய்வோமாக.

திவ்யாபிஷேகவிதி என்ற இந்த நூலானது இருதயத்தில் சிவபெருமனையும், குருவையும் தியானித்து இயன்றளவு சிவாகமங்களைப்பார்த்து, சோழபாண்டியபுரம் விஜயகுருக்களுடைய குமாரரான சோமசேகர குருக்களால்சுருக்கமாகத்தொகுக்கப்பட்டது.

இதனைக் கண்ணுரும் அன்பர்கள் எல்லோரையும் சங்கரன் ரக்ஷிக்கட்டும்.

வாழ்க சீர்அடியார் எல்லாம்.
வாழ்க வளமுடன்.
மேன்மை கொள் சைவநீதி விளங்கு உலகமெல்லாம்.
************* சுபம் *************

அரும்பதவிளக்கம்.

ஆறுவகை பருவகாலங்கள் .

1.	வஸந்தருது காலம்	சித்திரைமாதமும், வைகாசிமாதமும், கோடைகாலம், வசந்தகாலம்
2.	கிரீஷ்மருது காலம்	ஆனிமாதமும், ஆடிமாதமும், இளவேனிற்காலம்
3.	பிராவிட் வர்ஷருதுகாலம்	ஆவணி மாதமும், புரட்டாசி மாதமும் கார்காலம்
4.	சரத்ருதுகாலம்	ஐப்பசி மாதமும், கார்த்திகை மாதமும், முன்பனிக்காலம்
5.	ஹேமந்தருதுகாலம்	மார்கழி மாதமும், தை மாதமும் பனிக்காலம்
6.	சிசரருதுகாலம்	மாசி மாதமும், பங்குனி மாதமும், இலையுதிர் காலம்

சாந்திரமான சௌரமான வேதாகமப்படியான
12 மாதங்களின் பெயர்கள் :

7. சைத்ரம், மேஷமாஸம், மதுமாஸம் - சித்திரை.

8. வைசாகம், ரிஷபமாஸம், மாதவமாசம் - வைகாசி.

9. ஜ்யேஷ்டம், மிதுனமாசம், சுக்லமாசம் - ஆனி.

10. ஆஷாடம், கடகமாசம், சுசிமாசம் - ஆடி.

11. சிராவணம், சிம்மமாசம், நபோமாசம் - ஆவணி.

12. பாத்ரபதம், புரோஷ்டம், கன்யாமாசம், நபஸ்யமாசம- புரட்டாசி.

13. ஆச்வீனம், ஆச்வயுஜம், துலாமாசம், இஷமாசம் - ஐப்பசி.

14. கார்த்தீகம், விருச்சிகமாசம், ஊர்ஜமாசம் - கார்த்திகை.

15. ஆக்ரஹாயனம்,மார்கசீர்ஷம்,தனுர்மாசம்,ஸஹஸ்மாசம்-மார்கழி.

16. பௌஷம், புஷ்யம், மகரமாசம், ஸஹஸ்யமாசம் - தை.

17. மாகம், கும்பமாசம், தபோமாசம் - மாசி.

18. பால்குனம், மீனமாசம், தபஸ்யமாசம் - பங்குனி.

அருஞ்சொற்கள்.

19. லிகுசபலம், ஜம்பீரபலம் - எலுமிச்சம்பழம்.

20. கோத்ரவம் - கேழ்வரகு.

21. சிரீஷம் - காட்டுவாகைமலர்.

22. குடந்நடம் - பெருங்கோரைக்கிழங்கு.

23. புஷ்கரம் - தாமரைக்கிழங்கு (பத்மகந்தம்).

24. மயூரசிகீ - மயில்கொன்றைமலர்.

25. ரஸகண்டம் - கற்கண்டு.

26. முத்கசூர்ணம் - பயித்தமாவு.

27. மூலம் - வேர்.

28. பீஜம் - விதை (பீஜானி - விதைகள்)

29. பிரியங்கு ஸ்ரீ தினைதானியம், தினையரிசி.

30. வைணவம் -மூங்கிலரிசி.

31. இந்தீவரம் - கருநெய்தல் மலர்.

32. பிலக்ஷம் - இச்சிமரத்து இலை, பட்டை.

33. ஸ்ரீகண்டம் -வில்வமரத்துவேர்.

34. சர்க்கரா - நாட்டுசர்க்கரை.

35. பிஷ்டம், யவசூர்ணம் - பச்சரிசிமாவு.

36. மாஷசூர்ணம் - உளுத்தமாவு.

37. கந்தம் - கிழங்கு.

38. சூர்ணம் - பொடி.

39. வல்கலம் - மரஉரிப்பட்டைகள்.

40. பாதம் - கால்பாகம், 1பங்கு.

41. கிரஹணம், ஸங்கிரஹணம் - எடுத்துவருதல்.

42. பலப்ராப்தி - பயனைஅடைதல்.

43. தக்ஷிணம், அவாசீ, யாம்யம் - தெற்குதிசை.

44 உத்தரம், உதீசீ, ஸௌம்யம் - வடக்குதிசை.

45. பிருஷ்டம், பிருஷ்டபாகம் - பின்புறம்.

46. வாமம், ஸவ்யம் - இடதுபக்கம்.

47. சர்க்கரா - சுக்காங்கல், பொடித்தகல்தூள்.

48. ராஷ்ட்ரம், தேச:, ஜநபதம்ஸ்ரீ தேசம், நாடு.

49. ப்ராகார: ஸ்ரீ மதில், சுற்றுவளாகம்.

50. கூடம் ஸ்ரீ கொட்டகை, கூம்புக்கூரை

51. கோஷ : - இடைச்சேரி

52. பானீயம் - குடிக்கிறதண்ணீர்.

53. கடகம், குளீர:, கர்கடம் - நண்டு

54. புஷ்கரிணீ - நாற்சதுரமானகுளம்.

55. கடிகா - நிமிஷம், கடிகை.

56. அஹஸ், அஹர் - பகல்.

57. வாஸர: வார: - நாள், கிழமை.

58. திநாந்த : - ஸாயங்காலம்.

59. அயனம் - மார்கம் , வழி பாதை

60. வஸனம் - ஆடை, துணி.

61. சுல்பம், தாம்ரம் - தாமிரம், செப்பு, செம்பு.

62. கச்சூர: - கிச்சிலிக்கிழங்கு

63. பத்ரதருணீ - சாமந்தி.

64. நவநீதம் - வெண்ணெய்.

65. பாண்டீ - வல்லாரை.

66. ராஸ்தா - சித்தரத்தை.

67. தமாலகீ - கீழாநெல்லி.

68. பிராம்ஹீ - பொன்னாங்காண்ணி.

69. அகரு: - அகில்.

70. சூக்ஷ்மகாலம் - ஆத்யாத்மிக நுட்பகாலம்.
71. பர்ணம், பத்ரம், தளம் - இலை, தழை.
72. அர்தம், த்விபாதம் - அரைப்பாகம், 1பங்கு.
73. ஸமாஹரணம் - ஒன்றுசேர்த்திடுதல்.
74. பூர்வம், பிராசீ, ஐந்திரீ - கிழக்குதிசை.
75. பச்சிமம், பிரதீசீ, வாருணீ - மேற்குதிசை.
76. நூதனம், நவம் - புதியதானது
77. தக்ஷிணம், அபஸ்வயம் - வலதுபக்கம்.
78. ஸிகதா - மணல்
79. ஸஸ்யம் - பயிர், விளைச்சல்.
80. ராஜதாநீ - தலைநகர்
81. ப்ரபா - தட்டை பந்தல்
82. வீதீ, ரத்யா - வீதி, தெரு
83. பக்கண: - வேடச்சேரீ
84. ஸ்நாநீம்ய - குளிக்கிற தண்ணீர்.
85. ஸமுத்ரம், அர்ணவ:, ஸிந்து - கடல்.
86. காஸார:, தாடக : - குளம்.
87. நிமேஷ: - நிமிஷம்.
88. நிசா, ராத்ரி, ரஜநீ - இரவு.
89. பிரத்யூஷ : - பின்மாலை.
90. மாஸ: - மாதம்.
91. படம், - வஸ்திரம், அம்பரம்.
92. ஆரகூடம் - பித்தளை, உலோகவகை.
93. நக்தமால : - புங்கமரம்.
94. சூரணகந்தம் - கரணைக்கிழங்கு.
95. வநஸ்பதி:, பாதப:, துரும:, விடபி - மரம்.
96. ஒஷதீ, பேஷஜீ - மருத்துவப்பச்சிலை.
97. இக்ஷுரா - நீர்முள்ளி.

98. அஜமோதா - ஓமம்.

99. சக்ரபுஷ்பீ - குப்பைமேனி.

100. அகரீ - தேவதாருமரம்.

101. வைத்யமாதா - ஆடாதொடை.

102. காஷ்டை - பதினைந்து நிமிஷகாலம்.

103. கலை - 15காஷ்டைக் காலஅளவு.

113. யாமம், ஸந்தி - ஏழரைகடிகை 3மணி.

104. பிரஸ்தம் - 4 குடுபம் (1படி) இதுவே 20 பலம்.

115. ஆடகம் - 4 பிரஸ்த் (4 படி) 1 மரக்கால்.

105. சிவம் - 2 மரக்கால், இருஆடகஅளவு.

116. பாரம் - 16 மரக்கால், 2காரிஅளவு.

106. ஹஸ்தமானம் - ஒருகைமுழம்அளவு.

117. தலம் - இரண்டுசுத்தி அளவு.

107. பிரமாணம் - அளவு.

118. புண்யவர்தனம் - நற்பயன்கூடுதல்.

108. பாபக்ஷயம், பாபஹரம் - பாவநீக்கம்.

119. ஆயுர்வர்தனம் - வாழ்நாளை வளர்ப்பது.

109. சோகஹரம் - மனத்துயரைப் போக்குவது.

120. ஜயப்ரதம் - வெற்றியைத் தருவது.

110. மிருத்யுநாசனம் - அழிவைத்தடுப்பது.

121. புண்யபலதம் - இறைவனடி சேர்ப்பது.

111. குரோதநாசம் - கோபத்தைப் போக்குவது.

122. லோகவசியம் - உலகத்தோரைக்கவர்வது.

123. ஸம்பத்ப்ரதம் - செல்வங்களைத்தருவது.

124. சாலீ, ஹேமசாலீ - ஆறுமாதப்பயிரான தங்கசம்பா முதலிய சம்பாரகநெல்வகை.

125. முஸ்தகம், முஸ்தா - துங்கமுஸ்தம், கோரைக்கிழங்கு.

126. பிருங்கராஜம் - கையாந்தகரை எனும் பச்சிலை.

127. ஹிமதோயம், ஹிமாம்பு - பன்னீர் (ரோஸ்வாட்டர்) ஷ்பசாரம்.

128. ஜலத்திரவியாணி - சுகந்த திரவியங்களின் பொடி.

129. ரஸபஞ்சாமிருதம் - பால், தயிர், நெய், தேன், கரும்புசாறு ஐந்தும் கலந்தது.

130. பழபஞ்சாமிருதம் - பால், நெய், தேன், சர்க்கரை, முக்கனி சேர்ந்தகலவை.

131. அன்னம், ஓதனம் - பச்சரிசிப்பொங்கசோறு (சால்யன்னம்)

132. உஷ்ணோதகம், கோஷ்ணதோயம் - சுடுநீர், வெந்நீர்.

133. அம்பு, ஆப:, ஸலிலம், ஜலம், தோயம், உதகம், வாரி - தூயநீர், குடிநீர்.

134. மிருத்திகா, பிருதிவீ, மிருதம், மிருத் - மண்.

135. சிருங்கம் (கோசிருங்கம்) - கொம்பு,பசுவின்கொம்புநீர்.

136. பல்லவம், கிஸலயம் - இலைத்தளிர் வகைகள்.

137. குட்மளம், கலிகா, முகுளம் - மொக்கு, மொட்டுகள்.

138. திரவ்யம் - பொருள் (திரவ்யாணி - உரியபலபொருட்கள்)

139. துவக், த்வசம், வல்கலம் - தோல் (மரங்களின் தோல் - மரப்பட்டை)

140. அபாவம், லோபம், ஹீநம் - இல்லாமை (அபாவே - இல்லாதபொழுதில்)

141. ஸிதஸர்ஷபம், கௌரஸர்ஷபம், சித்தார்த்தம் - வெண்கடுகு.

142. அஸ்திரம் - மந்திரங்களின் ஆயுதஉருவத்திற்கு பெயர்.

143. திரிபாதம், பாதோனம் - முக்கால்பாகம், 1 பங்கு.

144. ஏகம், பூர்ணம், ஸமக்ரம் - முழுபாகம், ஒருமை ஒருபங்கு.

145. வாஞ்சிதம், அபீஷ்டம், காம்யம், காங்க்ஷிதம், ஈப்ஸிதம் - விரும்பியபயன்.

146. நக்ஷத்ரம், ருக்ஷம், பம், தாரா, உடு - நட்சத்திரம், தாரகை, விண்மீன்கள்

147. ஸந்தி - ஒருஆலய பூஜைக்குரியகாலம், மூன்று மணிநேரம், ஒருயாம காலம்.

148. யாமம் - ஜாமம், மூன்றுமணி நேரகாலஅளவு, ஏழரைநாழிகை காலஅளவு.

149. முகூர்த்தம் -மூன்றேமுக்கால் நாழிகை. ஒன்றரைமணிநேரகாலம்.

150. உஷக்காலம் ஸ்ரீ அதிகாலை. உதயத்தின்முன்பு 3.45 நாழிகை. காலை 4.30 முதல் 6.00 வரை.

151. காலசந்தி, பிராதக்காலம் - உதயத்திற்குப்பின் 3மணி நேரம்

152. உச்சிகாலம், மாத்யான்ஹிகம் - நடுப்பகல், மதியம், உச்சிவேளை

153. பிரதோஷகாலம் - முன்னிறவுக்காலம், மாலையின் முடிவு.

154. ஸாயரசைக்ஷ, ஸாயங்காலம், ரஜநீ - இரவு, நிசி.

155. அர்தயாமம், அர்தராத்ரி, மத்யராத்ரம் - நடுஇரவு, நடுநிசிநேரம்.

156. மத்யகாலம், காலாந்தரம், காலாந்தரிதம் - இடைப்பட்டகாலம்.

157. திசா, காஷ்டா, ககுப:, ஆசா, ஹரிதா - திசைகள்.

158. விதிசா, அந்தராளம், திசாந்தரம் - திசைமூலைகள், நான்குமூலைகள்.

159. கல்பனம், கிலுப்தி, விந்யாஸம், ப்ரகல்பனம் - அமைத்திடல்.

160. யந்திரம், பட்டயம், லோகபட்டம் - மந்திரஎழுத்து பதிந்துள்ள கோட்டு உலோகத்தகடு.

161. ஸாந்நித்யம், ஸந்நிதானம் - அருள்தர வெளிப்பட்டு விளங்குவது.

162. பிரச்சன்னபடம், திரஸ்கரிணீ, ஆச்சாதயித்ரீ, ரோதயித்ரீ - திரைச்சீலை.

163. பிரயத்னம் - விடாமுயற்சி, பெருமுயற்சி, கடினஉழைப்பு.

164. விதி - கட்டளை, கூற்று, சாசனம், முறை, செய்முறை, விதிமுறை.

165. பிம்பம், பேரம், பிரதிமை, விக்ரஹம், மூர்த்தம் - சிலை, பதுமை, படிமம், சிற்பம், சுதை.

166. மூலபேரம், துருவபேரம் - பிரதானசிலை, அசையாதசிலை.

167. உத்ஸவபேரம், யானகபேரம் - ஊர்வலத்திற்கான சிலை.

168. சலபேரம், சரபேரம், ஜங்கமபேரம் - அசைக்கக்கூடிய சிலை.

169. லோஹபேரம், உலோஹஜம் - உலோகத்தாலான சிலை, பஞ்சஉலோகசிற்பம்.

170. தாருஜம், வார்க்ஷம் - மரச்சிலை, மரத்தால் செய்யப்பட்டது.

171. சித்திரம், பித்திசித்ரம் - முழுஉருவச்சிற்பம், சுவரோவியம்.

172. படம், சித்ரபடம் - துணி ஓவியம், துணியில் வண்ணம்தீட்டிய உருவம்.

173. ஸ்நாநவேதீ, ஸ்நானவேதிகை - நீராட்டலுக்கான சிம்மபாதமுள்ள நிரகற்றும்முகப்பு உள்ள மேசை.

174. ஸ்நாநம் - முழுக்காடுதல், நீராடுதல், தலைக்குளித்தல்

175. புராணம், பிரத்னம், புராதனம் - பழையதானது, உபயோகத்திலிருப்பது

176. சராவம் - மடக்கு, மண்சட்டி, கிண்ணிஉருவபாத்திரம்.

177. கோஷ்ணாம்பு - மிதவெப்பநீர், வெதுவெதுப்பான சுடுநீர்.

178. அபாவம், லோபம், ஹீநம், ராஹித்யம் - இல்லாமை, விடுபட்டுப்போதல்.

179. ஸபலம்,ஸார்த்தக்யம்,ஸஸித்தம்-பயனுடையது, பலன்தருவது.

180. நிஷ்பலம், நிரர்த்தகம்,அஸித்தம் - பயனற்றது,பலன்தராதது.

181. க்ஷாளநம் - அலம்புதல், கழுவுதல், குளிப்பாட்டுதல், சுத்தம்செய்தல்.

182. புரோக்ஷணம் - நீர்தெளித்தல், நீரைஇறைத்தல், நீரைத்தூவுதல்

183. ஆதி, ஆத்யம், ஆரம்பம் - துவங்கும் நேரம், துவக்ககாலம்.

184. அந்தம்,அந்திமம்,அவஸானம் - முடிக்கும் நேரம், முடியும்காலம்.

185. நிவேதனம், நிவேத்யம், நைவேத்யம் - தெரிவித்தல், அறிவித்தல், விண்ணப்பித்தல்

186. பீடம், பிண்டிகா, விஷ்டரம், ஆஸநம், ஆதாரம் - இருக்கை, மேடை, தாங்கி.

187. ஆலேபம், லேபனம், லிப்யம் - பூசுதல், தடவிவிடுதல்.

188. ஆச்சாதனம், அபிதானம், திரஸ்கரணம் - மூடுதல்,மூடிவைத்தல்.

189. அக்ரே, ஸாம்னம், ஸமக்ஷம், புரத: - ஒன்றிற்கு எதிர்புறம், எதிர்திசையில்

190. பார்ச்வம், பார்ச்வத்வயம் - பக்கங்கள், இருபக்கங்கள், வலதுஇடது புறங்கள்

191. விநாசனம், விநாசகம், ஹரணம், நாசகம்-அழிப்பது, போக்குவது.

192. தாயகம், பிரதம், பிரதாநம், தேயம், தானம் - கொடுப்பது,

அளிப்பது, தருவது.

193. வர்தனம், விருத்திதம், புஷ்டிதம் - வளர்ச்சிதருவது, பெருக்குவது, செழிப்புதருவது.

194. கோமயம், கோசகிருத் - பசுவின் சாணம், பசுஞ்சாணம்.

195. கோஜலம், கோமூத்ரம் - பசுவின் சிறுநீர்.

196. மத்யே, பிரதானே, பிராம்ஹே - நடுப்பகுதியில்.

197. ஸ்தண்டிலம் - தானியத்தாலான சமசதுரப்பரபப்பாகிய இருக்கை.

198. சூதபத்ரம் - மாவிலை (சூதபல்லவம் ஸ்ரீ மாவிலைத்தளிர்).

199. கூர்ச்சம், தர்பவேஷ்டனம் - தர்பைமுடிச்சு, பின்னிய தர்பைப்புல் முடிச்சு உடையது.

200. ஸௌவர்ணம், ஹைமம் - தங்கத்தாலானது, பொன்னால் செய்யப்பட்டது.

201. ராஜதம், ரஜோநிர்மிதம் - வெள்ளியாலானது, வெள்ளியில் செய்யப்பட்டது.

202. தாம்ரமயம், தாம்ரகம் - செம்பினாலானது, தாமிரத்தில் செய்தது.

203. கும்பம், கடம், கலசம் - வாய்குறுகிய வயறுபெருத்த பெரியகுடம்,

204. கரகம், கிண்டி - மூக்குவைத்த சிறுகுடம், மூக்குள்ள கிண்டி, பலமூக்குவைத்த குடம்.

205. மணிக: பாண்டம் - சால், பெரியஅண்டா, பெரியஅடுக்கு.

206. ஸேசனம், மஜ்ஜனம், ஸ்நபனம், ஸ்நானம் - நீராட்டுதல்.

207. அபிஷேசனம், ஸ்ரீமஜ்ஜனம் - முழுக்காட்டுதல்.

208. பிருதிவீ, தரணி, தரா, வசுமதீ, பூமி - தரை, இடம்.

209. மிருத்திகா, பிருதிவீ - மண், மண்கட்டிகள்.

210. கேதாரம், ஸஸ்யக்ஷேத்ரம் - கழனி, வயல், பயிர்விளைநிலம்.

211. க்ஷேத்ரம், பூதலம், ஸ்தலம் - தரை, இடம், பகுதி, தளம்.

212. பாரதம், பாரதவர்ஷம் - இந்தியா, இமயமலைக்குத் தெற்கு திசையில் உள்ள சேதம்.

213. மண்டலம் - ஜில்லா, பெரியவட்டப்பகுதி, தேசப்பகுதி.

214. உபமண்டலம் - தாலுக்கா, சிறுவட்டப்பகுதி.

215. கிராம: - சிறியஊர், மக்கள் வசிப்பிடம்.

216. புரீ, புரம், நகரீ, பட்டணம் - பட்டணம், கடல்சார்ந்த தொழில்நகரம்.

217. சாலா - பலபேர் சேருமிடம், பயன்பாட்டிடம்.

218. உத்யானம், நந்தனம், ஆராமம் - தோட்டம், பூந்தோட்டம்.

219. சிருங்காடம் - நாற்சந்தி, நான்குதெருக்களும் கூடிப்பிரியும் இடம்.

220. மார்க, பதா, அத்வா - வழி, ஒருவழிப்பாதை.

221. நிதி: - புதையல், ஒன்றுசேர்ந்து நிறைந்துள்ளது.

222. ஹர்மியம், பிராஸாதம், மந்திரம் - கோவில், ஆலயம்.

223. அக்ரஹார: - பிராமணர்களின் வசிப்பிடமான ஊர்.

224. சண்டலாவாடிகா - பறைச்சேரி, புலால் உண்போர் வசிப்பிடம்.

225. அவடம், பிலம் - வளை, பொந்து, பள்ளம், குழி.

226. ஹோரா - ஒருகிரஹத்தின் காலம், ஒருமணிநேரம்.

227. பக்ஷத்வயம், பக்ஷம் - 15திதிகளின் காலஅளவு, வளர்பிறை & தேய்பிறைகாலம்.

228. அப்த:, வர்ஷ:, வத்ஸர:, ஸம்வத்ஸரம் - வருஷம், ஆண்டு.

229. கிரகணம், உபாராஹ : - கிரஹணம், சூரியகிரகணம், சந்திர கிரகணம், இரண்டு.

230. துர்தினம் - மப்புமூடினதினம், தீயநாள், நற்ச்செயலுக்குக் கூடாத நாள்.

231. தர்சஅமாவாஸ்யா-அமாவாசை,சூரியரும்,சந்திரரும் கூடும் நாள்.

232. ராகா, பூர்ணிமா - பௌர்ணமி, முழுநிலவு உள்ளநாள்.

233. பிரதிபத், பிரதமா - பிரதமைதிதி, முதலாவது திதிகாலம்.

234. தோரணம், துவாரம், பிரதீஹார: - வாசல், வாயில்காவலன்.

235. பிராங்கணம் - முற்றம், பயன்பாட்டுத் தாழ்வாரப்பகுதி.

236. தர்பணம், ஆதர்ச: - முகம் காட்டும் கண்ணாடி

237. க்ஷௌமம், துகூலம், கௌசேயம் - வெண்பட்டுத்துணி,

238. அயஸ், அய,கிருஷ்ணலோஹம்-இரும்பு,உலோகவகையில் ஒன்று.

239. ஸீஸம் - ஈயம், உலோகவகையில் ஒன்று.

240. காம்ஸியம் - வெண்கலம், உலோகவகையில் ஒன்று.

241. டங்க - கல்லுளி (ஆயுதவிசேஷம்), மலையைப் பிளக்க உதவுவது.

242. சகலம், கண்டம் - துண்டு ஒன்றின் ஒருசிறுபகுதி.

243. துரிதம், பாபம், ஏந: - பாவம், தீவினைப்பயன், பிறரைத் துன்பமுறச் செய்தல்.

244. சதபத்ரம் - தாமரை, நூறிதழ்கள் உள்ளமலர், மஞ்சள் சாமந்திப்பூ.

245. ஸ்தூலகாலம் - வெளிஉலகத்திய லௌகிக காலம்.

246. துருடி - யோகியின் நான்குமுறை இமைக்கொட்டுகிறநேரம்.

247. லவம் - இருதுருடி. (8முறைஇமை கொட்டும்காலம்).

248. நிமிஷம் - இருலவம். (16முறை இமை கொட்டும்காலம்)

249. முகூர்த்தம் - கலையின் ஒருஅம்சம், 2கடிகை.

250. திவஸம், தினம் - எட்டு யாமம் கொண்டது. ஒருநாள்.

251. அஹோராத்ரம் - ஒருபகல், ஒருஇரவு கொண்ட ஒருநாள்.

252. பிந்து - சுட்டுவிரலினால் இருபர்வஅளவில் சொட்டவிட்ட ஒருசொட்டு.

253. கர்ஷால்தம் - ஆறுபிந்து, 6சொட்டுகளின்அளவு, அரைகர்ஷம்.

254. கர்ஷம் - 12பிந்து சொட்டுகளின்அளவு.

255. முஷ்டி - 2 கர்ஷம், 24 சொட்டுகளின்அளவு.

256. பிரச்ருதி - 2முஷ்டி, வீசம்படிஅளவு (48 சொட்டுகள்).

257. குடுபம் - 2 தாரணை, கால்படி (1/4 படி) 2பிரசிருதி (96 சொட்டு).

258. ாரணை - 2பிரச்ருதி, 8பலம், முக்கால்படி (3/4 படி).

259. துரோணம் - 4 மரக்கால்அளவு, 2சிவம்அளவு.

260. காரி - 8 மரக்கால்அளவு, 2துரோணஅளவு.

261. விதஸ்தி, முகம், தாலம் - 1சாண்அளவு, பெருவிரல், நடுவிரல் இடைப்பட்ட நீளஅளவு.

262. பிராதேசம் - பெருவிரல், சுட்டுவிரல்களின் இடைப்பட்ட நீளஅளவு.

263. சுக்தி - கைப்பிடிக்கும்உள்ள தானியஅளவு 225நெல்நிரம்பியது.

உ

ஸ்ரீகுருப்யோநம:

சென்னை சிவத்திரு. வி. சோமசேகர சிவாசார்யார் தொகுத்து வெளிவந்துள்ள ஸமய நூல்கள் ஆஸ்தீக அன்பர்கள் வாங்கிப் பயனடையவும்

1. விபூதி மகிமை (கையிருப்பு இல்லை)
2. உருவத்தில் இறைவன் (கையிருப்பு இல்லை)
3. நவராத்ரிதேவியர் துதித்திரட்டு (கையிருப்பு இல்லை)
4. நூதனாலய பஞ்சஸம்ஸ்காரவிளக்கம் (கையிருப்பு இல்லை)
5. ஆலயாகார அர்த்தவிவரணம் (கையிருப்பு இல்லை)
6. காக்கும் காளியின் காருண்ய மஹிமை (கையிருப்பு இல்லை)
7. சைவாகமத்தில் சிவயோகநெறி (தமிழில் 100 பக்கம்) ரூ.100.00
(சிவயோகப் பயிற்சிசெய்யும் விதிமுறைகள், அதன் எட்டு உறுப்புக்கிரியைகள், செய்முறைகள், ஆகமச்சான்றுகளுடன் விளக்கும் நூல்)
8. திவ்யாபிஷேக விதி (தமிழில் 136 பக்கம்) ரூ.150.00 (கையிருப்பு இல்லை)
(தெய்வங்களுக்கான திருமஞ்ஜன விதிமுறைகள், அபிஷேகத்தின் பொருட்கள், இலக்கணங்கள், 36 வகைகள், பயன்கள் இவற்றை ஆகம சான்றுடன் விளக்கும் நூல்.)
9. புஷ்பார்ச்சன விதி (தமிழில் 124 பக்கம்) ரூ.150.00 (கையிருப்பு இல்லை)
(இறைவழிபாட்டிற்கு ஏற்ற 200 மலர்வகைகள், காலங்களுக்கு உரியவை, மலர்களின் சேமிப்புமுறை, பயன்பாட்டுமுறை, மலர்வகைகளின் பயன்கள் இவற்றை சான்றுடன் விளக்கும் நூல்)
10. உத்ஸவபேதக் கிரியாபோதம் (தமிழில் 172 பக்கம்) ரூ.300.00 (கையிருப்பு இல்லை)
(சைவாலய விழாவகைகளின் செயல்முறைகள். பெருவிழாவின் 24 வகைகள், விழாக்கிரியைகள், தெய்வப்புறப்பாட்டுமுறை, ஹோமபலிதான முறைகள், விழாக்கால பரிஹாரக்கிரியைகள் இவற்றை சான்றுகளுடன் விளக்கும் ஆய்வுப்புத்தகம்)

11. நக்ஷத்திர சாந்தி விதானம் (தமிழில் 300 பக்கம்) ரூ.600.00

(27 நட்சத்திரங்களின் பரிஹார சிறப்புஹோமங்கள், சாந்தி விதிமுறைகள், பிறந்தநாளில் செய்யத்தக்க வழிபாட்டுவகைகள், தானவகைகள் இவற்றை சான்றுகளுடனும், விஷயங்களை அட்டவணையில் விளக்கும் ஆய்வுப்புத்தகம்)

12. ஹோம லக்ஷண ஸங்கிரஹம் (தமிழில் 326 பக்கம்) ரூ.300.00

(இறைவேள்விகளின் இலக்கணங்கள், 36வகையில் அக்னியின் உருவப்படங்கள், யாகசாலைகள், குண்டங்கள், 16வகைஹோமங்கள், ஹோமப்பொருட்கள், ஹோமகாலத்திய பரிஹாரக்கிரியைகள் இவற்றை சான்றுடன் விளக்கும் ஆய்வுப்புத்தகம்)

13. புவனேச்வரீ பூஜாகல்பம் (தமிழில் 175 பக்கம்) ரூ.300/-

(தேவீஉபாசனாமுறை, தத்துவவிளக்கம், புவனேச்வரீபூசையின் செய்முறை, ஸ்ரீசக்ரதேவிகளின் அரியபல துதிகள், பலவகை நாமார்ச்சனைகள், அடங்கிய வீட்டுப்பூசைக்கான நூல்.)

14. சிவாகம கட்டுரைத் திரட்டு (பாகம் 13) (தமிழில் 136 பக்கம்) ரூ.200/-

(சைவாகமங்களில் ஆறுஅறிஞர்களின் ஆறுதலைப்புகளைப் பற்றிய சான்றுடன் கூடிய 6 சிறப்புக்கட்டுரைகளின் தொகுப்புத்தமிழ்நூல் வரிசையில்1)

15. சண்டீயாக மஹிமை விளக்கம் (தமிழில்) ரூ.300/-

(சண்டீதேவியின் மஹிமைகள், சண்டீயாக வகைகள், சண்டீஹோமத்திற்கான பொருட்கள், செய்முறைகள், சண்டீதுர்கையின் அரியபல துதிகள், பலவகை நாமார்ச்சனைகள் அடங்கிய தமிழ்நூல்)

16. திவ்ய ஸ்தவ கதம்பம் (தமிழ்.& கிரந்தஎழுத்தில்) (பக்கம்-150) ரூ.200.00
(தெய்வத்துதித் திரட்டு)

கிரந்தஎழுத்தில் மூலமானதுதிகளும், அவைக்கு சமஸ்கிருதம் மற்றும் தமிழ் இருமொழிகளில் பதவுரையும் கொண்டுள்ள 200 துதிகள் உள்ளநூல்.

17. காளீ பூஜா ப்ரபாவம் (பக்கம்-380) ரூ.450.00
(காளீபெருமையும், வழிபாட்டுமஹிமையும்)
காளியின் உருவவகைகள், தத்வவிளக்கங்கள், பூஜைமுறைகள், படங்களுடன் 54ரூபதியானங்கள், மந்திர யந்திர வகைகள், அரியதுதிகள், 108, 300, 1000 நாமாவளிவகைகள், விருப்பப்பிரார்த்தனைகள் கொண்டுள்ளநூல்.

18. சுபாஷித ரத்னமாலா - நற்கூற்று மணிமாலை (பக்கம்-356) ரூ.400.00
(மூலமும் - உரையும் முற்றிலும் தமிழ்எழுத்தில்)

இராமாயணம், மஹாபாரதம், ஸ்மிருதிகள், புராணங்கள், காவியங்களிலிருந்து தொகுக்கப்பட்ட 1008 நீதிசாஸ்த்திர உபதேச நல்மொழிகளை கருத்துரையுடன் கொண்டுள்ளநூல்.

19. சிவாகம சூக்தி மஞ்ஜரீ (சிவாகம நல்மொழிப் பூங்கொத்து) ரூ.200.00

சைவாகமங்களில் அனைவரும் அறியவேண்டிய நல்மொழிகளை, தனித்தனி தலைப்புகளில் தமிழில் மூலசுலோக சான்றும் அவைக்கு தமிழில்கருத்துரையும் கொண்ட 324 தருமங்களின் தொகுப்புநூல்.

20. சைவாகமார்த்த ப்ரபந்தாவளி. முதல்பாகம் (முற்றிலும் தமிழில்)

திரு.வி.சோமசேகர சிவாசாரியார் 1995முதல் பலகருத்தவை நிகழ்ச்சிகளில் இதுவரை அளித்துள்ள சைவாகமக் கட்டுரைகளின் தொகுப்புநூல்.

21. சைவசப்த நிர்வசன சதகம். (சைவசமய நூறு சொற்களின் தமிழ்விளக்கம்)

அரியசொற்களுக்கு பெயரின் சான்றுடன் காரணவிவரங்களைக் கூறும்நூல்.

22. சைவாகமவிஷய வரைபடங்கள் (சான்றுகளுடன்) (A3 அளவு ஷீட்டில்)

ஆகமக்கிரியைகள், அபிஷேககலச ஸ்நபனவகைகள், அங்குரவகைகள் யாகசாலைகள், தேவாலயங்கள், மண்டபங்கள், விமானங்கள், தத்துவவிவரணம், ஷடத்வதர்சினீ, குண்டங்கள், தீக்ஷாமண்டலங்கள் நவாக்னி மூர்த்திகள் மற்றும் பல அச்சிட்டவரைபடங்கள் தனித்தனியே உள்ளது.)

23. ஆலயதேவதா ப்ரதிஷ்டாயந்திர தகடு ஒன்று கிரந்தஎழுத்தில் ரூ.1000.00

(கோயிலின் தெய்வச்சிலைகளுக்கான பிரதிஷ்டைக்கான யந்திரங்கள், தாமிரக்தகட்டில் அளவு இஞ்ச் 3 x 3 அல்லது 5 x 5 ல் ஆகமவிதிமுறைப்படி எழுதிய, உரிய மந்திரவகைகளுடன் கூடியவை சிலவகைமட்டும் கிடைக்கும்.

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

ஸ்ரீ மஹா சாஸ்தாரம் சரணம் ப்ரபத்யே. சாஸ்தா ரக்ஷது.
சுபம்.

ஸ்ரீநிவாச பெருமாள்



மேக ச்யாமம் பீத கௌசேய வாஸம்
ஸ்ரீவத்ஸாங்கம் கௌஸ்துபோத்பாஸிதாங்கம்
புண்யோபேதம் புண்டரீகாயதாக்ஷம்
விஷ்ணும் வந்தே ஸர்வலோகைகநாதம்

உ

ஸ்ரீ காளிகாம்பாள் துணை

சிவஸ்ரீ. Dr. தி.ஷ. சாம்பமூர்த்தி சிவாசார்யார்

சிவாசார்யர் அறக்கட்டளை (பதிவு)

மற்றும்

சிவஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யார் டிரஸ்ட் (பதிவு)

207/101 தம்புசெட்டி தெரு, சென்னை–1.

நூல் தொகுப்பாசிரியர்

சிவஸ்ரீ. வி. சோமசேகர சிவாசார்யார் M.A.,

சென்னை, மஹரிஷிவேதாகம பாடசாலையின் முன்னாள் ஆகம பண்டிதரும், மகாபலிபுரம் அரசினர் கோயில் கட்டிடக்கலை & சிற்பக்கலைக் கல்லூரியின் முன்னாள் ஆகமவிரிவுரையாளரும், கும்பாபிஷேகங்கள், ஆகமகருத்தரங்குகள், விசேஷயாகங்கள் பலவற்றை பலமுறை தலைமைஏற்று நிகழ்த்தியவரும், கனடாவில் இந்துக்கோயிலின் முன்னாள் தலைமைஅர்ச்சகரும், பாடசாலைகளின் ஆண்டுத்தேர்வுகளில் பலமுறை பரீக்ஷாதிகாரியாக பணியாற்றியவரும், போதகராகி பலமாணவர்களை உருவாக்கியவரும், சைவநெறி தழைக்கத் தொண்டாற்றி வருபவரும், சென்னையில் மாதாந்திர சிவாகம சிறப்புச் செற்பொழிவு நிகழ்ச்சிளைத் தொடர்ந்துநடத்தியும் 20–க்கும் மேற்பட்ட சமயம் சார்ந்த நூல்களை வெளியிட்டும் வருபவர்.